# வாசல் ஒவ்வொன்றும்

வெளிச்சத்தில் வெளிவந்த
பத்தொன்பது படைப்பாளிகளின்
சிறுகதைகள்

விடியல் பதிப்பகம்
*கோயம்புத்தூர் - 641 015*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு விடியல் பதிப்பகம், டிசம்பர், 2001, தி. ஆ. 2032
விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்காளிபாளையம் ( வடக்கு )
கோயம்புத்தூர் - 641 015. தொலைபேசி : 0422 - 576772
மின்னஞ்சல் : vitiyal2000@eth. net
இணையத்தளம் : www. vitiyal. com

வாசல் ஒவ்வொன்றும்

வெளிச்சத்தில் வெளிவந்த
பத்தொன்பது படைப்பாளிகளின் சிறுகதைகள்

அச்சாக்கம் : மணி ஆப்செட் , சென்னை - 5
முன் அட்டை ஓவியம் : பிகாஸோ ( 1939 - 1943 )
விலை : ரூ. 60

First Edition Vitiyal Pathippagam, December , 2001, T.Y.2032.
VITIYAL PATHIPPAGAM, 11, Periyar Nagar
Masakkalipalayam (North ), Coimbatore - 641 015
Phone : 0422 - 576772
E - Mail : vitiyal2000@eth. net
Website : www. vitiyal. com

**Vaasal Ovvonrum**

Velicham Short Stories

Printed at Mani Offset, Chennai - 5
Front Cover Drawing : Picasso ( Circa 1939 - 1943 )
**Price : Rs. 60**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஈழத்தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளால் அனுபவித்து வருகின்ற துயரங்களை, வேதனைகளை , இழப்புகளை, தவிப்புகளை ஈழத்துப் புனைகதை இலக்கியம் தீவிரமாக வெளிப்படுத்தி வருகின்றது. இருத்தலின் கணமும், போராட்டத்தின் கணமும், படைப்பனுபவத்தின் கணமும் குவியும் ஒரே புள்ளியில் நிலைகொண்டிருக்கும் படைப்பாளிகளின் வாழ்வு, விருப்பங்கள், யதார்த்தங்கள் - இவற்றினூடாக விரியும் உலகங்களாக இச்சிறுகதைகள். மேற்கத்திய நாடுகளின் மீதான கவர்ச்சி, தமிழ் இலக்கியத்திலும் ஆதிக்கம் செலுத்துவதன் ஒரு வெளிப்பாடாக, புலம் பெயர்ந்து மேற்கு நாடுகளிலோ அல்லது கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலோ வாழும் ஈழத்தமிழர்கள் தமது சூழல் சார்ந்து எழுதும் படைப்புகளே தமிழகத்தில் ஈழத்து இலக்கியமாகக் கவனம் பெறும் இன்றைய நிலையில் ஈழத்து மண்ணையும் மக்களையும் அவர்களின் வாழ்வனுபவங்களையும் கூறும் வாசல் ஒவ்வொன்றும் எனும் இச்சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

விடியல் பதிப்பகம்

கோயம்புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திண்ணை

வாசல் ஒவ்வொன்று 'க்குமான இந்த முன்னுரையை எழுதத் தொடங்கும்போதே மகிழ்ச்சியாக இருக்கிறது. ஈழத்து இலக்கியவுலகில் ஒரு சிற்றிலக்கிய ஏடு அதன் பவள இதழை வெளியிடுவதென்பது சாமனியவிடயமல்ல, சாதனையென்றே கணிக்கப்படும். அதுவும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலே, போருக்குள் பிறந்த குழந்தையே இந்தச் சிற்றிலக்கிய இதழ். நெருக்கடிகளும் வளப் பற்றாக்குறையும் சூழ்ந்திருக் கியபோதும் அவை எல்லாவற்றையும் கடந்து நீண்ட தூரம் கடந்துவந்தாயிற்று. நீண்ட தூரம் நடந்த பின்னர் திரும்பிப்பார்க்கும் போது அட, இத்தனை தூரம் நடந்துவிட்டோமா என்று மலைப்பு ஏற்படுமல்லவா அப்படித்தான் நானின்று அதிசயிக்கின்றேன் ; சந்தோசப்படுகின்றேன்.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் , கலை, இலக்கிய இதழொன்றை வெளியிட முடிவெடுத்ததும், அதற்காக, எம்மையே மறந்து ஓடித்திரிந்து உழைத்ததும் ' வெளிச்சம் ' என்ற நாமத்தை நானே சூட்டி மகிழ்ந்ததும் , பின்பு இதழை வெளிக் கொண்டுவரப் பாடுபட்டு நேர்த்தியுடன் அதனை வெளியிட்டதும் என எல்லாம் பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டாலும் ஏதோ இன்று காலையிற் தான் இவையெல்லாம் நடந்தது போன்ற உணர்வே எனக்கேற் படுகின்றது.

*1991* ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினராகிய நாம் பத்து நாட்கள் நடத்திய முத்தமிழ் விழாவின் இறுதிநாளன்று முற்றவெளியரங்கில் வெளியிட்ட விழாப் பிரகடனத்தில் ' விரைவில் கலை, இலக்கிய இதழொன்றை வெளியிடுவோமென 'அறிவித்திருந்தோம். விழா முடிந்த அயர்வு நீங்கு முன்னரே எமது தேசியத் தலைவருடன் விழாப்பிரகடனம்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் வெகு உற்சாகத்துடன் உடனேயே சஞ்சிகையை ஆரம்பிக்கும்படியும்; ஆழமாகவும் வெகுநேர்த்தியாகவும் தமிழீழ தாகம் சுமந்தோரின் சக்தியை ஒன்றிணைப்பதாகவும் ; அது வெளிவரவேண்டுமென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஆவலைக் கூறினார். தனது பக்கத்துணையும் பங்களிப்பும் வெளிச்சத்துக்கு நிச்சயமிருக்குமென உறுதியளித்தார். அந்த உற்சாக மான வாக்குமூலமும் நம்பிக்கையும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் இருக்கும் தெம்பை எமக்களித்தன. அன்றிலிருந்து இன்றுவரை வெளிச்சத்தின் முதல் வாசகராகவும், வெளிச்சம் பற்றிப் பேசுபவராகவும் எமது தேசியத் தலைவரேயிருப்பது எமக்குப் பெருமை. இப்படி உருவாகி வெளிவரத் தொடங்கிய 'வெளிச்சம்' கடந்த பத்து வருடத்துள்ளே யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி வரையிலான பல இடங்களில் ஐந்து தடவைகள் மாறி மாறி இடம் பெயர்ந்தபோதும் இதுவரையிலான எழுபத்தைந்து இதழ்களை வெளியிட்டதற்கு எமது உழைப்பு மட்டுமல்ல , எமது தலைவரின் உற்சாக மூட்டலும் உறுதுணையுமே பெரிய அனுசரணையாக இருந்ததென்பது மிகையல்ல.

வெளிச்சத்தின் தோற்றமும் வளர்ச்சி பற்றியும் இதுவரை எம்முடன் கூடநடந்தோரின் பங்கு பணிபற்றியும் வெளிச்சத்தின் பரவலாக்கத்தில் பக்கபலமாக நின்றோரின் பட்டியல் பற்றியும் நான் விரித்தெழுத விரும்பின் இந்த முன்னுரை மிக நீண்ட தாகிவிடும். அவர்களெல்லோருக்குமான பீடமும் நன்றியும் நாவிலல்ல ; எம் நெஞ்சிலிருக்கிறது.

வெளிச்சத்தின் எழுபத்தியைந்தாவது இதழை பவள இதழாக வெளியிடும் பணியில் உழைத்துக் கொண்டிருக்கிறோம். இச்சிறப்பிதழ் தயாராகிக் கொண்டிருக்கும்போதுதான் பவள இதழ் நினைவாக ஏற்கனவே வெளிச்சத்தில் வெளிவந்த சிறுகதைகளி லிருந்து தேர்ந்த தொகுப்பொன்றை வெளியிடவேண்டுமென்ற பெருவிருப்பம் நெஞ்சின் ஒரு மூலையில் முளைத்தது. பவள இதழின் வேலைகளுடன் இந்தச் சிறுகதைத் தொகுப்பின் வேலைகளும் அதிக பளுவை அச்சகத்தில் ஏற்படுத்துமென்று தெரிந்தும் எதிர்கொண்டோம். இன்றைய சூழ்நிலையில் வன்னியில் ஒரு நூலை அச்சிடுவதென்பதற்கான அடிப்படை மூலப் பொருட்களே பெருமளவிற்கு இல்லையெனும் நிலையிற் தான் இந்த நூலின் வரவை சாத்தியப்படுத்தியிருக்கின்றோம் . இன்று அச்சமைப்பில் உலகெங்கும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் மாற்றமும் வேறுபட்டிருக்கின்றது. ஆனால், நாமோ மிகச் சாதா ரணமாக, வழக்கொழிந்து வரும் அச்சமைப்புச் சாதனங்களை, அதுவும் அதற்கே பெரும் பற்றாக்குறையான நிலையுடனான பிரச்சினைகளை எதிர்கொண்டே இந்த நூலை வெளிக் கொணர்கின்றோம்.

எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் அவர்களுக்கு இந்த நூல் பற்றிய எமது வேணவாவைத் தெரிவித்தபோது அவரிடமிருந்து உற்சாகமான பதிலும் உறுதுணை யான ஒத்துழைப்பும் கிட்டின.

II

இது வெளிச்சம் சிறுகதைகளின் இரண்டாவது தொகுதி. வெளிச்சத்தின் நூல் வெளியீட்டுத் தொடரில் ஐந்தாவது நூல். 'வெளிச்சம் ' இதழ்களில் ஏற்கனவே வெளியாகியிருந்த கதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளிற் சில இங்கே தொகுக்கப்பட்டிருக்கின்றன.

பத்து வருடங்களில் வெளிச்சத்தின் எழுபத்தியிரண்டு இதழ்களி லும் 95 படைப்பாளிகளின் ஏறக்குறைய 250 சிறுகதைகள் பிரசுமாகியிருக்கின்றன ( இவற்றைவிட மொழி பெயர்ப்புச் சிறுகதைகளும் , வேறு சில சிறுகதைகளின் மறுபிரசுரங்களும் இடம் பெற்றிருக்கின்றன ). ஈழத்தின் மூத்த படைப்பாளிகளி லிருந்து தமது முதற்சிறுகதையை எழுதிய புதியபடைப்பாளிகள் வரையில் இதில் அடங்குகின்றனர். அத்துடன் போராளிகளாக இருந்து எழுதியோரும் இவற்றில் உள்ளனர். இந்தத் தொகுப்பி லுள்ள கதைகளிலும் இவற்றை அவதானிக்கலாம்.

இருநூற்றியைம்பது கதைகளிலிருந்து இரண்டு தொகுதி களுக்குமாக இதுவரையில் 34 சிறுகதைகள் தேர்வு செய்யப் பட்டிருக்கின்றன. இத்தகையதொரு தேர்வுக்குள்ளாகும் பிறகதைகள் இனிவரும் தொகுப்புகளில் சேரக்கூடும். இந்தத் தொகுதியின் தேர்வின்போது அரசியல் முக்கியத்துவமும், போராட்டப் பிரக்ஞையின் தீவிர வெளிப்பாடும் முதன்மை நோக்காகக் கொள்ளப்பட்டதனால் ; இந்தக் கதைகள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன. அத்துடன் பல படைப்பாளிகளின் நல்ல சிறுகதைகள் இருந்தபோதும் அவை பிறதொகுதிகளில் ஏற்கனவே பிரசுரமாகியிருந்தமையால் இந்தத் தொகுப்பில் சேர்த்துக் கொள்வது அவசியமற்றுப் போய்விட்டது.

இத்தகைய தொகுப்பு ஒன்றுக்கான தேர்வு எனும்போது எப்போதும் பல பிரச்சினைகள் முன்னெழும். இந்தத் தொகுப்பின் தேர்வின்போதும் அத்தகைய பிரச்சினைகள் எதிர்கொள்ளப் பட்டன. முதல் தொகுதியிலும் இத்தகையதொரு நிலை இருந்தது. ஆயினும் அப்பொழுது எல்லாவற்றையும் கடந்து பதினைந்து கதைகள் மட்டுமே சேர்க்கப்பட்டதாக முதற்தொகுப்பு 1995 இல் வெளிவந்தது. அதற் கெனத் தேர்வாகி சேர்க்க முடியாமற்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கதைகள் இந்தத் தொகுதிக்கான தேர்விற்கும் உள்ளாகி இங்கே இடம்பெறுகின்றன. அதேவேளையில் இந்தத் தொகுதிக்கென தேர்வாகிய கதைகளில் சில இங்கே தவிர்க்கமுடியாத காரணங்கள் பலவற்றால் இடம்பெற முடியாமற் போய்விட்டது. இது ஒரு வகையில் கவலையை ஏற்படுத்துகிறது எனினும் இந்த யதார்த்த நிலைமையை புரிந்துணர்வுடன் சக படைப்பாளிகள் விளங்கிக் கொள்ளவேண்டும். அதேவேளையில் வெளிச்சத்தில் பங்களித்த சகல சிறுகதைப் படைப்பாளிகளும் இங்கே நன்றியுடன் மனங்கொள்ளப்படுகிறார்கள். அவர்களின் படைப்பாக்க ஒத்து ழைப்புக்கும் ஈடுபாட்டுக்கும் வெளிச்சம் தன் மனமார்ந்த நன்றியை யும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. தொடர்ந்தும் அவர்களது பங்களிப்பை வேண்டியும் நிற்கிறது.

III

தொண்ணூறுகளின் ஈழத்துச் சிறுகதைப் போக்கில் இந்தக் கதைகள் ஒரு பிரத்தியேகப் பண்பில் தனித் தன்மையைப் பெறுகின்றன. போராடும் களத்திலிருந்து எழுதப்பட்ட கதை களாகவும், போராட்டம் சார்ந்த பிரக்ஞையும் அனுபவங்களும் போர்க்கள நிகழ்வுகளின் சாரமும் அதிகம் தொனிக்கும் கதைகளாகவும் இவை இருக்கின்றன. தேசிய விடுதலைப் போராட்டமே இவற்றின் மையம். அதைச் சுற்றி நிகழும் நிகழ்வு களினதும், விளைவுகளினதும், ஆக்கிரமிப்பாளர் - ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் , விடுதலையாளர் - விடுதலைக்கான செயற் பாடுகள் என்பவற்றினதும் வெளிப்பாடுகளாகவும் பதிவுகளாகவும் இந்தக் கதைகள் அமையப் பெற்றிருக்கின்றன.

நமது கலையும் இலக்கியமும் தொண்ணூறுகளில் மூன்று பிரதான வகைப்பட்டனவாக வெளிப்பாடடையத் தொடங்கின.

1. போராடும் களத்திலிருந்து, போராடும் சக்தியாகிய விடு தலைப்புலிகளின் தளத்திலிருந்து படைக்கப்படும் படைப்பு கள், இவை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடை முறைப் போராட்ட வாழ்வுடனும் அனுபவங்களுடனும் இணைந்து நின்று வலுவுடன் பேசுபவை.
2. போராட்டம் சார்ந்தனவாகவோ பிறவாகவோ பிற இடங்களிலிருந்து வெளிப்படுத்தப்படுபவை. இவற்றில் பெரும் பாலானவை தெளிவான, உறுதியான நிலைப் பாடெடுப்பதில் ஒருவித அமுங்கல் தன்மையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவை. அரச பயங்கரவாதமும் அதன் அடக்குமுறை அச்சுறுத்தலும் அதற்குள்ளான வாழ்வுமுறையும் இதற்குக் காரணமாயிருக்கலாம்.

3. ஈழத்தமிழர்களான புலம்பெயர்ந்தவர்களின் படைப்புகள். அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் தமது சூழல் சார்ந்த படைப்புகளை இப்போது அதிகம் வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தாலும் , தாயக நினைவுடனும் வேட்கையுட னும் போராட்டம் சார்ந்த படைப்புகளையும் குறிப்பிடக் கூடிய அளவுக்கு வெளிப்படுத்தினர்.

வெவ்வேறு சூழல் வாழ்க்கைமுறை, வாழ்வனுபவங்கள், எனக்கொண்டிருந்தாலும் எல்லாத் தரப்பினரிடையேயும் பொதுவாக போராட்டமும் அது சார்ந்த உணர்வுகளும் இழை யோடியிருக்கிறது. இதுதான் விடுதலையின் வேட்கையை மேலும் மேலும் வெளிப்படுத்தும் பெரும் கண்ணி. ஏனெனில், ஈழத்தமிழர் எல்லோரும் எங்கும் எதிர்கொள்ளும் நெருக்கடி என்பது இன்று பொதுவானது ; அடிப்படை யில் ஒன்றானது. அது விடுதலைக் கானது; சுதந்திர தேசத்துக்கான அவசியத்தை உணர்த்துவது ; வலியுறுத்துவது. அதற்கான குரலாகவே நமது இந்தப் படைப்புகளும்.

கடந்த ஐம்பது வருட ஈழத்தமிழர் வாழ்வில் மேலோங்கி வந்த அரசியற்பிரச்சினைகளின் உச்ச வெளிப்பாடு இந்தக் கதைகளில் பிரதிபலிக்கின்றது. அடக்குமுறையாளருக்கெதிரான போராட்டம் எப்படித் தோன்றும், அடக்குமுறையாளர் எப்படி மக்கள் போராட்டத்தில் நெருக்கடிகளை சந்திக்கிறார்கள் என்பதைக் காட்டும் இயல்புவிதியாக இவை அமைகின்றன. இது உலகெங்கும் பொதுவானதொரு நடைமுறையும்கூட. எமக்கும் இதுவே அனுபவமாகிறது. எமது படைப்புகளும் இவ்வாறான தொரு வளர்ச்சியைக்கொண்டவையே.

உலக விடுதலைப் போராட்டங்கள் சகலவற்றிலும் இத்தகைய படைப்புகள் வெளிப்பட்டிருக்கின்றன. தத்தமது பிரச்சினையின் பிரக்ஞைபூர்வமான வெளிப்பாடுகள் மூலம் தனது விடுதலைக் குரலை அவர்கள் ஓங்கி ஒலித்திருக்கிறார்கள் ; ஒடுக்குமுறைக்கெதிராக குரலெழுப்பியிருக்கிறார்கள் ; நியாயத் தைக்கோரி நீதி கேட்டிருக்கிறார் கள். இவற்றின் மூலம் உலகத்தின் கவனத்தைத் தமது பக்கம் திரும்பியிருக்கிறார்கள் ; ஈர்த்திருக் கிறார்கள். எமது படைப்புச் செயற்பாட்டின் பண்பும் வரலாறும்கூட இவ்வாறே அமையப்பெற்று வருகிறது. எனவே எமது குரலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உணர்வுகளும் எமது நியாயமும் உலகின் முன் பிரதி பலிக்கத் தொடங்கிவிட்டது ; அறியப்படத் தொடங்கிவிட்டது. இந்த வளர்ச்சிநிலையின் ஒரு கட்டமாகவே ஒருவிளைபொரு ளாகவே இந்தக் கதைகளும் அமைந்திருக்கின்றன.

நமது போராட்டமும் போராட்டத்தில் நிகழ்த்தப்பட்டதும் இன்னும் நிகழ்ந்து வரும் தியாகங்களும் அர்ப்பணிப்பு மிக்க செயற் பாடுகளும் இவற்றுக்கான உந்துதல்களும் இவற்றின் பதிவு களுமாக அமையும் எமது எழுத்துக்கள் உண்மையானவை ; சத்தியமானவை ; நியாயமானவை. இந்தத் தொகுதியின் பத்தொன்பது கதைகளிலும் இந்த யதார்த்தத்தைக் காணமுடியும். போராட்டத்துடன் இணைந்த வாழ்வும் வாழ்வுடன் இணைந்த போராட்டமும் இந்தக் கதைகளில் பேசப்படுகின்றது. இவ்வாறு வாழ்வுக்கும் எழுத்துக்குமான இடைவெளி குறைந்திருப்பதால் இந்தக் கதைகள் சிலருக்கு வெறும் பதிவுகள் போலவும் அரசியல் வாடை அதிகம் வீசுவதுபோலவும் தெரியக்கூடும். ஆனால் எப்போதும் மெய், மெய்யாகத்தானே இருக்க முடியும்.

IV

என்னுடனிணைந்து இத்தொகுதியின் உருவாக்கத்தில் முன்னின்றுழைத்தவர் வெளிச்சம் ஆசிரியர் கருணாகரன். அவரின் உழைப்பும், கரிசனையுமே இந்த தொகுதியின் அழகும், ஆழமுமாகும். கதைகளைத் தேர்வு செய்வதில் ஒத்துழைத்தவர்கள் எழுத்தாளர்களான சு. மகேந்திரன், முல்லைக்கோணேஸ், பிரதீபகுமரன் ஆகியோர். இவர்களுள்ளும் நூலின் அட்டை ஓவியத்தை வரைந்தளித்ததுடன் சரவைபார்த்துச் சரிசெய்வதிலும் முல்லைக்கோணேசின் உழைப்பு அதிகம். மற்றும் வளநாடன் சு.பேரின்பநாதன் , கி.கிரி ஆகியோர் சரவை பார்த்து நூலின் நேர்த்திக்கு ஒத்துழைப்பு நல்கினர் . கிரி தட்டச்சில் கதையைப் பிரதியெடுத்து உதவினார். இவர்களுடன் நூலின் அட்டையை அழகுற பதித்தளித்த றெஜி. அச்சுக்கோர்த்து அச்சிட்டளித்த வவுனியா வடக்கு ப. நோ. கூ. சங்கப் பதிப்பகத்தைச் சேர்ந்த நியூட்டன், நாராயணன் , சுனிதா, சுமன் ஆகியோரதும் பதிப்பகப் பொறுப்பாளர் அ. அன்ரனியினதும் பங்களிப்பை இந்நூல் அதிகம் பெற்றுக்கொண்டது. இவர்களனைவரும் நன்றிக்குரியவர்.

புதுக்குடியிருப்பு புதுவை இரத்தினதுரை
*15 - 07 - 2001*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்
சிட்டு, பகலவன், குமணன் ஆகியோருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| எங்கள் பயணம் / | கோளாவிலூர் கிங்ஸ்லி | 13 |
| அசோகவனம் அல்லது வேலிகளின் கதை / | சாந்தன் | 20 |
| சிறை மீட்பு / | விவேக் | 35 |
| அப்பாவும் சமகாலமும் / | ந. சத்தியபாலன் | 40 |
| போருள் மனிதர் / | உமாதேவன் | 44 |
| அழைப்பு / | வசந்தன் | 52 |
| நான் நலம் ; மிகுதி நேரில் / | நா. யோகேந்திரநாதன் | 57 |
| வீடு என்பது ... / | சத்துருக்கன் | 63 |
| ஒரு மயிலின் மரணம் / | ஞானரதன் | 72 |
| வம்சக்கனவு / | பிரகலாத ஹேமந்த் | 77 |
| பெப்ரவரி 14 / | த. ம. சேந்தன் | 85 |
| முகமற்றவர்கள் / | தாமரைச்செல்வி | 90 |
| ஒரு கோப்பை தேநீர் / | மலைமகள் | 99 |
| வரைபடங்கள் மாறுகின்றன / | சு. மகேந்திரன் | 103 |
| மண்புழு / | பெருமாள் கணேசன் | 118 |
| காலமுகம் / | கருணை ரவி | 126 |
| தீப்பிடித்த நினைவோரம் பாயும் ஆறு / | முல்லைக்கோணேஸ் | 134 |
| மனவெளி ஓவியம் / | பிரதீபகுமரன் | 141 |
| கோடை வழி / | வளநாடன் | 148 |
| படைப்பாளிகள் பற்றிய குறிப்புகள் | | 155 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளாவிலூர் கிங்ஸ்லி

## எங்கள் பயணம்

தொப்பிக்கல்மலை - கிழக்கு காட்டுப் பகுதியில் இராணுவம் ஊடுருவி, பதுங்கியிருக்கும் செய்தி எல்லா முகாம்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

விசாலகன், விசேட படைப் பிரிவு போன்ற பலமான நிலைகளைத்தவிர ஏனைய நடுத்தர சிறிய முகாம்களின் நாளாந்தக் கடமைகள் சில பாதுகாப்பின் நிமித்தம் வழமையான நேரங்களில் நடைபெறுவது தவிர்க்கப்பட்டிருந்தது. இதன்படி எமது முகாமில் அன்று சத்தியப்பிரமாணம் காலை 8. 45 மணிக்கு நடந்தது.

எமது சிறிய முகாமில் நாங்கள் 11 பேர் தான். மிகவும் அமைதியான இருள் போன்ற அடர்ந்த காட்டிற்குள் கட்டப்பட்டிருந்த அந்த முகாமுக்குச் செல்கின்ற வழியைக்கூட இலகுவில் கண்டு பிடித்துவிட முடியாது . மாவட்ட படப்பிடிப்பு முகாம் அது. இதன் வெளியமைப்பு இயற்கையோடு இயற்கையாக உருமறைக்கப்பட்டு விட்டாலும் , உள்ளே ஒரு நகர்ப்புறத்து வீடு போன்ற ஸ்ரூடியோ அமைக்கப்பட்டிருந்தது.

மாரிகாலமென்றாலும் நான்கு நாள் பிடித்த அடைமழை சற்று முன் விட்டு, அடுத்த மழையை அழைப்பதற்காக அகோர வெயிலொன்று எரித்தது. நாங்கள் ஏறிக்கடக்கின்ற மலையெல்லாம் புகை போன்று நீராவி கிளம்பிற்று. சல சல வென்று வியர்வை கொட்டுகிறது.

வழமைபோல் அன்றைய முகாம் வேலையைப் பங்கிட்ட பொழுது , நானும் முரளிதாசும் ' கிச்சின் ' கொட்டிலுக்கு சுவர் வைக்க கூட்டுச் சேர்ந்தோம். நான் மண்வெட்டியும் அவன் கூடையுமாக, இளகிப் போயிருந்த புற்றடிக்குப் போனோம். இதேபோல் அவரவர் வேலையை அனைவரும் துவக்கிவிட்டிருந்தோம். காலை உணவாக எருமைப்பாலில் பாயாசம் தயாராகிக் கொண்டிருந்தது. மத்தியானம் காட்டுக்கோழியிறைச்சி வற்றலை மிகவும் சுவையாக வரட்டி சமைத்துப்பரிமாறுவதாக நரேஸ்குமார் முன்பே கூறிவிட்டார். அவர் தான் அன்று சமையல்முறை ; முகாம் பொறுப்பாளரும் அவர்தான்.

இதற்கிடையில் மத்தியானத்திற்கு அனைவரும் போய் பொங்கிப் பாய்கின்ற பக்கத்து ஆற்றில் குதித்து, நீராடி, படம் பிடித்து நத்தார் கொண்டாடுவது என்ற நேற்றைய திட்டத்தைப் பற்றிய கதைகள், பற்பல கோணங்களிலும் போட்டுக் கொண்டு வேலை ஓடியது.

எல்லோரும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் ஓடி ஓடி வேலையை முடிக்கப் பார்க்கின்றனர். பலமுறை வானொலிக் கருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துக்கொண்டிருக்கிறது . எவரும் கவனிப்பதாக இல்லை. மீண்டும் " ஜேசுதாஸ் ஜேசுதாஸ் ஓவர் " என் அழைக்க, நான் போய் எடுத்தேன். பிரதான முகாம் கதைத்தது. உடனடி வானொலி மூல அழைப்பை பொறுப்பாளரிடம் கூறினேன். விடயமும் பரிபாசையில் அறிவிக்கப்பட்டுவிட்டது.

தாக்குதல் படப்பிடிப்புக்கு நாங்கள் , ' றொட்டேச ' னில் போவதுதான் வழக்கம். இந்தமுறை நானும், ' பிரேமா ' வும் சுணக்க மின்றி உடைகளை மாற்றிக்கொண்டு தயாராக இருக்கிற ' கமராப் ' பையைத் திறந்து மீண்டும் ஒருமுறை சரி பார்த்தோம். நான் ' ஸ்டில்' , அவன் ' வீடியோ. ' ஆளுக்கொரு பையை தோளில் போட்டுக்கொண்டு புறப்படும் தருணம், ' திடு திடு ' என்று காடு அதிர, அடுத்த மழை வந்து பிடித்தது. தாமதித்தாலும் மாரிமழை விடப்போவதில்லை. மரக் கிளைகளின் இடையே குடை பிடிக்கவும் முடியாது. எனினும் மழைநீர் கசியா வண்ணம் " நீர்க்காப்பு பை " இருந்தமையால் நாங்கள் பிரதான முகாமை நோக்கி நடந்தோம். மழை அள்ளி முழுக வார்ப்பது போலப் பெய்தது.

பிரதான முகாமில் பாடசாலைகள் மாதிரி அமைந்திருந்த பெரிய கொட்டில்களுக்குள் அனைவருக்கும் தாக்குதலின் கடைசி விளக்கம் அளிக்கப்பட்டது. நாங்கள் போகின்ற போது, மழையோடு மழையாக அணிகள் மைதானத்தில் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. நீண்ட தூரத்தில் அல்லது எல்லையில் நடைபெறப்போகும் தாக்குதல் என்பதால் எல்லோருக்கும் மூட்டை முடிச்சுக்கள் பெரிதாக இருந்தன. அதிலும் பெண் போராளிகள் பருமனான பைகளை தலையில் ஏற்றிக் கொண்டு அணிவகுத்து நின்றனர்.

நானும் பிரேமாவும் தாக்குதல் பொறுப்பாளரைச் சந்தித்தோம். அவர் எங்களுக்குச் சிலவிடயங்கள் சொன்னார். அதன்படி நாங்கள் குறிப்பிட்ட அணியில் சேர்ந்து கொண்டோம். பெண் போராளிகளின் தாக்குதல் பொறுப்பாளராக டென்சியும், வளர்மதியும் இருந்தனர். அனைத்து ஆயத்தங்களையும் செய்து கொண்டு, அவ்விடத்தில் இருந்து ஒரு பலம் வாய்ந்த இராணுவ அணியாக ஒற்றை வரிசையில் எண் சொல்லிக்கொண்டு எமது நகர்வு ஆரம்பமானது.

ஒரே சீராக பேரணி நகர்கின்றது. நேரம் காலை 11 மணி யாவது இருக்கும். எனக்கு அப்போதுதான் பசி தெரிந்தது. வரும்போது பாயாசம் குடிக்கவில்லை என்பதைவிட இரவாவது கொஞ்சம் சோறு சாப்பிட்டிருக்கலாம்... என்று தோன்றிற்று. நாங்கள் சாப்பாடு எதுவும் எடுத்து வரவில்லை ; ' பிஸ்கட் ' வகையெதுவும் இல்லை. எடுத்து வந்திருந்தாலும் இப்போது உண்பதற்கு அனுமதியில்லை. இனி எப் போது சாப்பாடு கிடைக்குமோ... என்பதை நினைத்தால் இன்னும் வயிற்றைக் கார்ந்தது.

மழை பௌவ்வல் கட்டிக்கொண்டு இருளாகப்பெய்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கு, நாளையும் விடுவதாகத் தெரியவில்லை. கடல்மாதிரித் தெரிகிற பெண்டுகள்சேனை ஆற்றையும் , அதனோடு தொடர்புற்றி ருக்கிற நீண்ட நீர் நிலைகளையும் இன்னும் சிறு ஆறுகளையும் நாங்கள் கடக்க வேண்டியிருந்தது . பெண்டுகள்சேனை ஆறு, அருங்கோடை யிலேயே இடுப்பளவு தண்ணி ஓடும். அதைக் கடந்தால்தான் சண்டை நிச்சயம் ; நிம்மதி.

மூன்று மைல் நடந்து அந்த சமுத்திர ஆற்றை அண்மித்தோம். 'சொள சொள ' வென பேரிரைச்சலுடன் பாயும் அந்த ஆறு, சுமார் 100 மீற்றருக்கு முன்பே எங்களைக் கழுத்தளவு தண்ணீர் பிடித்து விட்டது. சில போராளிகள், நாங்கள் ' மடு ' என்று வழங்குகின்ற கிடங்குள் காலை வைத்து பதாரென்று போய் வந்தார்கள்.

' ரைபிளு ' க்கு ' பொலுத்தீன் ' போட்டு மாளாது என்பதால் எவருமே போடவில்லை. உணவுப் பொருட்களும், தொலைத் தொடர்புக்கருவிகளும் மட்டும் நீர் கசியாமல் பாதுகாக்கப்பட்டு இருந்தது. ஆற்றைக்கடவுபடுத்தி விடுவதற்கு, பக்கத்தில் வதியும் கிராமத்தவர் ஐந்தாறு தோணிகள் சகிதம் காத்து நின்றார்கள். தோணிகள் குறிப்பாக ' ரைபிள்களையும் ' உணவுப் பொருட்களையும், இதர சாமான்களையும் அக்கரைப்படுத்துவதுக்காகும்.

கரையிலேயே, கழுத்துக்கு மேல் இருந்த தண்ணியை இரண்டு மூன்று தரம் நான் ' வக் வக் ' என்று குடித்து விட்டேன். இருபது இருபத்தைந்து மீற்றர் அகலத்தில், ' சோ ... ஓ... ' என்ற இரைவுடன் பிய்த்து வாங்கும் ஆற்றின் வேகத்தை, மிதந்து வருகின்ற இறந்த மரக் கட்டைகளின் ஓட்டம் காட்டியது. 'இதனைக் கடக்கவேண்டும்' என்று எண்ணுகிறபோது, என்னையே மறந்து ஒரு அச்ச உணர்வு படர்ந்தது; அங்கே போராளிகளின் கூத்தையும் குதூகலிப்பையும் கண்டு அது அகல்கிறது. இதே போல் போனவருடத்து மாரிக்குள் இராணுவம் கடந்து கொண்டு காட்டிற்குள் வரமுற்பட்டு, ஆறு சிப்பாய்களை ஆற்றில் விட்டு தோல்வியுடன் திரும்பியது. வழியில் தோணியை ஒளித்து விட்டார்கள் என்ற குற்றத்திற்கு, பதிலுக்குப் பதில் ஆறு கிராம வாசிகளைப் பிடித்து காலையும் கையையும் கட்டி ஆற்றில் போட்டனர்.

இரண்டு கரையிலும் நின்ற பெரிய மருத மரங்களை இணைத்து இரு பெரிய நைலோன் கயிற்றைக் கட்டி நாங்கள் ஒன்றி லும் , பெண் போராளிகள் ஒன்றிலுமாகக் கடந்து கொண்டிருந்தோம். கயிற்றையும் ஆளையும் சேர்த்து இழுத்துக்கொண்டு ஓட பிரயத்தனம் செய்தது ஆறு. அந்த வேளையில் கட்டைகள் வந்தால் ஆள் இல்லை. இவ்வாறு கயிறு வழியாக கடக்க வேண்டியிருந்ததால், நீண்ட நேரம் எடுத்தது. தண்ணீருக்குள் நின்று நின்று உடலெல்லாம் குளிரேறி கடகட வென பல்லடிபட நடுங்கியது. பற்களும் இரு தந்தமும் வலித்தன. பசித்துப் பசித்து வயிற்றில் ஒரு புது உணர்வு. உடல் சோர்வில் குந்தவும் முடியாது. சரியவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தக்கரை மாதிரி இருந்த ஆற்றின் அக்கரையை அரைவாசிப் பேர் வரை கடந்து விட்டனர். கயிற்றில் சென்று கொண்டிருந்த ஒரு போராளியை ஆற்றின் நடுப்பகுதியில் வைத்து எதிர்பாராத விதமாக வட்டமிட்டு வந்த சுழி இழுத்தடித்துக் கொண்டு போகிறது. அப்போது அனைவரது குதூகலமும் அடங்கிப்போனது. அவன் தன் ரைபிளைக் கழற்றி ஒருமுறை உயர்த்தினான். அந்த ரைபிளை அவன் காப்பாற்ற, எண்ணியிருக்க வேண்டும். அவ்வளவுதான் தெரிந்தது. அவனைக் காப் பாற்ற நாலைந்து பேர் பாய்ந்தடித்து நீந்தினார்கள். ஆயினும் அடுத்த சுழி வரமுன் அவர்கள் அழைக்கப்பட்டு விட்டனர்.

சீறிச் சினத்துப்பாயும் இந்த ஆறு மீது ஆத்திரப்பட்டு, எதையோவெல்லாம் சொல்லி முணுமுணுத்துக்கொண்டு திரும்பினேன். ஆற்றையே பரிதவிப்புடன் பார்த்துக்கொண்டு நின்ற பலர், அதில் இருந்து விடுபடாமல் இருந்தார்கள். இவ்வாறு ஆரவாரப்பட்டு, ஒரு போராளியையும் பறிகொடுத்து மாலை 6. 30 மணியளவில் ஆற்றை முற்றாகக் கடந்து முடித்தோம்.

மழை சற்றுத் தணிந்து விட்டது. இன்னும் சிறிது தூரம் தண்ணி கடந்து போனால் , எல்லாப் பகுதிகளில் இருந்தும் சிங்களவர்களால் துரத்திவிடப்பட்ட தமிழர்களின் ஒரு சிறிய கிராமம் வருகிறது. இவர் களுக்கு எமது அரசியல் பிரிவினரால் குடிசை வீடுகளும் சிறிய பாட சாலையும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்பு இதனையும் இராணுவத்தினர் இரண்டு முறை எரித்துவிட்டுச் சென்றிருந்தனர். கிட்டத்தட்ட இரவு 7. 30 மணியளவில் அந்தக் கிராமத்தை நாம் அடை கின்றபோது, நாய்கள் எல்லாம் சேர்ந்து கிராமத்தை அமர்க்களப்படுத்தி விட்டன. நாங்கள் இருள் உருவங்களாக நேரே போய் இரு கிடுகுப் பாடசாலைகளுக்குள் அடங்கினோம். ஆறு கடந்து இராணுவம் வர முடியாது என்ற வகையில், எம்மை இனங்கண்ட கிராம மக்கள், சினிசி னென்ற மழையையும் முந்திக் கொண்டு வந்து சூழ்ந்து கொண்டனர். பாடசாலையில் ஆசிரியருக்கு மட்டும் எப்படியோ ஒரு கதிரையும் மேசையும் இருந்தது. நீண்ட நேரம் தண்ணீருக்குள் நின்றிருந்தமையால் கால் வலித்தது. காலை மடக்கி கொஞ்சம் இருந்தபோது, நீர் ஊறிய நிலத்தில் உடல் பட்டதும் சட்டென எழுந்து விட்டேன். நுளம்பு ஈர உடுப்பையும் மீறி " சுள் சுள் " எனக்குத்தியது. நான் காலை உதறி உதறி நின்றிருந்தேன். சில போராளிகள் நுளம்புக் கடியையும் அலட்சியம் செய்து விட்டு இருந்தார்கள் ; படுத்திருந்தார்கள் ; பகிடி பண்ணினார்கள்.

வந்து 15 நிமிடத்துக்கு மேல் இருக்கும். " இதில் இனியிருந் தால் நுளம்பு தூக்கிக்கொண்டு போய்விடும் " என்று நயமாகக் கூறிய பொறுப்பாளர் , " சுணங்க முடியாது " என்று புறப்படச் சொன்னார். அப்பொழுது, ஒரு நடுத்தர வயதுடைய அம்மா, அவித்த சோளங் குலை இருக்கிறது. தருவதற்கு சற்று இருக்குமாறு அன்புடன் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அவரே எமது நிலைமையைப் புரிந்துகொண்டு சிலருடன் சேர்ந்து வழியில் கொண்டு வந்து வைத்தார். ஒரு வயது முதிர்ந்தவர் எமக்கு நடையில் வைத்து ஒவ்வொன்றாக பகிர்கின்றார். எனது வரிசை அவரை அண்மித்து நான் வேண்டுகின்றபோது ஊர் ஞாபகத்தில் "ஐயா புதிர் எடுத்து சாமிக்கு படைத்து விட்டீர்களா ? " என்று கேட்டேன். "சாமிக்குத் தந்தாலும் சரி ; உங்களுக்குத் தந்தாலும் சரி " என்றார். பொக்கு வாயால் நிமிர்ந்து சிரித்துக்கொள்கிறார். பெற்றுக் கொண்ட சோளங் குலையை கிறீச்சென்று வாயில் வைத்தேன். அதில் அறுசுவையோ அதிலும் கூடுதலாகவே தெரிந்தது. அவ்விடத்தில் இருந்து இருளோடு இருளாக மறைந்தோம்.

மூன்று மைல் வரை கிரவல் பாதையாக இருந்தது. பின்பு வயல் வெளிப்பாதை. தண்ணீரும் சேறும், பள்ளமும் படுகுழியும், யானைகள் பதித்த சுவடுகளுக்குள் ஒரு அடிக்கு மேல் தாழ்கிறது.

நேரம் 11. 30 மணி ஆகின்றது. பாட்டம் பாட்டமாக மழை பெய்து, உடல் சூட்டில் சற்று காய்ந்து வரும் உடுப்பையும் மீண்டும் நனைத்து தொல்லை செய்திற்று. அதுவும் நித்திரைக்கு மருந்து, என்று திருப்திப்படப்போனால் சிலர் நித்திரை தூங்கி விழுந்து எழும்பினர். இதனால் இடைவெளி விடப்பட்டு வியர்க்கின்ற வரை ஓட்டமும் நடையும்.

நகர்வு ஆட்டங்காணாமல் இருப்பதற்காக, ஒவ்வொரு சிற்றணிப் பொறுப்பாளர்கட்கும் கடும் உத்தரவு மீண்டும் அறிவிக்கப் பட்டது. அவர்கள், உலகம் தன்னையும் சுற்றி சூரியனையும் சுற்றுவதற்கு நகர்வதுபோல் செயற்பட்டார்கள். எனக்கு நித்திரையும், பசியும், களைப்பும் சேர்ந்து அப்படியே பேசாமல் படுத்துவிடச் சொன்னது. ஒரு போராளி மயக்கம் போட்டு விழுந்து விட்டார். உடனே அவரை மருத்துவக்குழு அணுகி முதலுதவி செய்து ஸ்டச்சரில் ஏற்றிவிட்டது. தாமதம் இல்லை. இரட்டை வரிசையாக பெண் போராளிகள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களது மூன்றாவது நிலை சிற்றணிதான் அது. அதன் பொறுப்பாளர், அணியின் முன் ஆளை உஷார்ப்படுத்துவதற் காக வேகமாக நடந்து போனார். முழங்கால் வரை புதையும் உவர்ச் சகதி இழுத்துப் பிடிக்கிறது. அவர் ' ரைபிளை சிலிங் ' கில் போட்டுக் கொண்டு தலையில் ஒரு அரிசி மூட்டையை ஏற்றி வைத்திருந்தார். "அந்த மூட்டை இப்போதைக்கு எனக்கு கிடைத்தால் ... " என்று ஒரு கணம் எண்ணியபோது தலை சுற்றுவது போன்று இருந்தது. மறுகணம் ' தபக் ' என்று விழுந்தெழும்பினேன். ' திக் ' என்றது ; கமரா. கமராவைப் பின் பக்கம் போட்டிருந்ததால் பாதிப்பில்லை. பின்னால் கையை வைத்து எடுத்தேன்.

நடந்து கொண்டு இருக்கின்றோம். " சத்தமிடாமல் மெதுவாக காலை வைத்து வரவும் " என்ற உத்தரவு முன்வரிசை அஞ்சல் வழியாக வந்தது. சரியாக விளங்காமல் " என்ன " என்று காதைக் கொடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடதாசியாலையை நோக்கிச் செல்லும் மின்கம்பக் கோபுரம் ! இதை ஒவ்வொரு முறையும் இந்த இடத்தில் அவதானிக்கின்ற பொழுது இராணுவத்தைக் காண்கிற பிரமை. கனமான மின்கம்பிகளைத் தாங்கிக் கொண்டு தமிழரின் வயல்வெளியில் உயர்ந்து நிற்பது இருளில் தெரிந்தது ! வயல் செய்கை பண்ணி பத்து வருடமாவது இருக்கலாம். இந்தப் போராட்டம் இல்லாவிட்டால், இந்த இடம் சிங்களவரிடம் இருந்திருக்கும் . மீண்டும், ஒருதரம் திரும்பிப் பார்த்தேன். அதுவும் எதிர்த்து நிற்பது போல்பட்டது. இடது பக்கம் ராணுவ முகாம். வெளிச்சம் பிரகாசமாகத் தெரிகிறது.

நாங்கள் கடக்கப் போகின்ற ரயில் பாதையும் பிரதான பாதையும் சுமாரான தூரத்தில் இருந்தது. பாதை நிலைமையை அறிந்துவர, அணி நகர்த்தும் குழு சென்று வரும்வரை அதில் நிற்கவேண்டிய தாயிற்று. பொதுவாக கொழும்பு றோட் என்றும் இதனைச் சொல்லிக் கொள்வோம். இதில் பரஸ்பரம் பதுங்கித் தாக்குதல் நிகழ்வதுண்டு. கடைசியாக எமது அதிரடிப்படை அணி ( COMMANDO GROUP) கொடுத்த நுட்பமான தாக்குதலை அடுத்து, ராணுவம் ரோந்தை முற்றாக நிறுத்திவிட்டது. பாதையைக் கடந்து ஏழு மைல் நடந்திருப்போம். மழை விட்டு வானம் கழுவி கவிழ்த்ததுபோல் வெளுத்துக் காணப் படுகிறது. சகதிகளைக் கடந்து உடைந்த குளக்கட்டில் வந்தபடி வரிசையில் அமர்ந்து கால்களுக்கு சிறிது ஓய்வு கொடுத்தோம். குளத்திற்கு மேற்கில் ஒரு சிறிய குடியிருப்பு பாழ்பட்டுக் கிடந்தது. இந்தக் குடியிருப்பை போன வருடம் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் வெட்டி அழித்தது. மரங்களெல்லாம் விழுந்து குறுக்கு மறுக்காக கிடக்கின்றன. ஒரேயொரு தென்னை மட்டும், மலடு பத்திப்போய் சோகமாகக் காற்றில் அசைகின்றது... இவைகளை எண்ணியபடி பக்கத்தில் இருந்த போராளியின் முதுகில் சாய்ந்தேன். 15 நிமிடம். சட் பட்டென்று தட்டி எழுப்பினார்கள். காலை நிமிர்த்தி எழுப்பிய போது ஏற்பட்ட வேதனை, இருக்காமலேயே விட்டிருக்கலாம் என்று ஆகியது.

வேகமான நடை துவங்கிவிட்டது. கால்களில் எல்லாம் தொட்டாமுள் ஏறி, கிரவல் நிலம் மீது கால் பதிக்கவே கூசுகிறது. ஆயினும் ஊன்றி வைக்காவிட்டால் அணியோடு போக முடியாது. கல்லோடு முள் ஏறிய பகுதி அழுத்தப்படுகின்றபோது உயிர் போய் வந்தது. ஓட்டமும் நடையும் தொடர்ந்தது.

கிழக்கு வெளுக்கின்ற வேளை ஆண்டாங்குளப் பிரதேசத்தில் உள்ள மருதங்குளத்தை அண்மித்தோம். பில் பில் என்று விடிகின்றது. அதிகாலை 4. 30 மணி. அங்குள்ள போராளிகள் பிரதான முகாமிலிருந்து வந்து மருதங்குளத்து கிராம மக்களுடன் சேர்ந்து இறைச்சிக் குழம்புடன் சோறும் சமைத்து வைத்துக் கொண்டு காத்திருந்தார்கள். நாங்கள் போன போக்கிலேயே ஒரு தட்டில் நான்கு ஐந்து பேரென்று கூடினோம். நான் சாப்பிடுவதற்கு ஆவென்றேன். சிறிதும் இயலவில்லை. குளிரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகம் இப்போதுதான் தெரிந்தது. பசியும் இல்லை. இதைவிட ஒரு படுக்கை கிடைத்தால் அதுதான் சொர்க்கமாக இருந்திருக்கும். அனைவரும் சாப்பிட்டு முடிந்து ஆண்டாங்குள பிரதானதளத்தை நோக்கி நடந்தோம். ஆறு மைல் நடந்து காலை 8. 30 மணிக்கு போய்த் தட்டினோம். அங்கு பெரிய கொட்டில்கள் இருந்தாலும், எங்களின் தொகைக்குப் போதாமல் போயிற்று. பெண் பேராளிகள் வந்த வரத்திலேயே கொண்டு வந்திருந்த பொலித்தினால் கொட்டில் அடிக்கின்றார்கள். சமையல் வேலையும் நடக்கிறது. நான் எங்கள் கொட்டிலைப் பார்த்தேன். தொங்கல்வரை குறுக்கும் மறுக்குமாக போராளிகள் கிடந்தார்கள். எனது கமராப் பையைக் கழற்றி அருகில் வைத்துவிட்டு, ஒருவர் மீது தலையை வைத்து சரிந்தேன். அவ்வளவு தான் தெரியும்.

அன்று பிற்பகல் 4.00 மணிக்கு எல்லைப்புறத்தை நோக்கி மீண்டும் ஆரம்பமான நகர்வு. நள்ளிரவு 12.30 வரை நீடித்தது. அடர்ந்த காட்டுப்பாதையில் 16 மைல் வரை நடந்து தாக்குதல் நிலையை அடைந்தோம்.

சிறிலங்கா - தமிழீழ எல்லை வீதி. தாக்குதல் திட்டத்திற்கு ஏற்ப, தாக்குதல் தளப்பொறுப்பாளரால் கட்டளையிடப்பட்டு, நிலை யெடுத்துக் காத்திருக்கிறோம்.

காலை 7.30 மணி கவசவாகனம் ' ம்ம் ' என்று உறுமிக்கொண்டு புறப்படும் சத்தம் கேட்டது. கழுத்தில் தொங்கிய கமராவை எடுத்து மேலும் ஒரு சொட் ' சடக் ' என்று அடித்து உறுதி செய்து கொண்டேன். வலது பக்கத்தில் ஒரு 15 வயதுடைய போராளி R.P.G உடன் தயாராகிறான்.

இராணுவத்தினர் " தெமல கொட்டி " என்று தொடங்கி, சொல்ல முடியாத வார்த்தைகளைப் பேசி பயத்தை வெளியிட்டுக் கொண்டு, நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

" பட பட " வென்று எமது தாக்குதல் கடுமையாகத் தொடக்கப் பட்டபோது, கவசவாகனம் உன்னுகிற மூச்சுக்கு R.P.G ஏவப்படுகிறது. அது நிற்க , மற்றொரு கவசவாகனம் முன்னேற, அதற்கும் அடுத்த R.P.G ஏவப்பட்டு கவசவாகனம் நிறுத்தப்பட்டதும் இராணுவம் எமது கொலை வலயத்துக்குள் சிக்கி, திக்குத் திசை மாறியது. இருவர் புழுதி அடித்த யானை மாதிரி எங்கள் முன்பாக ஓடி வந்து , எங்களைக் கண்டதும் துப்பாக்கியை நீட்டுகின்றனர். அப்பொழுது இங்கிருந்து ஒரு பெண் போராளி இலகு இயந்திரத் துப்பாக்கியால் சரமாரி பொழிந்தார். அவர்கள் சரிகின்றனர். நான் படமாக்கினேன்.

தாக்குதல் முடிந்து கைப்பற்றிய ராணுவப் பொருள்களையும், விழுப்புண் அடைந்த நான்கு போராளிகளையும், வீரமரணம் அடைந்த ஒரு போராளியையும் ' ஸ்டச்சரில் ' ஏற்றிக்கொண்டு எல்லையிலிருந்து திரும்பினோம்.

இதழ். 19 ஐப்பசி. 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசோகவனம் அல்லது வேலிகளின் கதை

சலோ... !" சொன்னவன், இரண்டு எட்டு முன்னால் வைத்துத் திரும்பிப் பார்த்தான்.

சிங்கர் கிருஷ்ணனைப் பார்த்தார். கிருஷ்ணன் சிங்கரைப் பார்த்தான். முன்னே போங்கள் என்பதுபோல ஆளுக்காள் தலையாட்டி னார்கள். அது பயத்தாலல்ல, மரியாதைக்காக என்பது இருவருக்குமே தெரியும். ஒரு கணத் தயக்கத்துக்குப் பிறகு - வயதுக்கு கிருஷ்ணன் கொடுக்கிற மரியாதையை ஒப்புக்கொண்டவராக - சிங்கர் முன்னால் வந்து அந்தச் சிப்பாய்க்கருகில் போய் நின்றார். அவருக்குப் பின்னால் கிருஷ்ணன் போய்ச் சேர்ந்து கொண்டான்.

திரும்பிப் பார்த்தார்கள். அந்தப் பெரிய விறாந்தை முழுவதும் சனமாய் நின்றது. அம்மா, வேணி அக்கா, பிள்ளைகள் - எல்லோருக்கும் முன்னால். கிருஷ்ணனையே பார்த்தபடி நின்றார்கள். உனக்கேன் இந்த இருக்கேலாத வேலை ? சாப்பாடெதுக்கு ? இங்கே இருக்கிற இந்த மற்றவர்களைப் போல, நீயும் நிண்டிருக்கேலாதா ? - என்று அவர்கள் நினைப்பது அவனுக்குக் கேட்டது. 'போய் மினைக்கெடாமல் பத்திர மாய் வந்துவிடு' என்று அந்தப் பார்வைகள் சொல்லின. கிருஷ்ணன் 'இதுக்கென்ன பயம் ? ' என்பதாக அவர்களை உற்சாகப்படுத்துவது போல, ஒரு மெல்லிய முறுவலுடன் தலையசைத்தான்.

" சலோ... " - சிப்பாய் திரும்பவும் சொன்னபடி தெருவிலிறங் கினான். சிங்கரும் அவரைத் தொடர்ந்து கிருஷ்ணனும் இறங்கினார்கள். படலைக்கு வெளியே நின்ற நாலு ஆட்கள் இரண்டிரண்டு பேராய் முன்னும் பின்னும் சேர்ந்துகொள்ள, ஒரு வரிசை உருவானது.

இந்த வீட்டிற்கு முன்வீட்டில் சிப்பாய்கள் நிறையப் பேர் நின்றார்கள். அநேகமாக எல்லோருமே மதிலின் மேலால் இங்கு எட்டிப் பார்த்தபடி. முன்னாலிருந்த காவற்கூட்டுக்குள் நின்றவன் ஏதோ உரத்துச் சொல்லிவிட்டுச் சிரித்தான். நெய்யும் கடலையெண்ணையும் கலந்த வாடை மூக்கிலடித்தது. அவர்களைப் பார்க்காமல் தாண்டிப் போனார்கள்.

மெல்லத்தான் நடக்கவேண்டியிருந்தது. முன்னால் போகிறவன் ஆறுதலாய்ப் போகிறான் போலும். திரும்பி, தாங்களிருந்த வீட்டின் விறாந்தையில் நிற்பவர்களைத் தெரிகிறதா என்று பார்க்க நினைத்தான் கிருஷ்ணன். வேண்டாம், இவங்கள் ஏதாவது நினைக்கக்கூடும். அத்தோடு, இங்கிருந்து பார்த்தால் மதிலுக்கு மேலால் நிற்கிற மரங்கள் மறைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கரின் நெடிய உருவம், முன்னால் கையெட்டும் தூரத்தில் போய்க்கொண்டிருக்கிறது. வேட்டியின் கீழ் அவரது ஒவ்வொரு அடி யெடுப்புக்கும், அந்தக் கறுத்தத்தோல் செருப்புகள் டக்டக்கென்று சீரான ஒலி கிளப்பிக்கொண்டிருக்கின்றன. சிங்கர் வழமையான கோலத்தில் தான் இருக்கிறார். வெள்ளை வேட்டி, நஷனல், வெள்ளைச் சால்வை . அது கழுத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்தது. நரை மயிரடர்ந்த தலை, வழமையாகத் திருநீறும் சந்தனமுந் துலங்குகிற நெற்றியில் இன்று திருநீற்றை மட்டும் பார்த்த ஞாபகம். எப்படியோ ஆள் தொண்ணூறு வீதமாவது வழமையான கோலத்தில் !

கிருஷ்ணன் தன்னைப் பார்த்தான் . மண்ணிற பிஜாமாசாரம், ரப்பர்ச்செருப்பு. வெளியே விட்ட வெள்ளை அரைக் கைச் சட்டை . வீட்டிலிருக்கிற கோலம். நேற்று மத்தியானம் குளித்து விட்டுப் போட்ட உடுப்பு.

பரவாயில்லை, போய் இந்தச் சாப்பாட்டு விஷயத்தை ஒழுங்கு பண்ணிவிட்டு வந்து மத்தியானம் குளித்து மாற்றி விட்டால் சரி. ஆனால் முகாமிலிருக்கிற சனத்தைப் பார்த்தால் மத்தியானமாவது குளிக்க முடியுமோ, தெரியவில்லை. வந்து பார்க்கலாம். எப்படியும் இவ்வளவு பேருக்கும் இந்த மூன்று நாலு நாளைக்கும் சாப்பாட்டை ஒழுங்கு பண்ணிக் கொள்ளத்தான் வேணும்... எத்தனை பேர், எத்தனை குஞ்சு குருமன்... நாங்கள் போய்க் கதையாமல் சரிவராதாம்.

தெருக்கரையில் அங்கங்கே தேங்கிநிற்கிற வெள்ளத்தை விலக்கி நடக்க வேண்டியிருந்தது. கழுவி விட்ட நிலத்தில் காலை வெய்யில் அழகாய் விழுந்தது. நீண்டு நகரும் நிழல்கள். தடம் படாத தெருக்கரை மண். மழை பெய்தது முந்தநாளிரவு.

எங்கே போகிறோம் ? எங்கேயிருக்கிறது செஞ்சிலுவை அலுவலகம் ? போனால் உடனே கவனித்து அனுப்பி விடுவார் களென்று பி. கே. சிங் சொன்னான். வேளைக்குத் திரும்பி விட்டால் நல்லது. அநேகமாக அம்மன் கோவிலடிப்பக்கம் இருக்கலாம்.

## 2

சரிதான், முன்னால் போகிறவன் இடது பக்கமாகத்தான் திரும்பப் போகிறான்.

திரும்பினார்கள்.

என்ன, இது ?

கிருஷ்ணன் திகைத்தான்.

தெருவின் இருபுறத்து வேலிகளும் எரிந்து, கதிகால்கள் கருகி... மதில்கள் உடைந்து, கதிரேசு கடைப் பலகைகள்கூட.

இதென்ன ?

உயிரசைவே இல்லாத வெறுமை உறைத்தது. எங்கோ, ஒரு தனிக்காகம் இரண்டு தரம் கத்தியது. ஆட்களை அமுக்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருந்த அமைதி, இந்தக் கத்தலில் இன்னமும் பெரிதாய்க் கனத்தது.

சிங்கரை நிமிர்ந்து பார்த்தான். அவருக்கும் உறைத்திருக்க வேண்டும். பார்த்துப் பார்த்து நடப்பதில் புரிகிறது. கதைக்க முடியாதா? இயந்திரங்கள் போல முன்னும் பின்னும் கூடவருகிற படை ஆட்கள்...

இவர்கள் ஏனிப்படி எங்களைக் கூட்டிக்கொண்டு போகிறார் கள், ஏதோ கைதிகளைக் கொண்டு செல்வதுபோல ? இரண்டு சிவிலி யன்களைக் கூட்டிப் போக ஏன் இவ்வளவு பாதுகாப்பு ? முன்னால் ஒருவன் துவக்கோடு அதை நீட்டிப் பிடிக்கிற விதமும் நடக்கிற நடையும். எச்சரிக்கை எச்சரிக்கையாக அடி வைக்கிறான். அங்குமிங்கும் பார்த்தபடி அடுத்தவர்களும் அதே மாதிரி ! பின்னால் வருகிறவர்கள் அவர்களைத் திரும்பிப் பார்க்க முடியாது. அவர்களும் அப்படித்தான் வருவார்கள் !

எங்கே போகிறோம் ? என்னத்துக்கு இப்படி ? முட்டாள்தன மாக வந்து மாட்டிக்கொண்டோமா ? வேலியாயிருந்தவற்றின் விளிம் போடு படர்ந்திருந்த பச்சைப்புல் வரிசைக்கும் வாரடித்த வெள்ளை மணற் கரைகளுக்குமிடையில் கரைந்துங் கலைந்துங் கிடக்கிற கரித்திட்டுக்கள்... தெருவின் தாரிலும் குறுணிக் கற்களிலும் அவர்களின் முரட்டுச்சப்பாத்துக்கள் நறுநறுக்கிற நடையொலி. அது மட்டுமே கேட்கிற அமைதி. இந்த வெறுமை, இந்தப்பயங்கரம் எங்கள் ஊர்தானா இது ?... இல்லை . இது கனவில்லை.

நடந்தபடியிருந்தார்கள்.

பொன்னையர் வீட்டுப்போர்ட்டிகோ கூரையின் மேல் அவர் வளவின் முன்மதில் கல்லெல்லாம் ஏறி, அது ஒருகொத்தளமாகி ஓட்டை யிலிருந்து ஒரு துவக்கு நீட்டிக்கொண்டிருந்தது.

துரைலிங்கம் வீட்டு வேலி வெட்டி, அடிவளவு வரை தெரிகிறது. கார்க்கொட்டிலில் துரையரின் மொறிஸ் மைனர் எரிந்து கருகி வெறுங்கோதாய்... இந்தப் பக்கத்துச் சனங்களையெல்லாம் எங்கே கொண்டுபோய் விட்டிருப்பான்கள்? அம்மன் கோவிலிலா ? எங்களைப் போல இந்தக்குறிச்சியும் இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டதா, இல்லை, சுற்றி வளைப்பிற்கு முன்பே மாறி விட்டதா?

மணத்தது.

மணம்நெருங்கி வந்தது. இங்கே எங்கோ கிட்டத்தில்தான்.

அந்தா, குணம் வீட்டு மதிலின் பின், இரண்டு இடங்களில், ஓட்டைகளுக்கூடாக நீட்டிய துவக்குகள், காவற் கூடுகள் . குணம் வீட்டுக்கு அந்தப்பக்கமும் அதேபோல் இரண்டு. பாக்கியமக்கா வீடு. பரஞ்சோதியர் வீட்டுமதில்களின் கற்கள் ! செல்வத்தின் சைக்கிள் கடை யின் முன்னாலிருந்த பத்தியின் தகரங்களையுங் காணவில்லை, அவை தான் போலும், மேலே ! முழு இடமும் புயலடித்து ஓய்ந்த மாதிரி ! இல்லை, இனித்தான் புயலோ?

முன்னால் போனவன் , வலதுபுறம் சட்டெனத் திரும்பினான். பரமசிவம் வீட்டுக்குப் போகிற வண்டிப் பாதை ! திரும்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

இதென்ன ? மயிர்க்கொட்டி மொய்த்தது போல ? இத்தனை பேர்களா ?

சிலிர்த்தது.

இதுவுங் கனவில்லை.

இங்கே ஏன் வந்திருக்கிறோம்? இதற்குள் எப்படி நாங்கள் தேடி வந்த இடம் இருக்க முடியும்? இத்தனை பேரிருந்தும் எவ்வளவு அமைதி ! இந்த முடக்கினுள் இத்தனை சிப்பாய்கள் இருப்பார்கள் என்று யார் நினைப்பார்கள்?...

வேலிக்கரைகளோடு, வரிசை வரிசையாய், குந்தியும் சப்பாணி கட்டியும்... பீடிகளை உறிஞ்சியபடி. நெய் மணத்தையும் மீறி எங்கும் அது மணத்தது.

கிருஷ்ணனுக்கு வயிற்றைப் பிசைந்தது. எங்களூரில் இப்படி கூர்க்காக்கள் மொய்ப்பார்களென்று எவராவது எப்போதாவது நினைத்திருக்க முடியுமா?

இவர்களின் வரிசை நடுவால் நடந்தது. இங்கொன்று அங்கொன்றாக, ஆங்கார உறுமல்கள், முணுமுணுப்புக்கள். இருந்தாற் போல் ஒரு சீழ்க்கை ! எல்லா முகங்களும் ஒரே மாதிரி மரத்துக்கிடந்தன. பார்க்காமல் நடந்தார்கள். திடீரென ஒருவன் தலையை உயர்த்திக் கறுவினான். கத்தியசத்தம் திடுக்கிட வைத்தது. எல்ரிரிஈ என்ற மாதிரிக் கேட்டது. சிரித்தால் என்ன நடக்கும் ? இந்த நேரத்திலும் வருகிற சிரிப்பை கிருஷ்ணன் மறைத்துக்கொண்டான்.

பரமசிவம் வீட்டுக்குத்தான் நேரே போனார்கள். கேற்றில் நுழைந்து திரும்பியதும், சிவத்தார் வளவு விரிந்து கிடந்தது. மேலே அடர்ந்த தென்னைகளும், கீழே அடர்ந்த புற்றரையும் இந்த இடத்தில் சந்தடியில்லை. ஆனால், நேரே முன்னால், சற்றுத் தொலைவில், வீட்டின் போர்ட்டிகோ பரபரத்துக் கொண்டிருந்தது.

கொஞ்சத்தூரம் போனார்கள். ஒரு தென்னையருகில் வந்ததும் அழைத்து வந்தவன் இவர்களை நிற்கச் சொல்லிக் கைகாட்டினான். நின்றார்கள். அவன் மட்டும் நேரே போனான்.

இது இவர்களின் இடம். அலுவலகமோ, முகாமோ, எதுவோ. அதிலும் இந்த அமளியைப் பார்த்தால் பரமசிவத்தாரின் பழைய மோட்டார் சைக்கிள் எண்ணெய் சொட்ட நிற்கிற இந்தப் போர்ட்டிகோ தான் அவர்களின் கட்டளை மையமாகத் தெரிகிறது...

முப்பதடிக்கு முன்னால் அந்தப் போர்ட்டிகோ. அங்கு நடக்கிறதெல்லாவற்றையும் நன்றாகப் பார்க்க முடிகிறது. நடுவில் சோஃபாக் கதிரையில் ஒருவன். அதிகாரி போலும். அவனும் கூர்க்கா. சற்றுத் தள்ளி, ஒருமேசையின்மேல் தொலைத்தொடர்புக் கருவிகள். அவற்றின் முன்னால் மூன்றுபேர் கதிரைகளில் உட்கார்ந்து மாறி மாறிக் கத்திக் கொண்டிருந்தார்கள். வெவ்வேறு இடங்களுக்கு இங்கிருந்து கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் போவது மாதிரி இருந்தது. வயர்லெஸ்காரர்களின் பின்னால், அவர்களின் கதிரைகளில் கையை ஊன்றி வளைந்து ஒரு நெட்டை மனிதன்; கட்டளைகள் இட்டபடி. அவன் கூர்க்கா அல்ல. நல்லசிவலை. கறுத்த சீருடை. முழுமொட்டையாக மழித்திருந்த தலை.

இவர்களைக் கூட்டிப்போனவன், கூர்க்காவின் முன்னால் போய் நின்று சல்யூட் அடிக்கிறான். ஏதோ சொல்வது தெரிகிறது. திரும்புகிறான்.

அவன் வருவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அருகில் வந்ததும், " ஆவ் !... " என்றான்.

முகாமிலிருந்து புறப்பட்ட போது ' சலோ ' வுக்குப் பிறகு அவன் வாயிலிருந்து வருகிற அடுத்த வார்த்தை இதுதான்.

## 4

காலுக்கு மேல் காலைப்போட்டுக்கொண்டிருந்த அதிகாரி இவர்களையே உறுத்துப் பார்த்தபடி இருந்தான். தொப்பி மடியிலி ருந்தது. அங்குமிங்கும் நரையோடியதலை. ஐம்பது வயதிருக்கலாம். அருகில் போன பிறகுதான் அங்கே வேறு கதிரைகளில்லாதது கண்ணில் பட்டது.

கூர்க்கா ஒன்றுமே பேசவில்லை. இவர்களையே இன்னமும் உற்றுப்பார்த்தபடி இருந்தான்.

" குட்மோணிங் " என்றார், சிங்கர்.

அவன் முறைத்தான்.

" வெயிட் . சேர்... ", உறுக்கியபடி தூணைக்காட்டினான்.

" விக்ரம்சிங் ! "

அழைத்து வந்தவன் அவசரமாக முன்னால் வந்தான். அதிகாரி சொன்னதை அட்டென்ஷனில் நின்று கேட்டான். சல்யூட் அடித்துத் திரும்பி நடந்தபோது அந்த விக்ரம்சிங்கின் பின்னால், அவனோடு கூட வந்த நாலு பேரும் போனார்கள்...

கிருஷ்ணன் திடுக்கிட்டான். நாங்கள் இங்கே வந்திருக்கவே கூடாது ! சாப்பாடாவது ஒன்றாவது - போகிறவர்கள் பி. கே. சிங்கின் ஆட்கள் . இவர்களைக்கொண்டு வந்து விட்டுவிட்டுப் போகிறார்கள் ! இனித்திரும்புவது ? இந்தச்சூழலில் தனியே இவ்வளவு தூரமும் போக முடியுமா ? இவர்கள் யாராவது கொண்டு போய்விடுவார்களா ? நடக்கிற நடப்பைப்பார்த்தால், போகத்தான் முடியுமா என்பதே சந்தேக மாயிருக்கிறது.

கிருஷ்ணன், புறங்கையால் முகத்தைத்துடைத்துக் கொண்டான்.

பி.கே. சிங்கின் முகத்தில் பொய்யோ, மெய்யோ, புன்சிரிப்பா வது தெரிந்தது. கதிரையிலிருக்கிற இந்தக்கூர்க்கா முகத்தில், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயலையே காணவில்லை. பிடித்துத்தின்று விடுகிறவன் மாதிரி . நெஞ்சு படபடத்தது.

வீட்டுக்குள்ளிருந்து ஒருவன் வந்தான். வெள்ளித்தட்டு. அது நிறைய, வெள்ளையாய்ப் பூக்குவியல் போல தேங்காய்ச் சொட்டு !

வந்தவன் கூர்க்காவின் அருகே போய்த்தட்டை நீட்டினான். அவன் கையை மட்டும் நீட்டிப் பிடியாக அள்ளிக் கொண்டதும் தட்டுக் காரன் மொட்டந்தலை ஆளின் முன்போய் நின்றான். கிருஷ்ணன் இப்போதுதான் கவனித்தான். அந்த ஆளின் தலை முழு மொட்டை யில்லை ; உச்சிச்சுழியருகில் மட்டும், விரல் தடிப்பில் நீளமாய் - எலிவால் போல ஒரு குடுமி. அம்புலிமாமாப் படங்களில் வருகிற சில ஆட்களின் தலை மாதிரி...

அந்த ஆள், கதிரையில் கிடந்த வெள்ளைத் துவாய் ஒன்றை எடுத்தான். ஒற்றைக்கையால் முகத்தை அழுந்தத்துடைத்தபடி, மற்றக் கையால் சொட்டுகளை எடுத்தான். தட்டுக்காரன் கூர்க்காவின் அருகிலி ருந்த சிறிய முக்காலியில் தட்டை வைத்து விட்டு உள்ளே போனான்.

எதிரே இவர்கள் நிற்கிற உணர்வேயில்லாமல் இருவரும் சப்பு கிறார்கள்... ! கிருஷ்ணனுக்கு எரிச்சல் மண்டியது. இருக்கக்கூட இடந்தராமல் !... சிங்கரைப்பார்க்க வேண்டும் போலியிருந்தது. அவர், பக்கத்தில், தோளோடு தோள்முட்ட நிற்கிறார். ஆனால் எப்படித் திரும்புவது ?...

கதிரையில் இருக்கிறவனின் பெயர்ப்பட்டி இப்போது வடிவாகத் தெரிகிறது. மேஜர் ! பெயரைப் படிப்பதற்குள் கூர்க்கா கையை அசைத்து விட்டான்... இப்போ தெரிகிறது. பதாவோ, பாதாவோ, எப்படி உச்சரிப்பது ?

கறுப்புச் சட்டைக்காரனின் பெயரையும் பார்க்கவேண்டும் போலிருந்தது. அவன், நின்ற நிலையிலேயே வயர்லெஸ்காரர்களை அதட்டியபடி. வலது கையால் வாய்க்குள் சொட்டுக்களை எறிந்தபடி யிருக்கிறான் கப்டன். வன்பர் . அதைக்கூட சிலவேளை வான்பர் என்றோ வன்பார் என்றோ உச்சரிக்கவேண்டுமோ ?

## 5

பதா கிருஷ்ணனைக் கூப்பிட்டான் ' கம் ஹியர் ! '

கதிரையில் காலுக்குமேல் கால் போட்டபடி இருந்து கூப்பிடு கிறான் !

இது காலவரை இப்படி எவருந் தன்னைக் கூப்பிட்டதில்லை. வந்த எரிச்சலுக்கு...

என்னதான் செய்துவிட முடியும் ? கையாலாகாத கோபம்.
இரண்டடி எடுத்து வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நீ இங்லீஸ் பேசுவாயா ? "

அது பேசப் போய்த்தானே பி. கே. சிங் , இங்கே அனுப்பியிருக்கிறான் !

" ஓரளவு... " தெரிந்ததாக இவர்களுக்குத் தெரிந்து விட்டது எவ்வளவு பிரச்சனையாகப் போயிற்று.

" என்னுடைய கேள்விகளுக்கு ஒழுங்காகப் பதில் சொல்ல வேண்டும்... பொய் சொல்லித்தப்ப நினைக்கக்கூடாது..."

உறுத்து மிரட்டும் கண்களால் தன் உள உறுதியைச் சிதறடிக்க முயல்கிறானா இந்த இராணுவத்தான் ?

இதுதான் உணவுக்கு ஏற்பாடு செய்கிற வள்ளல் !

" நீ ஒரு எல்ரிரியா ? "

" இல்லை "

" பொய் சொல்லாதே ! சொன்னால்... "

கிருஷ்ணன் விறைப்பாகச் சொன்னான்.

" இல்லை , நான் ஒரு ஆசிரியன்... குடும்பகாரன்... "

" ஆசிரியன் என்கிற முறையில் உண்மையைச் சொல்லு. எல்ரிரி ஈக்காரர்கள் எங்கே ? இங்கே யார் எல்ரிரிஈ ?... "

" இங்கு ஒருத்தரும் இல்லை..."

" நீ ஒரு இளம் ஆள். உனக்குக் கட்டாயம் தொடர்பு இருந்திருக்கும்... "

" எனக்கு அவர்களோடு எந்தத் தொடர்பும் கிடையாது."

" ஷட் அப் ! ... " அவன் கதிரையிலிருந்து துள்ளிநிமிர்ந்தான். கன்னத்துத்தசைகள் துடிப்பது வடிவாகத் தெரிந்தது. இமை கொட்டாமல் இவனையே முறைத்தான்.

" எனக்குப் படிப்பிக்க நினையாதே ! " கன்னத்துத் தசைகள் இன்னமுந் துடித்தன.

இதற்கு என்ன சொல்வது ? கிருஷ்ணன் பேசாமல் நின்றான்.

" சரி இந்த ஊர் புலிகளின் கோட்டை என்று சொல்லப்படுகிற இடம் . நீ இந்த ஊரவன். உனக்கு அவர்களைத் தெரியாது என்கிறாய்! எப்படி நம்புவது ? " அடிக்காத குறையாகக்கையை நீட்டி இரைந்தான் மேஜர்.

" இருந்திருக்கலாம்... ஆனால் எனக்குத் தெரியாது."

" அதெப்படி ? " பதா கோபமாய் உறுமி நக்கல் சிரிப்புச் சிரித்தான்.

" என்னை முட்டாளாக்கப் பார்க்கிறாயா ? "

" என்னைச் சொல்ல விடுங்கள் ... " வருவது வரட்டும் என்று கிருஷ்ணன் சொன்னான்.

" இப்போது இங்கே நீங்கள் எவ்வளவுபேர் இருக்கிறீர்கள் ? உங்களை யார் எவர் ? யார் அதிகாரி , யார் சிப்பாய் ? எங்கிருந்து வந்தீர்கள், இனி எங்கே இருப்பீர்கள் ? இது ஒன்றுமே எங்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது. எங்களைப் பொருத்தளவில் நீங்கள் இங்கே இருந்தீர்கள். இதைத்தான் நீங்கள் போனபிறகு யாராவது கேட்டாலும் எங்களால் சொல்லமுடியும்..."

முடித்தபோது பதற்றமாயிருந்தது. அதிகம் பேசி விட்டேனா!

பதா, உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். வளைந்த புருவங் களின் கீழ் அந்த இடுங்கிய மொங்கோல் கண்கள் இன்னும் சிறிதாகி அவை கிருஷ்ணனை துளைக்க முயன்றன.

மார்பின் மேல் கட்டிக்கொண்டிருந்த கைகளை விலக்கி முகத்தைத்துடைத்தான் கிருஷ்ணன்.

அரை நிமிஷமிருக்குமா?

பதா சொன்னான்!

" இங்கே பார் ! " கிருஷ்ணன் பார்த்தான்.

" இப்போ நான் உன்னை ஓடும்படி சொல்லமுடியும்... ஆனால் நீ எவ்வளவு தூரம் ஓடிவிடுவாயென்றும் நான் பார்த்து விடுவேன்..."

அவன் சொன்னது விளங்கச் சில விநாடிகள் பிடித்தன! கிருஷ் ணனுக்கு வியர்த்தது. ' உன்னைச் சுடுவேன் ' என்பதை இதைவிட வடிவாக வேறெப்படிச் சொல்லமுடியும்?

## 6

என்ன செய்ய நினைக்கிறான், இவன்? - கிருஷ்ணனுக்கு நெஞ் சிடித்தது. சிங்கர் பின்னால் நிற்கிறாரா?...

அந்த மொட்டந்தலை மனிதன் கழுத்திலொன்றும் கைகளில் இரண்டுமாய் தொலைபேசிகளுடன் மல்லாடியபடியே இங்குமங்கும் பார்த்துக்கொண்டிருக்கிறான்...

" பின்னால் போ! " கூர்க்கா கத்தினான்.

என்ன சொல்கிறான் இவன்? சற்றுமுன் சொன்னது போல் சுடப்போகிறனா? கடவுளே... அசையவே முடியாதிருந்தது.

" பின்னால் போய் நில்! " மேஜர் மீண்டும் கூவினான்.

" யூ கம் ஹியர்! " என்றான் சிங்கரைப் பார்த்து.

கிருஷ்ணனுக்கு நம்பமுடியவில்லை ; இப்போதைக்கு விட்டிருக்கிறானோ?... தன்னையறியாமலே பின்னால் நகர்ந்தான்.

சிங்கர் முன்னால் போனார். தோளில் கிடந்த சால்வையைச் சரியாக இழுத்து விட்டபடி நின்றார்.

" இப்போது நீர் சொல்லலாம்!... " பதா உறுமினான்.

" நான் என்ன சொல்ல வேண்டுமென்கிறீர்கள்?... "

அந்தக்குரலும் ஆங்கிலத்தின் சுத்தமும் அவனை ஒரு கணம் அசைத்திருக்கவேண்டும்.

" உண்மையை ! ... உண்மையைச்சொல்லு... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நாங்கள் இந்தியாவை எங்கள் தாய் நாடாக மதிப்பவர்கள்."
அவரை அவன் முடிக்கவிடவில்லை.

" உன்னுடைய புலுடாவை நிறுத்து !... " கத்தினான்.

" இந்தியாவுக்கெதிரானவர்கள் இந்தியாவுக்குள்ளே கூட இருக்கிறார்கள் ! "

அந்தப் பெரியவரைத் தன் முன்னால் நிற்கவிட்டு இவன் கதிரையில் கால் மேற்கால் போட்டபடி உட்கார்ந்து கதைக்கிறவிதம் ! அவருடைய படிப்பென்ன, பழக்கவழக்கமென்ன, வயதென்ன, மதிப்பென்ன...

" ஸோ , உனக்கும் ஒருவரையுந் தெரியாது? "

" தெரியாது. "

" போய் நில் !... " பதா கத்தினான்.

" எக்ஸ்கியூஸ் மி... " சிங்கர் , நிதானமாகச் சொன்னார்.

" நீங்கள் எங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள். காலையில் எங்கள் முகாமைப் பார்க்க வந்த உங்கள் கப்டன் பி. கே. சிங், வீடுகளுக்குப் போக நீங்கள் அனுமதிக்கும் வரை ஊரவர் எல்லோரும் முகாமில்தானிருக்கவேண்டுமென்றார். அதுவரை எங்களுக்கான சாப்பாட்டு ஏற்பாடுகள் பற்றி... "

" ஷட் அப் ! ... " மேஜர் உச்சக்குரலில் இடைமறித்தான். முகம், இரத்தமாய்ச் சிவந்து வியர்வையில் பளபளத்தது.

" இரண்டு பேரும்.... " அவன் காட்டினான் :

" அந்தா அந்த மதிலோடு போய் நில் ! "

## 7

மதிற்கரையோடு மாரிப்புல் மெத்தையாகச் சணைத்திருந்தது. சிவத்தார் வீட்டுப் பூமரங்கள் இந்த மழைக்கு வஞ்சகமில்லாமல் மதாளித்து நின்றன. அவன் கனகாலம் தேடித்திரிந்த சரக்கொன்றைக் கன்றுகள், இந்தா , இதில், கைக்கெட்டும் தூரத்தில், முளைத்து நிற்கின்றன ! என்ன வேடிக்கை !... யார் செய்கிற வேடிக்கை இது ?

சிங்கர் அருகோடு நிற்கிறார். ஆளை ஆள் பார்த்துக்கொண்டார்கள். அவரின் முகமெல்லாம் வியர்த்திருந்தது. கண்ணாடியைக் கழற்றி விட்டுச் சால்வையால் ஒற்றிக்கொண்டார். கதைக்கவே பயமாயிருக்கிறது.

" என்ன நினைப்பான்களோ ... இப்பிடி வெருட்டினால் ? எங்களுக்கென்ன தெரியும் ?... "

கிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான்.

எதிரே போர்டிகோ. இங்கே கதைத்தால் கேளாதுதான் என்றாலும், பதாவை இப்போது காணவில்லை.

அம்புலிமாமா ஆள் தொலைபேசியுடன் இன்னமும் அமளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இருக்கிறான். அவனோடு மட்டும் ஐந்தாறு ஆமிக்காரர். வீட்டின் கோடிப்பக்கத்தில், சமையல் வேலை நடக்கிறதா ? - கிடாரங்கள் வாளி களில் சத்தங் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இவர்களின் இடதுபக்கம், கேற்முடக்கின் மறைவில், அந்தக் கையொழுங்கையில், மொய்த்துக்கொண்டிருந்த ஆட்கள் இன்னமும் அங்கேதானிருக்கவேண்டும்.

பீடிப்புகை, காற்றெல்லாம் கலந்திருந்தது. இங்கிருந்து ஒன்றுமே தெரியவில்லை...

களைப்பாக இருந்தது. பசியில்லை, ஆனால் தண்ணீர் விடாய்த்தது. காலையில் எழுந்ததற்கு பச்சைத் தண்ணீர் கூடக்குடிக்க வில்லை !

" இந்தா , பத்து நிமிஷத்தில் பேசிவிட்டு வந்துவிடலாமென்று கூட்டி வந்து ...! என்ன நயவஞ்சகம் ... ! "

கோபமா, கவலையா , பயமா , ஏமாற்றமா , எதுவென்றில் லாமல் - எல்லாம் கலந்து - மனதை அழுத்தின.

" இதிலை இருப்பம் " என்று சிங்கரைப் பார்த்தான்.

" ம்ம் ? " என்றவர் உடனே ,

" ஏதும் சொல்லுவாங்களோ ? " என்றார்.

" இருந்து பாப்பம்... " காலால் புற்பரப்பை மெல்லத் தடவி விட்டுக்குந்தினான். சப்பாணி கட்டிக்கொண்டபோது, காலுக்கு இதமாக இருந்தது. சிங்கரும் பக்கத்தில் சால்வையைப் போட்டுவிட்டு அமர்ந்தார்.

யாராவது பார்க்கிறார்களா ? இல்லை , ஒருவரும் இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை... புல்லின் பூக்காம்பொன்றைக் கிள்ளி, கிருஷ்ணன் தன்னையறியாமலே பற்களால் நன்னலானான். என்ன நடக்கும்?

## 8

படபடவென்று முறியும் சத்தங்கேட்டுத் திரும்பினார்கள். வளவின் மேற்கு வேலி விழுந்து கொண்டிருந்தது. பென்னாம் பெரிய லொறியொன்று, முக்கியபடி உள்ளே வர முயன்று கொண்டிருந்தது. உச்சக்கியரில் அதன் உறுமல்...

ஒவ்வொரு கதிகாலாக முறிந்து அந்த மூரி வேலி - முடியா மல் - வழி விட்டுக்கொண்டிருந்தது. ஒரேயொரு வாதநாராயணி மட்டும், கொஞ்சம் மொத்தமாக, தாக்குப்பிடித்தது . காட்டுக்கத்தியும் கையுமாய், ஒரு சிப்பாய் ஓடி வந்து -

அதை அடியோடு தறிக்கலானான்...

வெட்டிய வேலிக்கப்பால், அடுத்த வளவு. அதுவுந்தென்னங் காணி. முருகேசருடையது. அதையுந்தாண்டி, மதவடிறோட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது! முருகேசர் வளவின் றோட்டு வேலி வெட்டித்தான் லொறி இங்கு வந்திருக்கிறது... இந்த வளவுக்கு வருகிற கையொழுங்கையால் பெரிய வாகனங்கள் வரமுடியாதென்று இந்த வேலை பார்க்கிறார்கள்! இப்போது மதவடி றோட்டிலிருந்து வலுசுகமாக வந்துவிடலாம்...

லொறி , தென்னைகளைத் தாண்டி வளைந்து வந்து கொண்டிருந்தது. சென்னைத் தெருக்களை நினைவுபடுத்துகிற அந்தப் புகை மணம்...

இவர்களின் இந்த வேலைகளைப் பார்த்தால், வாகனங்களும் ஆட்களுமாய் இப்போதைக்கு விட்டுப்போகிற நோக்கம் இருப்பதாய்த் தெரியவில்லை...

குறுக்குப் பாதையை ஆட்கள் சீர்படுத்துகிறார்கள்... இந்த வளவுக்க இவ்வளவு கிட்டவா, மதவடித்தெரு இருக்கிறது ! தெருவுக்கு அந்தப்பக்கம் பனங்காணி. அதற்கப்பால் பள்ளிக் கூடத்தின் பழைய விளையாட்டு மைதானம்...

தண்ணீர்தான் நன்றாக விடாய்த்தது. எங்கே குடிக்கலாம் ? அந்தா அந்தத் தகரமறைப்பின் பின்னால் சிவத்தார் வீட்டுக் கிணற்றடி. வெட்டிய வேலிக்கப்பால் முருகேசர் வளவுத் துலா தெரிகிறது. முழத்திற்கொன்றாய்க் கிணறுகள், மாரிக்கு முட்டி வழிந்தபடி ! ஆனால்? நினைக்க நினைக்க...

இப்படியே இந்தப் புல்லில் படுத்துவிடவேண்டும் போல் அசதியாயிருந்தது. தங்களைக் காணாமல் முகாமில் என்ன பாடுபடுகிறார்களோ... இதெல்லாவற்றையும் அனுபவிக்கட்டு மென்றுதான் இப்படித் தடுத்து வைத்திருக்கிறான்கள்... !

என்ஜினை ஒரு தடவை ஓங்கி ஒலித்து விட்டு, லொறி, மாவின் கீழ் வந்து மௌனமாய் நின்றது.

ஷத்திமான். சாணிநிற உடம்பில் தூசி இந்த மாரியிலும். சில்லுகளில் சேறு. ட்றைவர் குதித்தான். வேறெவரும் வந்ததாயில்லை. குதித்தவன், தொப்பியைக் கழற்றியபடியே, முன்னால் நின்ற ஆளிடம் ஏதோ உரத்துச் சொன்னான். பாணி, பாணி என்று கேட்டது. மற்றவன் பதில் பேசாமல் வீட்டின் பின்னால் போகிறான். ட்றைவர், முகத்தைத் துடைத்தவாறே இவர்கள் பக்கம் பார்ப்பது தெரிந்தது . கிருஷ்ணன் , பார்வையைத் திருப்பிக்கொண்டான்.

வெய்யில் ஏறிக்கொண்டிருக்கிறது. முகாமைவிட்டுப் புறப்பட்டு இரண்டரை மணித்தியாலம்.

## 9

வீட்டின் பின்னாலிருந்து ஒருவன் வருகிறான்... ட்றைவருடன் பேசிவிட்டுப்போன அதே ஆள். கையில் பெரிய வெள்ளிச் செம்பு. சிவத்தார் வீட்டுச் செம்போ ? ட்றைவரிடம் போய் நீட்டுகிறான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்றைவர் அண்ணாந்து மடமடவென்று குடிப்பதைப் பார்க்க, கிருஷ்ணனுக்கு இன்னும் விடாய்த்தது.

சிங்கர், காலை நீட்டி நெட்டி முறித்தார்.

" எழும்புவமா ? "

" ம்ம் ... " கிருஷ்ணனும் எழும்பினான்.

எவரும் பார்க்கவில்லை. தண்ணீர் குடித்தவன் புறங்கையால் வாயைத் துடைத்தவாறே செம்பைக்கொடுக்கிறான். அவன் தங்களைப் பார்க்கிறானோ ?... இங்கேதான் வருகிறானோ ?...

இரண்டடி முன்னால் வைத்த ட்றைவர், மீண்டும் மற்றவனைக் கூப்பிட்டுச் செம்பை வாங்குவது தெரிகிறது. இவர்களை நோக்கி வருகிறான்...

" தண்ணி குடிக்கிறீங்களா ?... " அருகில் வந்ததும் செம்பை நீட்டினான். தமிழனா ?

என்ன செய்யலாம் ? - சிங்கர் தயங்கியபடி வாங்கினார்.

" நீங்க தமிழ் ஆளா ?... "

" குடியுங்க... "

" எங்களை ஏன் இப்படி நிக்கச் சொல்லியிருக்கு ? ... " குமுறலுடன், கிருஷ்ணன்.

" என்னா ஆச்சு? "

சொன்னார்கள்.

" விட்டுருவாங்க ... " என்றான், கேட்டுவிட்டு.

" விசாரிக்கிறாங்க நோப்ராப்ளம் ! ... குடியுங்க... "

" நீங்கதான் ஒரு ஆள், இவ்வளவு நேரத்துக்கு, இப்பிடி வந்து மனுசத்தன்மையாய்க் கதைச்சிருக்கிறியள்... தண்ணியும் தந்து... "

" என்னதா இருந்தாலு நாம ஒரே ஆளுங்க இல்லியா ? "

" உங்கட பேரென்ன ?... " சிங்கர் கேட்டார்.

" கோபாலன்... "

குடித்துவிட்டு செம்பைக் கிருஷ்ணனிடம் நீட்டினார். தண்ணீர், நாக்கு, தொண்டை நெஞ்செல்லாம் நனைத்து சில்லென்று இறங்கியது.

" நான் மலையாளத்துக்காரன் ... வாறேன் சார்... "

அவன் அவசரமாகச் செம்பை வாங்கிக்கொண்டு திரும்புவதாகப்பட்டது. லொறியை நோக்கி நடந்தான். சிங்கரும் கிருஷ்ணனும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டார்கள்.

என்ன நடந்தது இவனுக்கு ? எங்களுடன் பேசிக்கொண்டிருந்ததை யாராவது பார்த்து விட்டார்களா ? அல்லது , பார்த்து விட்டால் என்ற பயமா ? தான் தமிழன் என்று ஒப்புக்கொள்ள இவனைத் தடுப்பது எது ?

எல்லாமே புதிராக இருந்தன.

" இருப்பம்... "

மீண்டும் புல் சணைப்பில் குந்தினார்கள். புல் மணத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

எவ்வளவு நேரம் இருக்கவேண்டும், இன்னும் ? என்ன நடக்கப் போகிறது ? உடலே ஓய்ந்த மாதிரி...

இடது புறம் ஒழுங்கை மறைவில் - அத்தனை பேரும் இருக்கிறார்களென்றே படுகிறது. போர்ட்டிகோவில் அதே ஐந்தாறு பேர்தான். ஆனால், வீட்டினுள்ளும் பின்னாலும் எத்தனை பேரென்றே தெரியவில்லை.

ஒருவர் கூட இவர்களிடம் வரவே இல்லை - அந்த கோபால னைத் தவிர. அவன் எங்கே ? வேலி வெட்டிய ஆட்களெங்கே ? பீடிப் புகை, நெய்மணம், சமையல் புகை, வாகனங்களின் அருகாமையில் கிளம்புற புழுதியும் பெற்றோலும் கலந்த நெடி , பச்சைப் புல் வாசம் என்று ஒவ்வொன்றையும் சுமந்து அலைந்த காற்று , இருந்தாற்போல இரைந்து கடந்தது. தென்னோலைகள் அலையாய் அசைந்தன. திட்டுத் திட்டாய் விழுந்துகிடந்த வெய்யில் ஓடி ஓடி , உருமாறி... இந்த மாரி யிலும் நல்ல வெக்கை.

சிங்கர், கந்தர்சஷ்டி கவசத்தை முடித்துவிட்டு, தேவார மொன்றை வாய்க்குள் மெல்ல , மிகமெல்ல சொல்லிக் கொண்டிருக்கி றார்.

" நாமார்க்குங் குடியலோம் ... நமனை அஞ்சோம் ... "

நேரம் , பன்னிரண்டு இரண்டு. கிருஷ்ணன் மணிக்கூட்டைப் பார்க்கும் போதே, அந்தக் கறுத்தப் பிளாஸ்ரிக் டிஜிற்ரல் கடிகாரத்தில், இரண்டு மூன்றாக மாறிற்று - தோன்றித் தோன்றி மறைகிற புள்ளிகளில் தெரியும் அதன் உயிர்த் துடிப்பு...

இந்தப் பிரச்சினை மட்டும் இல்லையென்றால், இந்த நேரம், உச்சி வேளைப் பூசைக்காக ஒலிக்கிற கோவில் மணிகள் எல்லாப் பக்கமும் கேட்கத் தொடங்கியிருக்கும்...

இருந்தாற் போல சடசடவென்று சூட்டுச்சத்தந்தான் கிழக்கே கேட்டது. கிருஷ்ணன், சிங்கரைப் பார்த்தான் . துப்பாக்கிகள் ஆக்ரோஷ மாய்க் குரைக்கத் தொடங்கின. கிழக்கேதான் . கிட்டவுமில்லை, தூரவு மில்லை.

" சண்டைதான்... "

எங்கள் பாடு ? முகாமிலிருக்கிறவர்கள் பாடு ?

வேட்டொலிகள் விடாமல் கேட்டன. இருபுறமும் மாறி மாறி. கூடியும் குறைந்தும்... ஒன்றுக்குள் ஒன்றாய் , ஒன்றை மீறி மற்றதாய்...

இனி ... ? கிருஷ்ணன் முழங்கால்களில் கைகளைக் கட்டியபடி குனிந்து கொண்டான். மயிர் கலைந்த தலையின் நிழல் முன்னால் விழுந்தது.

வீட்டுப்பக்கம் ஏதோ அசைவு தெரிந்ததில் திரும்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிப்பாய்கள், வரிசையாக - பெரியதொரு பாம்புபோல், சரசரவென்று அந்த வரிசை - சந்தடியில்லாத அந்த வேகம் பயமாயிருந்தது. உருமறைப்புச் சீருடைகள். இரும்புத் தொப்பிகளை மறைத்த பச்சை மிலாறுகள். ஹோல்ஸ்ரரும், தயாராய்ப் பிடித்த துவக்குகளுமாய்... முழங்கால்களருகில் உப்பியிருக்கிற பைகளில் கைக்குண்டுகளோ ? நிதானமாய்ப் பதியும் கனத்த காலணிகள்...

வரிசை இப்படித்தான் வருகிறது. முன்னே வந்தவன் நெருங்கு கிறான்.

- எழும்பலாமா ? - வேண்டாம் , இப்போ எழும்பினால் பிரச் சனை. கைகால்களை, அசைக்க முடியாத மாதிரியும் இருந்தது. சிங்கரும் எழும்பவில்லை. எழும்பாமலேயிருந்தார்கள்.

வந்து கொண்டிருந்தவர்களுக்கு இவர்கள் கண்ணிலேயே படவில்லை போலும். தம்பாட்டில் போனார்கள். இவர்களைக் கடந்து, கேற்றில் திரும்பி ... அங்கு ஒழுங்கையில் ஏற்கெனவே இருந்தவர்கள்? ...

வரிசை , வந்தபடியேயிருந்தது. எத்தனை ஆட்கள் !

உயரமான ஒரு மெல்லிய சிப்பாய், தும்புக்கட்டு மீசையும் ஆளுமாய், வரிசையில் சேராது அருகோடு வந்தான். முதுகில் வயர் லெஸ், ஓடாக்குறையாகத் தாண்டிப்போனான். ஏரியல், உயரமாய், தென்னங்கீற்றுப்போல். அவன் நடைக்கேற்பத் துடித்தசைந்தது.

இப்போது வருகிறவர்கள் , இடைக்கிடை இவர்களையும் கவனிக்கிறார்கள். ஒருவன் ஏதோ சொல்லிவிட்டுப் போகிறான்.

- இருநூறு பேராவது தாண்டியிருப்பார்களா ? இன்னமும் வருகிறார்கள். அடுத்த பக்கத்து வளவுகளுக்குள்ளும் ஆட்களிருக்க வேண்டும்.

அந்த அம்புலிமாமா ஆள் - அவன் பெயர் அதற்குள் மறந்து விட்டது - போர்ட்டிகோவிலிருந்து வெளியே வருகிறான். அதே கறுப்புச் சீருடை. இப்போ , தொப்பி அணிந்து கொள்கிறான். அவன் முதுகிலும் ஒரு வயர்லெஸ்.

பின்னால் இரண்டு பேர் தொடர வேகமாக வருகிறான்.

ஆளைப் பார்த்தால் கம்பீரமாய்த்தானிருக்கிறது. இந்திப்பட நடிகனாய்ப் போயிருக்க வேண்டியவன். இல்லை, நடிப்பென்று பார்த் தால், அந்தப் பி. கே. சிங்கை யாரும் மிஞ்ச முடியாது ! என்ன மாதிரிப் பேசி இங்கே அனுப்பினான்... !

கப்டன், நெருங்கித் தாண்டியபோது இவர்களைப் பார்த்தான். போகிற போக்கில் சொன்னான்.

" நீங்கள் போகலாம் ! "

சொல்லி விட்டுப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

ஒன்றுமே விளங்கவில்லை.

இப்போது போகச் சொன்னால் ? போகலாமா ? ... சில வேளை...

நினைத்ததும் மீண்டும் நெஞ்சடித்தது. போகச் சொல்லி விட்டு... ?

" இப்ப போ எண்டா இதென்ன ... ? " - சிங்கரும் குழம்புவது தெரிகிறது.

" போவம் ? ... " கிருஷ்ணன் திரும்பிப்பார்த்தான்.

கப்டனைக் காணவில்லை.

" பாப்பம், இவர்கள் போய் முடியட்டும் ... இப்ப எழும்பி னாலும் பிழை ... "

சரிதான் , போகட்டும்.

வரிசை வந்து கொண்டேயிருந்தது...

இவர்களுக்குள் - எங்களால் ஆளை ஆள் வித்தியாசங் கண்டு பிடிக்க முடியுமா ? ஒரே சாயல் ஒரே நிறம். ஒரே உயரம் ...

தன்னையறியாமலே தான் அவர்களைக் கவனிப்பதைக் கிருஷ்ணன் உணர்ந்தான். வேண்டாம் , ஏதாவது நினைத்தாலும் ... அங்கே பார்க்கக்கூடாது.

வலப்பக்கம் , யாரோ ஓடிவருவது மாதிரி ...

திரும்பினான்.

ஐந்நூறு பேருக்கப்பால் வருகிற ஒருவன், வரிசையை விட்டு விலகித் தங்களை நோக்கிக் கத்தியபடி ஓடிவருவது தெரிகிறது ! நீட்டிய துவக்கு...

- என்ன இது ? ஏன் மற்றவர்கள் பிடிக்கவில்லை ? ஆவேசங் கொண்டு அவன் கத்துவது இந்தியிலா என்று கூடத் தெரியவில்லை...

கடைசிச் சொல் மட்டும் புரிந்தது. " எல். ரி. ரி. ஈ ! " அவன் உறுமியபோது , நெற்றியை மறைத்த மயிரும், கொலைவெறி துள்ளும் கண்களுமாய், அவன் முகம் , மூன்றடிக்கு முன்னாலிருந்தது. ஏறிட்டுப் பார்த்த கிருஷ்ணனின் நெஞ்சில் துப்பாக்கி இடித்தது. கண்களை மூடிக் கொண்டான்.

## 12

தானும் அப்போது மூடிக்கொண்டதாகச் சிங்கர் பிறகு கொன்னார்.

இதழ். 25
சித்திரை - வைகாசி 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேக்

## சிறை மீட்பு

குமாரசாமியின் வீடு மூன்று மாதங்களாக செத்த வீடு மாதிரி இருந்தது. அவனது மனைவி சரியாக சாப்பிடுவதுகூட இல்லை. இந்த மூன்று மாதத்தில் உடல் மெலிந்து வருத்தக்காரி போல் ஆகிவிட்டாள். ஒவ்வொரு நாளும் அழுகைதான்.

இரண்டு நாட்களுக்கொருமுறை என குமாரசாமி புளியங்குளம் இராணுவ முகாமுக்கு போய்வருவது ஒரு தொழிலாகி விட்டது. ஆனால் எந்தப் பலனும் இல்லை.

ஒரு நாள் நானும் குமாரசாமியுடன் புளியங்குளத்திற்கு புறப் பட்டேன். யாரையாவது பிடித்து முடிந்தவரை கதைத்துப்பார்க்கலாம் என்பது எனது எண்ணம்.

பஸ்சிலிருந்து இறங்கியதுமே பழுதான நெய் மணப்பது போல் ஒன்று மூக்கைத்துளைத்தது. மனதிற்குள் பயத்தை உண்டு பண்ணியது. ஒரு தேநீர்க்கடைக்குள் போய் ' பிளேன்ரீ ' அருந்தினோம். அந்த முகாமின் நடைமுறைகளை முதலில் இந்தத் தேநீர்க் கடைக்காரனிடம் விசாரித்து அறிந்து கொள்வது நல்லது என எனக்குத் தோன்றியது.

குமாரசாமியின் இரண்டாவது மகன் கொழும்பில் படிப்பிப் பதையும், விடுமுறைக்கு வீடு வரும் வழியில் புளியங்குளம் முகாமில் பிடித்து வைக்கப்பட்டதையும் , மூன்று மாதங்களாகியும் விடுவிக்கப் படாததையும் ஒன்று விடாமல் கடைக்காரனிடம் கூறினேன்.

எம்மை கொஞ்சநேரம் கடையில் அமர்ந்திருக்கும்படி கடைக் காரன் சொன்னான். பின்னர் பீடி வாங்க வந்த இந்தியச் சிப்பாய் ஒருவனிடம் விடயத்தைக்கூறி எம்மை அறிமுகப்படுத்தினான். அந்தச் சிப்பாய் ஒரு தமிழன். எம்மை பரிதாபமாகப் பார்த்தான்.

" நாங்க என்னய்யா செய்யிறது. தமிழர் ரெண்டு மூணு பேர் தான் இங்கே இருக்கோம். எல்லோரும் இந்திக்காரனும், சீக்கியனும் தான். நீங்க பேசுறது அவனுக்குப் புரியாது. அவன் பேசுறது உங்களுக்குப் புரியாது. என்ன பண்ணப்போறீங்க... ?

எம்மைக் கேள்விக் குறியோடு பார்த்தான் அந்தச் சிப்பாய்.

" ஐயா நாங்களும் தமிழர். நீங்களும் தமிழன். மகனை ஒருக்கா பாக்கிறதுக்கு எண்டாலும் உதவி செய்யுங்கோ " குமாரசாமி அழும் குரலில் வேண்டினான்.

" நான் ஒண்ணும் செய்ய முடியாதுங்க. எல்லாம் உங்க ஆளுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யிறவேல ஆ... அங்க பாருங்க. முன்னாடி ஒரு ' சென்றி ' தெரியுதே. அங்க உங்க ஆளு ஒருத்தன் தான் முகமூடி போட்டுக்கிட்டு, பஸ்சில் வர்றவங்க போறவங்க எல்லாரையும் காட்டிக்குடுக்கிறான். தா...ளி " கெட்டவார்த்தை போன்ற ஒன்றால் அவனைத் திட்டினான் அந்தச் சிப்பாய்.

சிறிது நேரம் யோசித்த அந்தச் சிப்பாய், பெயர் விலாசத்தைத் தரும்படியும் தாம் ஆளைப்பார்த்து விட்டு என்ன நிலையில் இருக்கிறான் என்பதையாவது கூறுவதாகச் சொன்னான். அடுத்த நாள் வந்து இதே தேநீர்க்கடையில் நிற்கும் படியும் கூறினான்.

பஸ்ஸில் திரும்புகையில் குமாரசாமியின் முகத்தில் சிறிது அமைதி தெரிந்தது. மகன் பிடிபட்டு மூன்று மாதங்களாகியும் பார்க்கக் கூட அனுமதிக்கப்படவில்லை. அந்த சிப்பாய் பார்த்துக்கூறுவதாகச் சொன்னது குமாரசாமிக்கு சிறிது நிம்மதியைத் தந்திருக்கவேண்டும்.

அடுத்த நாள் மீண்டும் புளியங்குளத்திற்கு வந்தோம். அதே தேநீர்க்கடையில் ' பிளேன்ரி ' அருந்தினோம். சிறிது நேரம் காத்திருக்க அந்த சிப்பாய் வந்தான்.

" ஏன்யா, பையன் ஸ்கூல்மாஸ்ரர்னு சொன்னீங்க. அவன் எல். ரீ. ரீ. ஈ. என்று வாக்குமூலம் எழுதிக் கொடுத்திருக்கான். "

" ஐயோ எண்ட தாயாணை சத்தியமா , அவன் கொழும்பில் படிப்பிச்சுக்கொண்டிருந்தவன். போன ரெண்டு லீவுக்கும் வரவேண் டாம் எண்டு கடிதம் எழுதினான். இந்த லீவுக்கு தாயைப் பார்க்க வேணுமெண்டு வந்தவன். பொய்யெண்டால் இதைப் பாருங்கோ " பாக் ' கில் இருந்து ஏதோ பத்திரங்கள் கடிதங்களை எல்லாம் எடுத்து அந்த சிப்பாயிடம் காட்டினான் குமாரசாமி.

நன்றாக அடித்து சித்திரவதை செய்திருப்பார்கள். அதனால் தான் அவன் வாக்குமூலம் கொடுத்திருக்கிறான் என்று எனக்கு விளங்கியது.

" இதைவிட நான் ஒன்றும் செய்யமுடியாது. பெரியவனோ டப் பேசிப்பாருங்க. "

" இங்கிலீஸ் தெரிஞ்ச யாரையாவது கூட்டிக்கிட்டு வந்து பேசுங்க " என்று சொல்லிவிட்டு அந்த சிப்பாய் அவசரமாக அவ் விடத்தை விட்டு அகன்றான்.

குமாரசாமி கண்களைத் துடைத்துக்கொண்டு என்னைப் பார்த்தான். எனக்கு ஒரு யோசனை தலைக்குள் பளிச்சிட்டது. கிளி நொச்சி குளத்தடி முகாமில் தமிழன் ஒருவன் பெரியவனாக இருப்ப தாக பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். அவனுடன் தொடர்புகொண்டு அவனூடாக முயற்சித்தால் சரிவருமோ ? எதற்கும் முயன்று பார்க்க லாம் என்று தோன்றியது. என்ன இருந்தாலும் தமிழனுக்கு பற்றுணர்வு இருக்கும். அந்த புளியங்குள சிப்பாய் போன்று. எனது யோசனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமியும் ஏற்றுக்கொண்டான்.

அடுத்த நாள் கிளிநொச்சி ' சிட்டிசன் கொமிட்டி ' ஆள் ஒருவரிடம் விசாரித்தேன். குளத்தடி முகாமிலுள்ள பெரியவனின் பெயர் மேஜர் நடராஜா என்று அறிந்து கொண்டேன். ஆனால் அவன் எப்படி யான ஆள் என்பதை அறிய முடியவில்லை. ' சிட்டிசன் கொமிட்டி 'க் காரரின் உதவியுடன் மேஜர் நடராஜாவைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்து கொண்டேன். பார்ப்போம். தமிழன் தானே, ஏதும் உதவுவான் என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன்.

ஓர் வெள்ளியன்று காலை , நான், குமாரசாமி, அவனது மனைவி மூவரும் முகாமுக்குச் சென்றோம். ஒரு மணித்தியால காத்திருப்பின் பின் மேஜர் நடராஜாவை சந்திக்க முடிந்தது. புளியங் குளத்தில் சந்தித்த தமிழ் சிப்பாயின் முகத்தில் தெரிந்த இளகிய தன்மை மேஜர் நடராஜாவின் முகத்தில் தெரியவில்லை. சற்று இறுக்கமான முகமாகவே தோன்றியது.

" என்ன வேணும் " மேஜர் கேட்டான்.

குமாரசாமியும் அவனது மனைவியும் பதற்றத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள ஒரு முன்னுரையாக நான் தொடங் கினேன்.

" இவர் பெயர் குமாரசாமி இவரின் மகன் கொழும்பிலை 'ரீச்' பண்ணுறார். லீவுக்கு கிளிநொச்சிக்கு வாறவழியிலை புளியங்குளத்து ஆமிக்காம்பில் பிடிச்சுப் போட்டினம். அவன் ஒண்டிலையும் தொடர்பு இல்லை. அஞ்சு வரிசமா கொழும்பில் தான் வேலை. நாங்க புளியங் குளத்தில் போய் கதைச்சம் . அவைக்கு தமிழ் தெரியாதா..."

மேஜர் நடராஜா இடையில் குறுக்கிட்டான். " ஆமா நீங்க யாரு ? "

" நான் இவரோட சினேகிதன். "

" ஏன் இவங்களுக்குப் பேசவராதோ? "

" இல்லை... "

" நீரு இடையில என்ன... புறோக்கர் வேலையா பார்க்கிறீரு?"

" இல்லை ... வந்து "

" யோவ் நீ பேசாம இரு. அவங்க சொல்லட்டும் ."

எனக்கு சங்கடமாகப் போய்விட்டது. நான் முதலில் கதைக்கத் தொடங்கியது தவறு போலவே பட்டது. பேசாமல் தலையைக் குனிந்து கொண்டேன்.

குமாரசாமியும் அவரது மனைவியும் நடந்த விடயங்களைச் சொன்னார்கள்.

எல்லாவற்றையும் கேட்ட மேஜர் நடராஜா ஒரு விசமப் புன்னகை செய்தான். தொண்டையைச் செருமிக்கொண்டு பின் பேசத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ நீங்க எல்லாரும் தான் எல். ரீ. ரீ. ஈயை சாப்பாடு போட்டு வளர்க்கறீங்க. எல்லாரையும் தான் தண்டிக்கணும். ஒவ்வொருத்தனும் பல பேர்ல உலாவுறான். வீட்ல ஒரு பேரு. றோட்ல ஒருபேரு. காட்ல ஒரு பேரு. ஒவ்வொருத்தனுக்கும் ஒம்பது பேர் இருக்கு. முழிச் சிக்கிட்டு இருக்கப்போவே கண்ணுல மண்ணத்தூவுறான். திடீர்னு வந்து சுட்டுட்டு ஓடுறான். முந்தா நாள் ‘ திறீஸ்டார் ’ காரங்க நாலு பேரை வந்து சுட்டுட்டு போனான். போன வாரம் எங்க ஆமி இரண்டு பேரை உள்ள புகுந்து சுட்டாங்க, இவங்களை எல்லாம் சும்மா விட முடியாது. அம்பது பேரை புடிச்சா அதுல அஞ்சு பேராவது எல். ரீ. ரீ. ஈ. இருப்பான். அதைத் தான் நாங்க செய்யப்போறோம். இப்ப புளியங்குளத்தில் அதைத்தான் ஆரம்பிச்சிருக்கோம். ”

அவன் கதைக்கும்போது அவனது முகம் சிவந்து ஆவேசம் கூடிக்கொண்டு போனது. அவன் தொடர்ந்தான்.

“ ஸ்கூல் மாஸ்டர்னா எல். ரீ. ரீ. ஈ இல்லைன்னு எங்களை நம்பச் சொல்றியா. எங்களுக்கு எல்லாம் தெரியும். ”

“ ஆமா விக்கியைத் தெரியுமா ... விக்கி? ”

எனக்கு இவனை ஏன் சந்திக்க வந்தோம் என்றாகிவிட்டது. அவன் பேசப்பேச பயம் அதிகரித்தது.

“ சொல்லுங்கய்யா விக்கியைத் தெரியாதா யோவ் நீ சொல்லுய்யா உனக்குத் தெரியாதா ? ”

என்னைப் பார்த்து அவன் கேட்டான். நான் விக்கியைத் தெரியாது என்று சொன்னால் அவன் நம்ப மாட்டான். ஊரில சின்னக் குழந்தைக்கும் விக்கியின் பெயர் தெரியும். நகரில் அடிக்கடி ஊடுருவி தாக்குதல் செய்து விட்டு மறைவது விக்கியின் குறூப் என்று இங்கு பலருக்குத் தெரியும். சில வேளை தன்னந் தனியாக வந்தும் தாக்குதல் செய்வான் விக்கி. அப்பகுதியில் இந்தியப் படையினருக்கு விக்கியின் பெயர் சிம்ம சொப்பனமாக இருந்தது.

மேஜர் நடராஜா ஆவேசத்துடன் முகத்தைச் சுருக்கி விரித்துப் பேசிக்கொண்டிருந்த விதம் எம்மைப் பயமுறுத்தியது. சட்டிக்குள்ளி ருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக எமது நிலைமை இருந்தது. நாம் அவனிடம் வந்த நோக்கம் வேறு. அவன் எம்மிடம் கதைத்துக் கொண்டிருந்த விடயம் வேறாகப் போய்விட்டது. மேஜர் விடவில்லை. தொடர்ந்து துப்பாக்கி மாதிரி வார்த்தைகளைப் பொழிந்தான்.

“ எல். ரீ. ரீ. ஈக்கு யாரு சாப்பாடு குடுக்கிறது, வீட்டுல தங்க வைக்கிறது , தகவல் சொல்றது , எல்லாம் எங்களுக்குத் தெரியும். ஸ்கந்த புரத்தில் தபாலாபீசுலே வேலை செய்யிற நாராயணணைத் தெரியு மாய்யா உனக்கு ? அவன் வீட்டில தான் இந்த விக்கிப்பய தங்கிறது, சாப்பிடுறது எல்லாம் . முதல்ல அவனைப் புடிக்கணும். புடிச்சி நாயைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுறமாதிரி சுட்டுத் தள்ளணும். அப்பத்தான் நீ எல்லாம் திருந்துவ. பாரு பாத்துக்கிட்டே இரு. இன்னும் ஒரு வாரத்தில் அந்த விக்கியை நாங்க புடிப்போம். புடிச்சி நாய் மாதிரி தெருத் தெருவாக இழுப் போம். "

" அவனை மட்டுமில்லை சாப்பாடு போடுற அத்தனைப் பேரையும் புடிச்சு சுட்டுத் தள்ளுவோம். "

அவன் பேசிக் கொண்டிருக்க சிப்பாய்கள் பலர் எங்களைக் கடந்து வரிசையாக ஓடினார்கள் , முன்னால் நின்ற ' ரக் ' குகளில் பாய்ந்து ஏறினார்கள்.

" பாரு , இவங்க எல்லாம் இன்னிக்கு விக்கியைப் புடிக்கத் தான் போறாங்க. எப்படியும் புடிச்சுடுவாங்க. போங்கய்யா ஓடுங்க. ஒருத்தனும் இந்தப் பக்கம் வரக்கூடாது. ஸ்கூல் மாஸ்டர் மட்டு மில்லை, எவனையும் நாங்க நம்ப மாட்டம். எல்லோரும் ஒண்ணுதான். போங்க போங்க. "

அவன் எங்களை விரட்டுவது போலிருந்தது. பயத்துடன் அசடு வழிய முகாமை விட்டு திரும்பினோம். சிறைச்சாலையிலிருந்து விடு பட்டதைப்போன்ற உணர்வு. மூவரும் ஒருவரோடொருவர் கதைத்துக் கொள்ளாமல் நடந்தோம். குளத்தடி வீதியைக் கடந்து கண்டிவீதியால் திரும்பி நடந்தோம். இந்தியச் சிப்பாய்கள் வரிசையாக நடந்து போய்க் கொண்டிருந்தனர்.

' டிப்போச்சந்தி ' யால் திரும்பி கனகபுரம்வீதியில் நடந்த போது சைக்கிளில் வாழைக்குலை கட்டிக் கொண்டு முன்னால் ஒரு பசளை ' பாக் ' கில் ஏதோ சுற்றிக் கட்டிக்கொண்டு ஒருவன் எம்மைக் கடந்து நகருக்குள்சென்று கொண்டிருந்தான். உடம்பில் சட்டை இல்லை. தலையில் தலைப்பாகை. அந்த முகத்தை எங்கோ பார்த்த ஞாபகம் எனக்கு வந்தது. தலைக்குள் திடீரென்று மின்னல் வெட்டியது. அது விக்கியின் முகம் போலவே இருந்தது. விக்கிதானோ ? இவ்வாறான வேடத்தில்தான் விக்கி நகருக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவதாக ஊரில் பலர் பேசிக்கொள்கிறார்கள். அப்படியென்றால் அது விக்கி தானா ... ?

' இந்த மண்ணே சிறைக் கூடமாகிவிட்டது. இதனை மீட்க விக்கிகளால் மட்டும்தான் முடியும் ' மனதிற்குள் கூறிக்கொண்டே வேகமாக எட்டி நடந்தேன் . விடயம் புரியாமல் குமாரசாமியும் அவனது மனைவியும் ஓட்டமும் நடையுமாக என்னோடு தொடர்ந்தார் கள். காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு நடந்தேன். சில சமயம் வெடிச்சத்தங்கள் எதுவும் கேட்கலாம்.

இதழ் . 34
மாசி , 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. சத்தியபாலன்

# அப்பாவும் சமகாலமும்

வீடே பயத்தில் உறைந்து போயிருந்தது… அனைத்து முகங் களும் உயிரிழந்து… அச்சம் தோய அம்மாவின் குரல் ஏங்கிப் போய் அமைதியை குலைத்தது.

“ என்னடா தம்பி செய்வம்… ”

“ என்னத்த செய்ய … இப்பிடியே கிடந்து சாகிறது தான்…” அழுகையில் உடைந்தது அக்காவின் குரல்.

“ விசர்க் கதை… ” நான் அவர்களைத்தேற்ற முனைந்தேன்.

“ சந்தியில விழுந்த ஷெல் எங்கட வீட்டுக்கு வர எவ்வளவு நேரமாகும்… இண்டைக்கு இரவே வந்தாலும் வரும். ”

“ வராது எண்டு நான் சொல்லேல்ல… கொஞ்சம் நிதானமா இருங்கோ… யோசிச்சு சில ஒழுங்குகளைச் செய்து கொண்டு அடுத்த கட்டத்தைப் பாப்பம்…”

“ அடுத்த கட்டமெண்டா… என்னத்தைச் சொல்லுறாய்…? ”

“ இந்த இடத்த விட்டு கொஞ்சம் தள்ளியெண்டாலும் இருக்கிறதச் சொல்லுறன்… ”

“ அப்ப இந்த வீட்டில கிடக்கிற சாமான்களை என்ன தம்பி செய்யிற… ”

கனடாவிலிருந்த சின்னண்ணா சம்பாதித்த காசில் கட்டிய மாளிகை மாதிரி வீடு… வீட்டை நிறைக்கும் நவீனமான பொருட்கள்…

சீதனமாய்க் கொண்டு செல்லவென அக்காவின் ரசனைக்கு ஏற்ப தெரிவு செய்தவை இவை ஒவ்வொன்றும்… இவற்றை இப்படியே அனாதைகளாக விட்டுப்பிரிய அக்காவின் மனசு சம்மதிக்காதுதான்.

“ ஐயா என்ர பிள்ளை கனடாவில நொந்து சம்பாதிச்ச காசடா எல்லாம்… ” அம்மா அரற்றினாள்.

நான் மௌனமாக எழுந்து உள்ளே போனேன்.

அப்பாவின் அறையில் பெரியசாமி, அப்பாவின் படுக்கை விரிப்பை மாற்றிக் கொண்டிருந்தார்.

சற்று முன்னர் எமது வீட்டிலிருந்து கிட்டடத்தட்ட அரை மைல் தொலைவில் ஷெல் விழுந்த பாதிப்பு எதையும் பெரியசாமியின் முகத் தில் காணமுடியவில்லை.

அருகிலிருந்த சக்கர நாற்காலியில் தூக்கி உட்கார வைக்கப்பட் டிருந்த அப்பா மட்டும் எதையோ சொல்ல எத்தனித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்னப்பா...? " என்று கேட்டபடி அவரை அணுகினேன். பாரிசவாதத்தில் ஒரு பக்கம் இழுத்துப்போன வாயோடு அவர் சொன்னதை விளங்கிக் கொள்ள முனைந்தேன்.

" இ... இள்... ளையும் ழெ... ல்வ... மு... மா..." என்று சொற்கள் குழம்பி... அவரது தவிப்பை அந்த விழிகளும் கையொன்றும் வெளிப் படுத்தத் துடிக்கையில்...

" இங்கையும் ஷெல் வருமா எண்டு கேக்கிறார் தம்பி... "

பெரியசாமி அப்பாவைப் புரிந்துகொண்டு கூறினார்.

இந்த எட்டு வருடங்களில் அப்பாவை முழுதாய்ப் புரிந்து கொண்ட ஒரே ஒரு ஆத்மா பெரியசாமி தான்.

சம்பளத்துக்கு அமர்த்தப்பட்டிருந்தபோதும் வெறும் கடன் கழிப்பாய் எண்ணாமல் ஒரு பொறுப்புள்ள தாதியாய் துணையாய் அவரது மலசலத் துணிகளையும் எந்தவித அசூயையும் காட்டாமல் துவைத்துப் போட்டு ஒரு குழந்தை போல அப்பாவைப் பராமரிக்கும் மனிதர் இந்தப் பெரியசாமி.

அம்மாவோ அக்காவோ அருகில் வரவே தயங்கியபோது ஆளொரு கோலமும் துணியொரு கோலமுமாய் மலசலங் கழித்துக் கிடந்த அப்பாவை...

" ஒரு கைபிடி தம்பி... " என்று என்னையும் அழைத்து அவரைத் தூக்கிக் கழுவி அமர்த்தி துணிகளைக்கழுவி அறையை நேர்த்தியாக மாற்றி - தனது படுக்கையையும் அருகில் இட்டுக்கொண்ட பெரியசாமி வெறுமனே ஒரு நோயாளியைப் பராமரிக்க நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற தாதியாக மாத்திரம் செயற்படவில்லை. மனிதநேசத்தின் ஒரு தூதுவனாக விளங்கிய அந்த மனிதர் என் மனசில் ஒரு மேலான மானுட னாய் விசுவரூபம் கொண்டவர்.

" ஒண்டுக்கும் நீங்கள் யோசிக்க வேண்டாமப்பா. வலுகெதியா ஏதும் ஒழுங்கு செய்வம்... "

அப்பாவைத் தேற்றும் விதமாய் அவரது கைபற்றி ஆறுதலாய்ச் சொல்லி விட்டு வெளியே வந்தேன்.

ஆளுக்கொரு மூலையாய் அமர்ந்து கொண்டு அழுதபடியிருந் தனர் அம்மாவும் அக்காவும்.

இப்போதைக்கு மாற்றாகச் செல்லக்கூடிய இடமென்றால்... அக்காவுக்குப் பேசி ஒழுங்கு செய்திருக்கும் மாப்பிள்ளை வீட்டாரின் வீடு - தான நல்லூர் இப்போதைய நிலைமைக்கு நல்ல பாதுகாப்பான இடந்தான். எங்கள் நெருங்கிய உறவினர் யாவருமே உரும்பிராயிலும் ஏழாலையிலும் என்று இருக்கும் போது பாதுகாப்பான தொலைவு நல்லூர் என்றே எனக்குப் பட்டது.

எனது யோசனையை மெல்ல வெளியிட்டேன். அம்மா ஏதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறவில்லை.

அக்கா தான் துள்ளினாள்.

" கலியாணப்பேச்சுச் சரி வந்தாப்போல நாங்கள் அவையிட்ட இப்பிடிப் போகலாமோ... அது மரியாதையில்ல . நானெண்டா மட்டன்..."

அக்கா தனது வழமையான பிடிவாதத்தோடு.

" அப்ப வேற எங்க பிள்ள போறது... ? "

அம்மா கேட்டாள்.

" எங்கை யெண்டாலும் போவம்... அங்க வேண்டாம். "

" அப்ப கோயில் பள்ளிக்கூடங்களில் வந்து இருப்பியளோ..."

" கோயில் பள்ளிக்கூடத்தில அகதியளோட நாங்களும் வந்து இருக்கவோ...? "

அம்மாவின் பழைய பரம்பரைத் திமிர் பேசியது.

" கோயில் பள்ளிக்கூடங்களில் உங்களால வந்திருக்கேலா தெண்டால் உங்கட ஆக்களிட்ட உரும்பிராய்க்கோ அல்லது அப்பாட ஆக்களிட்ட ஏழாலைக்கோ தான் போகவேணும். அந்த இடங்களில் ஷெல்லடிப் பயத்தில சனமெல்லாம் எழும்பி வேற இடங்களுக்குப் போயிட்டுது. இப்ப உதவியெண்டு போகக்கூடிய இடம் நல்லூர் தான். "

முடிவில் நான் நல்லூரில் அவர்களின் வீட்டைச்சென்றடைந்த போது மாலை நாலு மணிக்கு மேலிருக்கும்.

நிலைமையை விளக்கி எப்படியும் அப்பாவுக்கு ஒரு தனியிடம் வேண்டுமென்பதையும் கூறியபோது அந்த விஷயம்தான் எல்லோருக்கும் சங்கடம் தந்தது போல பட்டது.

எதற்கும் அன்றைய இரவே வருவதாகச் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தேன்.

" அப்பாவைக் கொண்டு போறது அவையளுக்கு விருப்ப மில்லை எண்டு சொல்லுறாய். பிறகு என்னெண்டு கொண்டு போறது... அவையளதான என்னெண்டு அரையண்டங்களைத் தாங்குவினம்...? "

அக்கா பெரிதாய்ச் சத்தம் போட்டாள்.

" அங்க போயிருந்து கொண்டு வேணுமெண்டால் ஒரு தனி வீடு பாப்பம்... "

" அப்ப இந்த வீடு ? "

அக்கா பெரிய ஏக்கத்தோடு கேட்டாள்.

அம்மா பெரிதாய் மூச்செறிந்தாள்.

நான் வாகனமொன்று ஒழுங்கு செய்யப் புறப்பட்டேன்.

" தம்பி ஒருக்கா அப்பா வரட்டுமாம் " பெரியசாமி புறப்படத் தயாரான என்னிடம் ஓடி வந்தார்.

" கூப்பிட்டனீங்களா அப்பா " என்றபடி நான் அறைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைத்தேன்.

பெருத்த தவிப்புடன் எதையோ சொல்ல முனைந்து அதை மீறிப் பெருகிய கண்ணீருடன் வெதும்பும் அவரைக்காண இதயம் விண்ணென வலித்தது.

முதுமை கொடியது. செயலிழந்து சுமையாய் நோய்வாய்ப் பட்டு அடுத்தவரின் வெறுப்புக்கு ஆளாகி மனிதன் வெதும்பும் நிலைமை...

ஓ... அது மிகத்துயரானது . என் முதுகைத் தட்டிப் பெரியசாமி தான் பேசினார்.

" நீங்கள் கதைச்சதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தவர் தன்னால எல்லாருக்கும் ஒரே கரைச்சல் எண்டு இப்பத்தான் என்னட்டையும் சொல்லி அழுதார். "

தலை கவிழ்ந்து அழும் எனது தந்தையைப் பார்த்து நிற்கும் மனத் திண்மையற்றவனாக நான் வெளியேறினேன். பெரியசாமியை மட்டும் அழைத்து நான் மேற்கொள்ளப் போகின்ற நடவடிக்கைகளைப் பற்றி விளக்கி விட்டு மீண்டும் சைக்கிளில் ஏறினேன்.

தொலைவில் மீண்டும் எங்கோ ' ஷெல் ' விழுந்து அதிர்வு பரவிற்று.

வாகனத்தை ஒழுங்கு செய்து வீட்டுக்கு வரச்சொல்லி விட்டுத் திரும்பினேன். மிகவும் அவசியமான பொருட்களை மட்டும் தெரிவு செய்து பொதிகளாகக் கட்டிக் கொண்டு அன்றைய இரவு உணவைப் பொதி கட்டிக் கொண்டிருந்த அம்மாவிடம் போனேன்.

" அவையள் ஒண்டும் பெரிய சந்தோசத்தோட எங்களை வரச் சொல்லயில்ல. பார்க்கப் போனால் நாங்கள் வீட்டை இப்படியே விட்டு வெளிக்கிடுவமெண்டு அவையள் எதிர்பார்க்கேல்ல. ஆனால் இதையெல்லாம் இப்பபார்க்க முடியாது. ஏலுமென்டால் ஒன்றிரண்டு கிழமைக்குள்ள தனி வீடாப்பாக்க முடிஞ்சாலும் நல்லது. "

அம்மாவின் முகம் மேலும் விசனத்தால் கறுத்துப்போனது.

" உங்களை இண்டைக்கிராவு அங்க கொண்டுபோய் விட்டிட்டு ஏலுமெண்டால் நாளைக்கு ஒரு வாகனம் பிடிச்சு இந்தச் சாமான்களை ஏத்திக்கொண்டு வாறன். "

நான் தொடர்ந்தேன்.

" எங்களை அங்க விட்டுப்போட்டு நீ தனிய இஞ்ச நிக்கவோ... நல்லகதை... உன்னை இந்த வீட்டில தனிய விடமாட்டன் " அம்மாவின் குரல் தீர்மானமாய் மறுத்தது. அதே போதில்

" தம்பி ... இஞ்ச ஒருக்கா வந்திட்டுப் போங்கோ "

பெரியசாமியின் குரல் பதட்டமாய் ஒலித்தது.

அப்பாவின் அறைக்குள் நுழைந்த என்னை அம்மா பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தாள்.

பெரும் திணறலுடன் மூச்சுவிடப் பெரிதும் சிரமப்பட்டபடி படுக்கையிற் கிடந்து உழலுகின்ற அப்பாவைக் காண ஏதோ விபரீதம் நேரப் போவதாய் மனசு அடித்துக்கொண்டது. அம்மா பெரியதாய்க் குரல் எடுத்து அழத் தொடங்கினாள்.

" டொக்டரை ஒருக்காக்கூட்டுக் கொண்டு வாங்கோ தம்பி..." பெரியசாமி கவலையிலும் நிதானம் தவறாமல் பேசினார்.

அவசரமாய்ச் சட்டையை மாட்டிக் கொண்டு சைக்கிளை எடுக்கையில் -

மிகப் பெரிய சத்தத்துடன் ஒரு ஷெல்...

காதே கிழிந்து விட்டது போல...

பதட்டத்தில் எடுத்த சைக்கிளைக் கீழே போட்டு விட்டு உள்ளே ஓடினேன். " ஐயோ தம்பீ வெளியில ஓடு... எங்கையோ வலுகிட்டத்தான் விழுந்திருக்கு நிக்காமல் ஓடு . வெளி முற்றத்தில் விழுந்து படு ."

அக்கா குளறியபடி அம்மாவையும் இழுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்து கொண்டிருந்தாள் அவர்களை லட்சியம் செய்யாமல் நான் அப்பாவின் அறைக்குள் ஓடினேன்.

அப்பாவின் நெஞ்சைத் தடவி விட்டுக்கொண்டு அமர்ந்திருந் தார் பெரியசாமி.

" கட்டிடத்துக்குள்ள இருக்கிறது புத்தியில்ல . பிடியுங்கோ அப்பாவை வீல் செயரில் இருத்தி வெளியில கொண்டுபோவம். "

" வேண்டாம் தம்பி அவரை இப்ப சிரமப்படுத்த வேணாம் நீங்கள் வேணுமெண்டால் போங்கோ அப்பவோட நான் இருக்கி றேன்." பெரியசாமி உறுதியாக மறுத்தார்.

என்னையும் அறியாமல் நான் வெளியே வந்தேன். அடுத் தடுத்து எங்கையென்று சொல்லமுடியாது ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. எங்களின் வீட்டைத்தாண்டியும் அதன் எதிர்ப்புறத்திலும் அவை வீழ்ந்து வெடித்தன

சிறிது நேர இடைவெளியில் மீண்டும் உள்ளே போனேன்.

அப்பாவின் கட்டிலருகேயிருந்த நாற்காலியில் பெரியசாமி அமைதியுடன் அமர்ந்திருந்தார். படுக்கையில் அப்பா அமைதியாய்க் கிடந்தார். திடுக்கிட்ட மனதோடு நான் பெரியசாமியை ஏறிட்டேன்.

கவலை தோய்ந்த ஒரு தலையசைப்புடன் பதிலளித்தார்.

" ஒருவரையும் கரைச்சல் படுத்த விரும்பாமல் பெரியய்யா போயிற்றார் தம்பி. "

இதழ். 42
கார்த்திகை. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாதேவன்

# போருள் மனிதர்

இப்படியானதொரு உடல், உள அவஸ்தையை முன்னெப் போதும் அவன் அனுபவித்திருக்கவில்லை. ஆனால் நான்கு வருடங் களுக்கு முன்னால் ஒரு பெரும் சமரில் இடுப்பில் வெடிபட்டு இப்படி யானதொரு அனுபவம் நேர்ந்ததுண்டு. காலங்கடந்து எப்போதோ கண்ட ஒரு கனவுபோல இருப்பதாலோ என்னவோ, அது இத்தனை துன்பங்களைத் தந்ததாக ஞாபகமில்லை . அவனுக்கு வியப்பு என்ன வெனில் அன்று விழுப்புண் அடைந்த அதே மாத நாளில் அது போன்ற தொரு பெரிய சமரில் இப்போதைய விழுப்புண் ஏற்பட்டதுதான். வேதனைகள் என்னவெனில் அப்போது அவனது தினக்குறிப்பு, உடமைகள், கவிதைகள் என்பன விடுபட்டது போல் இப்போதும் விடுபட்டுப் போயிருப்பதுதான். அந்தக் கவிதைகள் மீளப்படைக்க முடியாத உயிர்கள். அந்தத் தினக்குறிப்புகளின் பக்கங்கள், மீளப் பெற முடியாமல் உருகிப் போன அவனது நாட்களின் பெறுமதிகள் பொதிந்தவை.

பெரிய வைத்தியசாலையின் மருத்துவ விடுதியின் இரு கரை களிலும் அவலமாய் முனகும் மனிதர்களுடன் துயரங்களையும், அரிகண்டங்களையும் சுமக்கிற கட்டில்கள். ஒரே மூலையில், ஒரே கட்டிலில், ஒரே பக்கமாய் மல்லாந்த நிலையில் மூன்று மாதங்களுக்கும் மேலாக சிறகு வெட்டுண்டு தவிக்கும் ஒரு பறவையாய்ப் போட்டபடி கிடக்கிறான். எப்படி முடிகிறது அவனால் ? மலசலம் கழிக்கவும், இலையான்கள் கலைக்கவும் ஒரு துணை வேண்டியிருக்கிறது. கொஞ்ச நேர நித்திரையை அழைத்து வரவும் குளிகையை, ஊசியை நாடவேண்டியிருக்கிறது. தடையின்றி அலையும் துர்நாற்றத்தை அடக்க, அதை இதைத் தெளிக்கவேண்டியிருக்கிறது. பின் இரண்டுங்கெட்டான் நாற்றத்தையே நுகரவேண்டியிருக்கிறது. தலைமாட்டில் இருக்கும் சிறு ஜன்னலின் கம்பிகளும் ஏதேதோ நாற்றங்களும் அவன் இருப்பிடத்தை ஒரு சிறையெனவே உருவகப்படுத்துகின்றன. வளையில் வந்திருந்து பறக்கும் புறாக்களைப் பார்த்து ஏங்குகிறான். திடுதிப்பென்று உள் நுழைந்து அலைக்கழிந்து வெளியேறிப்போகும் வௌவால்களைப் பார்த்துச் சினங்கொள்கிறான்.

நல்ல கவிதைகள் வருமாப்போல் இருக்க, ஏதேதோ நினைவு கள் வந்து குழப்பி விடுகின்றன. ஒன்றை இழந்த பின்னர்தான் அதன் பெறுமதி முழுதுமாகப் புரிகிறது. பறவைக்குச் சிறகுகள் போல மனிதனுக்குக் கால்கள்... ஒரு கால் இயங்காத நிலையில் அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன. களங்களுக்கு விரைந்த, அங்கெல்லாம் அவன் உயிர்காத்த, நினைப் பவற்றை நிறைவேற்றத் துணைநின்ற, நெடும்பயணங் கடந்து சிவந்து தழும்பேறிப்போன அழகிய அவன் கால், வெடிபட்டு பெரிய அளவில் சிதைந்து உணர்வு நரம்புகள் அறுந்து போயிருக்கிறபடியால் செயற் பாடற்றுப்போகக் கூடும் என வைத்தியர்கள் சொல்வது பலிக்குமா? எப்போ அவன் இனி எழுவது? களங்களில் கனத்த சுமைகளுடன் நிற்கும் அவனது தோழர்களுக்குத் தோள்கொடுப்பது ? மீண்டும் தன் விடுதலைப்பயணத்தைத் தொடர்வது ?

இரைந்து வரும் எதிரியின் ஆட்லறி எறிகணைகள் முகட்டுக்கு மேலே கடந்து அப்பால் சென்று விழுந்து வெடிக்கின்றன. அவை எங்கோ, எத்தனையோ அனர்த்தங்களை விளைவித்திருக்கும். வைத்தி யசாலை வயிறூதி வழிகிறதென்றும், குளிகைகள், ஊசி மருந்துகள் அனைத்தும் அற்றுப் போகின்றன என்றும் கூறிக்கொண்டு வைத்தியர் கள் அந்தரப்பட்டு அலைந்து திரிகிறார்கள். சமர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. காயமுற்ற போராளிகளும், பொது மக்களும் கொண்டு வரப்படுகிறார்கள். சிலர் தேறிச் செல்கிறார்கள். சிலர் சாவடைந்து போகிறார்கள். பரிதவித்து உலவுகின்றன மனித முகங்கள் . வெளியே மனித ஓலங்கள் எழுந்துகொண்டேயிருக்கின்றன.

அவனுக்கருகில் இருக்கும் கட்டிலில் மகேசன் என்ற தோழன் எட்டாவதாக காயப்பட்டு வந்திருக்கிறான். ஐந்து வருடங்களுக்கு முன்னர் இருவரும் ஒரு முகாமில் ஒன்றாக நின்றார்கள். இருவரும் ஒரே பிரிவு தான். சண்டைகளுக்கும் சென்று திரும்புவார்கள். அப்போது அவன் மாதாந்த சஞ்சிகை ஒன்றின் வெளியீட்டிற்குப் பொறுப்பாளனாக இருந்தான். அவனுடன் இணைந்து, மகேசன் சஞ்சிகை சம்மந்தமான வேலைகளில் ஈடுபடுவான். மகேசன் நல்ல திறமைசாலி. முன்னர் தொழில் நுட்பக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். போர் மகேசனையும் விட்டு வைக்கவில்லை . தொடர்ந்து படிக்கமுடியாமல் போய்விட்டது. சொற்பமானவர்கள் பெரும் சுமைகளுடன் போராடிக் கொண்டிருக்க, சுயநலம் கருதி மனச்சாட்சிக்கு ஒழித்துத் திரிய முடியாமல் இருந்ததால் தான் போராட்டத்தில் இணைந்து கொண்டதாக முன்னொருமுறை அவனுக்கு மகேசன் கூறியுள்ளான். அவனும் மகேச னும் முன்னர் ஒன்றாக இருந்த நாட்களில் தமது குறும்புச் செயல்களுக் காகவும் வாகனங்களை எடுத்துக்கொண்டு ஊர்சுற்றப் போவதற்காக வும் பொறுப்பாளரினால் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒன்றாகவே சாப்பிடுவார்கள். திடீரென்று ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் அந்த முகாமிலிருந்து பிரியநேர்ந்தது. அதன் பிறகு இயந்திரமயமான அவர்களின் வாழ்விடை இப்போதுதான் சந்திக்கவும், கதைக்கவும் பழைய நினைவுகளில் தோயவும் முடிந்திருக்கின்றது. இப்போதும் முன்னர் அவர்களிருந்த அதே பிரிவிலேயே பணியாற்றுவதாக மகேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான். அவனும் அதே பிரிவிலேயே வேறு இடத்தில் பணியாற்றி னான். பெரும் சமருக்கான ஆட்பலம் போதாமையால் இருவரும் களத்திற்குச் செல்லவேண்டியிருந்தது.

களத்தில் அங்கங்களுக்கோ உயிருக்கோ உத்தரவாதமில்லை. சமருக்காக முன்னேறிக்கொண்டிருந்த வேளையிலும் இதை நினைத்தால் 'முன்னைய பெரும் சமரில் வெடிபட்ட' அருகிலிருந்த தோழனின் தலை சிதறிய சம்பவ நினைவுகள் வந்து வந்து வெருட்டுமாப்போல் இருந்தன. ஜீன்சை மேலே உருட்டி மடித்து விட்டுக்கொண்டபோது நீண்ட தூரம் நடந்து , வலித்த தன் கால்களைத் தடவி உருவினான். மங்கிய நிலவொளியில் பனங்கூடல்களுக்கிடையே தன்னைத்தானே ஆயுதபாணியாக பார்த்தான். துணிச்சலையும் அர்ப்பணிப்புக்களையும் எண்ணி வியந்தான். எல்லாவற்றினதும், எல்லோரினதும் நினைவுகள் வந்துபோயின. பிறகு எதிரியின் நிலைகளை நெருங்க மனம் இலக் கொன்றிலேயே குறியாயிற்று. சமர் தொடங்கி உக்கிரமடைந்து நிலை யில் முன்னேறிக்கொண்டிருந்த போது காயப்பட்டு விழுந்தான்.

இடையற்ற சமர் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போகிறது. வைத்தியர்களும், தாதியர்களும் அங்கிங்கென ஓடித்திரிகி றார்கள். சிலர் சினந்து கொள்கிறார்கள். சிலர் உணர்ந்து செயற்படுகி றார்கள். அவர்கள் சமர் பற்றியும் போராளிகளைப் பற்றியும் அறிய ஆவல் கொண்டு குளிகைகள் கொடுக்கும் போதும் ஊசிபோடுகிற வேளைகளிலும் மெல்ல அவனிடம் விசாரிப்பார்கள்.

ஒரு தாதி வந்து அவனிடம் கதைகொடுத்து, தனது இளைய மகனொருவன் திடீரென பள்ளிக்குச் சென்றிருந்த ஒரு நாளில் காணாமல் போனதாகவும், பிறகு அவன் இயக்கத்தில் இணைந்துள் ளதை அறிந்து கொண்டதாகவும், தான் எப்படிக் கேட்டும் அவன் வர மாட்டானென்று அடம்பிடித்து பயிற்சிக்குச் சென்று விட்டதாகவும், அவனது விடயத்தில் தான் எந்தக்குறையும் விட்டறியேன் என்றும், உங்களைப் போன்றவர்கள் இப்படிக் காலம் பூராவும் கஷ்டப்படுவதை அறியச் சகிக்க முடியவில்லை என்றும், தனக்கு இந்த வேலையே வெறுக்கிறதென்றும், உங்களுக்கெல்லாம் இப்படியாகவேனும் ஏதோ வொரு வகையில் சேவை செய்ய முடிகிறது என்பதாலும், வயிற்றுப் பிழைப்புக்காகவுமே இந்த வேலையைத் தொடரவேண்டியிருக்கிற தென்றும் சொன்னார். " தம்பி , ஒவ்வொரு நாளும் துயரோட திரியிற மனிசரத்தான் கண்டு கொண்டிருக்கிறன். இந்தச் சண்டை இப் போதைக்கு ஓயாதோ ? நீங்க அவங்களோட பேசலாந்தானே" என்று கேட்டார். " நாங்கள் எந்தத் துன்பத்தையும் சுமக்க விருப்பப் படயில்ல. சுமத்தப்பட்ட துன்பங்கள இறக்கத்தான் முயற்சி செய்யிறம். எல்லாமே செய்து இயலாத நிலையிலதான் திருப்பியடிக்கத் துணிஞ்சிருக்கிறம். இலகுவாக விரைவாக இலக்கை அடைய மக்களின்ர பங்களிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி நிக்கிறம். நாங்கள் சமாதானத்துக்கு எதிரானவர்களில்ல " என்று அவன் சொன்னபோது " நீங்கள் இப்படித்தான் சொல்லுவியள், உண்மைதான் " என்று சொல்லிக்கொண்டே விமானக் குண்டுவீச்சிலும் எறிகணை வீச்சிலும் சிக்குண்டு காயப்பட்டு அப்போதுதான் கொண்டு வரப்பட்டிருந்தவர்களை உள்ளே அனுமதிக்க ஓடினார்.

பல பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளும் காயப்பட்டு வந்திருக்கக்கூடும் என்று வந்து தேடிவிட்டுச் சென்றார்கள். " பிள்ளை யளப் பெத்து வாழுற வயசில போருக்கு விட்டுட்டு செத்ததுகளா இருக்குதுகளா எண்டு அந்தரிச்சு அலைய வேண்டியிருக்குதே " என்று ஒரு தாய் புலம்பி அழுதுகொண்டு சென்றாள்.

சகதோழர்களும், பழக்கமானவர்களும் வந்து வந்து அவனைப் பார்த்துக் கதைத்து விட்டுச் செல்கிறார்கள். அவனுக்கு அக்கா மாதிரி யும், தங்கை மாதிரியும் இருக்கக்கூடிய ஒரு சகோதரி வந்து அவனைத் தனது அண்ணா மாதிரி இருக்கிறதென்றும் போராடப்போய் இரண்டு வருடமாகியும் இன்னும் காணவில்லையென்றும் கூறி அவனது காயக் கட்டைப்பார்த்து விறைத்துப்போனாள். " இது மாறினாப்பிறகு திரும்ப வும் சண்டைக்குப் போகவேண்டியிருக்குமா " என்று கேட்டாள். " இனி ஓடித்திரிய ஏலாதெண்டு நினைக்கிறன். கால்ல உணர்ச்சியில்ல. இந்த நிலையில எப்பிடிப்போறது பாப்பம் " என்றான். " அதுதான் நல்லது. இது காணும். இனிப்போக முயற்சிக்காதீங்கோ. அம்மா, அப்பா, சகோதரங்களின்ர கண்களுக்கு முன்னால அங்கப்பழுதோட இருந்தா லும் பறவாயில்ல. உயிரோட இருந்தாலே காணும். " என்று கூறி கண் கலங்கினாள். பிறகு வந்து பார்ப்பதாகக் கூறிச் சென்றாள்.

காயமுற்றவர்களைப் பராமரிக்கவென மாணவர்களும், பொதுமக்களும் மாறி மாறித் தொண்டர்களாக வந்து செல்கிறார்கள். ஒரு தடவை அவனது காலுக்கு மருந்து கட்டுவதற்கென அவனது காலை ஒரு மாணவன் தூக்கிப்பிடித்திருந்தான். காயக்கட்டு வெட்டப் பட்டதும் பிளந்துபோயிருந்த காயத்தைக்கண்டு அந்த மாணவன் தூக்கிப்பிடுத்திருந்த காலைத் தொப்பொன்று போட்டுவிட்டு மயங்கி விழுந்துவிட்டான். அந்த மாணவனின் தலையில் மருந்து கட்டி அனுப்ப வேண்டியிருந்தது.

வீட்டாருக்கு தனது நிலைபற்றி உடனடியாக அறிவிக்க வேண்டாமென்றும் சற்றுத்தேறிய நிலையில் பிறகு அறிவிக்கலா மென்றும் அவன் எல்லோரிடமும் கூறியிருந்தான். ஆனால், எப்படியோ கதை பரவிவிட்டது. ஒருநாள் ஊரிலிருந்து நீண்ட தூரம் வெகு சிரமப் பட்டுத்தேடி அவனது அம்மா வந்திருந்தார். துயரும், பயமும் கலந்து இறுகிய முகத்துடன் ஒவ்வொருவராய்ப் பார்த்துக் கேட்டு வந்து அவனைக் கண்டதும், ஏங்கி அவன் மேல் விழுந்து ஏதேதோ சொல்லிப் புலம்பி அழத்தொடங்கி விட்டார். அழுதழுது சொன்னதாலோ, அவனது திகைப்பினாலோ, அன்றித் தேற்ற முயன்ற தன் காரணமாகவோ அவர் என்ன சொல்லியழுதார் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குத் தெளிவாகப் புரியவில்லை.

அழுகையை நிறுத்த பெரும் பிரயத்தனப்படவேண்டியிருந்தது.

ஆயினும் இடையிடை விக்கலும் இழுவையும் நிற்கவே யில்லை. அவனைத் தழுவி உச்சிமோந்து முத்தமிட்டார். காயமுற்று முறிந்த காலின் விரல்களையெல்லாம் வருடி " எப்பிடியடா இதத் தாங்கிக் கொண்டனி. இப்பிடி உருகிப்போயிருக்கிறியே " என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். தான் இனி ஊருக்குச் சென்று அவனது சகோதரியையும் சகோதரனையும் கூட்டிவரப் போவதாகக் கூறினார். கால் நிலைமை உடல் நிலைமை பற்றியெல்லாம் மிகுந்த அக்கறையோடு கேட்டார். " இவ்வளவு காலம் சேவை செஞ்சது காணும். இந்தக் காயத்த மாத்திக்கொண்டு நீ வீட்டுக்கு வந்து இனி என்னோட இரு. இனியும் உன்னால துன்பப்பட ஏலாது. என்னாலயும் ஏலாது, " என என்றுமில்லாதவாறு ஒரே மூச்சில் சொல்லி முடித்தார். வீட்டுக்கு விலகிவரும்படி முன்னரும் சில சந்தர்ப்பங்களில் சாடை யாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் இப்படி வெளிப்படையாக, விடாப் பிடியாக அல்ல. " இல்லையம்மா, வீட்டுக்கு வந்து பாரமா இருக்கிறத விட நாட்டுக்காக இப்பிடியே இருந்து ஏதாவது செய்துகொண்டிருக்க லாம் " என்றான் அவன். " அதை வீட்டில இருந்தும் செய்யலாந்தானே. பத்து மாசம் சுமந்து பெத்த எனக்கு நீ பாரமெண்டு சொல்லாத. உன்னக் கவனிக்கிறது எனக்குச் சுமையில்ல " என்று கூறி மீண்டும் அழத் தொடங்க பெரும் பிரயத்தனப்பட்டு ஆறுதல், சாட்டுகள் பல சொல்லியே வழியனுப்பி வைக்கவேண்டியதாயிற்று அவனுக்கு.

பின்னொரு நாள் அவனுக்கு நெருக்கமான இரு சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் அண்மையில் வெளிவந்திருந்த அவர்களது சஞ்சிகை களைக் கொண்டு வந்து கொடுத்து அவனைப் பார்த்தார்கள். அவன் இறுதியாக எழுதி அவர்களிடம் கொடுத்து விட்டுப் போயிருந்த கவிதைகள் அந்தச் சஞ்சிகைகளில் பிரசுரமாகியிருந்தன. ஒன்று போராளி ஒருவனுடைய துன்பங்கள், பெருமைகள் பற்றியது. மற்றையது துப்பாக்கி எமக்கு உயிர்த்துணையாக இருப்பது பற்றியது. அவர்கள், முதலொருமுறை வந்ததாகவும், அவன் மயக்க நிலையில் இருந்து வாய்புசத்திக் கொண்டிருந்ததாகவும் சத்திரசிகிச்சை அறையிலிருந்து அவன் வந்திருப்பதால் இப்போது கதைக்க முடியாதெனத் தாதியார்கள் சொல்லத் தாம் சென்று விட்டதாகவும் சொன்னார்கள். தாங்கள், பின்னர் புத்தகங்கள் கொண்டு வந்து தருவதாகவும், வேதனையாயிருந்தாலும் இந்த ஓய்வு நேரங்களைப் படிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் கூறிச்சென்றனர்.

ஒருநாள் காலை அவளது கடிதம் வந்திருக்கிறது. எத்தனையோ கைகளுக்குப் போய்க் கடைசியாக யாரோ ஒருவர் மூலம் அவனிடமே வந்து சேர்ந்துவிட்டது. அதைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தே பெரும்பாலும் பாடமாகிவிட்டது அவனுக்கு. இருப்பினும் இன்னொரு தடவை எடுத்துப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து விரிக்கிறான். கண்ணீர்த் துளிகள் தாளில் விழுந்தூறிச் சுருங்கிய தடங்களில் வார்த்தைகள் விழுந்து எழுந்து செல்கின்றன. தண்டவாளம் அதிரக்கடந்து கூவிச் செல்லும் ரயிலின் பெட்டிகள் போல அவை இருதயத்தை உலுப்பி நகர்கின்றன.

" என்னுயிரே, முன்னரெல்லாம் சம்பிரதாய பூர்வமாகவோ வழமையான மரபுரீதியாகவோ அல்லது என் கவலைகளையெல்லாம் கொட்டி உங்களைக் குழப்ப விரும்பாமையாலோ, ' நலமுடனிருக்கிறேன் ' என்று கடிதங்களின் ஆரம்பங்களில் பொய்யெழுதி என் துயர்களை மறைக்க முயன்றிருக்கிறேன். இப்போது அப்படிச்செய்ய முடியவில்லை ; விரும்பவுமில்லை. மெலிந்து, வெளுத்து, முகம் மாறிப் போயிற்றாம். இன்னும் என்னென்னவோ எல்லாம் உங்கள் அம்மா சொல்லி அழுது கொண்டிருக்கிறா. உங்களைப் பற்றிய செய்திகள் மிகைப்படுத்தப்பட்ட பொய்களென்றும் வதந்திகள் போலவும் ஆகிவிடாதா என அங்கலாய்க்கிறேன். பெரிதாகக் கத்தியழவும் முடியவில்லை. உங்களைக் கட்டிக்கொண்டு அழவேண்டும் போல இருக்கிறது. என் வசம் நானில்லை. நீங்களுமில்லை. ஏன் இவ்வளவு காலமும் அறிவிக்காமல் விட்டீர்கள் ? என்னைப் பிரித்தேதான் பார்க்கிறீர்களா ? உங்கள் துன்பங்களில் எனக்குப் பங்கில்லையா ? எனக்காக ஒரு கடிதமெழுதிக் கொடுத்துவிடக்கூட உங்களுக்கு நேரமில்லையா ? என்னிலிருந்து நீங்கள் எட்ட எட்டப் போகிறதாகவே படுகிறது. என் உணர்வுகள் உங்களுக்குக் கேட்பதில்லையா ? என் அன்பே, உங்களுக்குத் தெரியும், உங்கள் கால்களில் எனக்கு அதிகம் விருப்பமென்று. எனது காலை எங்காவது மோதி முறிக்க வேண்டும் போலிருக்கிறது. "

" சண்டை தொடங்கிய நாளிலிருந்து ஏதோவொரு உணர்வு என்னை உறுத்திக்கொண்டேயிருந்தது. உங்களுக்கு இப்படியாமென்று நான் நினைத்திருக்கவில்லை. வேதனைகளை எப்படித்தான் தாங்கிக் கொள்கிறீர்கள் ? மேலும் மேலும் துன்பம் அனுபவிப்பதுதான் முடிவா? பதில் தரவே மாட்டீர்களா ? வீதியிலிருந்து விலகியோடுகிற வாகனமென நினைவுகளும், செயல்களும் தடம்புரள்கின்றன. இந்த நிலையில் உங்கள் அருகிலிருந்து காற்று விசுக்கவும் முடியவில்லையே. உங்களுக்கு ஆறுதல் கூறி எழுத முனைந்து பேனாவை அழுத்திப் பிடிக்கிற மூன்று விரல்களும் ஒழுங்கு தவறிக் கிறுக்கிச் செல்வதாகவே தெரிகிறது. உண்மையில் நீங்கள்தான் என்னை ஆற்றுப்படுத்த வேண்டும் போலிருக்கிறது. அன்பே, நீங்கள் கவலைப்படக்கூடாது. எதற்கும் யோசிக்க வேண்டாம். இன்னும் இன்னும் உங்களை அதிகமாக நான் காதலிக்கிறேன் என்றும் நான் உங்களுக்குப் பக்கபலமாய் இருப்பேன் என்றும் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும் போலிருக்கிறது. ஆனால் முடியவில்லை. விரைவில் வைத்திய சாலைக்கு வர முயல்கிறேன். என்றும் போல் நான் உங்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிவிடுகிற அன்புமுத்தங்கள். உங்கள் கால்களுக்கும்...."

மல்லாந்து படுத்திருந்த நிலையிலேயே கடிதத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

" என்னத் தெரியுதா " என்ற மெலிதான, இனிய, பழக்கப்பட்ட, நடுக்கமும், துயரமும் கலந்தொலிப்பதாய்த் தோன்றுகின்ற அந்தக் குரல் இதயத்தைக் கவ்வியபோது திடுமெனக் கடிதத்தை விலக்கிக் கண்களை நிமிர்த்துகிறான். கடிதத்திற்குரியவளேதான்.

உணர்ச்சியற்று மரத்துப்போன அவனின் இடது காலின் பாதத்தை நடுங்கும் விரல்களால் வருடிக்கொண்டே வாய்வரை நிரம்பி யிருக்கிற வார்த்தைகளைக் கொட்ட விழைகிறாளா ? அன்றி விம்மித் துடிக்கும் உதடுகளால் தடுத்து வைத்திருக்கிறாளா ?

அவன் தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறான். இன்னும் அவள் அழவில்லை. ஏற்கனவே அழுது தீர்த்திருக்கவேண்டும். எங்கோ வெறித்துக் குனிகிறாள். சுடுநீரில் தத்தளிக்கிற மீன்களெனக் கண்கள். நிச்சயமாய் அவள் பெரிதாகப் புலம்பி அழவே போகிறாள் போலிருக் கிறது.

" நானும் ஒருத்தி இருக்கிறனே மறந்து போனீங்களா ? ஏன் உடன அறிவிக்காம விட்டுட்டீங்கள் ? இவ்வளவு காலத்துக்குப் பிறகு உங்கள நான் இப்படியா பாக்கோணும் " என்கிறாள்.

" உன்னை என்னால திருப்திப்படுத்த முடியாம இருக்கிறதுக் காக வருந்துறன். இனி உனக்கு நான் கிட்டத்தட்ட ஒரு சுமைபோல தான் இருக்கவேண்டியிருக்கும். என்னால இனிப் பழைய நிலைக்கு வர முடியாமப் போகலாம். என்னால உனக்குத் துன்பம்தான் மிஞ்சுது. என்ர தேடலும் பாதையும் தொடர்ந்து உனக்கு நெருக்கடியத்தரலாம் " என்கிறான்.

" இல்ல அப்பிடிச் சொல்லாதீங்கோ. உங்கட ஆழ்ந்த அன்பு எனக்குக் கிடைச்ச பெரும்பேறு. இதேநிலை எனக்கு வந்திருந்தா என்னைச் சுமையெண்டா நினைச்சிருப்பீங்கள் ? உங்கட போக்கு சில நேரங்கள்ள விளங்குதில்ல. என்னிலையிருந்து எட்டஎட்டப் போறீங்கள் போல இருக்கு. என்னைச்சுமையெண்டும், இடைஞ்சலெண்டும் நினைக் கிறீங்களா ? முந்திய விட இப்ப நான் உங்களக் கூடுதலா விரும்புறன். உங்களைக் காதலிக்கிறதையே, உங்களுக்குப் பக்கபலமாயிருக் கிறதையே என்ர லட்சியம், பேறு எண்டு நினைக்கிறேன். உங்களுக்காக நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறன். "

இதற்கு மேல் சற்று நேரம் அவள் எதுவும் பேசவில்லை ; அவளால் பேசமுடியவில்லை.

எழுந்து அவளது கண்ணீரைத் துடைத்துவிட அவனால் இயல வில்லை.

இதழ் . 44
மாசி. 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தன்

# அழைப்பு

இரவு திருவிழா முடிந்த வாட்டம் ; காட்டா வினாயகர் கோயில் முற்றம் காஞ்சு வரண்டுபோய் இருந்தது. இரவாரவாரத்தின் சுவடுகள் அங்குமிங்குமாக வெளித்தெரிந்தன. கச்சான் கோதுகள், ஐஸ்கிறீம் கடதாசிகள் என வேறும் சில அடையாளம் சொல்லின.

காலை வெய்யில் உச்சிக்கேறும் நேரம். தேகம் சுள்ளிட்டு சுணைத்தது. மூப்பனுக்கு ஏதோ வெறுப்பு கலந்த சினமாக இருந்தது. தோளில் கிடந்த பறையை இறக்கி கீழே வைத்து விட்டு கால்களை மடக்கி குந்தி இருந்தான். முன்னர் என்றால் பிள்ளையாருக்கு நேராக பருத்த அரசமரம். சற்றுத்தள்ளி வலது பக்கமாக தோப்பு போல அகன்ற ஆலமரம் ; நல்ல நிழல்.

அப்போதெல்லாம் என்ன அருமையான பொழுதுகள். காலை களில் கோயிலுக்கு வந்தால் பறவைகளின் கலகலப்பு இனிமையான குரலின் தேவாரம் போல நெஞ்சை நிறைக்கும். நின்றால் மெய்மறந்து போகும் அருமையான இடம். இப்போது அவை நின்றதற்கான சான்று கூட இல்லை. அவை சரிந்து ஆக மிஞ்சினால் எத்தனை வருடங் களாகும்? ஆக, நான்கு அல்லது ஐந்து வருடங்கள்தான் இருக்கும்.

“ பேண வேண்டியதெல்லாத்தையும், கட்டிக்காக்க வேண்டிய தெல்லாத்தையும் எவ்வளவுகெதியா விட்டெறியிறம் ? சே , அந்த அரசையும் ஆலையும் எங்களால ஏன் காப்பாற்ற ஏலாமப்போச்சு ” நினைக்க மூப்பனுக்கு வெறுப்பாக இருந்தது.

“ இப்பிடி எத்தினையை இழந்தாச்சு, ஆல் விழுது விடேக்கை அதை நிலத்தில் தாங்க விட்டிருந்தா மரத்தை காப்பாத்தி இருக்கலாம். பத்து தலைமுறைக்கு மேலான மரம் ” நினைப்பு திரும்பவும் அந்த மரங்களையே சுற்றியது.

பிள்ளையாரின் கண்ணுக்கு முன்னால் வாசலுக்கு நேராக அரச மரம் குடை விரிந்து நின்றது ; முன்மண்டபத்தை தொடர்ந்து அதுவு மொரு மண்டபம் போல நிழல். அந்த அரசுக்கு முன்னரே பிள்ளையார் அந்த இடத்தில் இருந்தாரா அல்லது அவருக்கு முன்பே அரசமரம் அதில் வேரூன்றி விட்டதா என்பது இந்த எழுபது வயது அனுபவத்தில் அவனுக்கு பதில் தெரியாத விடயம். கேள்விப்பட்டவரைக்கும் அதைப் பற்றி சரியாக ஒருவருமே சொல்லவில்லை. ஆனால், பிள்ளையாருக்கு இப்படி காட்டா வினாயகர் என்ற பெயரே அந்த அரசமரத்தால்தான் வந்தது.

கோயில் குருக்கள் எங்கோ நின்று விழுந்தடித்து ஓடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மணி பூசைக்கு ஆயத்தமாக அடித்தது.

" அந்த மணியை சந்று வடிவாக் கேளுங்கோ. ஒண்டும் விளங் காட்டி இன்னும் நல்லா உற்றுக்கேளுங்கோ. நினைவன் கந்தன், நினைவன் கந்தன் என்றெல்லோ கேக்குது. "

அவனது ஆச்சி இப்படித்தான் சொன்னது.

" அப்ப பறங்கியள் ஆட்புடிச்சு திரிஞ்ச காலம். அவங்கள் சேரேணும் எண்டா சேரணும் இல்லாட்டி பிடுச்சு கொண்டு போடுவாங் கள். போனா போனதுதான். திரும்பி ஒருத்தனும் வந்து சேரேலை.

" பெரிய பெரிய குதிரையள்ள வருவாங்கள், கால்களில சப்பாத்து, ஆளாளுக்கு துவக்குகளும் வைச்சிருப்பாங்கள். அவங்கள் வந்தா ஊரே கலங்குமாம். "

" ஒரு நாள் பட்டாளத்தில் சேரச்சொல்லி கந்தன்ர பேரும் வந்திட்டுது. அவன் ஒழிச்சிட்டான். பறங்கியள் விடுறபாடாயில்லை. தேடி வந்தாங்கள். இவனும் காடு மேடெல்லாம் ஓடி ஒழிச்சுத் திரிஞ் சான். பறங்கியளும் விடாமல் தேடித் திரத்தினாங்கள். "

" ஒருக்கா கந்தனை கண்டுட்டு அவங்கள் திரத்தி வர இந்த இடத்திலதான் அவனால ஏலாமப்போச்சு. அரசமரத்தில ஏறி ஒழிச் சிட்டான். கீழ பாத்தா ஒரே பட்டாளக்காரர் ; இவன் மேல அப்பதான் கண்ணை மூடி பிள்ளையாரை நினைச்சு நேத்தி வைச்சான். " ஆச்சி சொல்லும்போது அவளையும் அறியாமல் குரல் தழுதழுக்கும். சுருங்கிய முகத்திலிருந்து பிரதிபலிப்புகளை காணேலாத குழிகளுக்குள் மறைந்து கிடக்கும் கண்ணிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வடியும்.

கந்தன் செய்து கொடுத்த மணிதான் இது. அன்றையிலிருந்து தான் காட்டுக்குள் இருந்த பிள்ளையார் காட்டா வினாயகராக மாறினார்.

" சரி, இனி அடி மூப்பன் " காவடிக்கு செடில் குத்தியவன் பலமாக குரல் கொடுத்தான்.

மூப்பன், வாருக்குள் செருகியிருந்த சிம்பைக் கையில் எடுத்து வினாயகரை நினைத்து நெஞ்சில் அணைத்து, பின்பு அடித்தான். அவனுக்கு பக்குவம் நன்றாகவே தெரியும். எப்ப எப்ப எப்படி எப்படி அடிக்க வேண்டுமென்பது அவனுக்கு அத்துப்படி. ஏழு வயதில் அப்பு வுக்கு பக்கத்தில் ' சல்லாரி ' போடத் தொடங்கிய காலம் தொட்டு வற்றாப்பளை பொங்கல் ஒவ்வொன்றுக்கும் அவன் வாசித்திருக்கின் றான்.

கடந்துபோன காலங்களின் ஒவ்வொரு துளியும் எவ்வளவு அற்புதமான நினைவுகளை பதிந்து விட்டு போயிருக்கின்றன !

அம்மனை சுற்றியுள்ள அயற்கிராமத்தவன் ஒவ்வொருவனைப் போலவும் மூப்பனும் இந்தப் பொங்கல் முடிந்ததும் அடுத்த பொங் கலுக்கான கனவுகளில் மூழ்கிப் போவான்.

வருடா வருடம் அந்த நாளுக்குத்தான், பொங்கல் நடந்தாலும் ஒரு முன்னறிவித்தல் போல், ஏழு சமூகங்களை சேர்ந்த ஏழு குடில்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாய பூர்வத்துக்கு ' பாக்கு தெண்டி ' பிள்ளையாருக்கு பக்கத்தில் நிற்கிற வேப்ப மரத்தில் கட்டிய பிறகு பொங்கல் பற்றிய பரவசம் மனதில் விரியும்.

மறுவாரம், இந்த தெய்வத்தை ஆதரித்து இந்த வழமையை ஆரம்பித்து வைத்த 'பக்த ஞானி' யின் வழிவழி வந்த ஒருவன் குடம் ஏந்த, பறை முழங்க கடற்கரைக்குப் போய் கடல் நீர் எடுத்து வந்து காட்டா வினாயகருக்கு விளக்கேற்றுவதுடன் திருவிழா ஆரம்பிக்கும்.

அடுத்த ஏழு நாளும் ஊருக்குள் திருவிழா தவிர்ந்த எந்த விஷேசமும் இல்லை. வேட்டைக்கோ விறகு தறிக்கவோ காட்டுக்கு ஒருவரும் போவதில்லை. கல்யாணமோ வேறெதோ ஒன்றுமே இல்லை. சாவீடு கூட தாரை தம்பட்டமின்றி சுடுகாடு போய் சேர்ந்து விடும்.

ஏழாம் நாள் காட்டா வினாயகரின் பொங்கல். மறுநாள் குடத்தோடு எஞ்சிய கடல் நீரை கொண்டு போய் விளக்கேற்றி வற்றாப்பளை அம்மனுக்கு பொங்கல். அந்த கிராமங்களின் மக்கள் எல்லாம் தங்களின் துன்ப துயரங்களை மறந்து அற்புதமான பரவசத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மிதக்கும் நாள். ஏதோ அந்த ஒரு நாளுக்காகத் தான் உலக இயக்கமே என்பது போன்ற திளைப்பு. பகலும் இரவு விடிய விடியவும் கொண்டாட்டம்.

எல்லாம் முடிந்து பூசாரியோடு சிலர் மட்டும் காட்டுக்கு போய் சப்தமின்றி மௌனமாக பக்த ஞானிக்கு பொங்கிவிட்டு திரும்பியும் பாராமல் வருவதோடு, ஊர்வழமைக்கு திரும்பும் ; அடுத்த பொங்கல் பற்றிய கனவுகளோடு.

கோயில் வாசலில் காவடிகள் வந்தன. பத்துக்காவடிகள். பத்தும் செடில் காவடிதான். செடில் பிடிக்கிறவன் ஒழுங்கானவனாக இருக்க வேண்டும். அவனும் ஆட்டத்துக்கு தக்கவாறு அசைந்து ஆடிப் பிடித்தால்தான் ஆடுறவனுக்கு அலாதியாகவும் சுகமாகவும் இருக்கும்.

ஒரு வட்டக்களரி போல் ஆறு பேர் வெளிவட்டத்திலும் நால்வர் நடுவிலுமாக அணிவகுத்து ஆடத்தொடங்கினார்கள்.

மூப்பனின் அடி நிமிசத்திற்கு நிமிசம் சத்தம் அதிகரித்தது. பிரளயமொன்றின் முன்னறிவித்தல் போல் மெதுவாகவும் பின்பு அகோரமாகவும் மாறி மாறி ஜதிக்கு தக்கபடி பறை அதிர்ந்து முழங்கியது.

" மூப்பன், இதிலயே நிண்டால் விடிஞ்சிடும். நட கோயிலுக்கு போவம் " அருகில் நின்ற கந்தமுத்து கிழவர் உரக்க கத்தினார்.

அவனுக்கு நெஞ்சு திகைத்தது. சிறிது தடுமாறினான். கை ஒரு கணம் இயங்க மறுத்து தளம்பியது.

' எந்தக் கோயிலுக்கு போறது ' மனம் அவாவியது. கிழவரின் முகத்தை இரங்கத்தக்கவாறு பார்த்தான். அவனுடைய தசை வற்றி என்பு மட்டும் முன்னுக்கு நின்ற கன்னங்கள் பரிதாபமாக நடுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்தன.

இப்போது ஐந்தாறு வருடமாக வற்றாப்பளை அம்மனடிக்கு ஒருவரும் போவதில்லை ; அம்மன் வாசலில இருபத்தி நாலு பேர் சிதறி சின்னாபின்னமான பிறகு...

அவனுக்கு மனம் பாரமாக கனத்தது. பறை மீண்டும் ஆக்ரோசம் கொண்டு அதிர்ந்தது. அன்றைக்கு கோயில் வாசலில் மூப்பனின் காவடியும் இறக்குகின்ற நேரம்தான்.

' கடவுளே ! அதை எப்படி சொல்லுறது ? அந்தப் பிசாசுகள் கடலுக்கு இஞ்சால கையை நீட்டி இப்பிடி கொத்தா அள்ளிக் கொண்டு போவாங்களெண்டு ஆர் கண்டது. எல்லாம் முடிஞ்சு கூட்டி அள்ளி...' அன்றைக்கு பிறகு அந்த வாசலுக்கு அவன் போகவில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் போகவேண்டும் என்ற அவா எழுந்து நெஞ்சை அழுத்தும் . இரவுகளை விழிக்க வைத்து வாட்டும்.

பறை அதிர்ந்தது ; கேட்கும் ஒவ்வொருவரையும் உலுக்கி, உருக் கொள்ள வைக்கும் ஆவேசமாக . வீடுகளிலிருந்து சனம் வீதிக்கு ஓடி வந்தது.

" மூப்பனுக்கு ஆவேசம் வந்திட்டுது , இனி அவன் பெடியனை ஆட்டிப்படைச்சு போடுவான். " வாய்க்கு வாய் அதுதான் கதை.

வாங்கோ, எல்லோரும் வாங்கோ, தாயின் வாசலுக்கு போவோம். விழுந்தாலும் பரவாயில்லை , செத்தாலும் பரவாயில்லை பரம்பரை பரம்பரையாக போனனாங்கள்... போகாம விடக்கூடாது அவன் மனம் கூவியது. பறை முழங்கியது. மூசி மூசி அடித்தான். காவடிகளும் செடில் பிடிப்பவர்களும் உருகொண்டு ஆவேசமாக ஆடினார்கள். தசையும் தோலும் இழுக்கப்பட்டு செடில் அறும்போல் உக்கிரம்; எதையும் துவைத்து துவம்சம் செய்துவிடுவதுபோல் ஆக்ரோசம்.

மூப்பன் நடந்தான். காவடிகளும், செடில் பிடிப்பவர்களும் அதன் பின்னால் ஊர்ச்சனமும் நடந்தனர். ஓடினர். ஆடினர்.

வழிகாட்டி அம்மன் கோயில் தெரிந்தது. அது வழிகாட்டி அம்மன். தாயின் கோயில் செல்வதற்குரிய பாதையை அடையாளம் காட்டுவதற்காக அமைக்கப்பட்ட சிறுகோயில் தாயிடம் செல்பவர்கள் சற்று ஓய்ந்திருந்து செல்லுமிடம்.

வழிகாட்டி அம்மனின் முற்றம், முன்னால் மூப்பன் நின்று அடித்துக்கொண்டிருந்தான். எதிராக காவடிகள் வரிசையாக நின்று ஆடினர். ஜதிக்கு தக்கவாறு அவன் தலையும் கால்களும் ஆடின. அவன் அசைவுக்கு காவடிகள் ஆடின. ஊருலக சனமெல்லாம் சுற்றி நின்றனர்.

" இதிலயே இறக்குவம் " சில குரல்கள் கேட்டன குரல் வந்த திசையில் பார்த்தான். முகம் சிதைந்து போன சிலர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோர முகம். இவர்களுடைய முகங்கள் ஏன் இப்படி சிதைந்து போயின . நம்ப முடியவில்லை. கனங்கிய கண்களை வெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிப்பார்த்தான். முகங்கள் மாறவில்லை.

' இல்லை , வேண்டாம் இதில களைப்பாறிப்போவம். இல்லாட்டி கொஞ்ச நேரமிருந்திட்டு நடப்பம். ' அவனுடைய மனம் கூவியது. பறை வேகம் பெற்று அதிர்ந்தது. ஆடுபவர்களும் வேகம் கொண்டனர். சனம் தம் நிலை மறந்து லயித்து நின்றனர்.

" அங்க போறதுக்கு அனுமதி எடுத்ததோ "

சத்தம் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான். ' எங்கட தாயின்ர வாசல், அங்க போக ஆருட்ட அனுமதி கேக்கிறது ' நினைக்க சினமாக இருந்தது , கேட்டவன் ஒரு சிறு புழுபோல் மாறி நெளிந்தான்.

" தாயடிக்கு போகேலாது. வீணா எல்லாரும் சாகவேணும். அந்தப் பேய்கள் எங்கயெண்டு இருக்கிதுகள் " அதே முகம் சிதைந்த வர்கள் , உரத்த குரலில்.

அவனுக்கு பகீரென்றது. தேகம் நடுங்கி ஆடியது. பறை மேலும் மேலும் உக்கிரமாக அதிர்ந்தது. கட்குழிகளிலிருந்து வழிந்த கண்ணீர் தோல் சுருங்கிய கன்ன எலும்புகளூடாக வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. காவடிகள் ஆவேசத்தின் உச்சத்தில் ஆடின.

' தாயடிக்கு போவம், சாவம் ; சாக சாக போவம். இவளவு பேரும் ஒண்டா போனா எந்தப் பிசாசையும் திரத்தலாம் ' அவன் மனம் மீண்டும் அழுதது. அவனது தலை அறுந்து விழும்போல் ஆடியது. கால்களை உதைத்து உதைத்து ஆடி அடித்தான். பறை உக்கிர உக்கிரமாக அதிர்ந்தது.

" மூப்பன் இண்டைக்கு செத்தாலும் செத்துப் போடுவான் " சனம் முணுமுணுத்தது. ஆனால், கட்டுண்டு ஆடாது அசையாது நின்றனர்.

பறை அதிர்ந்தது ; பிரபஞ்சத்தை ஆட்டி அசைக்கும் ஆவேச மாக அதிர்ந்தது.

திடீரென காவடிக்காரன் ஒருவன் வீதியில் இறங்கி ஓடினான். மற்ற காவடிகளும் இருவர் மூவராக விழுந்தடித்து ஓடினர். மூப்பன் முழங்கினான். பின்னால் செடில்காரரும் ஓடினர். மூப்பன் உக்கிரமாக முழங்கினான்.

வீடுகளிலிருந்த சனமெல்லாம் ஓடி வந்தது. பறை மீண்டும் மீண்டும் அதிர்ந்தது. காவடிகள் ஓடின ; பின்னால் சனம் ; ஊர்ச்சனம் முழுவதும். பறை அதிர்ந்தது.

குறிப்பு : -1992 வைகாசி, வற்றாப்பளை அம்மன் பொங்கல் அன்று முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஏவிய எறிகணைகளால் 24 பேர் உயிரிழந்தார்கள். அதன் பின் 4 வருடங்கள் வற்றாப்பளை அம்மனை நினைத்து முள்ளியவளை சந்தியில் இருந்த வழிகாட்டி அம்மன் கோயிலிலேயே மக்கள் பொங்கலிட்டனர். தற்போது முல்லைத்தீவு படைமுகாம் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டு வற்றாப்பளை அம்மனடிக்கு மக்கள் சென்று வருகின்றனர்.

இதழ். 49 கார்த்திகை. 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா. யோகேந்திரநாதன்

## நான் நலம் ; மிகுதி நேரில்

அன்பின் அப்பா, அம்மா, அக்கா பிள்ளைகள் யாவருக்கும் எழுதிக்கொள்வது நான் சுகமே உள்ளேன். தங்கள் நலனுக்கும் முதலைக் குழி முருகன் அருள்புரிவாராக, மேலும்…"

பேனா அதற்கு மேல் எழுதுதாளில் ஓட மறுக்கிறது. எதை எழுதுவது ? எப்படி எழுதுவது ?

ஏராளமான விஷயங்கள் மனதுக்குள் எழுந்து குமுறித் தனித் தனியாக எழுந்து நிற்பதும், ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு மோதித்தெறித்து சிதைந்து போவதுமாக மனம் குழப்பத்தால் நிறைக் கப்படுகின்றது.

'கடிதம் எழுதுவது எப்படி', என்று எட்டாம் வகுப்பில் பொன்னையா வாத்தியார் சொல்லித்தந்தவை இன்னும் அவன் மனதில் பசுமையாக நிற்கின்றன. ஆனால் அவையெல்லாம் இன்று இக்கடி தத்தை எழுத ஏன் உதவ மறுக்கின்றன ? "எமது வாழ்வும் கல்விமுறை யும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றே இருக்கின்றன" என்று யாரோ சொன்னது உண்மையாக இருக்கும் எனவும் ஒரு எண்ணம் அவன் மனதில் எழுந்து மறைகின்றது.

காலில் ஏதோ ஊருவது போன்ற உணர்வு ; திடுக்கிட்டு எழுந்து உள்ளங்காலைப் பார்க்கிறான் அவன். எதுவுமில்லாததால் மனம் சற்று நிம்மதியடைகின்றது. நைந்துபோன பாயின் மூலையில் கிளம்பிக் கிடந்த ஒரு ஓலைதான் அவன் உள்ளங்காலை வருடியிருக்கவேண்டும் என்ற எண்ணம், அங்கு உலவும் முன்பின் அறியாத ஜீவராசிகள் பற்றிய பயத்தைப் போக்க, மீண்டும் பாயில் முகங்குப்புறப் படுத்துக்கொள் கிறான். தலையைத் தாங்கவேண்டிய தலையணை நெஞ்சுக்கும் பாய்க் கும் இடையில் ஒரு உயரத்தை ஏற்படுத்த பாயின் நுனியில் வைத்தி ருந்த எழுதுதாள்மீது உறங்கிக்கொண்டிருந்த பேனாவை அவன் மீண்டும் கையிலெடுக்கிறான்.

மீண்டும் எதை எழுதுவது என்ற பிரச்சினை பூதாகரமாக எழுந்து நிற்கின்றது.

கடிதத்தில் எழுதும் விஷயங்கள் சில சமயங்களில் கொடிய பூகம்பமாகவும் உருவெடுக்கலாம் ; ஆள்விழுங்கிப் பேயாகவும் மாறலாம் அல்லது யாராவது ஒருவரைக் காணாமற்போனோர் பட்டி யலில் சேர்க்கவும் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு முன்னால் நின்ற பாலை மரத்தில் கண்களிற்படாமல் குடியிருந்து சீழ்க்கை அடிக்கும் சில்வண்டின் ஒலி காதைத்துளைக்கிறது. பாலை மரத்திற்குக்கீழ் மலைச்சிகரங்களைப்போல் ஒழுங்கற்று வளர்ந்து கிடந்த புற்றுகளை வெட்டிச் சமன்படுத்திக் கொண்டிருந்த போது சீறிப்பாய்ந்த பாம்பை மண்வெட்டியால் அடித்துக் கொன்றது ஏனோ நினைவுக்கு வருகிறது. கண்டங்கருவளை. அடுத்த கொட்டிலில் குடியிருக்கும் ராமையா, " ஒரு கண்டங்கருவளையை அடித்தால் ஏழு பாம்புகள் வரும் " என்று சொன்னதும் உண்மையாயிருக்கும் போலவும் தோன்றியது. ஏதோ ஒரு சிறு தகரப்பேணியை எடுத்து சைக்கிள் வால்வ் கட்டையை அதன் மூடியிற் செருகித் திரி போட்டுக் கொழுத்திய அக்கைவிளக்கின் ஒளியில் குடிசையின் மூலைமுடுக்கு களைப் பார்த்தான். ஆனால் கிடுகுச் செத்தைக்குள்ளும் பாம்புகள் இருக்கக்கூடும் என்ற பயமும் இடையிடையே தோன்றாமலில்லை.

பாம்புகளும், நுளம்புகளும், மழையும், காட்டு வாழ்வும் மனதை அலைத்த போதிலெல்லாம் அவன் பலசமயம் சலிப்புக்குள் தள்ளப்படுவதுண்டு. அப்படியொரு நாள் மனஞ் சோர்ந்து கதைத்துக் கொண்டிருந்தபோதுதான் சிவலிங்கம் சொன்னான். " மச்சான் வவுனியாவுக்குப் போய் அதாலை திருகோணமலையிலை கப்பலேறி யாழ்ப்பாணம் போகலாமாம். "

பிறந்த மண்ணுக்குப் போக, உறவுகளுடன் கூடிவாழ யாருக்குத் தான் ஆசையில்லை ?

அவன் சிவலிங்கத்தை நிமிர்ந்து பார்த்தான்.

மாயமானாகக் காட்டுக்குள் வந்து இராமனை எங்கெங்கோ வெல்லாம் கொண்டலைந்த மாரீசனின் ஞாபகம் வந்தது. சீதை இராமன் கீறிய கோட்டைத் தாண்டவில்லை. அவனது குடும்பத்தினரும் தங்களுக்குத் தாங்களே கீறிய கோட்டைத் தாண்டவில்லை. என்றாலும் இப்போ இரு பகுதியினரும் அசோகவனத்தில் !

இராமன் தானும் போய் அசோகவனத்திற்குள் மாட்டுப்பட்டி ருந்தால் எப்படியிருக்கும் என்பதை நினைத்த போதே பயம் மனதை உலுப்பியது.

ஒரு பெரும் காவியமே இல்லாமல் அல்லவா போயிருக்கும்.

விஷப்பாம்புகள் எவ்வளவோ பரவாயில்லை போலவும் தோன்றுகின்றது. பாம்பு கடித்தால் வைத்தியம் செய்யலாம். உயிர் தப்பவும் முடியும். சாகவேண்டியும் ஏற்படலாம். செத்துப்போனாலும் உறவுகள் ஊரவர்கள் அழுது ஒப்பாரி வைத்து ஊர்வலமாகக் கொண்டு சென்று சிதையில் வைத்துத் தீமூட்டி எரிக்கலாம். ஆனால் ஊரிலுள்ள உறவுகளைச் சுற்றிலும் ஒரே பாம்புகள் . அவை இங்குள்ள பாம்பு களைப் போல் புற்றுக்குள் ஒளிந்து வாழ்வதில்லை. சுதந்திரமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிகின்றன. யாரையும் எந்நேரமும் தீண்டலாம் ; சில சமயங்களில் அப்படியே முழுதாகவும் விழுங்கி விடலாம்.

ஏனோ இந்நேரத்தில் அவனுக்கு அவனுடைய பூட்டி, சிறுவனா யிருக்கும் போது சொன்ன கதை நினைவுக்கு வருகின்றது. கோட்டை முனியப்பரிலிருந்து புறப்படும் முனி தன் பரிகலங்களுடன் வல்லை வெளிக்கு வந்து உப்புவெளி தாண்டி உயிலங்கன்றடியில் இளைப்பாறி தங்களது ஒழுங்கையால் பருத்தித் துறையைச் சென்றடையுமாம். ஒழுங்கை என்று சொல்லப்படும் அந்த வெள்ளவாய்க்கால் பரிகலங்கள் " செம்மறி ஆட்டு " உருவத்தில் செல்லுமாம். இதில் உள்ள ஆபத்து என்னவென்றால் இந்த முனி ஊர்வலத்தின் போது யாராவது குறுக்கே வந்தால் முனி அடித்து விடும். அடிவாங்கியவர் இரத்தம் கக்கிச் சாக வேண்டியதுதான்.

பூட்டி இக்கதையைத் திருப்பித் திருப்பிப் பலமுறை சொன்னா லும்கூட அவன் 'காக்கிவளவு' பெரியம்மாவின் செம்மறி ஆடுகளைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை. அதனால் அவன் சிறுவயதில் முனியை நினைத்துப் பயந்தாலும் காலப்போக்கில் அவையெல்லாம் நம்பமுடியாத கதைகளாக அவனளவில் மாறி விட்டிருந்தன.

இப்போ பரிகலங்களின் ஊர்வலம் பற்றிய நம்பிக்கை சிறிது சிறிதாக மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது. முன்னைய பரிகலங் களுக்குக் குறுக்கே போனால் மட்டும்தான் ஆபத்து. இப்போதெல் லாம் பரிகலங்கள் வீடுகளுக்குள் புகுந்து மனிதர்களை இழுத்துச் செல்வதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. வேம்படி வீட்டு வெள்ள வாய்க்காலால் பரிகலங்கள் மணலை வாரியிறைத்துப் புழுதிப் படலமாகக் கிளப்பிக்கொண்டு செல்வது அவன் மனதில் தெரிகின்றது.

எப்படியும் இன்று கடிதத்தை எழுதி முடித்துத் தபாலில் சேர்த்து விட வேண்டும் என்ற வலுவான எண்ணம் அடிமனதிலிருந்து விடாப் பிடியாக கெம்பிக்கொண்டிருக்கிறது.

அவன் எவ்வளவு சிரமப்பட்டு அதை எழுதினாலும் இடை வெளியில் அதன் வாய் கிழிக்கப்படும். எழுத்தெழுத்தாக வாசிக்கப்பட்ட பின்பு விலாசதாரருக்கு சில வேளைகளில் போய்ச் சேரும். ஆனால் போய்ச்சேருவதை எவ்விதத்திலும் நிச்சயப்படுத்தி விடமுடியாது.

அவன் இதுவரை மூன்று கடிதங்கள் போட்டு விட்டான். பதில் கடிதம் ஒன்றுகூட வரவில்லை. போய்ச்சேராமலும் இருக்கலாம். சில வேளை போய்ச் சேர்ந்தாலும், அவனது உறவுகள் கடிதம் போடுவதில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எண்ணிப் பதில் போடாமலும் இருந்தி ருக்கலாம். எப்படியிருப்பினும் தொடர்புகள் அறுந்து தனித்தனித் தீவாகி மனிதர்கள் தவிப்பது மட்டும் நிதர்சனமானது.

ஆங்கிலேயர் எமது நாட்டைக் கைப்பற்றிய பின்புதான் தபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து இங்கு ஏற்பட்டதாகப் படித்திருக்கிறான். என்றாலும் அன்னத்தைத் தூதுவிட்டதும் ஒருவருக்கொருவர் ஓலை அனுப்பித் தகவல்களைப் பரிமாறிக் கொண்டதும் இலக்கியங்களில் படித்தது நினைவுக்கு வந்தபோனது. அதிலும் அக்பர் ஆட்சிக்காலத்தில் அவருக்குக் குழந்தை பிறந்த செய்தி ஒரு மைலுக்கு ஒருமுரசம் வைக்கப்பட்டு அதில் எழுப்பப்படும் ஒலி மூலம் நூற்றுக்கணக்கான மைல் தொலைவிலிருந்து அவருக்கு அறிவிக்கப்பட்டதாம்.

அப்படியானால் குடாநாட்டுக்குள் நடக்கும் கொலைகள், கைதுகள், காணாமற் போதல்கள் எப்படிப்பரவுகின்றன ? அக்பரின் முறை நடைமுறைக்கு வந்து விட்டிருக்கலாம் என அவனுக்குத் தோன்றிது. முரசுக்குச் செய்தி போனதுபோல் காதிலிருந்து காதுக்குப் போகக் கூடும்.

ஆனால் அவனும் அவனுடைய உறவுகளும் இப்போ தொடர்பு கொள்ள உடைக்கப்படும் போய்ச்சேராத கடிதங்களையே நம்பவேண்டியுள்ளது. கிளாலிக்கடலேரியும், ஆனையிறவுத்தளமும் குறுக்குச் சுவராக இல்லாமலிருந்தால் வேறு ஏதாவது ஒரு வழியிலாவது முயற்சிக்கலாம்.

காந்தனை நினைக்கும்போது இனம்புரியாத பதற்றம் ஒன்று ஏற்படுவதையும் நெஞ்சு ‘ படபட ’ வென்று அடித்துக் கொள்வதையும் அவனால் உணர முடிந்தது. காந்தன் வேறுயாருமல்ல ; அவனுடைய சகோதரியின் மகன்தான்.

தகப்பன் வெளி நாட்டிலிருந்து காசுகாசாக அனுப்ப தாய் ஊட்டி, ஊட்டி வளர்த்த உடம்பு. படிப்பிலும் அவன் கெட்டிக்காரன். பள்ளிக்கூடம் போய்வருகிறானா என்பது பற்றி எவ்வித விபரமும் தெரியவில்லை. சிலவேளை காணாமல் போயிருந்தால்...

அப்படி நடந்திருக்காது என்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக்கொண்டான். தற்செயலாய் அப்படி நடந்திருந்தால் கடிதம் எதுவும் வராமலிருப்பதே, அதாவது துன்பம் விளைவிக்கும் சம்பவங்களை அறியாமல் இருப்பதுகூட , நல்லது தான்.

அது 1984 ஆம் ஆண்டு என ஞாபகம். உப்பு வெளியில் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது. அடுத்தநாள் அதிகாலையில் அந்த ஊரையே சுற்றிவளைத்துப் பலரைப் பிடித்துக்கொண்டு சென்று விட்டனர். அவர்களுக்கு என்ன தோன்றியதோ வெற்றிகாட்டுப்பிள்ளையார் கோவிலில் மணியடிக்கும் சண்முகலிங்கத்தை மட்டும் ஓடவிட்டு முதுகில் சுட்டுக்கொன்று விட்டனர். அது சிலவேளைகளில் கண்ணிவெடிவைத்தவனைத்தாம் சுட்டுவிட்டதாக மேலிடத்திற்கு அறிவிப்பதற்காகக்கூட அக்காரியத்தைச் செய்திருக்கலாம். அது அன்று வந்த பொறுப்பதிகாரியின் மனநிலையைப் பொறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தனையும் ஓட விட்டுவிட்டு பின்னால்....

இருக்காது... அப்படி நடந்திருக்க முடியாது. காந்தன் நன்றாக ஓடுவான். இன்றுவரை நூறு மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் அவன் நிலை நிறுத்திய பாடசாலைச்சாதனையை எவரும் உடைக்கவில்லை.

துப்பாக்கி ரவையின் வேகத்தைவிட மனிதனால் ஓட முடியுமா? முடியாதுதான்... ஆனால் காந்தன் ஓடியே ஆகவேண்டும் என்று அவன் மனம் துடிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் எண்ணூற்று நாற்பத்தாறு பேர் காணாமற் போனதாக அரச அதிபர் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். அது எண்ணூற்றுநாற்பந்தியைந்தாக இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

சுஜியும் பருத்தித்துறைக்கு வேலைக்குப்போக வேண்டும். குஞ்சர்கடைச்சந்தி தாண்டி, மூத்தவிநாயகர் கோவிலடியால் போய் நெல்லியடிச்சந்தியில் ... சந்திக்குப் போகாமல் மகாத்மா தியேட்டர் முன் ஒழுங்கையால் இறங்கி சாணக்க மூலைக்குள்ளால் சென்று வதிரிப்பாதையாலும் போகலாம். அப்படிப்போகும்போது புளியடிச் சந்தியில் மண்மூடைகள் அடுக்கப்பட்டிருந்தால் என்ன செய்வது?

கூடப்பிறந்த சகோதரியின் மகள் என்றாலும்கூட 'சுஜியின்' அழகையிட்டு அவனுக்கு தனிப்பெருமை. அந்தக் குறுகுறுத்த கண்களும், படபடக்கும் விழிமடல்களும் நிச்சயமாக மண்மூடைக்குள் நிற்கும் கண்களை அவள் பின்னால் விரட்டும் என்பதில் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. வேலைக்குப் போன சுஜியைக் காண வில்லை யென்று தேடிப்போன அக்காவும், சுஜியுடன் ஒரே புதை குழியில் அழுகி, நாறிப்போய் புழுக்களாய் நெளிய...

நெஞ்சுக்குள் ஏதோ ஒரு உணர்வு உருண்டு, திரண்டு மூச்சை அடைக்கிறது. அனுமான் எப்படிக் கடலைத்தாண்டியிருப்பான்...?

அப்படியே வானத்தில் எழுந்து பறந்து சென்று தாயையும் தகப்பனையும், சகோதரியையும் , பிள்ளைகளையும் தோளில் சுமந்து கொண்டு பறந்து வந்துவிடவேண்டும் போலொரு தவிப்பு மனதில் எழுகின்றது.

எனினும் அனுமானையும் நடுக்கடலில் அரக்கி தடுத்து நிறுத்திய சம்பவமும் அவன் நினைவுக்கு வராமலில்லை.

அவனால் இனியும் கடிதத்தை எழுதாமல் இருக்கவே முடியாது; பேனாவை மீண்டும் கையில் எடுக்கிறான்.

பிள்ளையார் கோவில் ஒலிபெருக்கி 'பெருங்கதை' படிக்கும் யாரோ ஒருவரின் குரலைக் கர்ணகடூரமாக்கிக் காதைக் கிழிக்கிறது. ஒலிபெருக்கியைக் கண்டுபிடித்தவனைச் சுண்ணாம்புக்காளவாயில் போடவேண்டும் போலிருக்கிறது.

அவன் ஊரைவிட்டு கல்வி காரணமாகவோ, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடியோ ஊர் எல்லை தாண்டிய காலம் தொட்டு அவனது தாய் 'பெருங் கதை ' விரதம் பிடிக்கத் தவறுவதில்லை. அந்த விரதம் அவனுக்கு ஒரு துன்பமும் வராமல் காப்பாற்றும் என்பது அவளது அசையாத நம்பிக்கை. இந்தப் பெருங்கதை விரத காலத்தில் அவனது கடிதம் கிடைக்குமானால் எவ்வளவு சந்தோசப்படுவாள்.

பெருமூச்சு ஒன்று நெஞ்சுக்குள் இருந்து எழுந்து அடங்கு கின்றது. அழுதால் கொஞ்சம் மனதுக்கு நிம்மதியாயிருக்கும் போலவும் தோன்றுகின்றது.

அசோகவனத்தில் சிறைப்பட்டிருந்த சீதையை எண்ணி ராமன் விம்மி அழுதிருப்பானா ? இல்லையே... படைதிரட்டி கடலுக்குப் பாலம் போட்டு - யுத்தம் செய்தல்லவா சீதையை மீட்டான். அப்படி செய்திருக்காவிடில் இராமன் சாகும்வரை பஞ்சவடிக் காட்டில் அலைந்து கொண்டல்லவா இருந்திருக்க வேண்டும். கிளாலிக் கடலுக்குப் பாலம் போட முடியுமா ? கேள்வி எழுந்த கையுடனேயே பாலக்கற்களாய் விழுந்துபோன ஆயிரக்கணக்கான உயிர்களின் எக்காளச் சிரிப்பொலி நெஞ்சை அதிர்க்கிறது.

மிகவேகமாகப் பேனாவைக் கையிலெடுக்கிறான். இப்போது கடிதம் எழுதுவது எப்படி என்பது குழப்பங்களைத் தாண்டி திட்டவட்ட மான வசனங்களாக உருப்பெற்று விட்டது.

" எனக்கு நீங்கள் கடிதம் போடவேண்டாம் ; நாங்கள் வெகு விரைவில் உங்களிடம் வந்து விடுவோம். "

இதழ் . 50
தை. 1997.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துருக்கன்

## வீடு என்பது…

ஒத்தகருத்துள்ள சொல் : ' வீடு - இல்லம், மனை , ' ' ரீச்சர்' கேட்கிறபோது அன்றுதொட்டு இன்று வரைக்கும் இதுவேதான் பதில்.

வீட்டை எப்படியெல்லாம் அழகுபடக் கூறமுடியும்?

வீடு எவ்வளவு அழகானது ! இதுதானே வாழ்வின் உறை விடம். உறைவிடமின்றிய மனித வாழ்வு எப்படியிருக்குமென்பது அனுபவத்தில் காண்கிற போதுதான் புரிகிறது. இது அனுபவ உண்மை.

இப்போது சிறு சந்தேகம் . வீடு என்பது இல்லமா ? மனையா? இதை எப்போதும் இப்படியே அழைக்க முடியுமா ?

அவன் கற்றவைகளை மறக்கவில்லை.

மீண்டும் ஞாபகத்திற்கு வரவழைத்தான். பெருமுயற்சி… தெளிவில்லை… சந்தேகம். இந்தச் சந்தேகம் ஏன் எழவேண்டும்? யாரிடம் இதைத் தீர்த்துக்கொள்வது ? ஆரம்பக்கல்வி ' ரீச்சர் ' இறந்து பல வருடங்களாகிவிட்டன.

கற்குவியலாகக் குவிந்து கிடக்கும் வீட்டுக்கு இப்போது வேறு பெயர் ? இல்லம் ? மனை ?

அந்த எண்ணம் தவறானது அல்ல. நிறைய நியாயங்கள் அதில். அவன் நினைத்ததுபோல் எதுவுமே இருக்கவில்லை.

வீடுகள் கற்குவியல்களாகி, காடுகளாகி, எதிர்ப்பதம் தேடிக் கொள்கின்றன. இதற்கு யாரிடம் பதில் கிடைக்கப் போகிறது ? இது ஏன் இப்படி , இவ்விதம் ஆனது ?

' மாற்றமென்பது எளிதில் நிகழகச்கூடியதல்ல. அது நீண்ட, பிரயத்தனத்திலும், முயற்சியிலும் தான் தங்கியிருக்கிறது. ' யாரோ கூறியது ஞாபகத்திற்கு வந்தது. இந்த மாற்றங்கள் எல்லாம் இலகுவில் இப்போது நடந்து முடிகிறது. ஒன்றை ஆக்கும்போது ஏற்படுகின்ற உழைப்பின்வலு, அதன் பெறுமதி அதை அழிக்கும்போது ஏற்படுவ தில்லை. அவன் அப்போது நினைத்தது இதைத்தான். காரணமின்றி துவைத்துக் கிடக்கும் முன்னைய காலத்து வாழ்விடம் அது அழிவுற்றுப் போனதன் உளைச்சல்.

அவன் ஆவலோடு வந்தபோது கனவுகள்… கற்பனைகள்… நெஞ்சம் நிறைந்து கனக்க… அந்தக் கண்கொண்டு பார்க்க முடியாத கொடிய காட்சி ; நெஞ்சு வெடித்து விடும் போல்… நெஞ்சு கனத்து வெம்பி அழ , அவன் முகப்பில் நின்றிருந்தான். காற்று மூசிக்கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தது. அதனோடு தனித்த விசும்பல். நீண்ட பெருமூச்சு. அவன் கண்ணில் நீர்முட்டி வழிந்தது. ஆறுதல்தர எவருமற்று...

' அம்மப்பாவின் நீண்ட உழைப்பு... பிறகு அம்மாவிற்குச் சீதனம்... பிறகு அக்காவுக்கு சீதனம்... பிறகு ? '

அவன் மெல்ல ஒரு அடி எட்டி நடந்தான். ஓரத்தில் ' மிதிவெடி அபாயம் ' தொங்க விடப்பட்டிருந்தது. மற்ற அடி எடுத்து வைக்க கால் இயங்க மறுத்திற்று. சற்றுநேர ஓய்வு , பயம் கலந்த நிலை.

இதயம் நிமிடத்திற்கு எழுபத்திரண்டின் இருமடங்காய் துடித்திற்று. மறு அடி எடுத்து வைக்காத அவனது பார்வை அந்த வீட்டின் மீது இல்லை. குவிந்து கிடக்கின்ற பெயரிட முடியாத ஒன்றின் மீது.

வீட்டின் தனித்த சுவர் ஒன்று. அதில் அரைவாசிப் பகுதியைக் காணமுடியவில்லை . அதை மட்டும் ஏன் விட்டு வைத்துள்ளனர்?

அதில் தனித்த பறவையொன்று குந்தியிருந்துவிட்டுப் பறந்து சென்றது. அது கூட சிறகசைத்த களைப்பினால்தான் ஓய்ந்திருப்பது பறந்திருக்க வேண்டும்.

பார்வையின் ஒளி சுவரில் மோதிப் பட்டுத் தெறித்தது. நத்தைகள் சுவரில் பீச்சியடித்திருந்தன . அவை நகருகின்ற போது அவற்றின் உடலில் இருந்து வெளிவரும் சுரப்பி ஒன்றினது வளைந்த நெளிந்த கோடுகளின் வரைபு. அவைகூட காலம் பட்டிருந்தன.

பலமாக ஊதித்தள்ளுகின்ற காற்றிலும் அந்த தனிச்சுவர் எக்கணமும் சரிந்து போகலாம். அதில் பாரிய பொத்தல். அது ' ஷெல்' துளைத்த அடையாளமாகத்தான் இருக்கும்.

வீடிருந்த இடத்தில் பற்றைக் காடாய் சடைத்து வளர்ந்திருந்தது காண்டை. பாம்புகளைத் தவிர வேறு எவையும் வாழத் தகுதியற்றுக் கிடக்கும் இடம்.

கவச வண்டிகளினதும், புல்டோசர்களினதும் அழியாச் சுவடுகள். இவைதான் இந்த வீட்டிற்கு கொள்ளி வைத்திருக்க வேண்டும். இது கடும் பிரயத்தனங்களின் மத்தியில் நிறைவேற்றப் பட்டதுதான். இது கூட சில வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப் பட்டிருக்கலாம். இப்படிக் காலம் கழிந்த பிறகும் அதன் சுவடுகள் இறுகப்பதிந்தபடி... இவையெல்லாவற்றையும் செய்து முடித்த அந்த புண்ணியவாளன் நிறைய இதுபற்றிக் கற்றிருக்க வேண்டும். அதனால் தான் இதை அதிக கரிசனையுடன் மிச்சமின்றிச் செவ்வனே செய்து முடித்திருக்கிறான். பரிசு , பட்டிகள், பதக்கங்களுடன்...

பிறமொழியொன்று சுவரை ஆக்கிரமித்திருந்தது. அந்த மொழிக்கான தெளிவான விளக்கத்தைக் கேட்பதற்கு அப்போது எவரும் அங்கிருக்கவில்லை. சற்று நாட்களுக்கு முன்னர் , அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்து விட்டுப் போனவர்களின் கைவண்ணமாகத்தான் அது இருக்கவேண்டும். அதன் அழகு அவனை வசீகரிக்குமாப்போல் சுவரில் அழகுக்கு அழகு சேர்க்க சன்னங்கள் ஒழுங்கின்றி பரந்துபட்டுத் தெறித்தபடிக்கு...

அந்த எழுத்துக்கள் எவ்வளவு அழகாக வளைந்து நெளிந்து காட்சி தருகின்றன. அந்த மொழியின் எழுத்துக்கிருக்கும் அழகு அவர்களின் உள்ளத்தில் இல்லாமல் போயிற்றே.

அவர்களின் மொழியிற்கூட வீட்டிற்கு எப்படியெல்லாம் அழகுப் பெயர்களைச் சூட்டுகிறார்கள் ? அந்த மொழிக்காரர்களுக்கெல்லாம் ஏன் இவை புரியமறுக்கின்றன ? தங்களுடையவற்றை எப்படி தம் தேசத்தில் அழகுப்பொருட்களாக்கி அலங்கரித்துக் கொள்கிறார்கள் ? வீடு - தங்களால் மட்டும் இழக்க முடியாதாம் ! பிறகு அவர்கள் மற்றவர்களின் துன்பத்தில் ஏன் இன்பம் காணுகிறார்கள் ?

வீடு , அம்மாவின் சீதனம். அம்மாவின் பெற்றோர் அதை மனமுவந்துதான் சீதனமாகக் கொடுத்தனர் : அது பெற்றோரது படிப் படியான உழைப்பின் , வளர்ச்சியின் குறியீட்டுச் சின்னம். அம்மாவுக்குத்தான் அதை வழங்கவேண்டுமென்கிற ஒரே குறிக்கோள். அது நிறைவேறியது, அம்மம்மாவுக்கு மனத்திருப்தி.

வீடு, தனக்குக்கிடைத்த போது அம்மா, அதை தனக்கு கிடைத்த பெரும் பேறாகவே கருதினாள். அம்மா தன் காலத்தில் முடிந்தவரை வீட்டை பாதுகாத்து, அழகுபடுத்தியே வந்திருக்கிறாள்.

பிறகு, அக்கா தனக்கே அந்த வீடு உரித்தாகப் போவதான பாவனையில் செயற்பட்டாள். அந்த வீடு தனக்கே கிடைக்க வேண்டும் என்கிற அவா அவளிடம். வீட்டை அழகாக வைத்திருப்பதே அவளது முதல்தர வேலை. மனதிற்கு இதம் தேடி எந்தநேரமும் அவ்வப்போது வெளிவந்துகொண்டிருக்கும் புதிய பாடலை முணுமுணுத்தபடியே எல்லா வேலையும் செய்வாள். சமையல் அறையின் வேலையிலிருந்து முற்றம் கூட்டும் வரையிலும் அவளது வாய் ஓயாது. தம்பி இடையிடையே குறுக்கிட்டு அக்கா பாடும்போது தன் வாய்க்கு வந்தபடி பாடித்தள்ளுவான். ஆனால் அக்காவுக்கு அருகில் இருக்கமாட்டான். சில சமயங்களில் அக்காவின் கைகளில் இருப்பவை அவனைத் துரத்திச் சென்று பதம் பார்க்கும்.

அவள் தன் இஷ்டப்படியே எல்லாவற்றையும் செய்து முடிப்பாள். பிடிவாதக்காரப் பெண் - " ஒருத்தரும் என்ர வேலையிலை பங்கெடுக்கத் தேவையில்லை, என்ர வேலை எனக்குத் தெரியும்" என்று எல்லோரையும் தடுப்பாள். அதனால் அவளது செயலில் எவரும் தலையிடுவது மிகக்குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ மூத்தவளுக்குத்தான் வீடு குடுக்கவேணும். பெடியளுக்கு என்னத்துக்கு வீடு , அவங்கள் தாங்களே தேடிக்கொள்ளுவாங்கள், ” அம்மாவும் அப்பாவும் குசுகுசுத்தபோது அது அவளின் காதில் விழுந்திருக்க வேண்டும். அதனால்தான் வீட்டின் மீது அவளது கவனிப்புக்கள் இப்படி அதிகமாயிருந்தன.

அக்கா தனக்காய் சீதனமாய்ப் பெற்ற வீடு. திருமணமாகி மூன்று வாரந்தான் அதில் இருந்தாள். நாலாம் வாரம் அதை தனிக்கவிட்டு ஊரோடு கூடி அக்கா ... அத்தான்... அம்மம்மா... அப்பா...அம்மா... தம்பி... அவன் எல்லோரும்கூடவே ஓடினர்... அந்த வீட்டைப் பிரிந்து எங்கோ தொலைவில் விழித்திருந்த நீண்ட பொழுதுகள்...

எங்கோ ஒரு திண்ணையில் குத்தியிருந்து வீட்டின் நினைவில் சங்கமித்தபடி எல்லோரதும் நினைவுகளும் மூழ்கித்தவிக்கும்.

காலங்கள் நீட்சியாக கரைந்தன . உயிர்க்கூடுகள் அங்குமிங்கு மாக அந்தரித்தலைந்தன. வாழ்க்கை பெரும் சுமையாகியது. பொழுது கள் ஒவ்வொன்றும் விடியாதவையாகவே இருந்தன. குடும்ப அங்கத்துவ எண்ணிக்கைகள் இறங்குவரிசையில் சென்று கொண்டே...

அவன் பிறந்து மூன்றாவது மாதத்திலேயே அம்மப்பா பரலோகம் போய் விட்டாராம். அவரது முகம் தெரியாத பருவம். பின்னாளில் வீட்டின் சுவரில் அவர் புகைப்படமாக காட்சியளித்ததைத் தான் அவனால் பார்க்க முடிந்திற்று. அவர்தான் அந்த வீட்டைக்கட்டி யதாக அம்மம்மா கூறினாள்.

அதற்கு அவரது உழைப்பு அதிகமாகவே இருந்தது. வீட்டிற் கான நிலையம் பார்ப்பது , அத்திவாரக்கற்கள் போடுவதிலிருந்து கூரைக்கு ஓடு போடும் வரை தானும் ஒரு வேலையாளாகவே செயற் பட்டாராம். எப்படி அதை நல்லபடி அமைக்க முடியுமோ அதுவே அவரது முழுமூச்சு.

‘ சாமிப்பட அறைக்கு வேப்பம் பலகையிலதான் கதவு போட வேணும் ’ என்கிற அம்மம்மாவினது நம்பிக்கைக்காக அவர் அலைந்த இடம் கொஞ்சமல்ல.

இதை அம்மாவின் வாயிலிருந்து அவன் புரிந்து கொள்ள முடிந்தது. வீட்டைக் கட்டி முடிக்க எவ்வளவு பணம் செலவாகி யிருக்கும் ; எவ்வளவு காலம் பிடித்திருக்கும் ! நிறையச் சிரமங்களுக்கு மத்தியில்தான் கட்டி முடித்திருப்பார்.

தான் கட்டிய வீடு. அதில்தான் உயிர் பிரிந்தாக வேண்டும் என்கிற அவா. அது நிறைவேறியது. அம்மப்பா வாழ்வில் முழுவதை யும் நிறைவாக்கிய வெற்றிதான்.

வீடு கட்டி முடிந்த களையோட களையா நல்ல நாள் பார்த்தாராம் அம்மப்பா குடிபுகுதலுக்கென்று . சின்னப்புச் சாத்திரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாம் அப்ப வலுகெட்டிக்காரன். சொன்னால் தவறாத சோதிடகாரன் அவரென்று அம்மம்மா அடிக்கடி சொல்லுவா. அம்மப்பா நாள் குறிக்கப்போனதும் சின்னப்புச் சாத்திரியாரிட்டத்தான். புது வீட்டுக்குச் சோடிச்சு அலங்காரம் பண்ணினது கட்டைராசுவாம். கட்டைராசு கைப்பட்டால் காணும் காட்சி நூறு கோடி. வெளிவாசல்ல வாழைக் குலைகள் கட்டினதைப் பற்றி ஊரெல்லாம் பல நாள் திசைச்சுக் கதைச்சு தாம். நீர்வேலிக்குலையளை வண்டில் கட்டிப்போய் ஏத்திக் கொண்டு வந்து கட்டினாராம் கிழவர். சாமம் பொழுதென்று பாராமல் கிழவர் உழைத்த உழைப்பை அம்மம்மாவும் அம்மாவும் குரல் தளுதளுக்கக் கூறக் கேட்டிருக்கிறான். புது வீட்டுக்கு வந்த சனம் வீட்டைச் சுத்திப் பார்த்து கதைச்ச கதைகளை அம்மம்மா எப்படி மனப்பாடமாக்கி வைத்திருந்தா என்று அவனுக்கு ஆச்சரியம் ! வீட்டுக்குப் ' பெயின்ற் ' அடிச்சது நாகநாதி. அதுக்குப் பிறகு நாகநாதியின்ர மவுசு இயக்கச்சி வரைக்கும் பரவிச்சு என்றா அம்மம்மா. அந்த வீட்டப்பார்த்து அயல் ஊர்களில்கூட அதுமாதிரிக் கட்டினார்களாம் பலர். புது வீட்டுப் போட்டோகூட பல காலம் பத்திரமாகக் கிடந்தது.

" புதுசாக் கட்டின வீட்டில முதல் காரியம் நடக்கப் போகுது. அவளுக்கெண்டு கட்டின வீடு. எவ்வளவு செலவழிஞ்சாலும் பரவாயில்லை. பெரிசாத்தான் கலியாணத்தைச் செய்யவேணும் " என்று அம்மப்பா சொல்லி ஏற்பாடு நடந்ததாம். இந்தத் தடவை நாகநாதி யோடு மகனும் வந்து வர்ணம் பூசினான். கட்டை ராசுவுக்குப் பதிலாக அம்மாவின் சினேகிதிகளும் உறவுக்காரப் பெடியங்களும் வந்து அலங்காரம் செய்தார்களாம். பெண் பார்க்க வந்த அப்பா வீட்டையும் பார்த்து வியந்தாராம். " என்னை முதல் பிடிச்சுதோ இல்லை வீட்டை முதல் பிடிச்சுதோ " என்று அம்மா பல தடவை அப்பாவைக் கேட்டது அவனுக்கு ஞாபகம். அம்மாவின் கல்யாணத்தோடு திரும்பவும் வீடு புதுக்கோலத்தில் திளைத்தது. எந்தக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய 'பாஷனில் ' வீட்டை அம்மப்பா கட்டியிருந்தார். வீட்டுக்குப் ' பிளான்' கீறினது மலாயன் பென்சனியர் ஒருத்தராம். கல்யாணப் போட்டோ வுடன் வீட்டையும் தனியாக ஒரு படம் எடுக்க வேண்டுமென்று எடுத்துக்கொண்டாளாம் அம்மா. அப்பாவுக்குக்கூட அது தனிச் சந்தோசம்தான்.

அக்காவின் சாமத்தியச்சடங்கு, பிறகு கல்யாணம் என்ற போதெல்லாம் புதுக்கோலம் பூண்டது வீடும்தான். அக்காவை பெண் பார்க்க வந்திருந்த அத்தான் ' இந்த வீடு எப்ப கட்டினது ? ' என்று கேட்டது அம்மம்மாவுக்குத் தனி மகிழ்ச்சி . " சோக்கான பெடியன். வலு கெட்டிக்காரன் போல கிடக்கு. எனக்கு நல்லாப் பிடிச்சுப் போச்சுது பெடியனை ." வீட்டுக்கதை கதைத்த உடனேயே அத்தானை அம்மம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவுக்கு எந்த விசாரணைக்குமப்பால் பிடித்துக்கொண்டது. இந்தக் கலியாணத்துக்கு வீடு காலத்தோடு மாறி இளமையாகியிருந்தது . புதிய குளிர்ச்சியான நிறம் , சரிகையின் மினுமினுப்பாய் ஒளிரும் அலங்காரம், வெளிநாட்டுப் பொருட்களால் அக்கா சிருங்காரித்திருந்தாள். பூங்கன்று களின் நளினம். அது ஒரு புதுமணப்பெண்ணின் நிறைவோடிருந்தது. கல்யாணப்படங்களோடு வீடியோவிலும் அது தன்னைப் பதித்தது.

நிலாக்காலங்களில் முற்றத்தின் முன்னே அது மோனத்தில் கிடக்கும். வெயிலில் நின்று ஒரு தலமாக உருகும். மழைநாட்களில் கிறக்கத்துடன் மழையில் நனையும்.

அவனுக்கு கத்தி அழவேண்டும் என்றிருந்தது. குரல் நடுங்கித் துடித்தது. கண்களில் நீர் திரண்டு வழிந்தது.

அம்மா அக்காவுக்கு வீட்டை சீதனமாக்கிய பிறகும் அது தனக்கானதல்ல என்று நினைப்பேயின்றி அழுது புலம்பினாள்.

அக்காவுக்கும் அத்தானுக்கும் தம் சொத்துப் பறிபோயிற்றே என்ற ஆறாத மனத்தவிப்பு. காலம் சலிப்புத்தட்ட " வீட்ட போகக்கூடிய நிலமை வந்தால் நீங்கள் என்ர வீட்டில போயிருங்கோ. பிரச்சனை தீர்ந்த பிறகு நாங்கள் இஞ்சாலுக்கு வாறம். அதுவரைக்கம் நாங்கள் அங்கால போகப்போறம் " என்று கூறி இந்த மண்ணின் வாடை பிடிக்காதபடி வெளிநாடு போயினர் அக்காவும் அத்தானும். அத்தான் தன் உயிரைப் பற்றித்தான் எப்பவும் நினைப்பவராச்சே. உயிர் உடலை விட நேரிட்டாலும் என்ற பயப்பீதி. இதனால்தான் அவரை மனம் வேறு வழிக்கு திசை திருப்பியிருக்க வேண்டும். வெளிநாடு சென்ற பிறகு அவருக்கு உயிர் பற்றிய பிரச்சினை இருக்கவில்லை.

வெளிநாடு சென்ற பிறகு, அக்கா எழுதும் கடிதம் ஒவ்வொன்றி லும் அடிக்கடி எழுதிக்கொள்வது , தன் வீடு பற்றித்தான்.

நிலமை எப்படியிருக்கிறது ? என் வீடு எப்படி ? ஏதாவது சேதம் ஏற்பட்டுள்ளதா ? வீட்டிற்கு போய் வரக்கூடிய நிலமை இருக்கிறதா? வெகுவிரைவில் போய் இருக்கலாமா ? இவை தான் கடிதத்தை நிறைத் திருக்கும்.

இவைகளைப் பற்றி அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது ? அவளது கேள்விகள் நியாயமானவைதான். இவற்றுக்கான பதிலை எப்படி வரையறை செய்வது ? இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து இந்தப் போருக்குள்ளேயும் வாழ்ந்த பெண். " போரின் இழப்புக்களை எல்லாம் கண்ணெதிரே கண்டு கொதித்தவள். இப்போது ஒன்றுமே புரியாதவளாகி..."

அவனுக்கு அக்காவை நினைக்க பரிதாபமாக இருந்தது. ஒன்றும் விளங்காதவளாக, நிலமை புரியாதவளாக இருக்கிறாளே என்ற பார்வை அவளில், வீட்டார் எல்லோருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவின் மனம் அமைதிபெற 'வீட்டுக்கு பிரச்சினை வராது. போய்வருவதுதான் சிரமம். பிரச்சினை சற்றுக்குறையும் போல் தெரிகிறது. தீர்ந்தால் போய்விடுவோம்.' அவன் மறுபதிலை எழுதி அனுப்பிவிடுவான், ஒரு சமாதானத்திற்கு. அக்காவின் அக்கறை, வெளி நாடு சென்ற பிறகும் முழுதாய் வீட்டின் மீதுதான். அத்தானும் தன் சொத்தில் அதிக கவனம்.

வெளிநாடு சென்றபிறகு எவருக்குமே வராத அக்கறை இவர் களுக்கு மட்டும் ஏன் இப்படி வலுவாக...

'அந்த வீடு தங்களுடையது தான்' என்பதான ஞாபகப் படுத்தலாகவும் அது இருக்கலாம். அவன் எண்ணிக்கொண்டான்.

அம்மம்மா தன் சொத்து மூன்றாவது தலைமுறைக்கு மாறி விட்டதான மனத்திருப்தியில் வாழ்ந்தாள். பிறகு, வீடு இழந்த துயரில் நோய்பிடித்து உயிர் துறந்து போனாள். அவளது கனவுகள் கரைந்து போனதெண்ணி அம்மா சாவீட்டில் புலம்பித் தள்ளினாள்.

அம்மம்மாவின் பொக்குவாய் நிரம்ப வெற்றிலை பாக்கு கடவாயில் இருந்து சிவப்புச்சாயம் வழிய புறுபுறுத்தபடி எப்போதும். அவள் தன் கை பொத்தி வீட்டின் நிலமதிராமல் பாக்குரலில் பாக்கிடிக்கும் அழகு. அதுவே ஒரு தனிஞாபகம்.

அம்மம்மா பாக்கிடிக்கும்போது நிலத்தில் குழி விழுந்து போகுமென அக்கா புறுபுறுப்பாள். அவள் தன் பொக்குவாய் திறந்து " என்ர புரிஷன் கட்டின வீடு, அதில் எனக்குத்தான் முதல் பங்கிருக்கு..." அம்மம்மாவின் வார்த்தைகள் அக்காவை சுடுமாப்போல் இருக்கும். அக்கா, அம்மம்மா அறளைபேந்து போய் கதைக்கிற கதைதான் இதுவென்று வேறு கதையின்றி ஒதுங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

வீட்டின் மூலையில் இறுதிவரை தன் கணவர் படுத்துறங்கிய கட்டிலிலேதான் அவளது படுக்கை.

" நான் இந்த வீட்டிலதான் சாகவேணும். என்ர மனிசன் சாகும் வரைக்கும் வாழ்ந்த இந்த மண்ணிலதான் என்ர உயிரும் போகவேணும். நான் செத்தாப்பிறகு என்ர படத்தை அவற்றை படத்துக்குப் பக்கத்திலை தான் தூக்கவேணும்."

இவைகள் தான் அவளது வாய்ச்சொற்களில் அதிகம் ஒலிப் பவை. அவளது ஆசைகள் நியாயமானவை. ஆயினும் ஒன்றுகூட நிறை வேறாமல் போனது மனதுக்கு இழப்புத்தான்.

அவளது கனவுகள், அவற்றிற்கு எவராலும் வலுச்சேர்க்க முடியாமல் போயிற்று. அப்பாவுக்கு அவளது கணக்கு பிசகிவிட்ட தான கவலை.

அப்பா அந்த வீட்டின் முன்னைய காலத்தை பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறாகவே கருதி வாழ்ந்தார். அதன் உறவில் நிம்மதி அடைந்திருந் தார். அது மலையேறிப் போனதான நினைப்பு இருந்தும் எப்படியும் வெகுவிரைவில் போய்விடுவோம் என்கிற நம்பிக்கையில் திளைத் திருந்த காலம். அப்பா அவனை தன் பிரதிநிதி ஆக்கிவிட்டு கண்காணாத தேசத்துக்கு போய்விட்டார். மாமா வீட்டுக்குச் சென்றுவரும் வழியில் குண்டொன்றின் அதிர்வில் அவர் இதயம் இறந்தது.

மூக்கினாலும், காதினாலும் குருதி வழிந்தபடி நடுவீதியில் அப்பாவின் சாவு. எல்லோருக்கும் திகைப்பாகவே இருந்தது. கடும் உழைப்பு. எதிலும் விடாமுயற்சி. ஐம்பது வயது தாண்டாத துடிப்பு. எல்லாம் அடங்கிப் போனதாய்...

அம்மா காலத்துக்கு காலம் வரும் இழப்புகளுக்கெல்லாம் துவண்டு போனாள். அவளது வாழ்வு ஒடுங்கிப் போனது. இழப்புக் களே வாழ்வாகிற்று. சதா வேதனையோடு அவளது வாழ்வு.

யாரால் என்ன செய்யமுடியும் இதற்கு ? ஆறுதல் ; அதுகூட சிறிது காலத்திற்குத்தான்.

தம்பி துள்ளித்திரிகிற வயதில் அந்த வீட்டின் முகட்டி லெல்லாம் பம்பரமாய் சுழன்றடித்தவன். வீட்டை அலங்கோலம் செய்வது அவனது பணி. அதற்குப்பிறகு அக்காவிடம் கன்னம் பறக்க வேண்டித் தள்ளுவது அதற்கான பரிசு. வீட்டை இழந்து வந்த பிறகு எப்போதும் அந்த வீடு பற்றியே பேசுவான். பிறகு அப்பாவின் அடி உதைகளுக்கெல்லாம் தப்பித்துக்கொள்ள மறைவிடமின்றி தவித்த காலம்...

ஒரு நாள், தம்பி எவருமே அறியாதபடிக்கு எங்கோ போய் விட்டான். பல நாட்களின் அலைவுகளுக்குப் பிறகுதான் அவன் போன வழியை அறியமுடிந்தது.

தன் ஊர், சுற்றம், வீடு எல்லாம் இழந்துபோனது அவனுக்கு ஏதோ உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்த விளைவின் முடிவுதான் அது.

பின்னர் இராணுவத்துடனான சண்டையொன்றின் பின் மரணித்த செய்தியுடன் அவனது உடலை மட்டும்தான் காணமுடிந்தது. குடும்பத்தைச் சந்திக்காத அந்த நான்கு வருடத்தில் அவன் தன்னால் முடிந்தவற்றைச் சாதித்திருப்பான்.

தம்பியை இழந்த கவலை வாட்டிற்று அம்மாவுக்கு. இன்னும் அதிகமாகவே... எனினும் தம்பியின் இழப்பு நியாயத்திற்கானது.

அவனை நினைத்தால் இப்போது நிம்மதிப் பெருமூச்சு அவனில்.

அது ஜடம். உயிரற்ற கற்குவியல்களின் கூட்டம். இனி எதையுமே அதனிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அதற்காக உழைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலம் தேவைப்படும். அதற்கு உயிரூட்ட, உயிராய் அதனோடு வாழ எவ்வளவு காலம் வேணும். அதை மீள்நிலைக்கு எப்படிக் கொண்டுவரமுடியும் ? அவன் தனித்த ஒண்டிக்கட்டை, அவனால் என்ன செய்யமுடியும்?

அவன் நிதானமாகவே சிந்தித்துச் செயற்பட விரும்பினான். முதலில் அக்காவுக்கும் அத்தானுக்கும் ஒரு நீண்ட கடிதம் எழுதுவதா?

தன் சொத்துச் சொத்தென்று வாழ்ந்த அக்கா, அவள் எப்படி இந்தச் செய்தியை தாங்கிக் கொள்ளப்போகிறாளோ !

இதை அம்மாவுக்கு எப்படிச் சொல்ல முடியும் ? சந்தோசத்தின் உச்சியில் நின்றபடி என்னை அனுப்பி வைத்தாளே அம்மா. இந்த இழப்புக்கு எப்படி முகம் கொடுக்கப்போகிறாளோ ! அவனது மனம் நிலையின்றிச் சுழன்றடித்தது, ஒரு புயற்காற்றாய்.

வீட்டை விட்டு ஓடிப்போனபோது பசுமாடு கட்டையில் கட்டி யிருந்தது...நாய் தாழ்வாரத்தில் குழிதோண்டி குடங்கிப்படுத்திருந்தது... சுவரில் தொங்க விடப்பட்டிருந்த அம்மப்பாவின் உருவப்படம்... அம்மா - அப்பாவின் திருமண வாழ்த்து மடல்... அக்கா - அத்தான் திருமண வாழ்த்துமடல் இவையெல்லாம் எங்கு போயினவோ ! இவற்றை எங்கு தேட முடியும் ?

அம்மப்பாவின் புகைப்படமொன்று மாமாவிடம் இருக்க வேண்டும். மற்றவைக்கு என்ன செய்வது?

முதலில் அந்த நிலத்தில் கொட்டில் போட்டுக்கொள்வது அதன் பிறகு, அம்மப்பாவின் உருவப்படம்... அதற்கருகில் அம்மாவினது... அப்பாவினது... தம்பியினது... எல்லாவற்றையும் நிரையாகவே தொங்க விடவேண்டும்.

*இதழ். 50*
*தை . 1997*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானரதன்

## ஒரு மயிலின் மரணம்

மயிற் பறவை பற்றிய நினைவுகள் திடீரென அவனது மன வான்பரப்பில் தூசிப்படலம் விலகி வழிவிட, மீண்டும் தோற்றம் கொண்டது. ஏழெட்டு வயதிலோ அல்லது அதற்கும் முன்னரோ என அவனுக்கு ஞாபகம் வரவில்லை. மனவெளியெங்கும் நிரம்பி, நீல நிறமாக, அதிலிருந்து வெடித்துச் சிதறும் பல வர்ண ஒளிச்சிதறல்கள் - வளைந்து நெளிந்து நர்த்தனங்கள் போலவும், ஓவியங்கள் போலவும், மாறி மாறி, புதுப்புது உருவெடுத்து - அவனது மன இருக்கையில் கொலுவீற்றிருந்தன. அது ஒரு காலம்.

அதன் பின்பு, இந்த மயில் பறவை பற்றிய ஒளி அதிர்வுகள் காலத்துக்குக் காலம், இடைவெளி கூடுதலாகவும் குறைவாகவும் மனத்தின் ஞாபக மேடையில் தோன்றி மறைந்தன.

பின்னர் பல காலமாக மயில் பற்றிய நினைவுகள் அறுந்து போயின. மீண்டும் அவனது ஐம்பத்தைந்தாவது வயதில் அந்தப் பதிவுகள் உயிர்ப்பெய்தின. நீண்ட கால இடைவெளி ஒரு சில நொடிப் பொழுதுகளாக மட்டுமே குறுகிவிட்டது போலிருந்தது. அப்பொழுது அவனுக்கு அளவெட்டிக் கிராமத்தின் வாசனை மணத்தது.

கருகப்புலம் சிறுவர் பாடசாலையில் அவன் அப்பொழுது மூன்றாம் வகுப்பு. கதிரவேலு சட்டம்பியார் பாடி, நடித்துக் கதை சொல்வார். ஒருநாள் ஏறுமயிலேறி விளையாடும் முருகனைப்பற்றியும் சொன்னார். அப்போதுதான் மயிலைப்பற்றியும் சொல்லியிருக்க வேண்டும்.

நல்லூர்த் தீர்த்தத் திருவிழாவில் அவனுக்குப் பாட்டி காட்டியது வெள்ளிமயில். அந்த மயிலை உயிராகவும் பார்க்க முடியும் எனப்பாட்டி சொல்லியிருந்தார்.

அந்த மயிலைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை அன்றிலிருந்தே துளிர்விடத் தொடங்கியது.

அவனின் தந்தை காலை தவறாமல் கை நிறைந்த செவ்வரத்தம் பூக்களோடு வந்து சூரியனைப் பார்த்துக் கும்பிட்டபின் மாடக்குழியில் வைத்திருக்கும் முருகன் படத்துக்கும் பூக்கள் சாத்துவார். தந்தையைத் தொடர்ந்து இவனும் விபூதி பூசி விட்டு முருகன் படத்தைப் பார்த்த வாறு நிற்பான்.

முருகனின் கையொன்று மயிலின் கழுத்தை அணைத்தவாறு, அவனுக்கு அழகின் சூட்சுமத்தைத் தோற்ற வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல நிறம் பளிச்சிடும் அந்த நீள் வளைவுக் கழுத்தும் தோகையில் வரிசையாய் பரவிவிட்ட கண்பொட்டுகளும் அவனைப் பிரபஞ்ச வெளிக்கு அழைப்பது போலிருக்கும்.

'மனமே முருகனின் மயில் வாகனம்' என்பதெல்லாம் அவன் பிற்காலத்தில் உணர்ந்து கொண்டவை.

அவனின் நண்பன் விக்கி ஒரு நாள் மயிலிறகு ஒன்றை வகுப்புக்குக் கொண்டு வந்தான். பாடப்புத்தகத்தின் நடுவே வைத்து விட்டால் 'படிப்பு வரும்' என்றும் மயிலிறகு குட்டிபோடும் என்றெல்லாம் கூறினான். மயிலிறகு கண்களில் பட்டால் 'குருடனாய்ப் போய் விடுவாய்' என்றும் எச்சரிக்கை செய்தான். இவற்றையெல்லாம் அவனின் மனம் காவ முற்படவில்லை. ஆனால் மயிலிறகுக் கண்ணில் அவன் கண்ட நிறங்கள் பூமிக்குரியதாகப் படவில்லை அவனுக்கு. நீண்ட நேரமாக அதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனின் விருப்பைக் கண்ட விக்கி மயிலிறகை அவனிடம் நீட்டினான். மயிலி றகின் கண்பொட்டில் தெரிந்த நிறங்கள் தனித்தும், ஒன்றுசேர்ந்தும், யுகம் யுகமாகப் பரிச்சயமுள்ளதாக விரிந்தன. அவன் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தது விக்கிக்குப் புரியவில்லை. அதைத் தனதாக்கிக் கொள்ள ஆசைப்படும் சிறுபிள்ளைத்தனம் அவனை விட்டு விலகியே இருந்தது.

அவனின் தந்தை நகைத்தொழில் நகாசு வேலைக்காரர், வேலையில் மூழ்கிவிட்டால் உலகை மறந்துவிடுவார். பற்றி வைத்த சிகரெட் மேசையில் வெறுமனே புகைந்து கொண்டிருந்தது. தங்கப் பதக்கத்தில் கற்கள் பதித்துக்கொண்டிருந்தார். அந்த பதக்கத்தின் இரு பக்கவாட்டிலும் மயில்கள்தான். தோகையில் கற்கள் ஒளித்தெறிப் படைந்து நீலமாகவும் நெருப்பாகவும் மின்னல் வெட்டுகின்றன. மேசையில் இருந்த மெழுகு கட்டையை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார். அப்போதுதான் மீண்டும் சிகரட்டை எடுத்து வாயில் வைத்து இழுத்து விட்டு சிகரட் கட்டையைத் தூர வீசிவிட்டு மீண்டும் பார்த்து ரசிக்கி றார். அவனும் முகத்தை உள்ளே செலுத்திப் பார்க்கிறான். மயிலின் மிடுக்கான தோற்றம் அவனைத் தங்கரதத்தில் பயணிக்க வைத்தது. தன்னைப்போலவே தந்தைக்கும் மயிலின் பாதிப்பு இருப்பதாகவே அவன் எண்ணினான். இவ்வாறு மயில் பற்றிய பதிவுகள் அவனில் இருந்து தோற்றம் பெற்ற, உன்னத அவனின், மூன்று காலங்களுக்கும் நிலவின. அக உலகின் பெரும் பகுதியின் விரிவுக்கு மயிலே மூலப் பொருளாயிற்று.

சரோஜினி மாமியின் கல்யாணம் அவனுக்கு நினைவி லிருந்தது. ஆனால் மனதில் இருப்புக்கொண்டது வெளிக்கூடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்திருந்த மயில் படங்கள் போட்டிருந்த கம்பளங்களில் படுத்திருந்த வாறு அந்த மயில்களைக் கம்பளங்களின் மென்மையோடு தடவிப் பார்த்தது மட்டுமே. அந்த ஞாபகம் முதுமை பெறாமல் இருந்தது.

செல்லச்சந்நதி தீர்த்தத் திருவிழாவுக்குப் புறப்படக் காவடிகள் தயாராகிக்கொண்டிருந்தன. செடில் குத்தி, உரு ஆடியபோது காவடிகள் தோள்களில் ஏறின. ஆட்டமும், களையும், வியர்வையும் உடுக்கு, பறை, தவில் வாத்தியங்களுடன் கலந்தன. அவனும் சில நண்பர்களு டன் காவடி பார்க்க வந்திருந்தான். மயில் இறகுகள் ஈவிரக்கமற்று மிகக் கொடுமையாகக் காவடிகளுக்குள் செருகிவிடப்பட்டிருந்ததைக் கண்டபோது மயிலின் துன்பம் அவனை வாட்டியது. மயில்களின் அழகு எவ்வாறு திடீரெனச் சூனியமாகிப் போயிருக்கும். அவனுக்கு அன்றைய காவடி ஆட்டம் சலனமற்ற நீரில் தோன்றிய அழகான நிழற் காட்சியொன்று குழப்பிப்போய் விட்டது போலிருந்தது.

என்றாலும் மனம் என்னும் வெண்திரையில் மயிலின் நிறங்கள் கொண்டு வரையப்பட்டிருந்த பல்லாயிரம் ஓவியங்கள், உயிரணுக்கள் போல, ஒன்று சேர்ந்து பிரிந்து, பெருகி, அழிந்து மீண்டும் பலவாக உயிர்த்து நிரந்தரமான ஓவியப் பின்னல்களாகவே குடிகொண்டிருந்தன அவனின் ஆழ்மன விரிப்பில்.

அவனும் நண்பன் விக்கியும் கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலின் வடக்கு வீதியோரம் உள்ள மகிழமரத்தில் ஏறிப் பழங்கள் தேடிக்கொண்டிருந்தபோது மயிலின் குரல் கேட்டது. " கோயில் மயில் வந்திட்டுதடா விக்கி. இறங்கிவா பாப்பம் " என அவன் நண்பனைத் துரிதப்படுத்தினான்.

மயிலின் வடிவத்தைப் பற்றி அவனின் மனதில் பதித்திருந்த பெறுமானத்தைவிட, நேரில் பார்த்தபோது கூடுதலாக இருப்பது போலவும் மாறாகக் குறைவாக இருப்பது போலவும் மனப்பதிவோடு முரண்பட்டுக்கொண்டன. மயிலின் கழுத்து அசைந்தபோது கண்ட துடிப்பு. கருநீல முத்துக்கள் வரிசையிட்ட கொண்டை. வெள்ளைச் சாயமிட்ட இமைகள், நெஞ்சுப் பகுதியின் நீலத்திரட்சி, நீல வரிகள், கபில நிற இறக்கைகள் இடைக்கிடை சில்லிட்டு உதறும்போது எழும் வண்டோசை, கூடுதலான சுமையோடு சமநிலை தழும்பும் தோகை, அவதானமாகக் கால்கள் அடியெடுத்து வைக்கும் நடையின் பவ்வியம், அவனுக்குத் தரிசனமாயின அன்று. சிறிது நேரத்தில் மயில் பறந்து கோவிலின் மணிக்கோபுரத்தில் சற்றுத்தரித்து விட்டு வானில் பறந்து மறைந்தது. இது மயிலின் தரிசனம்.

மயிலின் அசுர வடிவத்தின் தரிசனம் அவனுக்கு எத்தனையோ வருடங்களின் பின் கிடைத்தது. நீண்ட தோகையுடன் வானில் பறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மயிலின் தோற்றம் அப்போது அழிந்து போயிற்று.

வடமராட்சியெங்கும் பறந்து, கொலை வெறிக்குரலில் வானம் அதிர்ந்திட நெருப்புச் சன்னங்களைப் பொழிந்து தள்ளிய அந்த உலங்கு வானூர்தியைக் கண்ட போது அழகும், மென்மையும், இனிமையும் பொருந்திய மயில் வாழ்ந்த இடத்தை எவ்வாறு மனிதனின் கொலை மயில் ஆக்கிரமித்தது ! இனிய நினைவுகளோடு அவனும் அவனுடைய உறவுகளும் அவனுக்குரிய அடையாளங்களோடு வாழக்கூடாது என்பதில் குறி வைத்தது அது. பச்சை, ஊதா நிற உருமறைப்புத் தீந்தை தீட்டப்பட்டு, மயிலின் சாயலில், அவனின் வானத்தை வெடிமருந்துப் புகை கொண்டு நிறைத்தது அது. இரத்த நாளங்கள் வெடி அதிர்வுகளில் துடிதுடித்தன. செவிப்பறையில் சாவுக்கு அழைக்கின்ற மிகையொலி அது. வானில் தோன்றாத நேரங்களிலும் கேட்டது. வானூர்திகள், குண்டு வீச்சு விமானங்களின் ஒலிகளை நுண்ணியதாகக் கேட்பதில் காதுகள் தேர்ச்சி பெற்றன. வானத்திலிருந்து குண்டுகளாய் அவலம் தொடர்ந்தது. ஊர்கள், மனிதர்கள் , உடமைகள் , எல்லாமே சிதறிப் போயின. எத்தனை நூற்றாண்டு காலம் பொத்திப் பொத்திப் பாது காத்து வந்த அவனின் ஆத்ம நிலப்பரப்பில் இரத்தம் கசிந்தது.

மயில் எண்ணெய், மயில் இறைச்சி, மயில் இறகுகள் விற்பனைக்காக வந்தன.

மந்திகை வைத்தியசாலைக்கு இறந்தவர்களையும், காயப்பட்ட வர்களையும் ஏற்றிச்சென்ற வாகனத்தையும் துரத்தியது. நெல்லியடி புனித இருதயக் கல்லூரியில், அதற்கருகே அமைந்துள்ள தேவாலயத் தில், கூட்டைச் சுற்றிய தேனீக்களாக மக்கள் வாழ்விடங்களை விட்டுத் தஞ்சம் புகுந்திருந்தனர். தேவாலய வளவில் கஞ்சிக் கிடாரத்தைச் சுற்றி பூவரசம் இலைகளைக் கோலிவைத்தவாறு நீளும் கரங்கள். சின்னஞ் சிறிய கரங்களும் தான். கஞ்சியின் சூட்டைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பதறும் பிஞ்சு விரல்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நேரக்கஞ்சி. அப்பொழுதும் அந்த மக்கள் கூட்டத்தின் மீது குண்டு மாரி பொழிந்தது, பஞ்சசீலத்திலிருந்து உருவமைக்கப்பட்ட அந்த உலங்கு வானூர்தி. கஞ்சிக்கிடாரத்திலும் இரத்தம் தெறித்தது. அவலக் குரல்கள் தேவாலயமெங்கும் நிறைந்து கர்த்தரின் சிலுவையில் ஓய்ந்தன.

கிளாலிக் கடற்கரையில் வன்னிக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று குவிந்த உரப்பை மனிதர்களில் அவனும் ஒருவன். அம்மனிதர்களின் வாழ்வின் விழுமியங்கள் யாவும் அந்த உரப்பை களில் அடக்கமாகி ஒரு நாகரிகமடைந்த மனித இனத்தின் வழித் தோன்றல்கள் அவமான முத்திரை குத்தப்பட்டுப் புற்றரைகளிலும், பாதை நெடுகிலும், சேறும் சகதியோடும் கிளாலிக் கடற்கரையில் காத்திருப்பதைக்கண்ட உலங்கு வானூர்திகள் திருப்தியடைவதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக மேலும் கோபம் கொண்டன. சிங்கத்தின் வாய் அப்பிரதேச மெங்கும் அனல் தெறிக்கும் சன்னங்களை வீசின.

படகுப்பாதையெங்கும் மக்கள் பதுங்கிடம் தெரியாமல் நீரிலும் நிலத்திலும் புரண்டு கதறி அழுத குரலில் கிளாலி நீரேரி அதிர்ந்து கலங்கியது. உலங்குவானூர்திகள் சுற்றிச் சுற்றி தமது மேலாதிக்கத்தைத் தமிழரின் வான்பரப்பில் நிலை நிறுத்திக் கொண்டி ருந்தன. நீரில் கரும்புகைகள் ஆங்காங்கே அடையாளமிட்டன ' இது உனக்குரிய இடமல்ல ' என்று.

அவன் கிளாலிக் கடல் தாண்டி வன்னி மண்ணில் கால்பதித்த போது, அக உலகச் சிறையிருப்புக்கே விரும்பாத அவனுக்கு இந்தப் புறச்சிறையின் பாதிப்பு, எதை முதலில் உடைக்கவேண்டுமென நன்கு உணர்த்தியது. அப்பொழுதுதான் அவனின் மயில் உயிர்க்கும்.

திருமலைக் கடல் அன்று நீல மயிலாக மாறியிருந்தது. ஏனிப்படி உருமாற்றம் செய்து கொண்டது? அந்தக்கடல் மயிலாகப் பறந்து செல்லப்போகிறதா ?

அவன் மகனும் இன்னும் சில போராளிகளும், அலைகள் நீல வரிகள் இட்டுச் செல்ல, இரைந்து கிழித்தோடும் படகினில் பணி யொன்று முடித்துத் திரும்புகையில் அந்தக் கொலைமயில் காத்திருந் தது. அவனின் மகனுடையதும், இன்னொரு போராளியினுடையதும் உயிர்களை குடித்து எக்காளமிட்டது.

அதன் பின்பு ஒரு நாள் நீல ' வரிபோட்ட ' அவனின் மகனு டைய படம் வீட்டுக்கு வந்தபோது நீலக்கடலும், மயிலின் நிறங்களும் மறைந்து போயின.

ஒருநாள் மட்டும் கனவாய் வந்துபோயின.

விடுபட முடியா வேதனைகள் இதயத்தின் குருதிக்குழாய்களில் குண்டூசிகள் பாய்ச்சின. அவனின் நேசிப்புக்குரிய மயில்நீலநிறம், இரத்தச் சிவப்பாக மாறி மனவெளிப் பாலைவனமொன்றின் காங்கை யின் நடுவே நிறுத்தியது.

கால நகர்வின் கடுமணலில் அவன் கால்கள் பதித்துச் சென்று கொண்டிருந்தபோதுதான் அந்தசெய்தி அவனை வந்தடைந்தது. தமிழரின் கடற்பரப்பில் போராளிகளின் தாக்குதலில் உலங்குவானூர்தி வெடித்துச் சிதறியது ' என்று. அப்பொழுதுதான் அவனின் மனவெளி நீலம்பாரிக்கத் தொடங்கியது. இனி நீலமாக மாற்றம் கண்டு, மயிலின் நினைவாகவோ, அன்றி மகனின் நீல வரியின் நினைவாகவோ, அவனின் ஆத்மாவின் வேண்டுகைக்குரிய நீலமயில், அவனைச்சுற்றி விரியும் பிரபஞ்சத்தில் தோற்றம் கொள்ளும்.

இதழ் . 57
பங்குனி - வைகாசி - 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகலாத ஹேமந்த்

## வம்சக்கனவு

நிழலுள் சீவித்துக்கொண்டிருந்தது அந்தச்சந்தி. குளுமையும் ஈரலிப்பும் சுரந்து கொண்டேயிருக்கும் சந்தியில் எப்போதும் உலவும் காற்று ஒரு குழந்தை. பட்சிகளின் ஒலியும் மனிதர்களின் ஓசைகளும் சங்கீதம் போலவே என்றுமிருக்கும். இரைச்சலோ தடுமாற்றமோ அவதியோ அங்கில்லை. திருவிழா மணக்கும். பண்டிகைகளின் வர்ணங்கள் ஜொலிக்கும். தோட்டக்காரனின் குரல், கள்ளுக்காரனின் பாட்டு, பெரிய வணிகனின் தந்திரம், மூத்த கிழவனின் பரிவு, பழக்காரனின் ஆசுவாசம் எல்லாம் அங்கிருக்கும். மெதுவான இயக்கத்தில் சந்தி ரகஷ்யமாக வாழ்ந்து கொண்டிருந்தது. அது தலை முறைகள் கூடிக்கூடி விளைந்த முற்றம். கூடிய தலைமுறைகளின் பேச்சொலிகளும் பிம்பங்களும் சந்தியில் உறைந்திருக்கின்றன. தன் ரகசிய அடுக்குகளில் சந்தி அதையெல்லாம் பவுத்திரமாக்கி வைத்திருக் கிறது. சந்தியின் ரகசியக் கட்டுகளை எப்போதாவது யாராவது அவிழ்ப்பார்கள். அப்போது அந்த ரகசியங்கள் கள்ளின் வாசனையோடு அல்லது வெற்றிலையின் மணத்தோடு கண்சிமிட்டி மலரும். புதிரும் வியப்பும் சுவாரஷ்யமும் பூத்துக்கிடக்கும் கதை அது.

எனக்குச் சந்தியுடன் நட்புக்கிடைத்தது ஆச்சியின் கைவிரலினூ டாகத்தான். ஆச்சி கனவுகளின் ராணி. அவள் ஊரெல்லாம் வீசும் காற்று. ஆச்சியின் காலடிகள் பட்டுப்பட்டே பாதைகள் முளைத்திருக் கின்றன. அந்தப் பாதைகளில் என்காலடிகள் சித்திரங்களாகியிருக் கின்றன. ஆச்சியின் கனவுகளால் கோயில் முற்றம் பெருத்தது. அந்த முற்றம் ஒவ்வொரு ஆனிக்காற்றிலும் பொங்கிச்சிரிக்கிறது. ஆச்சியின் கனவுகளிலிருந்து முளைத்த தென்னைகள் ஊரின் மேலே நின்றசைகின் றன. அவள் அவற்றினூடேதான் என்னைச் சந்தைக்கு அழைத்துப் போனாள். புளியஞ்சருகுகளை மிதித்து மிதித்து அவளைப் பின் தொடர்ந்து நான் சென்றேன். தன்னுடைய கைவிரல்களை நீட்டி என்னை அதில் தொடுத்துக் கொள்ளச் சொன்னாள்.

கனவுகள் தேங்கிய விழிகளுடன் சந்தையில் ஆட்கள் நின்றார் கள். கனவுகளை விரிக்கும் மந்திரக்குரல்களில் வணிகர்கள் பேசினார் கள். அந்தக் குரல்களில் வியந்தபடி அவர்களில் மயங்கி மயங்கி நின்றேன் நான்.

அது ஒரு வியாழக்கிழமை. அவர்கள் கதைத்துக்கதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைக் கரைத்துக்கொண்டிருந்தார்கள். சிலரோ ரகஷ்யங்களைக் கடத்திக் கொண்டேயிருந்தார்கள். அந்த ரகஷ்யங்கள் விநோத உருவங் கொண்டவையாகவும் புதிர் நிறைந்தனவாகவும் இருந்தன. இப்படி எத்தனை ரகசியங்களையும் கதைகளையும் சந்தி அறிந்து வைத்திருக் குமோ! விநோதமான செய்கைகளுடன் ஒவ்வொருவரும் சந்தையில் அசைந்து கொண்டிருந்தார்கள். சொற்கள் உதிர்ந்து உதிர்ந்து ஓசை பெருகி நிறைந்தது. பெருகிவழியும் ஓசைவெள்ளத்தைக் காற்று அள்ளிக் கொண்டேயிருந்தது. ஓசைகளை இறைத்த மனிதரின் முகங்களில் சோம்பல் இழைந்தது. என்றாலும் சொற்களை உதிர்த்துக் கொண்டிருந் தன மனங்கள். சொற்கள் விரித்தன மனச்சித்திரங்களை, சித்திரங்கள் ஒளியும் வர்ணமும் பொருந்தி உறவாகவும் அன்பாகவுமே மலர்ந்தன. சில சொற்சித்திரங்கள் தீயாயும் மூண்டன. இன்னும் சில நீராய்க் கரைந்து குளுமையாய்ச் சுவறின.

பெரிய ஆலமரத்தின் நிழற்பெருக்கில், தங்கள் கதைகளைப் பரப்பிக்கொண்டே பண்டங்களை விற்றுக் கொண்டிருந்தார்கள் ஆட்கள். ஊரில் விளைந்த மனிதரும் வேற்றூர் ஆட்களுமாக அவர்களிருந்தார்கள். நான் புதிர்களைச் சுமந்தபடி ஆச்சியின் கைவிரலில் தொடர்ந்தேன்.

எல்லோருடைய இதயத்தையும் கொள்ளையடித்தபடி ஒருவன் இருந்தான். பூக்களாலும் வேறு வர்ணங்களாலும் ஆன எல்லோருடைய கனவுகளையும் சேர்த்து வைத்திருந்ததுபோல அவன் தன் முன்னால் அவற்றைப் பரப்பி வைத்திருந்தான். சந்திக்கு வரும் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் மாயவித்தைக்காரன் அவன்தான். என் வியப்புகள் அவனைச் சுற்றி சுழன்றன. அவை பெரும் புதிர்வனமாய் என்னுள் வேரோடி வளர்ந்தன.

சந்திக்கு வரும் எவருமே கனவுகளின் வணிகனை காணாமல் போக முடியாது. எல்லோருடைய மர்மங்களையும் அவன்தான் காப்பாற்றுகிறான் என்றும் நினைத்தேன். எல்லா மனங்களிலும் அவன் சித்திரமிருக்கும் என்றும் எண்ணிக்கொண்டேன். பருத்தியாலும் பட்டாலும் நெய்யப்பட்ட கனவுகளின் பிம்பங்களாக குவிந்து கிடந்தன அவன் முன்னே ஆயிரம் காத துகில். மனதைப் பறிகொடுத்தவர்கள், மாற்றுவழியின்றித் தடுமாறினார்கள். கோபியர்கிருஷ்ண லீலைக்காரன் நாக்கு என்ன தைலம் பூசியதோ அவன் வார்த்தைகளுக்கு அத்தனை மகிமைபோல எல்லோரும் ஏதாவது வாங்கித்தான் சென்றார்கள்.

சுழற்காற்றில் சருகுகள் பறந்து சந்தையில் வீழ்ந்தன. காலத்தில் உதிர்ந்த சருகையெல்லாம் சந்தி கூட்டிக்கூட்டி அப்புறப்படுத்தி யிருந்தது. துலங்கிய முற்றத்தில் புதிய முகங்கள் கூடிக்கூடி ஆயிரமாய் பேசிச்சிரித்தன. சந்தியின் முகமோ தலைமுறைகளின் வரவுகளாலும் உறவுகளாலும் புதிது புதிதாகப் பொலிந்தது. விருட்சங்கள் சடைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருத்திருந்தன. பட்சிகளின் ரீங்காரிப்பில் ஆழ்ந்திருக்கும் சந்தியில் மனிதர்கள் இயல்போடு வந்து , கூடி, பேசிக் சென்றனர். அது தலை முறைகளோடு வாழ்ந்து கொண்டிருந்தது.

நிழலூற்றிய மரங்களின் கீழசைந்தன வெண்டயங்கள். வெண்டய ஒலியில் எருதுகள் தூங்கின. எருதுகளை அவிழ்த்து நிறுத்திய வண்டில்கள் சுமையிறக்கி இளைப்பாறிக்கொண்டிருந்தன. பட்சிகளின் சுவடுகளை வண்டில்கள் போதையுடன் சுமந்து கொண்டன. அந்தச் சுவடுகள் பெருகிப் பெருகி வண்டில்களில் புதுச்சித்திரங்களாகின.

சந்தையில் மீன்காரக்கிழவி கடலின் வாசனையோடு நிழலில் இருந்தாள். அவள் எங்கள் வீட்டுக்கு வரும் பின்னேரங்களில் கடலின் வாசனையையும் சந்தையின் மணத்தையும் கொண்டு வரும் ரகசியத்தைக் கண்டு கொண்டேன். கடலோடிகள் பலர் அங்கே வந்திருந்தாலும் சந்தையிலிருக்கும் ஒரே கடல்ராணி அவள்தான். ஆச்சியின் கையி லிருந்து அதிர்ஷ்டம் பிறப்பதாக கடல் ராணி சொல்வாள். பின்னேரங் களில், வடக்கு வீட்டின் முன் மாமர நிழலின் கீழுறங்கிய முற்றத்தில் கடல்ராணி அதிசயங்களையும் புதிர்களையும் அவிழ்த்து கடலை எங்களில் நிரப்புவாள். சமயங்களில், இரவுகளில் அவள் இந்த முற்றத் தில் உறங்குவதுமுண்டு , நிழல், கடல்ராணியை ஆசிர்வதிக்கும். நிலவு அவளோடிருக்கும்.

கடல்ராணி, கடற்தேவதைகளின் லீலைகளில் எங்களைச் சிக்க வைப்பாள். கடலின் நீலத்தையும் வானின் நீலத்தையும் கடற்தேவதை கள் களைப்பின்றிக் கரைத்துக் கொண்டேயிருக்கின்றன என்பாள். மழைக்காலங்களில் கடற்தேவதைகள் மின்னலாகச் சிரிக்கின்றன. ராட்சதர்கள் இடியாகக் கத்தி கடற்தேவதைகளை மிரட்டுகிறார்கள். ஆனால், கடற்தேவதைகளோ, பளீரிடும் ஒளியாலான மின்னலால் ராட் சதர்களை குருடாக்கி விடுகின்றன என்பாள்.

ஆச்சி, மீன்காரக்கிழவியின் சாகஸங்களுக்கு ஈடாக வெற்றிலைச் செல்லத்திலிருந்து ஓராயிரம் காலங்களை விரித்து காட்சி களைப் பெருக்குவாள். புதிரும் சுவாரஷ்யமும் வியப்பும்கூட்டும் காட்சிகள், கால ரூபமாய் விரிந்தபடியே இருக்கும். கடற்தேவதை களும், ஆச்சியின் வனத்தேவதைகளும் ஒரே குலம் போலிருக்கும். வேட்டைக்குப் போன தாத்தாவை வழிமாற்றி அழைத்துப்போன தேவதைகள் அவரை, ஆற்றோரத்தில் தவிக்க விட்டனவாம். பாதைகள் எல்லாவற்றையும் அழித்துவிட்டு எல்லாத் தேவதைகளும் பூக்களாய் மலர்ந்துவிட்டன. தாத்தா பூக்களைப் பறிக்க நினைத்தார். அவை யெல்லாம் காயாக மாறிக் கனிந்துவிட்டன. அவர் வனதெய்வத்தை பழிதீர்க்கும்படி கேட்டழுதார். அழகிய பறவையின் ரூபமாக வனதெய்வம் தாத்தாவுக்குச் சிறகடித்து திசைகாட்டியது. அவர் நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியெல்லாம் தேவதைகள் கண் மலர்ந்திருந்தன. நிலவு வானத்தி லிருந்து ஊறிக்கொண்டிருந்த நேரத்தில் பெருவெட்டைக்கு வந்து சேர்ந் திருந்தார் தாத்தா. பெருவெட்டையில் துர்தேவதைகளின் வாலாயம் கூடியிருந்தது. துர்தேவதைகள் நிலவை மறித்து இருளாக்கின. இருளில் தடுமாறி காட்டு வழியில் தாத்தா அலைந்தார். நிலவு மூப்படைந்தது. ஆந்தைகள் அலறி இரவு வீங்கியது. தாத்தாவின் கால்களை வனமூர்க்கம் இறுக்கியது. இரத்தம் உறைய தாத்தா நடையிழந்து விழுந்தார். மின்மினிகள் அவரின் விழிகளில் ஒளியடித்தன. விழித்தார் தாத்தா. பிறகு எப்படியோ தேவதைகள் அழைத்து வந்து ஊரில் சேர்த்தன அவரை.

தேவதைகளின் சிரிப்பு இரவில் மின்மினிகளாய் மரங்களில் மின்னுகின்றன. வனத்தில் சுரந்து வழியும் ஆறுகள் கடலின் மடியில் உறங்குகின்றன என்பாள் ஆச்சி. கடல்ராணியின் முகம் பூமரமாக அசையும்.

ஆச்சியின் கைவிரல்களினூடு அறிந்த ரகஷ்யங்களையெல்லாம் சேகரித்து வைத்திருந்தேன் நான். என் காலத்துப்புதிர்களோ விளைந்து கொண்டிருந்தன. முதுமையில் வந்து நின்றாள் ஆச்சி. அவளின் கனவுகள் இன்னும் ஒளிர்ந்து கொண்டேயிருந்தன. நான் இன்னு மின்னும் அவற்றில் மயங்கித்திளைத்தேன்.

சுவடிக் கட்டுகளில் நம் மூதாதையரின் வேர்வையெல்லாம் சேகரிக்கப்பட்டுள்ளது என்றாள் ஆச்சி. தாத்தாவின் வம்சம் பாய்ச்சிய வேர்வை ஊறிப்பரவிய பரப்பு நூறு காதமாம். நம் வீடுகளில் எரிந்த விளக்குகளின் ஒளியெல்லாம் சேர்ந்தால் சூரியன் தோற்கும் என்பாள் அவள். இன்று, எல்லாம் காடுறைந்த பூமியாகிவிட்டது. தரிசு பூக்குது ஏர்முனை மறந்த மண். பாட்டுக்குரல் அழிந்து காற்றின் தீனக்குரல் ஒலிக்கிறது. அதில் முள்பரவுகிறது ஊர் முழுக்க.

ஆச்சி காட்டிய ஏழுபனை மூலையில் எல்லைக்கல் சிரித்தது. எல்லைக்கல்லை இடம் மாற்றி குடிவைத்த சங்கதிகள் பல நிகழ்ந்திருப் பதாக ஆச்சி துக்கமுடன் சொல்வாள். அந்தச் சந்தர்ப்பங்களில் அவளின் குரல் சரித்திரத் துயரமாக ஒலிக்கும். கண்களில் கோபம் துளிர்க்கும். சுவடிக்கட்டின் குறிப்புக்களில் மாறாத பரப்பெல்லை இருப்பதே அவளுக்கு ஒரு ஆறுதல். ஆனால், சுவடிக்கட்டை எந்தக்காலம் திருடுமோ, எந்த வழி பறிக்குமோ என்ற அச்சம் அவள் மனதில் மச்ச மிட்டிருந்தது. வம்சம் சரிந்து போச்சுது. பெட்டகத்தை இரவோடு தூக்கிய கள்வர்கள், பொன்னையும் நம் வம்சத்தின் முகத்தையும் களவு கொண்டிருந்தார்கள்.

வீழ்ந்த வம்சத்தை தோளெடுத்து நிமிர்த்த ராஜகுணமுடைய ஒருவனைக் கனவுகண்டாள் ஆச்சி. அந்தக் கனவின் நாற்று என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளைக்கும் ? ஒரு சூரியத்துளிராக அது ஒளிர வேண்டும். அவள், குல தெய்வத்தை வேண்டினாள். சாபங்களால் கட்டுண்டதுபோல நம் வம்சத்தின் மேல் அது ஒளி பூக்காதிருக்கிறது. ஏன் இந்தக் கோளாறு காலம்? ஆச்சி புதிர்களால் உழன்றாள். துயரவெள்ளம் அவள் முகத்தை இருளாக்கிற்று.

என் முகத்தை ஆச்சியின் கைகள் வருடும். அவற்றில் பால் மணம் பூத்திருக்கும். தேவதைகளின் சிறகுகளை அந்த விரல்கள் தம்முள் ஒளித்து வைத்திருந்தன. பசுக்களின் வாசனையில் அவள் தோய்ந்தாள். நான் வயற்கரைகளில் இடையனானேன். ஆக்காத்தி முட்டைகளின் ருசியில் என் நாக்கு வளர்ந்தது. கடும்புப் பாலில் பச்சைப் பனை யோலை மணத்தது. குளிரோடு காலைக் கருக்கலில் பனையடிதேடி நுங்குக்கலைந்தேன். ஆச்சி ஒரு பாரம்தூக்கியாய் முன் நடந்து போவாள்.

குளக்கரையில் அவள் பாதங்கள் சித்திரந்தான். துவைகல்லில் துணி மினுக்கி மேற்கட்டில் உலர்த்துவாள். நீரில் ஊறிபாதங்கள் வெளிறும். குளத்தில் பொழுதழியும். நீர்ச்சூடு ஏறுது என்பாள் ஆச்சி. ஆச்சியின் வசை நீரைக்கலக்கும். நீர்ப்பூக்கள் அது கேட்டு முகம் கோணும். நீரலையில் மிதக்கும் ஒளியைப் பிளந்தபடி பத்துப்பன்னி ரண்டு தலைகள் நீரொழுக வெளியேறும். ஒன்று நான். உடல் காற்றில் கொடுகும், நீர்த்திவலை உருண்டு முத்தாகத்தொங்கும். காட்டுப் பழங் களை பறித்துத் தின்றபடி ஆச்சியின் முன்னே புழுதியில் நடப்போம்.

தெற்கு வீட்டில் வடக்குப்பார்த்த வாசல் திறந்தபடியே இருக்கும். ஆழ்ந்து உறங்கும் வீடு . மாடத்து விளக்கு தூங்கா தொளிரும். தூக்கத்தை துர்தேவதை கலைத்துவிட்டபோதுகளில் 'நான்' தூங்காத விளக்கு தனித்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். வடக்கு வீடு நிரம்ப நெல்மணம், நெய்மணம் தேகத்தை மினுக்கும். பசுக்களின் குரல்தான் ஊரின் மொழி என்பார்கள். சாணத்தால் மெழுகப் பட்ட வீதிகள். நிழலில் உறங்கிய வீதிகளில் எந்த வழிப்போக்கனும் களைத்ததில்லை. விருந்தில் கரையும் காகங்கள் உண்ட களைப்பில் பறக்கமறந்து கிளைகளில் உறங்கும்.

கோயில் மணியில் கற்பூரவாசனை வரும். சர்க்கரை இனிக்கும். வேப்பங்காற்றுக்குளித்த தேகங்கள் வயலில் எருதுகளோடு நடக்கும். மண்மணத்தில் பச்சைப்பயிர் கிறங்கி ஆடும்.

தாத்தாவுக்கு வேட்டையும் வெளிப்படுக்கையும். திண்ணை யில் புலி உறுமலுடன் தூங்குவார். காற்று அவரை உருட்டிப்பார்க்கும். அந்தக் கரும்பாறையில் மோதிப் பின் வாங்கி ஓடும் அது. மீசை அந்தப் பாறையில் இரண்டு கிளையாய் அசையும். தன் மீசையைத் தன் வம்சம் விட்டு வைத்த பேறு என்பார் அவர். அந்தப் புலி உறுமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா வீட்டுக்குழந்தைகள் கலைக்கும். தாத்தா நெருப்பும் துளிர்ப்பு மாக எழுந்தபடி குழந்தைகளை அள்ளுவார். பூங்கொத்தாக அப்போது அவர் மடியிருக்கும்.

பின்னேரங்களில் ஆடும் ஊஞ்சல்களை ரசிக்கும் வேலி மரங்கள். இரவில், நிலாவில் தாத்தாவின் பாடல் விண்ணில் ஏறும். தொட்டிலில் பனையோலையைத் தீர்த்தபடி உறங்கும் எருதுகள். குஞ்சு விளக்கில் கண்ணை மினுக்கியபடி புத்தகங்களைச் சூழ்ந்திருக்கும் பிள்ளைகள். பகலெல்லாம் தூங்கியபடி பன்னோலைப்பாய்கள் அசவில் கிடக்கும் , இரவு விழிப்பதற்காய் காத்துக் கொண்டு.

நெல்மணம் காற்றில் அடிக்கும். வண்டிற் கொட்டிலில் மேழிகள் மினுங்கியபடி என்னைப் பார்க்கும். நான் வயற்காரனின் பொலிவோடு மாடுகளின் பின் அலைந்திருக்கிறேன். ஆழ்வானின் பாட்டு ஞாபகங்களில் நிறைந்த செல்வம். கள்ளில் ஊறிய பாடல் களவை.

ஒருநாள், எட்டுத்திக்கிலுமிருந்தும் வெட்டுக்காயங்களுடன் வம்ச முகங்கள் ஊர் திரும்பின. தீயோடு திரவியமெல்லாம் புகையாகி வானில் படிந்தனவாம். கொள்ளைக்கரங்கள் வாயில் கைநுழைத்துக் பல்லைப்பிடுங்கினவாம். தாத்தாவுக்கு மீசை துடித்தது. அப்பாவின் கண்களில் தீ தகித்தது. அத்தையும் அக்காவும் தீப்பறவையானார்கள். அதன் பிறகு, அண்ணா ஊர்விட்டுப் போய் நாலாவது வருஷம் மழை காய்ந்து போனது. வெயில் தீய்த்த தென்னைகளின் வட்டுகளுதிர்ந்தன. குலைதாங்காத வாழைகள் மடங்கி நிலத்தில் முகம் மோதின. தேவதை கள் பரிதவித்துக்கொண்டு வெளியேறிப்போன முற்றமாகியது ஊர். அம்மன் சோபையிழந்தாள். குலதெய்வத்தை இறைஞ்சின உலர்ந்த சொற்கள். காற்றுக்கு யார் முகத்தையும் பார்க்கத் திராணியில்லை. ஒரு சேவல்ச் சத்தம் அரிதாகியது. தெருவில் தள்ளாடியபடி மயிர் உதிர்ந்த நாய்கள் ஒன்றிரண்டு நடந்தன. சலங்கைச் சத்தமில்லை. பால் மணம் தேய்ந்து போனது. பசுக்குரல் இல்லை. ஞாபகங்கள் கண்ணில் நீரை நிறைத்தன.

ஊர்விட்டு அண்ணாவின் சுவடுகளை மிதித்து இன்றும் நாலு, ஆறு என்று ஆட்கள் போனார்கள். கடல் தாண்டி, வடதிசை ஏகி பயணித்தார்கள் என்ற பேச்செழுந்தது. எல்லாம் ரகசியம். நிலவுக்குத் தெரியும் எல்லாம். ஆனால் யாருக்கும் சொல்லாது எதுவும். ஒன்றுமே தெரியாதது போல அதன் பாவனை. நட்சத்திரங்களுக்கும் தெரியும் எல்லாமும். அவைகூட வாய்திறக்காது. வெள்ளிகளை நம்பித்தான் பயணம் நடக்குது என்றார்கள்.

ஆச்சி வனவாசக் கதைகளைச் சொன்னாள். ஊர் விட்டுப் போனவர்களைத் தேடி வேற்றாள்கள் வந்தார்கள். வேற்றாள்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடை நாய்களைக் கலக்கியது. அவர்களின் முகங்களில் இருள் கிடந்தது. இரும்புத்துண்டாக அவர்களின் குரல் ஊர்ச்செவிகளை அறைந்தது. ஆச்சியின் சரீரம் படுக்கையில் சரிந்தது. அண்ணா வர வில்லை. ஆனால் ஆச்சியின் முகம் பூரித்தது? வம்சம் விளங்க வந்த சூரியக்கொழுந்து அண்ணா என்றாள் அவள். அதுதான் அவள் காற்றில் எழுதிய கடைசிச்சொல். அது ஒரு தீர்க்க தரிசனக்குறியே ! அண்ணா ஒரு வீரனாகவே திரிந்தான். காற்றின் உருவம்போல அவன் யாரும் காணாமல் வீசினான். எங்கும் நிறைந்திருந்தான்.

தாத்தாவின் நகங்களில் மண் மணம் சுவறிக்கிடந்தது. வடக்கு வீட்டில் வற்றிவிட்டது நெல்வாசனை. அய்யா வயற்பரணில் துவண்டு கிடந்தார். சூட்டுக்களத்தில் மாட்டு மூத்திரம் ஏந்திய பாத்திரம் மங்கிக் கிடக்கிறது. பொலிக்கொடிவற்றி வீட்டில் விளக்கு நூர்ந்த காலம் பாம்பின் முகமாய் விரிந்தது. வயற்காரன் தெருவில் கிடந்தான். வழிப் போக்கன் காணாமற் போனான். ஊரின் நிழலெல்லாம் சுடுகிறது என்றார்கள். காடேறிகள் மனிதரைச் சாய்த்து பிணங்களாய் வளர்த்தின. கடலில் ராட்சதமுகம் பெருத்திருக்குது என்று கேட்டன குரல்கள், கடல் ராணி வாடிப்போனாள். கடலோடிகள் வீட்டுக்குள் உறங்குகிறார் களாம். படகுகள் காய்ந்து கிடக்கிறன கரையெங்கும், கரைமணலில் ஒரு சுவடில்லை. வேற்றாள்களால் வீதிகள் சிதைந்தன. இரவுகளில் முள் ஏற்றினார்கள் அவர்கள். முள்ளைச் செதுக்குவதற்கு காற்றோடு போனார்கள் சிற்பிகள். சிற்பிகளைப் பற்றிய கதைகளும் கனவுகளுமே ஊரின் மொழியானது.

அம்மன் கோயிலின் முத்தத்தில் எல்லோரின் கனவுகளும் படிந்திருந்தன. சோளகம் பனைகளை உசுப்பும் . பனைகள் வானத்தில் ஆடிக்குதூகலிக்கும். உறங்கிய கனவுகள் உயிர்பெற்றெழுந்து நடன மாடும். கோயில் முற்றம் வர்ணங்களாலும் ஒலியாலும் நிரம்பும்.

அந்த முற்றத்தில் ராச்சியம் விரியும். மோகமும் தாபமும் கொண்ட ராஜாக்கள் போகிப்பதற்கு அலைவார்கள். காதலும் காமமும் சுரந்து பெருகும். மின்னும் வஸ்திரங்களோடும் கனக்கும் ஆயுதங் களோடும் ராஜாக்கள் திரிவார்கள். ராஜ்ஜிய வெறி ராஜாக்களை அலைக்கும். ராஜாக்களின் தரித்திரவான்களாக மந்திரிகள் பின் தொடர் வார்கள். சாபத்தின் நிழலாக ராஜாக்களின் காலத்தில் இருள் ஊறும். கோபமும் தடுமாற்றமும் சூழ ராஜாக்கள் வன்மத்தில் வீழ்வார்கள். மிருகங்களைப் போல வெறியும் வீம்பும் கொண்டலையும் மூர்க்கம் ராஜாக்களில் படரும். மந்திரிகள் அந்தரிப்பார்கள். ராணிகளின் ஓலக் குரல் திசையை மூடி அதிரும். போர்மணம் பரப்பி ராஜாக்கள் மோதுவார்கள். சேவகர்கள் அநாதைகளாய் திக்கற்று முழிப்பார்கள். வெறியும் மூர்க்கமும் கொண்ட மோதலில் ஆயுதங்கள் பொறிகிளப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்திரங்களின் மீது இரத்தம் வழிந்து உயிர் ஒழுகும்.

தர்மத்துக்கும் அதர்மத்துக்குமிடையில் போர்மூண்டதாக ஞானிகளும் துறவிகளும் ஒலித்தார்கள். போகம் கண்களைக் குருடாக்கி விடும் என்றது ஒரு முதியகுரல். அது காலங்களின் வாசனையோடி ருந்தது. தந்தையரை இழந்த குழந்தைகள் தேம்பியழுதன. துணையழிந்த பெண்களின் விரிந்த கூந்தலிலிருந்து ஓலக்குரல் எழுந்து காற்றை மூடியது. புதல்வரை இழந்த தாய்க்குரல்கள் பூமியைப் பிளந்தன.

சனங்கள் எல்லாவற்றையும் கண்டு திகைத்துக் கிடந்தார்கள். மனம் கரைந்து நீர் உதிர அவர்கள் பதைத்தார்கள். நான் ஒரு சரித்திரம் பாழடைந்து போவதைக் கண்டு அதிர்ந்தேன்.

அரசனை இழந்த மந்திரி அநாதையாகச் சரணடைந்தான். ஒரு சாம்ராஜ்யத்தை அழித்த துக்கம் அவன் முகத்தில் இல்லை. எந்த அவமா னமும் அவன் கண்களில் இல்லை. தன் உயிர் பற்றிய ஏக்கமே அவன் மனதை அழித்தது போலும். சனங்களின் எச்சிலில் அவன் முகம் அழுக்கடைந்தது.

வெற்றியைத் தம் வசமாக்கிய மற்றவரின் புஜங்கள் சிலிர்த்தன. நெஞ்சு விரியப்பதக்கங்கள் மின்னின. புன்னகை ஒளிர்ந்தது. கண்களில் வீரக்கிறக்கம் மிதக்க அவன் கொலுவீற்றிருந்தான். புதிய இசையொலி யில் கண்கள் மயங்கின. பெண்கள் ஆடினர். இரவோ கரைய மலர்கள் மலர்ந்து மணம் பரப்பின.

சனங்கள் அந்த இரவில் கிறங்கிக் கிடந்தார்கள். வியப்பும், துயரும், மகிழ்வும், பதற்றமும் ஆட்டிப்படைக்க அவர்கள் மூச்சுவாங் கினார்கள். ஒரு ராஜ்ஜியத்தின் கனவு அவர்களில் முளைவிட்டது.

கோயில் முற்றத்தில் காற்று மெல்லிய குளிருடன் நிலவைப் பரவியது. வானத்தில் முகிழ்த்திருக்கும் நிலவை யாரும் மனதெடுக்க வில்லை.

நான் நிலவைப்பார்த்தேன். யாவும் அறிந்த நிலவு பேசாதிருந் தது. அண்ணாவின் நினைவுகள் துளிர்த்து ஆச்சியின் கனவுகளை விரித்தன. ஆச்சியின் கனவுகள் என்னுள் நிரம்பின. வம்சத்தின் ஒரு சூரியக்கொழுந்து துளிர்த்து ஒளிர்வதை மனம் விரித்தது.

நட்சத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட வானத்தில் நிலவு உலாப் போய்க்கொண்டிருந்தது. காற்று முகம் தடவி மனதில் பரவியது. அதில் நெல்லின் மணம், சலங்கையின் ஒலி, ஆச்சியின் குரல், தாத்தா வின் சிரிப்பு, சந்தையின் ஓசை, ஆழ்வானின் பாடல், நீரின் குளுமை எல்லாம் இருந்தன.

இதழ். 62
சித்திரை - வைகாசி - 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.ம. சேந்தன்

## பெப்ரவரி - 14

மதியவேளை. காலையில் பெய்த பனிக்கு பதிலடி கொடுப்பதாய் வெயில் வெளுத்துக்கட்டியது.

மிகுதியாய் இருந்த 'மூவிங்பங்கரை' வெட்டி முடித்தபின்னர் மதிய உணவை எடுத்துக்கொண்டேன். மதிய உணவை அடுத்துக் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தி தின அறிக்கை எழுதுவதற்காக கொப்பியை எடுத்து அருகில் இருந்த மரத்தின் கீழ் அமர்ந்தபோது தான் அது என் நினைவுக்கு வந்தது.

அடடா ! இன்னும் ஐந்து நாட்கள்தான் இருக்கின்றன அந்த தினத்திற்கு. பத்து நாள்களுக்கு முன்னமே முடிவு செய்து விட்டேன் ; ஏதாவது அன்பளிப்பு கொடுப்பதென்று. ஆனால் இதுவரையில் கொடுப்பதற்கு எதுவுமே என் கைக்கு கிடைக்கவில்லை. ஏன் இப்படி முடிவெடுத்தேன்? எண்ணத்தில் முடிவெடுத்துவிட்டால் அதனை செயற்படுத்திவிடவேண்டும் என்பதின் தீவிரம் சின்ன வயதில் இருந்தே என்னுடன் ஒட்டிக் கொண்ட பழக்கம். இதனால் சிலவேளைகளில் விபரீதங்களில் சிக்கி மீண்ட அனுபவங்கள் ஏராளம். எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது. இதுதான் காதலின் மகிமையோ என எண்ணத் தோன்றுகின்றது. பயம், பதற்றம், தெளிவு, மகிழ்ச்சி என எல்லா உணர்வுகளினதும் கலவைதானோ காதல் என நினைத்துக்கொண்டு மனதைத் திடப்படுத்திக்கொண்டேன்.

எது எப்படியாயினும் ஏதாவது கொடுத்தேயாவது என்ற முடிவில் உறுதியாக இருந்தேன். ஏனெனில், என் காதல் அரும்பிய பின்னர் நான் சந்திக்கும் முதலாவது உலகக்காதலர் தினம் அல்லவா அது.

எல்லாமே நேற்று நடந்தது போல இருக்கிறது. முகம் அறிய முதல் என் காதில் விழுந்த அந்த இனிமையான குரல். நிர்வாகப் பொறுப்பாளரின் அமைதியுடன் முதன்முதல் சந்தித்தது, விருப்பத்தை தெரியப்படுத்திக்கொண்டது ; அறிக்கைப் படிவத்தில் பதிந்தது ; எதை நினைப்பது ? எதை மறப்பது ? பாசறையில் இருந்து இப்ப எதிரியை எதிர்பார்த்திருக்கும் பதுங்கு குழி வரை எதையுமே மறக்க முடியவில்லை. நினைவழியா நிகழ்ச்சிகளின் அல்லது மறக்க முடியாத சம்பவங்களின் தொகுப்பே இயக்க வாழ்க்கை என்பதாகி விட்டது.

' ஜயசிக்குறு' க்கு அகவை இரண்டாகின்றது . எனது காதலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது ஒன்றைப் பூர்த்தி செய்யப்போகின்றது. தேடல் இல்லாத வாழ்க்கையில் துடிப்பு இருக்காது என நான் எப்பவோ படித்த அந்த வரிகள் முற்றிலும் உண்மைதான். அன்புக்கான தேடல், அவலங்களுக்குள் விடுதலையைத்தேடல், துயரங்களுக்குள் மகிழ்வைத் தேடல் என வாழ்க்கையே ஒரு தேடல்தானே.

விடுதலைக்கான தேடல் முதன்மை பெற கல்விக்கான தேடலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வந்துவிட்டேன். இருப்பினும் அதனை முற்று முழுதாக விட்டுவிட முடியவில்லை.

'பொசிசன் லைனில்' இருக்கும் வேளைகளில் ஓய்வு கிடைக்கும் போது உணவுப் பொதிகள் சுற்றி வந்த ஆங்கில நாளிதழ்களைச் சேர்த்து வைத்து கைக்கடக்கமான ஆங்கில அகராதியின் உதவியுடன் ஆங்கிலம் படித்து வந்தேன். இப்போதெல்லாம் உணவு பழுதடையாமல் இருப்பதற்காக 'சொப்பிங்' பைகளில் வருவதினால் எனது முயற்சி நின்றுவிட்டது.

காதல் எவ்வளவு இனிமையானது! பக்குவம் அடையத்தான் அதன் மகத்துவம் புரிகின்றது.

பரீட்சைக்குப் படித்த நளன் அன்னத்தை தூதுவிடும் கதையெல்லாம் பாசி படர்ந்தது போல மனதில் கிடந்து இப்போது புத்துயிர்ப்புப் பெற்று துள்ளியாடுகிறது. நானும் ஏதாவதொன்றை தூதுவிடலாமோ என குறும்புத்தனமாக நினைப்பதுண்டு. 'சேரா நம்பர் லைனில்' அவள் இருக்கின்றாள். நானோ 'சேரா ராங்கோ லைனில்' இருக்கின்றேன். வெல்லா வெளிக்கு எண்டால் மேகத்தை தூது அனுப்பலாம். அருகில் இருக்கும் அவளுக்கு என்னத்தை அனுப்புவது? வண்ணத்துப்பூச்சிகளோ வேறுதிசைகளில் பறந்துபோகின்றன.

இப்பதான் இப்படியான வினோதமான கற்பனைகள் எல்லாம் மனதில் துளிர்விடுகிறது. எனக்குள்தானே இத்தனையும் இவ்வளவு காலமும் புதையுண்டு போய்க் கிடந்திருக்கின்றன. காட்டுப்பூக்கள், மரங்கள், செடிகள், கொடிகள், வண்ணத்துப்பூச்சிகள், பற்றைக்குள் இருந்து துள்ளி ஓடும் முயல்கள் எல்லாம் என்னோடு உறவாடுவதாய்... காட்டு வாழ்க்கை எவ்வளவு இனிமையானது! சின்ன வயதில் அம்மா பயமூட்டிய காடு வேறு, இந்தக்காடு வேறு என எண்ணத்தோன்றுகின்றது. காட்டுக்கும் எனக்குமான உறவு பதினெட்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. பதினெட்டு மாதங்கள் என்ன, பதினெட்டு வருடங்கள் கூட இருந்துவிட்டுப் போய்விடலாம். கண்ணியமாக இருந்த காட்டை கயவன் கருவறுத்துக் கொண்டிருக்கின்றான் என்பதை நினைக்கையில் நரம்புகள் புடைக்கின்றன. நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான் போல அவனது காப்பரணும் அதற்குள் அவனும் இருப்பது இங்கிருந்து பார்க்கத் தெளிவாகத் தெரிகின்றது. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளுக்கு முடிவுகட்டாமலா விடப்போகின்றோம்! இவற்றையெல்லாம் நினைக்கும்போது மண் மீதான நேசிப்பு மேலும், மேலும் வலுவடைந்து கொண்டே போகின்றது. என்னயிருந்தாலும் மண்ணை நேசித்தபடியால்தான் அவளது நேசிப்புக்கிட்டியது.

இம்முறை விடுமுறையில் வீடு சென்றால் கட்டாயமாக அம்மாவுக்கு எனது காதல் விடயத்தை தெரியப்படுத்த வேண்டும். எனக்காக இந்த மண்ணில் இதுவரையும் வாழ்ந்த, இனியும் வாழப் போகும் ஒரே ஜீவன் அம்மாதானே. " போராடப்போன உனக்கேதடா காதல் " இப்படித்தான் அம்மா கேட்பாள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். மனதில் படுவதை பட்டென கேட்டுவிடும் கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் அம்மாவுக்கு. போருக்குள் காதல் தவிர்க்கப்பட முடியாது என்பதை அம்மாவுக்கு எப்படித்தான் புரிய வைக்கப் போகின்றேனோ?

வெளிநாட்டில் வசிக்கும் அண்ணா, எனக்கு அண்ணி கிடைத் திருப்பதாகவும் பேனா நண்பியாகவே முதலில் அறிமுகம் ஏற்பட்டதா கவும் கடிதம் எழுதியதும், அதற்கு கண்கள் சந்தித்து ' கைகள் கோர்த்து' எடுத்த முடிவுகள் கனவுகளில் சருகாகிப்போகும் காலத்தில் காகித வானில் மடல்கள் சஞ்சரித்து எடுத்துக்கொண்ட தீர்க்கமான முடிவினை எப்படிச் சொல்வது? அண்ணா, உனது காதலுக்கு நான் இட்ட பெயர் தான் ' புதுமைக் காதல் ' என நான் பதில் எழுதியதும் அதற்கு பதிலடி கொடுப்பதாய் அண்ணா எனது காதலுக்கு ' ஜயசிக்குறு காதல் ' என பெயர் சூட்டியதும் என எல்லாமே என் நினைவுகளில் வந்து போகின்றன.

இந்தத் தினத்திற்காக நான் அளவுக்கதிகமாக ஆரவாரப்படுவது எனக்கு ஏதோ ஒரு குற்ற உணர்வாகப்படுகின்றது. இதுதான் இளமை யின் துடிப்போ, காதலின் கிளுகிளுப்போ எதுவென்று எனக்குத் தெரிய வில்லை. ஒவ்வொரு ஆண்டும் சூழல் பாதுகாப்புத்தினம், பெற்றோர் தினம், முதியோர்தினம், சிறுவர் பாதுகாப்புத்தினம் என எத்தனையோ தினங்கள் வந்து போகின்றன. அவை அனைத்தும் எம் வாழ்வில் மறக்கப்பட முடியா தினங்கள் அல்லவா ? எனது வாழ்வோடு ஒன்றித்துப் போயிருக்கும் இந்த மரத்திற்கு நான் எந்தப் பரிசு கொடுத் தாலும் ஈடாகுமா ? நிம்மதியாக சொற்பநேரம் இளைப்பாற நிழல் தருகின்றது ; வெப்பக்காற்றை குளிர்வித்து தென்றலாக மேனியில் தடவிச் செல்லவிடுகின்றது. எனது உயிரை உருவியெடுக்க எதிரி உருவேற்றி விடும் எறிகணைச் சிதறல்களைத் தானும் தாங்கிக் கொண்டு... எனக்கும் அதற்குமான உறவு ஒரு போதும் பிரிக்கப்பட முடியாதது. வாய்விட்டுப் பேசமுடியுமென்றால் நானும் அதுவும் நிறையக் கதைத்துவிடுவோம். அது சரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசாக நிறைய பெறுமதியான பொருட்களை விதம் விதமாக கொடுக்கவேண்டும் என நான் நினைப்பது தவறல்லவா? நான் யார்? ஒரு போராளி அல்லவா ? அதிக கனவுகளும் ஆசைகளும் மனதில் வளர இடம் கொடுக்கக்கூடாது. மனம் ஒரு குரங்கு என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள். நல்ல வேளை, நிர்வாகத்தில் இருக்கும்போது தியானப்பயிற்சியும் யோகாசனப் பயிற்சியும் பெற்றதனால் மனதை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் எனது போராட்டச் செயற்பாடுகளில் காதல் நினைவுகள் குறுக்கிடாமல் ஒதுங்கியே இருந்து வருகின்றது.

என்னவளுக்கு எதைக்கொடுப்பது ? இதற்கு விடை காண்ப தென்பதே எனக்குப் பெரிய சிக்கலாகிவிட்டது. எதைக்கொடுப்பது என்பதற்கு முடிவு எடுக்க முடியாமல் தத்தளிப்பதற்கு நான் கொடுப்பது என்னவளுக்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பயன் படவேண்டும் என்பதில் நான் விடாப்பிடியாய் இருப்பதும் ஒரு காரண மாக இருக்கலாம்.

என்ன இருக்கிறது என்னிடம் கொடுப்பதற்கு? இப்போது என்னிடம் இருப்பதெல்லாம் துப்பாக்கியும் கோல்சரும், வோக்கி இடுப்புக்கோல்சர், சாக்குத்தொப்பி, பேனாவும், குறிப்புப் பொத்தக மும், இரண்டு சீருடைகள், ஒரு சாறம், ஒரு சோடி செருப்பு ஆகியன தான். இவை எதுவுமே எனக்குச் சொந்தமானவை அல்ல. துப்பாக்கியும் கோல்சரும் சகபோராளிகள் குருதி சிந்தி எதிரியின் முகாம்களில் புகுந்து எடுத்தவை. மற்றவை அனைத்தும் மக்களுடையது. பங்களிப்பாக மக்களிடம் திரட்டிய பணத்தில் இயக்கம் தந்தது. குறிப்புப்பொத்தகத் தில் எழுதப்படும் கவிதைகள், வசனங்களுக்கு மட்டுமே நான் சொந்தக் காரன்.

போதிமரத்தின் கீழிருந்து புத்தர் ஞானம் பெற்றது போல அன்பை வெளிப்படுத்த, அன்பளிப்பாகக் கொடுக்க அருகம்புல்லும் போதும் என முடிவெடுத்தவனாக மரத்தின் வேரில் தலைசாய்த்து மல்லாக்கப்படுத்தேன். அப்போது அது என் கண்ணில் பட்டது.

பெப்ரவரி. 14 - 1999

தனது காவற்கடமை முடிந்த கையுடன் நேராகச்சென்று மரத்தில் தொங்கவிடப்பட்ட நாட்காட்டியை அவதானித்து அன்றைய நாளில் அதில் உள்ள அறிவுத் துணுக்குகளை படித்து குறிப்பெடுத்துக் கொள்வதை அவள் பழக்கப்படுத்தியிருந்தாள். இன்றும் வழமை போல நாட்காட்டியைப் பார்த்தவளுக்கு உலக காதலர் தினம் என்ற தகவற் துணுக்கு நெஞ்சில் ஆயிரம் செய்திகளைச் சொல்லி நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ அப்படியென்றால் எனக்கும்...’ என்று நினைத்துக் கொண்டவளின் எதிர்பார்ப்பிற்கு விடை கிடைத்ததாய் அமைந்தது அணித் தலைவியின் அழைப்பு.

“ ஓமக்கா ” என்று அணித் தலைவி நின்ற இடத்திற்குச் சென்றவள் திரும்பி வரும்போது கடிதம் ஒன்றுடன் வந்தாள்.

அவளுக்கு ஒரே பரபரப்பாக இருந்தது. இதுவரை வந்த கடிதங்களைவிட அந்தக் கடிதம் சற்று பருமனாக இருந்தது. அவளுக்கு இனம்புரியாத மகிழ்ச்சியைத் தோற்றுவித்தது.

கடித உறையைக் கிழித்தாள். உள்ளே கடதாசியில் மாத்திரைகள் சுற்றியது போல சிறிய சரையும் கடிதமும் இருந்தன. கடிதத்தை ஆர்வத்தோடு படித்தாள்.

அன்பே !
தாய் மீதான நேசிப்பு
மண் மீதான நேசிப்பு
மரங்கள் மீதான நேசிப்பு
அண்ணா மீதான நேசிப்பு
நேசிப்பே -
எல்லாவற்றுக்கும் மூலம்
உன் மீதான நேசிப்புக்கு
உலக காதலர் தினமாகிய இன்று
நான் தரும் பரிசு
இதுதான்.

அவள் அதை இதயத்தில் ஒற்றிக்கொண்டாள்.

“ அக்கா நீங்கள் நாட்டின விதை முளைச்சிட்டுது ”

என்று ஆரவாரமாக ஓடி வந்தாள் அந்த அணியில் உள்ளவர்களில் வயதில் இளையவள். காப்பரணில் இருந்து பார்க்கக்கூடிய தூரத்திலேயே அதனை அவள் நாட்டியிருந்தாள். அவளும் ஆவலுடன் நோக்கினாள், அது முளைவிட்டு மெல்ல மெல்ல வளரத்தொடங்கியது அவளது காதலைப்போல.

இதழ். 63
ஆனி - ஆவணி - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைச்செல்வி

# முகமற்றவர்கள்

இன்றைக்கு ஏதோ ஒன்று நடக்கப்போகிறது. அப்படித்தான் அவனின் மனஉணர்வு உள்ளுக்கிருந்து சொல்லியது. அது நல்லதா கெட்டதா என்று தெரியவில்லை. எதையும் ஊகிக்க முடியவில்லை. அதைவிட பெரும் பிரச்சினைகள் வெளியே இருக்கின்றன. மனதை ஆராய நேரமில்லை. இப்போதுள்ள சூழ்நிலையில் என்ன தொழிலைச் செய்வது என்று மிகவும் தீவிரமாக அவன் யோசித்துக் கொண்டிருந் தான். இன்னும் சில நாட்கள் கடந்தால் இதே யோசனையில் விசர்கூட பிடித்து விடக்கூடும். இந்தச் சிந்தனை அவனுக்கு பெரும் கவலையைத் தந்தது.

அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒரே தொழில்தான். நினைவு தெரிந்த நாட்களிலிருந்து அவன் வயலோடுதான் வாழ்ந்து வந்திருக்கி றான். கிராமத்தின் மேற்குப் புறமாக ஊர் எல்லையில் விரிந்திருக்கும் அந்த வயல் தாண்டி அவன் சிந்தனைகள் எங்கேயும் போனதில்லை. அவனைப்பற்றி அந்த ஊருக்கே ஒரு அபிப்பிராயம் இருந்தது.

“ அந்தப் பொடியன் ஒரு அப்பிராணி. மிதிச்ச புல்லு சாகாது.”

“ அவன் சத்தம் போட்டுக் கதைச்சதை நாங்கள் கேட்டதே இல்லை. தானும் தன்ர பாடுமாய் இருப்பான். கோபம் எண்டதே அறியாத பிள்ளை ” இந்தக்கூற்றுக்கள் எல்லாம் அம்மாவின் வாயால் வீட்டில் வைத்து மறு ஒலிபரப்பு செய்யப்படும். வீட்டில் உள்ள எல்லோருமே அவனுடைய இந்த அப்பாவிக்குணத்தை நினைத்து நிறையப்பெருமைப்பட்டார்கள். அப்பா, அம்மா, தங்கைகள் என்ற வட்டத்துடனேயே அவனுடைய உலகம் அடங்கிப்போயிருந்தது.

சின்னவயதிலிருந்தே அவனுக்கு சிநேகிதர்கள் என்று யாருமே இருந்ததில்லை. யாருடனும் அதிகம் நெருக்கமாய் பழகியதில்லை. கிராமத்தின் எல்லையில் உள்ள மைதானத்தில் அவன் வயதை ஒத்தவர்கள் கால் பந்து விளையாடிக்கொண்டிருக்கையில், அவன் அந்த மாலைநேரத்தில் வயலில் நின்று கொண்டிருப்பான். நீண்டு பரந்து விரிந்து கிடந்த அந்த வயலில் அடிவானத்தில் மறையத் தொடங்கி யிருக்கும் சிவப்பு சூரியனை பார்த்துக்கொண்டிருப்பான். அப்பா வயல் வேலைகளை முடித்துக்கொண்டு ஓடுகின்ற வாய்க்கால் நீரில் கைகால் களை கழுவிக்கொண்டு வரும் வரையில் அவன் வரம்புகளில் நடந்து கொண்டிருப்பான். அந்த வயலின் ஒவ்வொரு மண்ணிலும் அவன் காலடிகள் பதிந்திருக்கிறது. விதைப்புக்காலங்களில் ஆட்கள் விதைக்கும்போது சின்னச்சின்ன வேலைகள் செய்து கொடுப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மிக இயல்பாக நெல் விசிறுவதை வியப்போடு பார்ப்பான். அந்த நெல்மணிகள் முளைத்துப் பயிராகும்போது பச்சைப்பசேலென்று படர்ந்து கிடப்பதை பார்க்கும்போது ஏற்படும் பரவசம் தணியாது.

வயல் மீது ஏற்பட்ட ஈடுபாடு அதிகமானதால் படிப்புக்கூட தூரமாய் விலகிப்போனது. வயலில் களைபிடுங்கும் காலங்களில் அவன் பாடசாலைக்குப் போவதே இல்லை. ஊரில் உள்ள ஆண்களும் பெண்களுமாக களை எடுக்க வருவார்கள். அவர்கள் வேலை செய்யும் போது கவனித்துக்கொள்ள அவனை வயலில் விட்டு அப்பா வேறு வேலை பார்க்கப்போய் விடுவார். அப்பாவுக்கு நிறைய வேலைகள் வெளியே இருக்கும். நகரத்துக்குப் போய் பூச்சி மருந்து, உரவகைகள் வாங்கி வரவேண்டும். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்க சந்தைக்கோ கடைக்கோ போக வேண்டியிருக்கும். அதனால் களை பிடுங்குபவர்கள் கதைத்து பொழுது கழிக்காமல் ஒழுங்காக வேலை செய்கிறார்களா என்று அவன்தான் கவனித்துக்கொள்ள வேண்டும்.

வாய்க்கால் தெருவின் மறுபக்கக்கரையில் நிற்கும் பொன்னுத் துரை அப்புவின் மாமரத்திலிருந்து மாங்காய்கள் பிடுங்கி வந்து காற் சட்டைக்குள் நிரப்பி வைத்துக்கொண்டு வரம்பில் அமர்ந்து ஒவ்வொன் றாக கடித்தபடி அவர்களைக் கவனிப்பான். அவர்கள் கொண்டு வந்த வானொலிப்பெட்டி வரம்பில் இருந்து பாடிக்கொண்டிருக்கும். வரம்புக்கு அந்தப்பக்க வயலில் ஆண்களும், இந்தப்பக்க வயலில் பெண்களுமாக நின்று வேலை செய்வார்கள். பாட்டுக்கும் மேலாக அவர்கள் கதைப்பதும் சிரிப்பதுமாக வேலை நடக்கும். ஊர்கதைகள் எல்லாம் அவர்கள் வாயில் அடிபட்டுக்கொண்டிருக்கும் . புற்கட்டுக் கள் வரம்பின் மீது வரிசையாய் விழும். மாலையில் அப்பா வந்து அந்தப் புற்கட்டுக்களின் வேர்ப்பகுதியை காலால் அழுத்தி வைத்துக் கொண்டு அரிவாளால் சர் சர்ரென்று அறுத்து பசளைப் பையில் அடைத்துக்கொள்வார். சைக்கிளின் பின் கரியரில் ஏற்றிக்கட்டிக் கொண்டு வீடு போவார்கள்.

செங்காரிப்பசுவும் அம்பாலிக்குட்டியும் இந்தப் புற்கட்டுக் களுக்காக வீட்டில் ஆசையோடு பார்த்துக் கொண்டிருப்பினம் . அதனால் வரம்பில் அவர்கள் போடும் புற்கட்டுக்களைக்கூட அவன் கவனமாய்ப் பார்ப்பான். “ நாங்கள் கதைக்கிறமோ, சிரிக்கிறமோ, வேலை செய்யிறமோ எண்டு பெடியன் பள்ளிக்கூடத்துக்கும் போகாமல் நிண்டு பார்த்துக் கொண்டிருக்குது. பேசாமல் வேலையைப் பாருங்கோவனப்பா ” என்று செல்லம்மா ஆச்சி சொல்லுவாள். அவள் குரலில் இருக்கும் கேலி அவன் மனதுக்குள் சுருக்கென்று பாயும், அவன் உர்ரென்று முகத்தை வைத்துக்கொண்டு பேசாமல் இருப்பான்.

செல்லம்மாக்கிழவியை இனி எங்கட காணிக்க புல்லுப்பிடுங்க வரவிடக்கூடாது என்று அப்பாட்ட சொல்லி நிற்பாட்ட வேணும் என்று மனதுக்குள் கறுவிக்கொள்வான். இதே செல்லம்மாக் கிழவிதான் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிலும் " இது ஒரு அப்பிராணிப் பேய்ப்பொடியன் " என்று சொல்லி வந்திருக்கிறாள். இந்தப் ` பேய்ப் பொடியன் ' என்ற வார்த்தை அவன் மனதை மிகவும் பாதித்தது. ஆனாலும் கிழவி மீது கோபித்துக் கொள்ள முடியவில்லை.

ஏனோ சின்னவயதிலிருந்து அவன் இந்த விதமாகத்தான் வளர்ந்து வந்திருக்கிறான். அப்பாவின் மறைவு வயலோடுள்ள அவனது பரிச்சியத்தை இன்னும் அதிகமாக்கியது. ஒரு முறை கிராமத்தின் நுழை வாயில் சந்தியில் வைத்து இராணுவத்தினரால் ஆறுபேர் சுடப்பட்டார் கள். கிராமத்தில் முதல்முதலில் கேட்ட வெடிச்சத்தங்கள் அவை.

அன்றைய நாளில் சுடப்பட்டு இறந்தவர்களில் அப்பாவும் ஒருவரானார். சரிந்து விழுந்திருந்த அப்பாவின் அருகே சைக்கிளும் பின்னால் கட்டிய யூரியா உரப்பையும் ரத்தத்தில் தோய்ந்திருந்த காட்சி இப்போதும் நினைவில் இருக்கிறது. அன்றைக்கு பதினாறு வயதில் படிப்பை அப்படியே விட்டு விட்டு வயலோடு தன் முழுநேரத்தையும் இணைத்துக்கொண்டான். பயிர்களின் ஒவ்வொரு வளர்ச்சியும் அவனது கவனிப்பில் இருந்தது. தண்ணீர் வயலுக்கு விடும் நாட்களில் இரவு பகலாக வயலோடு நின்று விடுவான். வரம்பில் நடக்கும் போது குறுக்காக வழுக்கிக்கொண்டு தண்ணீருக்குள் விழும் பாம்புக்கும் பயமில்லாது போயிற்று. வயலுக்கு மேற்குப்புறமாக மரியக்கண்டு கிழவனின் குடிசை. தண்ணீர் பாய்ச்ச வயலில் நிற்கும் இரவுகளில் அலுப்பே தெரியாது. மரியக்கண்டுக்கிழவன் நாட்டுக்கூத்துப் பாட்டுக் களை சத்தம் போட்டுப் பாடுவதை விடிய விடியக் கேட்கலாம். மண் வெட்டி பிடித்ததில் தோளில் உரம் ஏறியது. ஒவ்வொரு இலை நுனியும் அவன் பார்வையை தவிர்த்து வளரமுடியாது போயிற்று. இலை மடிந்து புழு இருந்தால் மடிச்சுக் கட்டிக்கு மொனோகொட்டபஸ் அல்லது தமறோன் அடிக்கவேணும். பங்கஸ் தாக்கத்துக்கு பாஷா போட வேணும். கதிர் வருகின்ற பருவத்தில் சந்து குத்தி நோய்க்கு புறுடான் போட வேணும். யூரியா போடும் காலம் ரீ. ரீ. எம். போடும் காலம் எல்லாம் அத்துப்படியாயிற்று. அரிவு வெட்டு, சூடடி காலங்கள் ஆனந்தமயமானவை. சூடடித்து நெல் மூட்டைகள் வீட்டில் வந்து இறங்கும். யாழ்ப்பாணம். சுண்ணாகம், நெல்லியடியிலிருந்து லொறிகள் வரிசையாய் ஊருக்குள் வரும். நெல்லுப்புறோக்கர் வீரசிங்கண்ணை ஒவ்வொரு வீட்டுக்கும் கூட்டி வந்து நெல்லுகளை ஏற்றி கொடுப்பார். கையில் காசுவரும். அன்றுதான் வீட்டில் புது வருஷப்பிறப்பு, தீபாவளி எல்லாம் கொண்டாடப்படும். சித்திராவும், தேவியும் புது உடுப்புக்கள் எடுத்துக் கொள்வதும் அப்போதுதான்.

பங்குனி, சித்திரை முடிய வைகாசியில் சிறுபோக விதைப்பு ஆரம்பமாகும். சற்றுத்தள்ளி குத்தகைக்கு காணி எடுத்து விதைப்பான். இந்த வேலைகளில் தன்னை முழுமையாய் ஈடுபடுத்திக்கொண்டதால் வெளியுலகில் ஏற்பட்ட மாற்றங்கள் அவன் மனதில் பெரிய பாதிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தவில்லை.

மிகவும் அதிகாலை நேரம். அவன் கிராமம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர்களைக் கைது செய்து போன நேரம். அவன் தண்ணீர் பாய்ச்சுவதற்காக வயலில் நின்றிருந்தான். எட்டு மணிக்கு வயலுக்கு வந்த சண்முகண்ணை - " ஊர்ப்பக்கம் போயிடாத தம்பி , ஆமிக்காரங்கள் ஊருக்குள்ள வளைச்சுக்கொண்டு நிக்கிறாங்கள். மத்தியானத்துக்குப் பிறகு தான் பார்த்துப்போ " என்றார். ' நல்ல வேளை தப்பித்தோம் ' என்று நினைத்ததில் மற்றவர்களின் நிலைமை மனதில் உறைக்கவில்லை.

இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமாய் காலம் தன் மாற்றத்தை நிகழ்த்திக்கொண்டிருந்தது. மிக அருகாமையில் இருந்த இராணுவ முகாம் அவர்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாய் மாறியது. இராணுவ நகர்வுக்கும், எறிகணை வீச்சுக்கும் அடிக்கடி ஆளாக நேர்ந்தது. ஒரு மாலை நேரம் ஊர் எல்லை மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்களுள் தேராசாவையும் இளங்கோவையும் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள். மறுநாள் மதகுக்கரையில் அவர்களின் இறந்த உடல்களைக் கண்ட ஊர் அல்லோலகல்லோலப்பட்டது. காலையில் களைபிடுங்க வயலுக்கு ஆட்கள் வரவில்லை. அவன் வயலில் நிற்பதைக்கண்ட மரியக்கண்டுக்கிழவன் " ஊரில் ரெண்டு செத்தவீடு நடக்குது. உனக்கு சனம் வேலை செய்யவாறம் எண்டதுகளே " என்ற போது அந்தக்குரலில் இருந்த எரிச்சல் அவனை மெலிதாய் சுட்டது.

கடந்து போகும் நாட்கள் அவ்வளவு மகிழ்ச்சியானதாக அமைய வில்லை. கிராமத்தில் அவலக்குரல்கள் காற்றில் கலந்து கரைந்தன. திகிலும் பதட்டமுமாய் இரவுகள் கனத்துப் போயின. செல்லம்மாக் கிழவியின் பேரனும், சண்முகண்ணையின் மகனும் இப்போதெல்லாம் வீட்டுக்கு வருவதில்லையாம். இயல்பான வாழ்வில் தழும்பல்களும் தடுமாற்றங்களும் தொடங்கி விட்டன. பார்க்கும் தூரத்தில் வானத்தி லிருந்து குத்தி இறங்கும் குண்டுவீச்சு விமானங்களின் ஓசைகள் அடி வயிற்றைக் கலக்கின.

சில சுற்றிவளைப்பு நேரங்களில் அவனும் அகப்பட நேர்ந்தது. அன்றைய ஒருநாள் மிகவும் துக்ககரமான மறக்க முடியாத தின மாகியது. மத்தியானச் சமையலுக்கு சந்தையிலிருந்து மீனும், கீரையும், பைத்தங்காயும் வாங்கப்போன போது சந்தியெல்லாம் இராணுவம் நிறைந்திருந்தது. வாங்கிக்கொண்டு அவசரமாய் வீட்டுக்கு வந்த அரை மணி நேரத்தில் கிராமத்துக்குள் இராணுவம் வந்தது. அவனது வீட்டுக் குள் வந்த ஏழு பேரும் மிகவும் கோபத்தில் இருந்தார்கள். என்ன ஏதென்று எதுவும் கேட்காமல் அவனை அறைந்தார்கள். அவன் தடுமாறி நிலத்தில் விழ காலால் உதைத்தார்கள். அம்மாவை சுவரோடு நிறுத்தி தோளில் பிடித்து உலுப்பினார்கள். சித்திராவை நாலு பேர் வளைத்து நின்று கழுத்தில் கை வைத்து உறுமினார்கள். கன்னத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி மாறி அடித்தார்கள். சித்திரா திமிறிக் கொண்டு அம்மாவிடம் ஓடிவர முனைந்தபோது தோள் பக்க சட்டையைப் பிடித்து இழுத்ததில் சட்டை கைப்பக்கம் கிழிந்து தொங்கியது. " எல்லாம் சந்திக்குப்போ, அங்கபோய் நில்லு " என்று ஒவ்வொருவரையும் தள்ளினார்கள். விக்கித்துப் போய் நின்ற சித்திராவின் கண்களில் நீர் நிறைந்தது.

" எல்லாம் நட... எல்லாம் நட... "அதட்டினார்கள்.

சித்திரா சட்டென்று கயிற்றுக்கொடியில் இருந்த துவாயை எடுத்து இரு தோளிலும் சுற்றிப் போட்டுக்கொண்டு முன்னால் நடந்தாள். அவள் முகம் சிவந்து போயிருந்தது. அம்மாவும் தேவியும் சித்திராவுடன் நடக்க அவன் தடுமாறிக்கொண்டே பின் தொடர்ந்தான். முழங்கால்களில் வலித்தது. சித்திராவின் கண்ணீர் மனதைக் கலவரப் படவைத்தது.

கிராமமே சந்தியில் - வெறும் தெருவில் அமர்ந்திருந்தது. 'பாவியள் அடிச்சுத் தள்ளிக்கொண்டு வந்திட்டாங்கள். '

பாக்கியம் மாமி புலம்பிக் கொண்டிருந்தாள். தங்களுக்கு மட்டு மில்லை. எல்லோருக்கும்தான் இந்த அவமானம் என்பது புரிந்தது.

தலைகுனிந்து அமர்ந்திருந்த சித்திராவின் தோளை அம்மா ஆதரவாக பிடித்துக்கொண்டிருந்தாள்.

" சித்திராவுக்கு ரெண்டு நாளாய் சரியான காய்ச்சல் " என்று அம்மா, பாக்கியம் மாமிக்கு சொல்லும் குரல் மெலிதாய் கேட்டது. வாகன இரைச்சலும், சப்பாத்து ஒலிகளும், அவர்களின் உறுமிய குரல் களும் அவர்களைச் சுற்றி வலம் வந்தன. எல்லோர் முகங்களிலும் திகிலும் பதட்டமும் அப்பிக் கிடந்தன. அவன் வயதை ஒத்த இளைஞர் களை சப்பாத்துக் காலால் உதைத்தார்கள். பக்கத்தில் இருந்த யோகனுக்கு வாயோரம் ரத்தம் வழிந்தது.

" இவர்கள் ஆர் எங்களை உதைய " ஆத்திரத்துடன் யோகன் முணுமுணுப்பதைக் கேட்க மனதுக்குள் கலவரம் எழுந்தது.

" என்னடா முறைக்கிறாய் "

சப்பாத்துக்கால் மறுபடி உதைய, யோகன் சத்தம் போட்டு அலறினான்.

பகல் முழுவதும் வெய்யிலுக்குள் இருத்தி வைத்துவிட்டு மாலையில் வீட்டுக்குப் போகச் சொன்னார்கள். இரவு, விளக்கு வெளிச்சத்தில் சித்திராவின் சிவந்த முகத்தில் வரிவரியாய் விரல்களின் தடங்கள் பதிந்திருப்பதைப் பார்த்தான். மனம் பாரமாய்க் கனத்தது. இரவு யாரும் சாப்பிடவில்லை சித்திராவின் விம்மல் வெகு நேரம் கேட்டுக்கொண்டிருந்தது. அவன் புரண்டு புரண்டு படுத்தான்.

" ஏதோ இந்த மட்டில விட்டிட்டுப் போயிட்டாங்கள் தானே. இன்னும் ஏன் அழவேணும். "

அவனின் வார்த்தைக்கு யாரும் பதில் தரவில்லை.

அமைதி கலைந்து கிராமம் விடிகாலையில் விழித்துக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது நாலுபேரைக் காணவில்லை என்றார்கள். அவனுக்கு ஏனோ யோகனின் நினைவு வந்தது.

நகரும் நாட்கள் இன்னும் இறுக்கமாய் மாறின.

பொருளாதாரத் தடையால் பூச்சிநாசினிகள், உரவகைகள் எதுவும் வரவில்லை, வயல் செல்வது சிரமமாயிற்று. வயல் விளைந்து தரவில்லை. கொத்துக் கொத்தாய் நெல் மணிகள் விளைந்து நின்ற காலம் போய் ஈர்க்குக்குச்சியாய் நிற்கும் நெல்மணிகளைப் பார்த்த போது வயிறு எரிந்தது. மண்ணில் சம்பாதித்த செல்வமெல்லாம் மறுபடி மண்ணுக்குள்ளேயே கரைந்து மறைந்தது.

எறிகணை வீச்சுக்கள் அதிகமாகும்போது இடம் பெயர்ந்து அயற்கிராமங்களில் போய் தற்காலிகமாய் தஞ்சடைய வேண்டிய தாயிற்று. அப்படி ஒரு தடவை சற்றுத் தூரத்தில் இருந்து விட்டு சத்தங்கள் அடங்கியதும் திரும்பி வந்தபோது குண்டு வீச்சினால் வீடு இடிந்து போய் கற்குவியலாய் கிடந்ததைத்தான் பார்க்க முடிந்தது. வாய் விட்டு அலறத்தோன்றியது. வீடு இழந்த பின்பும் அந்த இடத்தை விட்டுப் போக மனம் வரவில்லை. முன்பக்கம் திண்ணை வைத்து ஒரு குடிசை அமைத்துக்கொண்டான். சத்தங்கள் கேட்கும்போது தூரத்துக்கு போவதும் பிறகு மறுபடி கிராமத்துக்கு வருவதுமாக அமைதியில்லா மல் நாட்கள் நகர்ந்தன.

ஒரு தடவை பாரிய இராணுவ நடவடிக்கை காரணமாக நிரந் தரமான இடப்பெயர்வு ஏற்பட்டுவிட்டது. கிராமத்தை விட்டு வெகு தூரம் வந்தாகிவிட்டது. குடிசை என்றாலும் இருந்த வீடும், வாசலும், தென்னை மரங்களும், மாமரங்களும், பரந்த நெல்வயல் காணிகளும் நினைவில் வந்து ஏக்கத்தை நிரப்பின. தூரத்து முழக்கமும் வானத்து இரைச்சலும் இன்னமும் பயமுறுத்தின. பதட்டமும் பயமும் மனதில் நிரந்தரமாய் ஒட்டிக்கொண்டது. வீடு பார்த்து வர என்று கிராமத்துக்குப் போன கணபதிமாமாவும், குலசிங்கண்ணையும் இன்று வரை திரும்ப வில்லை. கஷ்ரம் தாளாமல் தங்கள் காணிகளில் தேங்காய் பிடுங்கி வரப் போன கணேசனும் மரியக்கண்டுக் கிழவனும்கூட திரும்ப வில்லை.

" போறபோக்கைப் பார்த்தால் இனி பொம்பிளையள் மட்டும் தான் ஊரில திரும்பிப் போய் இருக்கவேண்டி வரப்போகுது " என்று பாக்கியம் மாமி அம்மாவிடம் சொல்லி அழுதாள்.

தெருவுக்கு அந்தப் பக்கமாய் இடம்பெயர்ந்து போயிருந்த செல்லம்மாக்கிழவி எறிகணை வீச்சில் செத்துப்போனதாய் பாக்கியம் மாமி மூலம் அறிந்தபோது ' அய்யோ பாவம் ' என்று இரக்கமாய் இருந்தது. கிராமம் இப்போது எப்படிச் சிதறிப் போயிருக்கும் என்ற நினைவு மனதில் அடிக்கடி தீயின் வெம்மையாய் தகித்துக்கொண்டிருந் தது. இப்போதும் பொழுது படும் நேரத்தில் வயலுக்கு மேலால் வரிசையாய் வெண்ணிறக் கொக்குகள் பறக்குமா...? வயலில் பற்றைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவி வரம்பு புல்லுகளால் மூடியிருக்குமா...? செங்காரிப்பசுவும் அம்பாலிக்குட்டியும் எங்கே போயிருக்கக்கூடும்...? மறுபடி ஊர் திரும்புதல் எப்போது சாத்தியமாகும்...?

இடம் பெயர்ந்து வந்த இத்தனை நாட்களிலும் அம்மாவின் நகைகள், சித்திராவின் நகைகள் எல்லாம் விற்பனைக்குப் போயிற்று. அவன் எந்தத் தொழிலையும் ஒழுங்காகச் செய்ய முடியாமல் தடுமாறி நின்றான். போனவருடம் கரும்புத்தோட்டம் பின்பக்கம் ஒரு ஏக்கர் காணி எடுத்து நெல் விதைத்தான். பெரிதாய் லாபம் வரவில்லை. சாப்பாட்டுக்கு மட்டும் நெல் இருந்தது. ஆனாலும் ஏதாவது தொழில் செய்தே தீரவேண்டும் என்ற தேவை கழுத்தைப்பிடித்து நெரித்தது. இன்றைக் கென்னவோ மனது அதிகமாகக் குழம்பிக் கொண்டிருந்தது. மிகவும் தூரத்தில் வெடி ஓசைகளின் அதிர்வுகள். மழை பெய்து நனைந்த தரை ஈரத்துக்கு அந்த அதிர்வு கொஞ்சம் கூடுதலாகவே கேட்டது.

அவன் கைகளால் முகத்தைத் தேய்த்துக் கொண்டே எழுந்து முற்றத்தில் இறங்கினான். இன்றைக்கு ஏதோ ஒன்று நடக்கத்தான் போகிறது. அவன் அம்மாவை தேடிப்பார்த்தபோது சித்திரா தட்டில் அவனது சாப்பாட்டை போட்டுக்கொண்டு வந்து கொடுத்தாள்.

இப்போதெல்லாம் சித்திராவின் முகத்தில் கலகலப்பே இல்லை. சந்தோஷத்தை துடைத்துவிட்டாற் போன்ற வெறுமை. இவளுக்கு ஒரு கல்யாணம் செய்து விடவேண்டும் என்று எவ்வளவோ முயன்றான். ஒவ்வொன்றும் ஏதோ ஒரு காரணத்தால் தட்டிப் போயிற்று. கடைசியாய் ஓரிடம் சரிவந்த போது காசுப்பிரச்சினை கொஞ்சம் பயமுறுத்தியது. முன்பு நெல்லு கொடுத்து அறிமுகமான சிவப் பிரகாசத்தாரிடம் காசு கேட்க இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிக்கு போயிருந்தான். அவர் கொடுத்த ஐம்பதாயிரத்தையும் கொண்டு வரும் போது இராணுவச் சோதனைச் சாவடியில் அவனைத் தாமதிக்க வைத்து அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டார்கள். அவன் மிரண்டுபோய் பார்வையால் கெஞ்சினான். நெஞ்சு பதறியது. ' கடவுளே... சித்திரா வின் எதிர்காலம்...? எதிர்த்து ஒரு வார்த்தை கேட்க முடியவில்லை. அவர்கள் முன்புறமாகத் தள்ளிவிட அவன் பேசாமல் நடக்க வேண்டிய தாயிற்று. காசு இல்லாமல் கல்யாணம் நின்றுவிட அவன் மிகவும் நொந்து போனான்.

அவளின் முக வெறுமை என்றோ நடந்த அவமானத்தை நினைத்து என்பதை அவனால் உணர முடிந்தது. இளவயதுக் காயம் அது. அவன் கை கழுவிவிட்டு குனிந்த தலையுடன் திண்ணையில் அமர்ந்து சாப்பிட்டான். சாப்பிட்டுவிட்டு கழுவிய தட்டை திண்ணை யில் வைத்துவிட்டு சேட்டைப் போட்டுக் கொண்டு சைக்கிளை எடுத்தான். அம்மாவிடம் சொல்லிக் கொண்டே வெளியே வந்தான்.

சேறும் சகதியுமாய் தெரு நீண்டிருந்தது. தெருக்களில் சனம் கூட்டம் கூட்டமாய் நின்றது ; நடந்தது ; சைக்கிள்களில் விரைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதோ எழுதி வைக்கப்பட்ட நியதிமாதிரி இயல்பான செயற் பாடுகள் என தலையில் என்ன எழுதியிருக்கிறதோ? ஏன் தான் மனம் இப்படி நிலை கொள்ளாமல் அலைபாய்கிறதோ...?

தன் மனதில் ஏதோ ஒரு குறை இருப்பதாகவே தோன்றியது. திடுமென ஊர் எல்லையில் இருக்கும் வயல் நினைவுக்கு வந்தது. இப்போதெல்லாம் அடிக்கடி அந்த நினைவுதான் வருகிறது. அவன் வாழ்க்கையில் எத்தனை மணி நேரங்களை அந்த வயல் ஆக்கிரமித்துக் கொண்டிருந்திருக்கும். இப்போதே இந்த நிமிடமே அந்த வயலின் வரம்புகளிடையே ஓடவேண்டும் போலிருந்தது.

சித்திராவின் சந்தோஷமிழந்த முகம் மனதுக்குள் நெருடியது. என்றோ ஒரு நாள் ஒரு கறுத்த முகத்து ஆமிக்காரன் அவள் தோள் சட்டையை இழுத்துக்கிழித்ததும் அவள் அவமானத்தில் கண்ணீர் ததும்ப நின்றதும் மனதின் ஆழத்திலிருந்து திமிறிக் கொண்டு மேலே எழுந்தது. அவனாலேயே அந்த நிமிட அவலத்தை மறக்க முடியா திருக்கும்போது அவளுக்கு எப்படி இருக்கும். நெஞ்சுப்பரப்புகளிலெல் லாம் மிகவும் ஆழமான துக்கம் பரவுவதை உணர்ந்தான்.

அவன் பிரதான வீதிதாண்டி பாலத்தில் ஏறினான். அருகே ஓடிய வாய்க்காலில் அந்த மழைநேரத்திலும் முழுகிக் கொண்டிருக்கும் சிறுவர்கள். குளிர்காற்று சிலீரென்று அறைந்தாற்போல் வீசியது. கை விரல்கள் குளிர்ந்து நடுங்கியது. கால்கள் ஒரே சீராக சைக்கிளை மிதித்தன. பாலத்தைக்கடந்து இறங்கியபோது எதிரே வந்த பெரிய 'டிரக்' வண்டி அவனை கடந்து போனது. அதில் பயணித்த போராளி களில் பின் பக்கமாய் இரும்புக்கம்பி வளைவைப்பிடித்துக்கொண்டு நின்றவனின் முகம் பளிச்சென்று பதிந்தது. அவர்கள் வயலில் வேலை செய்ய வந்த பாலன் அண்ணை - தேவகி அக்காவின் மகன் சீலன். அவனைவிட பன்னிரண்டு வயதாவது சிறியவனாய் இருப்பான். இன்றைக்கு அவனைக் கண்டதும் மனதுக்குள் ஏதோ ஒருவித உணர்வு தொற்றிக்கொண்டது. தொண்டை அடைக்க சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு மேலே சைக்கிளை மிதித்தான்.

எங்கே போவது...? யாரைப் போய்ப்பார்ப்பது? தெரிய வில்லை. இப்படியே எங்காவது ஓடிக்கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது. தெற்குப்பக்கமாக மெல்லிய அதிர்வுகள் கேட்டன. குளக் கட்டுக்கரையில் சிறிய பிள்ளையார் கோவில் தனிமையாய் இருந்தது. கம்பிக்கதவுக்குள்ளிருந்து மெலிந்த சுடர் ஒளிர்ந்தது. அந்தச் சரிவில் அவன் ஏறியபோது அந்த இரைச்சலை உணர்ந்தான். திகைத்துப் போய் நிமிர்ந்து பார்த்தபோது எதுவும் தெரியவில்லை. இரைச்சல் மட்டும் திடுமென்று அதிகமாய்க் கேட்டது.

பதட்டத்துடன் சைக்கிளைத் திருப்பி சரிவில் இறங்கமுற்பட்ட அந்த வினாடி அது நிகழ்ந்தது. ஒரு வினாடி என்ன நடந்தது என்றே அவனுக்குத் தெரியவில்லை. ரத்தத்தையும் சுண்டியிழுக்கும் வேதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் உணர்ந்தபோது மயக்கம் வந்தது. ஏதோ நடந்து விட்டது என்பது புரிந்தது. சிரமப்பட்டு கண் திறந்தபோது பதட்டத்துடன் அந்நிய முகங்கள்தான் அருகே தெரிந்தன... தன்னை யாரென்று சொல்லவும் முடியவில்லை. நடுத்தெருவில் நாயாய் கிடக்கும் அவலம் நெஞ்சின் ஆழம்வரை போய்த்தாக்கிய அந்த வினாடியில் அவன் மூச்சு தடுமாறித் தடுமாறி நின்று ஓய்ந்தது. அள்ளுப்பட்டு ஆஸ்பத்திரியில் கிடந்து பொன்னுத்துரை அப்புவினால் அடையாளம் காணப்பட்டு மறுநாள் அவன் அம்மாவிடம் வந்து சேர்ந்தான். அம்மாவும் சித்திராவும் தேவியும் அழுதகுரல் வானைமுட்டியது.

" பாவம் இது ஒரு அப்பிராணிப் பொடியன். தானும் தன்ர பாடுமாய் இருக்கும் இவனுக்கு இந்தமாதிரி ஒரு சாவு வந்துட்டுதே..."

செத்த வீட்டில் வெற்றிலை வாயுடன் யாரோ சொன்னார்கள்.

" அப்பிராணியாய் இருந்த படியாலதானே இப்பிடி ஒரு அவலச்சாவு இவனுக்கு வந்தது " என்று இன்னொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

*இதழ். 65*
*1999 , மார்கழி - தை, 2000*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோப்பை தேநீர்

அலை ஓய்ந்திருந்த போது -

காலையில் பிட்டும் கறியும். மதியம் சோறும் கறியும். இரவு பிட்டும் கறியும்.

பரவாயில்லை.

பின்னர்,

காலையில் பிட்டும் கறியும். மதியமும் இரவும் சோறும் கறியும்.

இதுவும் பரவாயில்லை.

கொஞ்ச நாளின் பின்,

மூன்று நேரமுமே சோறும் கறியும். அதுவும் எப்படியென் றால், காலையில் சோறும் கத்தரிக்காய் கறியும். மதியம் கத்தரிக்காய் கறியும் சோறும். இரவு சோறும் கத்தரிக்காய் கறியும். அதிலும் மதியமே இரவுக்குரிய உணவும் சேர்ந்து வரும்.

இன்னும் கொஞ்ச நாளின் பின் -

காலையில் கஞ்சி. மதியமும் இரவும் சோறும் கத்தரிக்காயும், கத்தரிக்காயும் சோறும்.

" கத்தரிக்காயைக் கண்டுபிடித்தவன் நாசமாய் போக ! "

" கத்தரித்தோட்டம் வைத்திருப்பவர்கள் தலையில் இடி விழ! "

என்றெல்லாம் உரத்த குரலில் சாபமிட்டவாறே ஒவ்வொரு கவளமாய் விழுங்கினோம். நாவிலுள்ள சுவை மொட்டுக்களுக்கெல் லாம் கட்டாய ஓய்வு கொடுத்தோம். உணவு விடயத்தில் ஒருவாறு பற்றற்ற நிலைக்கு வந்த நாம் ஒரு கோப்பை தேநீருடன் திருப்தியடைந் தோம். எங்கள் முழுக்கவனத்தையும் எதிர் முன்னரங்கிலுள்ள எதிரி மீதே திருப்பினோம்.

" உன்னால் தானே எங்களுக்கு இந்த நிலை. கொஞ்சம் பொறு. பகைவனே உன்னாலேயே நாம் பழைய நிலையை அடைவோம், "

என்று கறுவிக்கொண்டோம். கோப அலைகள் குமுறியெழ கடமைகளில் மூழ்கிப் போனோம்.

கத்தரிக்காயுடன் எங்கள் விருப்பத்துக்கு மாறாக கை கோர்த்துக் கொண்ட காரணத்தால் சோற்றுப் பைகள் கேட்பாரற்று தலைமேல் மரக்கிளைகளில் தொங்கின. அண்ணார்ந்து பார்த்தால் கோபம்தான் வரும். கூடவே கவலையும் வரும். இதைப்போய் எறிவதா? என்ன வென்று ? எம்மக்கள் ஒரு நேர உணவுக்கே அல்லாடிக்கொண்டிருக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இவ்வளவு சோற்றையும் வெட்டிப் புதைப்பதா?

மனம் கேட்கவில்லை. (மனம் மட்டும் என்ன? வயிறும் கேட்கவில்லை) அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருக்கையிலேயே புதிய சிந்தனை பளிச்சிட்டது (சேர் ஐசக் நியூட்டனும் இப்படித் தானாமே. ஆப்பிள் மரத்தை அண்ணார்ந்து பார்த்துத்தான் பின் புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்தாராமே. நாங்களும் அப்படித்தான்.)

சிந்தனை வந்தால் பிறகென்ன, செயலாற்றவேண்டியது தானே. பரபரவென இயங்கினோம். காப்பரணைப் பலப்படுத்துவதற்கெனத் தரப்பட்டிருந்த உரப்பைகளுள் நல்லதாக ஒன்றை எடுத்துக் கழுவி உதறி வெயில் படக்கூடிய இடமாகப் பார்த்து விரித்து, அதன்மேல் சோற்றுப் பருக்கைகளைப் பரவிக் காயவிட்டு மீண்டும் அரிசியாக்கி னோம். தேநீர் சுடவைக்கும் அலுமினியப் பாத்திரத்தில் அதைக் கொட்டிக் கிளறி சூடேற்றி, அடுப்பிலிருந்து இறக்கி, அந்தப் பாத்திரத் தில் வைத்தே இடித்துப் பொடியாக்கினேன். வெகு அபூர்வமாக வந்த பிட்டையும்கூட காயவைத்து வறுத்தோம்.

அதில் ஒரு பிடி அள்ளி வாயில் போட்டால் நறுக்முறுக் என்ற ஒலியுடன் தேவாமிர்தமாக வாயிலே கரையும். இப்போதும் மாலை நேரத்துக்குரிய A - 1 சிற்றுண்டி தயார். (மாலை நேரச்சிற்றுண்டியா? மண்ணாங்கட்டி. பசித்தபொழுதெல்லாம் ஒரு கோப்பை தேநீருடன் ஒருபிடி மாவே வயிற்றை நிறைக்கும்).

கைதவறிக்கூட ஒரு சோற்றைக் கீழே போடமாட்டோம். மூன்று நேரமும் எஞ்சிய சோற்றைச் சிற்றுண்டியாக்கும் திட்டம் உடன டியாகவே அனைத்துக் காவலரண்களுக்கும் பரவலாக்கப்பட்டது. ஒரு கோப்பை தேநீருடன் ஒரு தட்டுப் பொரிமா தரும் பலத்தில் ஒரு மணி நேரத்துள் ஒன்றரை அடி ஆழத்தில் காப்பகழி வெட்டலாம்.

கொழும்பிலிருந்து எவர் எதைத் தடுத்தால் எங்களுக்கென்ன? எங்களை ஒருவரும் அசைக்க இயலாது என்ற நிலையை காட்டுக்குள் நாம் தோற்றுவித்தோம்.

வெளியே உணவு நெருக்கடி அதிகரிக்க, எம்கையிருப்பிலுள்ள சீனியின் அளவும் குறையத் தொடங்க, தேநீரில் சீனி கலந்து குடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. சீனியைத் தொட்டுத் தேநீர் குடிக்கத் தொடங்கி, அதிலும் நெருக்கடி ஏற்பட, கையிலிருந்த சீனியை பொரிமாவுடன் கலந்துவிட்டு, அதனோடு தொட்டு தேநீர் குடிக்கத் தொடங்கினோம். தேநீருடன் கொறிப்பதற்கான உப உணவாக செய்து வைத்திருந்த பொரிமா கடைசியில் தேநீருக்கான மூலப் பொருட்களுள் ஒன்றானது.

வீரைப் பழக்காலங்களில் வீரைப்பழப் பாணியுடனும், பாலைப்பழக் காலங்களில் பாலைப்பழப்பாணியுடனும் சிலநேரம் உலுவிந்தப் பழப்பாணியுடனும் என்று அந்த ஒரு கோப்பை தேநீரை- எங்கள் அபிமானத் தேநீரை விதம் விதமாகக் குடித்தோம்.

ஒரு கோப்பை தேநீர் தரும் மன உற்சாகத்துடன் கஞ்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்காயும் தந்த பலத்தில் கடமையில் கண்ணாயிருந்தோம்.

அருகிருந்த அரண்களைப் பொறுப்பெடுத்த எல்லைப்படை பணியினர் எம் உணவைப் பார்த்து ஏங்கிப்போயினர்.

“ என்ன பிள்ளையளே , இந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டோ இந்த மாதிரிச் சண்டை பிடிக்கிறீங்கள் ? ”

- என்று மலைத்துப்போனார்கள். சும்மா இடையிடையில், தாம் சாப்பிடுவதற்காகக் கொண்டு வந்திருந்த சொக்லேட்டுகளை எங்களுடன் பகிர்ந்துகொண்டார்கள். அவர்களுக்கு ‘ நன்றி ’ சொல்லி விட்டு அவற்றை வாங்கி காற்சட்டைப் பைகளுள் போட்டுக்கொள் வோம். ஒரு தரம், இரண்டு தரம் இப்படியே போனது.

அவர்களுக்கு எம் செய்கை ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். ஒரு முறை கேட்டே விட்டார்கள்.

“ ஏனக்கா சாப்பிடாமல் பொக்கற்றில வைக்கிறீங்கள்? நீங்கள் இதைச்சாப்பிடுங்கோ. உங்கடை ஆக்களுக்குக் கொண்டு போய் குடுக் கிறத்துக்கு நாங்கள் வேற ரொபிதாறம். ”

- என்றார்கள். எங்களுக்குச் சிரிப்பே வந்துவிட்டது.

“ நாங்கள் இந்த ரொபியோட தான் அண்ணா ரீ குடிக்கிறனாங் கள். எங்களிட்டைச் சீனி இல்லை ” என்றோம்.

“ இந்த நாலைஞ்சும் உங்களுக்கு எந்த மூலைக்குக்காணும் அக்கா ? ஒரு ரீ குடிக்க உங்களுக்கு எத்தினை ரொபி வேணும்? ” என்றவர்கள்.

“ ஒரு ரொபியில் நாலு தரம் குடிப்பம் .”

- என்ற எம் பதிலில் அரண்டு போனார்கள். இன்னமும் தாம் காணாதிருக்கும் தமது போராளிச் சகோதரி, போராளி மகள், போராளி மருமகள், பெறாமகள், மைத்துனி எல்லோருமே எல்லையில் ஏதோ ஓர் முனையில் இவர்களைப் போலத்தானே துன்பங்களுக்கு நடுவே வாழுவார்கள் என்ற நினைப்பு அவர்களை உலுக்கிவிட்டிருக்க வேண்டும். தம்மோடு கொண்டு வந்திருந்த பிஸ்கட்டுகள், தின்பண்டங் கள், இனிப்புகள் என்று எல்லாவற்றையும் எங்களிடம் தந்து -

“ நாங்கள் ஒரு கிழமையில் போற ஆக்கள்தானே , நாங்கள் வீட்டுக்குப்போயும் சாப்பிடுவம். நீங்கள் சாப்பிடுங்கோ ” என்றார்கள் ஈரமாகிய கண்களுடன்.

கொஞ்ச நாள் வெள்ளிதிசை தான். விதவிதமான தின்பண்டங் களுடன் சாயத்தண்ணீர் அமர்க்களப்பட்டது.

இப்படியாக எம்மவர்களும் எங்கள் ஒரு கோப்பை தேநீரும் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

இது அலை வீச முன்னர் நடந்த கதை.

**அ**லை நடுவே -

ஒட்டுசுட்டான். நெடுங்கோணி , கரப்பட்ட முறிப்பு, ஒலுமடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்குளம், கனகராயன்குளம் என்று தலைவனின் சிந்தனையை நடைமுறைப்படுத்தியவாறு அணிகள் நகர்ந்து கொண்டிருந்தன. எதிரி ஓடிய வழியெங்கிலும் அவனின் எச்சங்கள், பாதணிகள், மழைக்கவசங்கள், இடைப்பட்டிகள், சீஸ்ரின்கள், பொதி செய்யப்பட்ட பேரீச்சம்பழ அல்வாக்கள், அடுப்பைவிட்டு இறக்கப்படாததால் தீய்ந்து போன கறிகள், மேசையில் பீங்கான்களில் பரிமாறி வைக்கப்பட்டிருந்த உயர் மட்ட உணவு வகையறாக்கள், குளிர் சாதனப் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பச்சைக் காய்கறிகள், உரித்த கோழிகள், உயர்ரகக் குடிவகைகள், பல தரப்பட்ட சோடாக்கள்...

பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

கிளித்தட்டு மறிக்கும் பாணியில் எதிரியுடன் திசைக்கொன்றாக மோதி, விரட்டி, குறுக்கே பாய்ந்து மறித்து ,அடிக்க, எதிரி பாய்ந்து ஓட, விரட்டியவாறு எதிரியின் பின்னாலேயே ஓடியதில் எல்லோருக்கும் மேல் மூச்சு , கீழ் மூச்சு வாங்கியது. தாகத்தில் நாக்கு தொங்கிப் போயிற்று. நின்று நிதானிப்பதற்கிடையில் அவன் கண் காணாத்தூரம் ஓடி விடுவானே. விரட்டி ஓடியபோதே கிடைத்த ஓரிரு வினாடித் துளிகளில் வண்ண வண்ண நிறங்களில் இருந்த சோடாக்களைக் குடித்து, சோடாவாலேயே முகத்தையும் கழுவி, பீங்கான்களில் பரிமாறி மூடப் பட்டிருந்த விருந்தில் இரண்டு கவளத்தை அள்ளி வாயில் போட்டு, கை கழுவவும் நேரமின்றி ஓமந்தை வரை எதிரியை ஓடஓடத் துரத்தினோம்.

சண்டை ஆரம்பிப்பதற்கு முதல் நாள் காலையில்கூட கஞ்சி குடித்த புலிகள் விரட்டியதில், ஓடுவதற்குப் பத்து நிமிடங்கள் முன்பு வரை சீசும் பேரீச்சம்பழமும் பிஸ்கட்டும் இறைச்சியும் மஞ்சள் சோறும் சாப்பிட்ட சிங்கங்கள் போட்டது போட்டபடி வாகனங்களி லேறி ஓமந்தைக்கும் அப்பால் ஓடின.

*இதழ். 65*
*1999 , மார்கழி - தை , 2000*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு. மகேந்திரன்

# வரைபடங்கள் மாறுகின்றன

சிறில் ஆறுமாதங்களின் பின்னர் லீவில் வந்திருந்தான். வந்து ஆறுநாட்கள் ஆகிவிட்டன. லீவோ எடுக்க முடியாது. சென்ற வருடம் வரை கண்டி ராணுவத் தலைமையகத்தில் வேலை செய்தான். அவன் வரைபடத்துறையின் மூத்த அதிகாரி. எவ்வளவு முயன்றும் மாறுதலை மாற்றமுடியவில்லை. அனுபவசாலிகளான படம் வரைபவர்கள் தேவைப்பட்டார்கள். மனைவியை வவுனியாவுக்கு அவன் அழைத்து வரவில்லை. குவாட்டர்ஸ் வசதி எல்லாம் இருந்தனதான். அவளால் அந்த இடத்தில் வாழ முடியாது. டுனுவில வீட்டில் மணம் செய்திருந் தான். வளவுக்காரர் அவர்கள்.

அவன் படிப்பில் சுமாராக இருந்தான். நல்ல உடற்கட்டு இருந்தது. ரகர் விளையாட்டில் மிகவும் கெட்டிக்காரன். படிக்கும் போது கண்டியில் அவனது பெயர் நன்கு அடிபட்டது. ரகரில் அடித்துப்பிடித்து முன்னேற வேண்டும். எப்படியும் ஓரிருரையோ, கோலோ ரினிற்றிக் கல்லூரிக்கு வாங்கிக் கொடுத்து விடுவான். கப்ரனாக இருந்த வருடம் கொழும்பு றோயலுக்கு எதிரான போட்டியில், 24 பொயின்றில் 16 எடுத்துக் கொடுத்தான். றோயல் வெறும் 10 பொயின்றுகளே எடுத்தது. கண்டியிலுள்ள மேல்தட்டுப் பெண்களுக்கு ரகர் விளையாட்டு என்றால் கொண்டாட்டம். ஆண்மையைச் சோதிப்பது போன்றது அந்த விளை யாட்டு. வட்டப்புளுவை மைதானத்தில் மழை காலங்களில்தான் ரகர் சீசன். பெண்கள் குடைகளைப் பிடித்தபடி பார்ப்பார்கள் ; துள்ளிக் குதித்து ரசிப்பார்கள்.

ஏனோ அவனுக்கு கிரிக்கெற் ஆட்டம் வரவில்லை. சரியான பந்தை தெரிவு செய்து அடிக்கவேண்டியது. மற்றவற்றை ஓவ்ஸ்ரம்புக்கு வெளியே விட்டுவிடவேண்டும். இந்த ஆட்டம் ஏனோ அவனுக்கு சரியாக வரவில்லை. பந்து போட்டுப் பார்த்தான். பிரக்டிஸ்சின்போது இரண்டு ஓவர்கள் கொடுப்பார்கள். ஒரு பந்து கூட சில வேளைகளில் விக்கெற்றுக்கு நேரேவராமல் போய்விடும்.

ரகர் விளையாட்டுக்கான ‘ லயன் விருது ’ அவனுக்குக் கிடைத்தது. பாடசாலையின் அதி உயர் விருதுகளில் ஒன்று. அவனது அப்பா மட்டும் திருப்திப்படவில்லை. அவர் கிரிக்கெட் விளையாட்டுக் காரர். அது ‵ ஜென்ரில்மென்ற ′ விளையாட்டு என்று சொல்வார். ஆதர் சி கிளார்க்கிற்கு கிரிக்கெற் வேப்பங்காய். அவருக்கு விருப்பமில்லா விட்டாலும் கிரிக்கெற் தொடர்ந்து நடக்கிறது.

ரகர் விளையாட்டுக்களிலேயே சுவர்ணா அவனைக் கண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கொன்வென்றில் படித்தவள். ' நெற்போல் ' கப்ரனாக இருந்த வள். காரில் வருவாள். பின்சீற்றில் இருப்பாள். ட்றைவர் பின்கதவைத் திறந்து விட்ட பின்தான் இறங்குவாள். பிடிவாதமாக நின்று அவனை மணம் செய்துகொண்டாள். முல்கம்பொலவாசி ஒருவன் திருமணத் தின்போது யானையில் ஏறியது அதுதான் முதல்தடவை. மிக ஈசியாக அவனை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். அவனது தோற்றமும் வளவுக்காரன் போலவே இருந்தது. ரேபில் மனர்ஸ் எல்லாம் ரினிற்றியில் படித்ததால், அவனுக்கு நன்கு தெரியும். சுவர்ணாவும் டுனுவிலவின் ஒரே மகள். இரண்டு அண்ணன்மார்கள். பெரிய கொந்த ராத்துக்காரர்கள். கண்டிக்கு வருவது அபூர்வம் . மணம் செய்யும் நோக்கமே இல்லை. கொழும்பில் தனி பங்களாக்கள். ' என்ஜோய் ' பண்ணுகிறார்கள். வயதும் 50 ஐ அண்மிக்கிறது. ஒரு தம்பி கண்டியில் சுற்றித்திரிகிறான். ஆங்கில இலக்கியம் படிக்கிறான்.

பிலிமத்தலாவையிலுள்ள சுவர்ணாவின் வீடு மிகப்பழையது. பெரியதும்கூட. எப்படியும் நூறு வருடங்களைத் தாண்டியது. திருமணத் தன்று அந்த வீட்டில் அப்பாவும் அம்மாவும் தடுமாறித் திரிந்ததை, அவன் கவனித்தபடியே சுவர்ணாவுடன் செற்றியிலிருந்தான். அவனது உறவினர்கள் கல்யாண விருந்தில் முள்ளுக்கரண்டி, கத்தி பாவிக்கப் படாததால் தப்பித்தார்கள். சமீபத்தில் டைட்டானிக் படம் பார்த்த போது, அதில் முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கும் அடித்தட்டுப் பிரயாணிகளுக்குமிடையே இருக்கும் வித்தியாசம் நன்கு சித்திரிக்கப் பட்டிருந்தது. படம் பார்க்கும் போது சிறிலிற்கு தனது திருமணதினம் சட்டென ஞாபகம் வந்தது. டைட்டானிக் கப்பல் உடைந்த போது இரு பகுதியினரும் ஒன்றாக கலந்து நின்றது போல, முல்கம்பொல வாசிகளும் வளவுக்காரரும் ஒரே சபையிலிருந்தனர்.

சுவர்ணாவின் வீடு சுண்ணாம்புக் கட்டடம். பலமாக ஒரு கார் மோதினாலும் வீடு பாறுண்டு வீழ்ந்து விடும். ஆனால் என்னமாகப் பூசிமெழுகி வைத்திருக்கிறார்கள். எல்லா வித புதிய கஜட்ஸ்களும் இருக்கின்றன. பத்து ஏக்கர் நிலத்தில் ஒரு புதிய அமைப்புக் கொண்ட வீட்டை அமைக்க, அவர்களது ஒரு மாத ஏலக்காய் விற்பனையே போதும். ஆனாலும் செய்ய மாட்டார்கள். தாங்கள் குறுகிய காலத்தில் வந்த பணக்காரராக்கும் எனத் தெரியாதவர்கள் நினைத்து விடுவார்கள் என சுவர்ணா அவனுக்குச் சொன்னாள். அவனுக்கு சுவர்ணாவில் விருப்பம். எல்லாவற்றையும் அலசி மூளையைக் குழப்பிக்கொள்ள அவன் விரும்புவதில்லை.

மைத்துனர்மார் கொழும்பிலிருந்து வந்தால் பெரிய விருந்துகள் நடக்கும். எல்லாம் வளவுக்கார உறவுகளுடன்தான். அவர்களின் படிப்பு அட்வான்ஸ் லெவல் அளவிலானதுதான் என்பது அவனுக்கு தெரியும். தங்கள் கொம்பனிகளில் வேலை செய்யும் தமிழ் எக்கவுண்டன்மார் பற்றி சிலாகித்துத்கொண்டே இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் சென் அந்தினிஸ் பாடசாலையில் படித்த பையனொருவன், பேராதனையில் எஞ்சினியரிங் படித்துக்கொண்டு வீக்எண்டில் கொழும்பு போய் எக்கவுண்டன் சோதனையிலும் பாஸ் பண்ணியிருப் பதாக இளையமைத்துனன் சொன்னான். எப்படித்தான் பெரிய பாட சாலையொன்றில் படித்ததால் ஏற்பட்ட பின்புலம் ஒன்று அவனுக்கு இருந்தாலும்கூட, மணம் முடித்த காலத்தில் இந்த வீட்டில் இருந்த ஒரு வித உறைந்த நிலைக்கு தன்னை இசைவாக்க மிகவும் சிரமப்பட்டான். எண்ணி எண்ணி வார்த்தைகளை வீசினார்கள். சிரமமே இல்லாத அவர்களது வாழ்க்கை. சுவர்ணாவின் பெற்றோர்கள் அப்போது இருந்தார்கள். ஐந்து பேர்களுக்கு நான்கு வேலைக்காரர்கள். நேரக் கணக்கு பார்த்துச் சாப்பிடுதல் , ரேபிள் மனர்ஸைதொடர்ந்தும் பேணுதல் . விரைவாக சிரித்துக் கதைத்து சாப்பிட முடியாத நிலை. எந்தப் பிள்ளைகளும் விளையாடாத பெரிய பூந்தோட்டம் முல்கம் பொலவில் அவன் கண்டதேயில்லை. திருமணம் பற்றி தனது தகப்பனாரிடம் அவன் சொன்ன போது " அவர்கள் வேறு, நாங்கள் வேறு, பார்த்துச் செய் " என்று அவர் சொன்னது , டைனிங் ரேபிளில் அடிக்கடி அவனுக்கு ஞாபகம் வரும்.

உணவுப் பிரச்சினை பூதாகரமாக இருந்த அந்த எழுபதுகளில், அப்போதுதான் அவன் மணம் புரிந்த புதிது. சுவாணா வீட்டில். வேலைக்காரப் பெடியன்கள் பாணில அவுஸ்திரேலியன் பட்டர் பூசி நாய்களுக்கு வீசிக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு பாண் எப்படி அபரிதமாகக் கிடைக்கிறது. எல்லோரும் கியூவில் அவதிப்படுகிறார் கள். இவர்களுக்கு காரில் பாண் வருகிறது. அக்காலத்தில் தங்கை குடும்பத்தவர்கள் மதியத்துக்கு மரவள்ளிக்கிழங்கு அல்லது பலாக்காய் அவித்து சம்பலுடன் சாப்பிடுவார்கள். காசு இல்லாமல் இது நடக்க வில்லை. பொருட்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது.

அப்போது பல்லேகல முகாமில் கடைநிலை அதிகாரியாக அவன் இருந்தான். இந்த வீட்டில் மணம் முடிக்காமல் இருந்திருந்தால், அப்படியேதான் இருந்திருப்பான். கோப்ரல் தரத்தைவிட உயர்ந்திருக்க மாட்டான். இந்த நாட்டின் எல்லா உயர் பதவிகளிலும் வளவுக்காரரின் குடும்பங்களே அனேகமாக இருக்கின்றன.

ஏனோ தெரியவில்லை இராமனாதன் பற்றிய நினைவுகளே தொடர்ந்தும் வருகின்றன.

அவனுடன் ரினிற்றியில் படித்தவன். இரண்டு தலைமுறையாக அவனது குடும்பம் கண்டியுடன் தொடர்புடையது. பாட்டன் எங்கோ எஸ்ரேற்றில் வேலை செய்தவர். தகப்பன் ஹற்றன் நஷனல் வங்கியில் மனேஜராக இருந்தவர். ' ரத்துபோக் ' பக்கமாக அவர்களுக்கு ஒரு வீடு சொந்தமாக இருந்தது. ரகரும் கிரிக்கெற்றும் ரினிற்றிக்காக விளையாடினான் . கிரிக்கெற்றில் இரண்டு வருடம் தொடர்ந்து கப்ரனாக இருந்தான். நன்றாகப் படித்தான். இருவரும் ஒன்றாகத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான பீடத்துக்கு தெரிவானார்கள். இல்லை, இராமனாதன் எஞ்சினியரிங் தான் எடுபட்டான். கணிதத்தின் ஸ்பெஷல் டிகிரி செய்ய எண்ணி விஞ்ஞான பீடத்துக்கு வந்தான். இராமனாதன் கணிதத்தில் முதலாம் வகுப்பில் பாஸ்பண்ண, அவன் சாதாரண பௌதீக விஞ்ஞான டிகிரியில் தட்டுத் தடுமாறி வெளியேறினான். ஜீ. எஸ். கியூவில் ஒரு முறை பெயில் விட்டிருந்தான்.

இராமனாதன் பேராதனையுடன் ஐக்கியமாகிவிட்டான். லண்டன் சென்று பி. எச். டி . பெற்று வந்தான். பேராதனையிலேயே காலத்தை கழித்துவிட முடிவு செய்து விட்டவன் போலிருக்கும் அவனது பேச்சு. சமீபத்தில் தமிழன் என்பதால் டீன் பதவி கிடைக்க வில்லையாம். இப்போது முடிவை மாற்றிக் கொண்டுள்ளானாம். பல்கலைக்கழகத்தில் நடந்தவைகளை இராமனாதனும் சொல்ல வில்லை. அவனும் கேட்கவில்லை. சுவர்ணாதான் கூறினாள்.

கடைசியாக லண்டன் போவதற்கு எல்லாவற்றையும் ஆயத்தம் செய்துவிட்டு அவளிடம் வந்தான். ஓடியன் தியேட்டரில் அன்ரனி குயின் நடித்த ஒமர்முக்தார் படம் பார்த்தார்கள். பலதசாப்தங்களாக நிலைத்து நிற்கும் நடிகர் அன்ரனிகுயின். அவனுக்காகத்தான் படம் பார்க்க உடன் பட்டான். இருவரும் சேர்ந்து பார்ப்பதற்கு உகந்த படம் அல்ல. தெரிந்தும் போனான். கடைசிக்காட்சியில் விடுதலை வீரர் ஒமர்முக்தார் பாவித்த கண்ணாடியை, அவர் தூக்கிலிடப்பட்டபோது அந்தச் சிறுவன் எடுத்துக் கொண்டான். சிறில் அந்தக் காட்சியில் நெகிழ்ந்தே விட்டான்.

இராமனாதன் படத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்தது. பல்கனியிலிருந்து கீழே இறங்கி வந்தபோது லைற் வெளிச் சத்தில் கண்ணீர் துளிகள் மின்னின. நல்ல வேளையாக இன்ரவலின் போது பியர் அருந்தியது உணர்வுகளை கட்டுப் படுத்தி வைத்திருந்தது. இராமனாதனுக்கு இராவேளைகளில் ஓடியன் கன்ரீனிலிருந்து நகரைப் பார்ப்பதில் அலாதி விருப்பம். நகர் பள்ளத்தில் இருந்ததால், இரவு வேளைகளில் மின் ஒளியில் மிளிரும் நகரத்தை முழுவதும் கண்ணாடி யாலேயே சுற்றி அடைக்கப்பட்டிருந்த ஸ்டூல்களில் அமர்ந்திருந்து பார்ப்பது அலாதியானது. அஸ்கிரிய கிரிக்கெற் மைதானம் மின் ஒளியில் மிளிர்ந்தது. அங்கு வரும்போதெல்லாம், கிரேக்சப்பலின் அவுஸ்திரேலிய அணியுடன் மோதிய கண்டிக் கிரிக்கெற்கோஷ்டிக்காக, தான் லில்லியின் வேப்பந்துக் கெதிராக 102 ஓட்டங்கள் பெற்றதை இராமனாதன் சொல்லாமல் விடுவதில்லை. இந்த 102 ஓட்டத்தை தனது பி. எச். டி. டிகிரியைவிட கூடுதலாக மதிப்பது போல் அந்தப் பேச்சு இருக்கும். இன்று பியரை அவசரமாக அருந்திவிட்டு, “ போய் அமருவோம் வா சிறில் ” என இன்ரவல் முடிவதற்கு முன்னரே அவசரப்படுத்தியபடி இருந்தான். இப்படியான படம் ஒன்றிற்கு வந்திருக்கக்கூடாது. ‘ நாட்டில் பாரிய பிரச்சினைகளை வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு. தொலை தூரத்தில் லிபியாவில் எப்போதோ நடந்த புரட்சியை காட்டும் படத்தை படமாளிகைகளில் காட்டி, தாம் எல்லா விதமான படங்களையும் பார்க்க அனுமதிப்பவர்கள் எனக்காட்டும் ஆட்சியாளர்கள் ' அவன் நினைத்துக்கொண்டான். ரீகலில் நடக்கும் 'கொமடி ' ப்படத்துக்குப் போயிருக்கலாம்.

இராமனாதன் அவனைத் தனது காரில் கொண்டுபோய் பிலிமத்தலாவையில் இறக்கினான். அதுவரை அவர்கள் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே பேசினர். தொடராக இருவரும் சிகரட் குடித்துக்கொண்டிருந்தனர். நாற்பது வருடத்துக்கு மேற்பட்ட ஒரு உறவில் விரிசல் ஏற்படுகிறது என அவனுக்குத் தெரிந்தது.

லண்டனில் அவன் தன்னவர்களுக்காக வேலை செய்யப் போகிறான். முன்பும் இங்கு பாதிக்கப்பட்டு போனவர்கள் பலர் அவ்விதம் நடந்து கொண்டிருக்கிறார்கள். உதவிகள் நிச்சயம் செய்வான். அவன் இராமனாதனை வீட்டுக்குள் அழைக்கவில்லை. ' குட்நைற் ' கூறி கைகுலுக்கி இருவரும் விடை பெற்றனர். அவரது கார் பேரா தனைக்கு புறப்பட்டது. சுவர்ணா " அவரை அழைத்து வந்து டின்னர் கொடுத்திருக்கலாமே " என்றாள். சிறில் எதுவும் கூறவில்லை. அவளும் அத்துடன் விட்டுவிட்டாள். முலகம்பொலவில் அவன் வீட்டில் என்றால் இது போன்ற ஒரு விஷயத்துக்கு அரைமணி நேரமாக ஒரு தர்க்கம் நடக்கும். இவர்களது நடைமுறைகளிலும் நன்மை இருக்கிறது தான். அவனுக்கு அவன் போய்ச் சேர்ந்ததே போதும் போலிருந்தது. சுவர்ணாவிடம் அவன் படம் பற்றிக் கூறவில்லை. ஒமர்முக்தாரின் கண்ணாடி பற்றிக் கூறி இருந்தாலும் அவளுக்கு ஒன்றும் விளங்காது. இராமனாதனில், அவனது படிப்பில் அவளுக்கு பெரிய மதிப்பு உள்ளது. உண்மைதான். தமிழர்கள் கெட்டிக்காரர்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது. ஆனால் அவர் களது அடிப்படை உரிமைகள் அற்றநிலை வாழ்வையும், ஒமர்முக்தார் படத்தையும் ஒப்பிட்டு விளங்க அவளால் முடியாது.

அவன் வவுனியாவுக்கு சென்றதில் இருந்து ஒவ்வொரு நாளும் இராமனாதனின் நினைவு வந்தபடியே இருக்கிறது. இது வவுனியாவில் தமிழர்கள் படும் அவஸ்தைகளை நிதமும் பார்ப்பதால் உண்டானதாக இருக்கலாம். இராமனாதனே தமிழர்களுக்கான அவனது குறியீடு. ரினிற்றியில் படித்த மற்ற தமிழர்கள் எல்லாம், சிங்களவர்கள் போலவே இருந்தனர். பலர் சிங்களப் பெண்களை கலியாணம் கட்டியும் விட்டனர். சுவர்ணாகூட இராமனாதனின் ஒழுக்கம் பற்றிய விஷயத் தில் மிகவும் உயர்ந்த இடத்தையே வைத்திருப்பவள். அவனது சிங்கள சினேகிதர்களில் பலரை அவள் குடும்ப உறவுகளாக ஏற்றுக் கொண்ட தில்லை.

இராமனாதனின் நினைவு அடிக்கடி வருவதை தவிர்க்க முடியாமலே இருக்கிறது. பல்கலைக்கழகத்தில் இருவரும் ஒன்றாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிவார்கள். ஒரே வகையான ரேஸ்ட் உடையவர்கள். விளையாட்டு வீரர்கள். ஒன்றில் மட்டும்தான் வித்தியாசம். இராமனாதனிடம் பணம் தாராளமாக இருக்கும். அத்துடன் இராமனாதன் ஒரு படப் பைத்தியம். ஒவ்வொரு நாளும் அனேகமாகப் படம் பார்ப்பான். சில வேளைகளில் தான் இருவரும் போவார்கள். பல நாட்களில் இரண்டாம் ஷோ பார்த்து விட்டு, நள்ளிரவில் கண்டியிலிருந்து புறப்படும் கொழும்பு பஸ்ஸில் வந்து மெடிக்கல் கல்லூரிச் சந்தியில் இறங்கி, இரண்டு மைல் தூரத்திலிருக்கும் கில்டா விடுதிக்கு தனியாக அந்த இருண்ட ஜாமங்களில் வந்து நிற்பான். பின் உடையை மாற்றி நடுங்கும் குளிரில் குளித்து விட்டுப்படுப்பான். தான் நித்திரை குழப்பப்பட்டதற்காக அப்போது கோபப்படுவது, சிறிலுக்கு ஞாபகம் வந்தது. அடுத்த நாள் எப்படித் தான் லெக்சருக்கு வருகிறானோ? எப்படித்தான் முதல் வகுப்பில் பாஸ் பண்ணினானோ? அவன் இப்போது திகைப்புடனேயே அவற்றை எண்ணினான்.

அவனுக்கு 'சயன்ஸ் டிகரி' இருந்ததால் இராணுவத்தில் வரை படத்துறையில் சேர்ந்தான். ஒரு வருட 'டிராப்மென்சிப்' பயிற்சியை தியத்தலாவையில் முடித்துக்கொண்டான். எப்போதும் படம் வரையும் துறையிலேயே இருந்ததால் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களுக்கு அவன் அடிக்கவுமில்லை உதைக்கவுமில்லை எவரையும் கொல்லவுமில்லை. எந்தப் போர்க்களத்துக்கும் செல்லவுமில்லை. எப்போதும் ஏதாவது ஒரு மாவட்ட இராணுவத் தலைமையகத்திலேயே வேலை பார்த்திருக்கிறான்.

அவன் அப்பா கூறியது போல் சிங்கராஜா எஸ்ரேற்றில் வேலைக்கு போயிருக்கலாம். ரினிற்றியில் கடேற் பயிற்சி பெற்றதால் வந்த உந்துதலே, அவன் இராணுவத்தில் சேருவதற்கு ஏது நிலையாக அமைந்தது. பாடசாலைக்கொஸ்ரலில் இருந்தவர்கள் எல்லாம் மாட்டிறைச்சி சாப்பிடுவார்கள். கடேற்பயிற்சி செய்யும் நாட்களில் மிகவும் களைப்பாக இருக்கும். பின்னேரம் ரகர் போட்டிகள் வேறு. வீட்டில் மாட்டிறைச்சியைத் தொடமாட்டார்கள். வீட்டுக்குத் தெரியாமல் வடு கொடபிட்டிய ரோட்டில் இருக்கும் தாஜ்மகால் ஹோட்டலில் இருவரும் மாட்டிறைச்சியும் ரொட்டியும் சாப்பிடுவார்கள். மிகப் பெரிய மாட்டிறைச்சித்துண்டை எவ்வளவு லாவகமாக ஒரு முள்ளுக் கரண்டியால் பிளேட்டில் இறுகப் பிடித்தபடி கத்தியால் சாப்பிடக்கூடிய சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அவற்றின் மேல் சோஸ் விட்டு விட்டுப் போவான் அந்த முன் பல் சொத்தையாகிப்போன அந்தப் பணியாள். அம்மாவுக்கு இறக்கும் வரை தெரியாது. சில நாட்களில் பச்சை முட்டையைக்கூட தொடமாட்டாள் அம்மா.

சிறிலிற்கு சுவர்ணாவின் குடும்பத்தவனாக மாறிவிட்டதால் புரமோஷன்கள் அடுக்கடுக்காக வந்தன. இராமனாதனுக்கு டீன் பதவி கிடைக்கவில்லை என யோசிக்கிறவன், வேறு ஒருவனுக்கு அப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று நடந்த செய்தி தெரிந்தால் இவ்வளவு யோசிப்பானா? அவன்கூட என்ன? மனைவியின் குடும்பத்தவரின் பெயரை வைத்துத்தானே, இவ்வளவு விரைவாக பதவி உயர்வுகளைப் பெற்றான். ஒரு நாள் கூட களமுனைக்குப் போகவில்லை. இப்படி யோசித்துக் கொண்டிருந்தவன் இங்கே மாகாண சபைத்தேர்தல்கள்கூட முறைகேடாகத்தானே நடைபெற்றன. முறையில்லாமல் தேர்வு பெற்றவர்கள்தானே ஆட்சி செய்கிறார்கள். எங்கும் நடக்கும் முறைகேடுகளை நினைத்து, எல்லாமே இப்படித்தான் நடக்கும் , காலத்தைக்கொண்டு போவோம் என நினைத்தான்.

25 வருட மணவாழ்க்கையின் பின், அவனும் வளவுக்காரன் போன்ற மனப்போக்கு உடையவனாகவே மாறிவிட்டான். பிலிமத்தலா வையிலிருந்து கண்டிக்குப்போகும் ரோட்டில்தான் முல்கம்பொல இருக்கிறது. என்றாலும் சந்துகள் பல நிறைந்த சிறு ரோட்டுக்களில் அவனது டீசல் ரொயாட்டா கார் போவது , அருகியேவிட்டது.

அவன் ராணுவத்தில் உயர் பதவியிலிருப்பது முல்கம்பொல வில் எல்லாருக்கும் தெரியும். அங்கு போனால் சமீபகாலமாக ராணுவத்தில் காணாமல் போனோர் பற்றி அறிந்து சொல்லச் சொல்லி, கேட்டபடியே இருப்பார்கள். அவர்களை எங்கே போய்த் தேடுவது. உண்மையைக் கூறி விட்டார்களானால், சடங்குகளைச் செய்து பிக்குகளுக்கு தானங்களையும் கொடுத்து விடுவார்கள். அவனுடன் சேர்ந்து திரிந்தவர்கள், அவனிலும் வயதில் மிகவும் குறைந்த உறவினர்ப் பையன்கள் எத்தனை பேர் போரில் இறந்து விட்டார்கள். முகக்கூச்சம் காரணமாகவும் முல்கம்பொல போவதை அவன் குறைத்துக்கொண்டான்.

அவனது தாய் தந்தையர் இருவருமே இறந்து விட்டார்கள். அவனது தங்கை முல்கம்பொல வீட்டிலிருக்கிறாள். இருவருக்கு மிடையே இடைவெளியும் அதிகரித்து விட்டது. சில வேளைகளில் ஆயிரம், இரண்டாயிரம் எனக் கொடுப்பான். தானே சென்று தருவான். தங்கை இங்கே வந்து அட்ஜஸ்ட் பண்ணத் தெரியாமல் தடுமாறுவதைக் காண அவன் விரும்புவதில்லை.

இன்று பின்னேரம் குயின்ஸ் ஹோட்டலுக்கு எப்படியும் போகவேண்டும். அதன் ஈஸ்டன் பகுதிக்குத்தான் மகள் அப்பம் சாப்பிடவேண்டும் எனக் கூறிக்கொண்டிருந்தாள். வீட்டில் இல்லாத அப்பமா? இது ஒரு சேஞ்சிற்காகத்தான். மாளிகாவுக்கு போய்விட்டு, பத்தினி ஆலயம், விஷ்ணு தேவாலயம் என அலைந்துவிட்டு, குயின்ஸ் ஹோட்டலுக்கும் சென்று வந்தால், அவனது கடமைகள் அனேகமாக தீர்ந்துவிடும்.

இனி டியூட்டிக்குப் போவது பற்றியும் சிந்திக்கவேண்டும். இரண்டு கிழமைக்குமுன் தளபதி வவுனியாவுக்கு வந்தான். தளபதியை மரியாதை இல்லாமலேயே நினைக்கவே அவனுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த அதிகாரிகளின் சந்திப்பை வைத்துப் பார்த்தால், புதிய ஒரு தாக்குதலை ஆரம்பிக்கப் போகிறான் போல் இருக்கிறது.

எந்த பக்கம் தொடங்கப் போகிறான் எனக் கூறவில்லை. பள்ள மடுச்சண்டை ஆரம்பித்த நாளுக்கு முதல் நாள் வவுனியாவுக்கு வந்து, வெற்றி எளிதானது எனத்தான் கூறினான். ஆனால் ஒரு முழங்கூட முன்னேற முடியவில்லை.

ஒரு இடத்தைப் பிடிக்கிறான். வேறொரு இடத்தில் அடி வாங்குகிறான். தான்கூட சுவர்ணா இல்லை என்றால் எப்போதோ இறந்திருக்க வேண்டும். சுவர்ணா , தளபதி , மகள் , இராமனாதன் இந்த நால்வரும் அவனது நினைவுகளில் சுழன்றபடி இருக்கின்றனர். நிறுத்த முடியவில்லை.

தளபதி இந்த முறை முல்லைத்தீவுக்கு படை எடுப்பானா? அல்லது அம்பகாமத்தினூடாக வட்டக்கச்சி போகப் போகிறானா? இவன் ஒரு இடத்தைப் பிடித்தால் அவர்கள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருப்பார்களா ? அவர்களிடம் ஆட்லறிகள் வந்தபின், சண்டையிட முடியாமல் இருப்பதாக அவனது நண்பர்கள் சொன்னார்கள். அதுவும் நல்லதுதான். சண்டை பிடிக்க முடியாமல் யுத்தத்தை முடித்து விடுவார்கள். அவனும் கண்டிக்கு வந்து விடலாம். அப்படி யுத்தம் கடைசி வரையில் நடந்தாலும்கூட அவனுக்குப் பிரச்சினை இல்லை. வவுனியா யோசப் காம்பிற்கு வடக்காக, அவனை மாற்ற மாட்டோம் என தளபதி, சுவர்ணாவுக்கு உறுதிமொழி கூறி இருக்கிறான். ரத்வத்தை மாரும், டுனுவிலமாரும் கசின்களாம்.

தனக்கு தனிப்பட்ட சலுகை கிடைக்கிறது என ஒரு நிமிடம் யோசித்தவன், இப்படித்தான் எல்லாத் தொழில்களிலும் இருக்கும் எனத் தனக்குள்ளே சமாதானம் கூறிக்கொண்டான். யுத்தம் நின்று விட்டால் தமிழர்கள் துன்பப்பட மாட்டார்கள். இராமனாதனைப் பற்றி நினைக்கும் போதெல்லாம், இயல்பாகவே ஏற்படும் குற்ற உணர்வும் காலப்போக்கில் மாறிவிடும்.

இராமனாதன் லண்டன் சென்ற பின் கடிதங்கள் எழுதினான். இரண்டு கடிதங்களின் பின் கடிதங்கள் வரவில்லை. அவன் கடிதங்கள் எழுதாததால் அவன் நிறுத்தி விட்டான். யுத்தம் ( சனியன் ) முடிந்து விட்டால், இராமநாதனிடம் ஒரு முறை போய்விட்டு வரலாம். இங்கிலாந்தில் நடக்கும் சர்வதேச ரகர் போட்டிகளைப் பார்க்கலாம்.

நியூஸ்லாந்தின் ஓல்பிளாக்கின் ரசிகன் அவன். தளபதி யுத்தம் பல செய்து எதனைச்சாதித்தான். இடங்களை துவம்சம் செய்து அழித்ததுதான் மிச்சம்.

அவன் லீவில் வந்த நாளிலிருந்து, மகள் தன்னை ஒரு நாளைக் காவது பாடசாலைக்கு கொண்டு போய் விடும்படி கேட்டுக்கொண்டே இருந்தாள். இன்று இதைச் செய்வோம் என்று நினைத்தான். அவனது நாட்டின் கடிகாரங்கள் சர்வதேச சட்டங்களிலிருந்து விலகி , அரைமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் முன்னே செல்கின்றன. சூரியனை அரை மணிநேரம் முன்னதாக காலிக்கச் சொன்னால் அது நடக்குமா ? எத்தனை கஷ்டம். 7.30 மணிக்குத் தொடங்குகின்றன எனச் சொல்லும் பாடசாலைகள், உண்மையிலேயே 7 மணிக்குத் தொடங்குகின்றன. பனிப்புகார் இன்னும் கலையவில்லை.

பிலிமத்தலாவையிலிருந்து பேராதனை ரோட்டால் கண்டி வந்து, லேக்ரோட்டால் காரைச் செலுத்தினான். பிக்குகள் குளிக்கும் இடத்தில், சில மூதாட்டிகள் அவர்கள் குளிப்பதற்காக தொட்டிகளில் நீர் வார்த்துக் கொண்டிருந்தனர். மல்வத்தைப் பீடத்தைத் தாண்டி கார் சென்றது. சென்ற தடவை சிறில் கண்டிக்கு வந்தபோது, தளபதி அவர்களது வீட்டுக்கு வந்திருந்தான். வீட்டைச்சுற்றி அவர்களது மெய்க்காப்பாளர்கள் ‘ அலற் ’ றாக நின்றிருந்தனர். எத்தனையோ காலமாக சுவர்ணா வேண்டிக் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே, அன்று வீட்டுக்கு விஜயம் செய்திருந்தான். வீட்டைச்சுற்றிப் பார்த்தான் தளபதி. தனது இளமைக்காலத்தில் அங்கு வந்து சுவர்ணாவின் அண்ணன்மாருடன் விளையாடுவானாம். கூறினான். சுவர்ணாவின் பாட்டன் பாட்டிமார்களின் புகைப்படங்கள் ( கண்டிய உடைகளிலேயே) இருந்ததை கண்ணுற்றவன், பழைய காலக்குலப் பெருமைகளைப் பற்றிப் பேசினான். சுவர்ணாவும் குரலில் பெருமை தென்பட கதைத்தாள். சிறில் என்ற ஒருவன் (முல்கம்பொலவாசி ) இருக்கிறான் என்பதை இருவரும் மறந்தே விட்டிருந்தனர். மகள் அந்தக் கதைகளில் கலக்கவில்லையாயினும், இவைகளைக் கேட்டு அவளது முகத்தில் தெரிந்த பெருமிதம் அவளும் அவர்கள் போலவே ஆகிவிடுவாள் என்பதை கூறிற்று.

சுவர்ணா சாப்பாட்டின் பின் சிறிலின் மாறுதல் பற்றியும் அவன் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்திருப்பது பற்றியும் பேசினாள். பதவி உயர்வு பற்றி தளபதி எதுவும் கூறவில்லை. ஆனால் இரண்டு மாதத்தில் காலிக்கு மாற்றி விடுவதாகக் கூறினார். கண்டிக்கு மாற்றினால் வீணான கதைகள்வரும் என்றார். வரப்போகும் மாறுதலுக்காக சிறில் சுவர்ணாவுக்கு மனதுக்குள் நன்றி கூறினாள். சுவர்ணாவின் உறவினர்களோ அல்லது தளபதியோ அவனை தன்னவர்களாக நினைப்பதும் இல்லை, பெரிதாக வேற்றுமை பாராட்டுவதும் இல்லை. அவனுக்கு 304 வகைச் சீட்டாட்டத்தில் ஜோக்கர் சீட்டுக்குத் தரும் அந்தஸ்தையே தந்தனர். ஜோக்கர் சீட்டும் சீட்டுக்கட்டில்தானே இருக்கிறது. மறுபக்கத்தில் அவன் முல்கம்பொலவிலிருந்தும் வெகுதூரம் வந்தும் விட்டான்.

விருந்து நடந்த அன்று, அது முடிந்ததும் தளபதி “ நான் மல்வத்தை பீடத்துக்குப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா ? ” எனக் கேட்டான். “ நேற்று அஸ்கிரியாவுக்குப் போனேன். நாளை கொழும்புக்கு போகவேண்டும். மல்வத்தைக்குப் போகாவிட்டால் பிரச்சினை ஆகிவிடும் ” என்றான். “ முதலில் அஸ்கிரியாவுக்குப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டீர்களே " என்றாள் சுவர்ணா. அவளது குரலில் ஒரு விதக்கேலி தெரிந்தது. " சென்றமுறை மல்வத்தைக்கு முதலில் போனேன் " என்றான் தளபதி. எல்லாவற்றையும் கணக்கிட்டே இவர்கள் செய்கிறார்கள். அலசுவதை உடனேயே நிறுத்திக் கொண்டான். இப்படித்தான் எல்லாமே இருக்கும். இந்த முடிவுதான் சமீபகாலமாக அவனுக்கு வருகிறது.

" வழியில் புத்தமதம் பல நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டே வருகிறது " என்றான் தளபதி. இரண்டு மகாநாயக்கர்களின் கார்களும் பழுதடைந்து வருவதாகவும், இருவருக்கும் புதிய 1,200 மொடல் டீசல் பென்ஸ்கார்களுக்கு ஓடர் கொடுத்திருப்பதாகவும் சொன்னான். 120 இலட்சம் செலவாகும் என்றான். கார்களை அவர்களுக்கு கொடுப்பதால், தான் பௌத்த சமயத்துக்கு பெரும் பங்களிப்புச் செய்த பெருமை அவனது குரலில் தெரிந்தது.

மகாநாயக்கரை தளபதியுடன் வந்த எல்லோரும் அவர்களது தலையைத் தாழ்த்தி, கால்களைத் தொட்டு வணக்கம் தெரிவித்தனர்.

" சாத்தா சத்தோ பவன்கே துதி தத்ஸ்சோ " எனக்கூறி எல்லோரையும் ஆசீர்வதித்தார் பீடாதிபதி.

அந்த மண்டபத்தில் பனை ஓலையால் செய்யப்பட்ட விசிறி மட்டுமே பழமையின் சின்னமாக இருந்தது. புத்தரின் கர்ணபரம்பரைக் கதைகள் சுவரில் சித்தரிக்கப்பட்டிருந்தன. சித்தார்த்தன் மனைவி பிள்ளையை விட்டு பிக்குவாக வெளியேறிய சுத்தோதன மன்னனின் அரண்மனையைப் போலவே, இந்தப் பர்ணசாலையும் இருந்தது. ஒன்று மட்டும் வித்தியாசம். அந்த அரண்மனையில் அழகிய ஆடலணங்குகளின் சித்திரங்கள் வரையப்பட்டிருந்திருக்கும்.

எல்லோருக்கும் தேநீர் வந்தது. பீடாதிபதி அருந்தவில்லை. இன்று, தான்சில் என்றார். அவனை யார் என தளபதியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டபின், பீடாதிபதி அரசியல் பக்கமாக பார்வையைச் செலுத்தினார். A - 9 சாலை பற்றியே அதிகம் பேசினார்கள். ரேடியோக்களில் யாழ்ப்பாணத்துக்கு சாமான் அனுப்பவும் பொது மக்களின் போக்குவரத்துக்குமாகவே பல சிரமங்களின் மத்தியிலும் பாதையை பிடிப்பதாக சொல்வதையே அவன் கேட்டு வந்திருக்கிறான். ஆனால் தளபதியும் பீடாதிபதியும் பாதையைப் பிடித்து, வெள்ளரசு மரங்களை நடுவது பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

வளவுக்காரரின் குரலுக்கும் பீடாதிபதியின் குரலுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. கரகரப்பாக இரண்டும் இருந்தன. ஒவ்வொரு சொல்லாக நிறுத்தி நிறுத்தி மிகவும் ஆறுதலாகப் பேசினார்கள். இதில் முல்கம்பொல போன்ற இடங்களின் அப்பாவிப் பொது மக்கள் கட்டுப்பட்டுக் கிடப்பது ஒன்றும் விந்தையானதல்ல.

கார் மகாமாய பெண்கள் பாடசாலையின் முன்பாக நின்றது. மகள் மிகச் சந்தோசத்துடன் கீழே இறங்கினாள். மணமாகி பத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களின் பின் பிறந்தவள். மிகவும் செல்லம். சுவர்ணா கொன் வென்றில் படித்தவள். மகளை மகாமாயாவில் படிப்பிக்கிறாள். " தனிப் பௌத்த பாடசாலையில படிப்பிக்க வேண்டும் அல்லது எமது பண் பாடுகள் இல்லாமல் போய் விடும் " என மகளை அந்தப் பாடசாலை யில் சேர்த்த போது சுவர்ணா கூறியது அவனுக்கு ஞாபகம் வந்தது. லேக்கைச் சுற்றி அவன் போகமுடியாது. மாளிகாவையின் பாதுகாப்புச் கருதி அதனை மூடி இருந்தார்கள்.

வந்த வழியாலேயே போனான். கில்பூட் பாடசாலைக்கு முன்னால் மாளிகாவை எதிர்கொண்டு லேக்கின் கரையில் அமைக்கப் பட்டிருந்த சீமெந்து இருக்கையைக் கண்டான். சுவர்ணாவுடன் காதல் வயப்பட்டிருந்த காலத்தில், அந்த இருக்கையில் மாலை நேரங்களில் இருவரும் இருப்பார்கள். சில வேளைகளில் இராமனாதனும் அவர் களுடன் உடனிருப்பான். மலைக்கு மேலே கட்டப்பட்டிருந்த காதி களின் விடுதியிலிருந்து, லதா மங்கேஸ்காரின் குரல் மெலிதாக ரேடியோவிலிருந்து கேட்கும்.

முல்கம்பொலவுக்கு கார் சென்றது. கண்டி மொடர்ன்மாக்கெற் றிலிருந்த ராஜா ஸ்ரோர்சில் 1000 ரூபாவுக்கு தின்பண்டங்கள் வாங்கி னான். சிவாஜி எம்போரியத்தில் 5000 ரூபா. தங்கையின் குடும்பத் தவர்கள் எல்லோருக்கும் துணி எடுத்தான். ஏதோ ஒரு உந்துதலால் அவ்வாறு செய்தான். நீ முல்கம் பொலவைச் சேர்ந்தவன்... சேர்ந்தவன் என்ற எண்ணம் அவனுக்கு வந்து கொண்டே இருந்தது. அவன், தளபதி, சுவர்ணா, தங்கை, மகள், முல்கம்பொல, இராமனாதன் ஆகியோரது முகங்கள் தொடர்ந்து மனத்திரையில் வந்து கொண்டேயிருந்தது. தங்கையின் வீட்டின் விறாந்தையில் மருமக்கள் இருந்தனர். கடைசிக் குழந்தை பூக்களைப் பிய்த்து பிய்த்து விறாந்தையில் போட்டுக் கொண்டிருந்தது. பக்கத்து வீட்டுக்குழந்தைகளும் அதனுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தன. மகளை சிறில் நினைத்துக் கொண்டான். அவள் யாருடனும் விளையாடுவதில்லை. அவர்களது வீட்டில் பூக்கள் பூச்சாடியில் வைப்பதற்காக, மிக நுணுக்கமாக பறிக்கப்படும். மகள் சிறியவளாக இருந்தபோது சிறிலின் தங்கையின் வீட்டுக்கு ஒரு முறை சென்று இருநாட்கள் தங்கி விட்டு வந்தாள். திரும்பி, வந்த அடுத்த நாள் தோட்டத்துப்பூக்களை எல்லாம் பறித்து பிய்த்து விளையாடிக் கொண்டிருந்தாள். நல்ல பழக்க வழக்கம் பழகி வந்திருக்கிறாய் என தாயாரிடம் அன்று அவள் திட்டு வாங்கியதிலிருந்து முன்போலவே, தோட்டத்துப்பூக்கள் மரத்தில் அப்படியே கிடந்து பின் மாலையில் வாடி உதிர்ந்தன.

பிலிமத்தலாவையை அவன் பத்து மணிக்கு வந்தடைந்தான். சுவர்ணா உடனே புறப்பட்டு விட்டாள். ட்றைவர் ஓட்ட அவள் பின் சீற்றிலிருந்தாள். வழமையாக இப்படித்தான் நடக்கிறது. மகளை ட்றைவர் பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டு போய் விட்டு வருகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் சுவர்ணாவை மாக்கெற்றிற்கு கொண்டு போய் விட வேண்டும். அவளும் காலையிலேயே மகளுடன் போய், மாக்கெற்றிங் கையும் முடித்துக்கொண்டு வரலாம். இன்றுகூட தன்னிடம் கூறி இருந்தால், மாக்கெற்றிங்கை முடித்துவிட்டு வந்திருப்பான். சுவர்ணா வின் தகப்பனார் இருந்த காலத்திலிருந்தே இந்த ட்றைவர் இப்படித் தான் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் கார் ஓட்டுகின்றான். வேலை இல்லாத நேரங்களில் குசினியடி விறாந்தையில் இருந்து கொண்டு ஆயாமாருடன் கதைத்தபடியே அல்லது சாப்பிட்டபடியே இருப்பான். அல்லது சிகரெட் குடிப்பான். அவனது மகனும் பத்தாம் வகுப்புடன் படிப்பை முடித்துவிட்டு, ட்றைவிங் பழகி வருகிறான். சிறிலின் மகளுக்கு ட்றைவராக வருவான்.

வளவுக்காரர் வீடுகளில் வேலை செய்வோர் இறக்கும் வரை அல்லது வேலை செய்ய முடியாமல் போகும் வரை அங்கிருந்து அகல்வதில்லை. ட்றைவர்மார், பெடியன்கள், ஆயர்மார் யாருமே வளவுக்காரருடன் பலமாகக் கதைப்பதில்லை. இவர்களுக்குள்ளே உள்ள அந்தரங்க உறவுகள் பற்றி எத்தனை சிங்களப்படங்கள் எடுக்கப் பட்டு சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளன.

அம்மாவும் பக்கத்து வீட்டு அன்ரியும் பிணக்குப்பட்டு கை நீட்டி எல்லாம் சண்டையிடுவார்கள். பின்னர் இரண்டு நாட்களின் பின் ஒன்றாக மாளிகாவுக்கு மலர்த்தட்டுக்களுடன் செல்வார்கள். ஆனால் அசிங்கமான கதைகள் யாருடைய குடும்பங்களிலும் அங்கு இல்லை.

அவன் அங்கு வந்து இருபத்தைந்து ஆண்டுகளில் ஒரே ஒரு முறைதான் பலமாக அந்த வளவில் சத்தங்கள் கேட்டன. சுவர்ணாவின் அம்மா அப்போது இருந்தாள். சரியான திமிர் பிடித்த கிழவி. சுவர்ணா சாதாரண வகையில் சாறி உடுத்துவதை கண்டித்தபடி இருப்பாள். கண்டிய முறைப்படி சாறி கட்டச் சொல்வாள். எங்களது பண்பாடு வெள்ளி செப்பு என்பவற்றால் ஆன நகைகளை அணிவதே என்று கூறுவாள். மலையின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த சுவர்ணாவின் வீடு அமைந்துள்ள 10 ஏக்கர் வளவு தனிமையானது. மெயின்ரோட்டி லிருந்து 500 மீற்றர் தூரத்திற்கு தனிப்பாதை தாரால் போட்டிருந்தார்கள். பள்ளத்தில் யாரோ விஷயம் தெரியாதவன், தன் குடும்பத்தவருடன் வந்து ஒரு சிறு கொட்டில் போட்டான். கிழவி டெலிபோன் பொலிசுக்குச் செய்தான். அரை மணி நேரத்தில் அங்கு வந்த பொலிஸ் காரர்கள் அந்தக் குடிசையைப் பிய்த்தெறிந்து வீட்டுச் சாமான்களை தூர வீசினர். டுனுவில குடும்பத்தில் எப்போதோ நடந்த அந்தரங்க உறவு களை ( கேட்கக் கூச்சமாக இருந்தது ) குடிசை கட்டியவனும் அவனது மனைவியும் சொல்லி ஒரு மணிநேரம் கத்திக்கொண்டே இருந்தனர். “ சுவர்ணாவிடம் இது உண்மையாக இருக்குமா ?. ” என அவன் கேட்டான். அவள் சிரித்துக்கொண்டே “ இருக்கலாம். அது எல்லாம் அந்தக் கால விஷயங்கள். நீங்கள் மூளையைப் போட்டு குழப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்கள் " என்றாள்.

சுவர்ணா மாக்கெற்றிங்கால் வந்தவுடன், சிறில் கண்டி இராணுவத்தலைமையகத்துக்குப் போனான். ஒட்டிசுட்டானில் நடந்தது அதிரடித் தாக்குதல் இல்லையாம். அன்சீசிங் - 3 எனப் பெயரிடப்பட்டு பெரிதாக நடக்கிறதாம். " இவை ஒன்றும் தெரியாமல் நீ எங்கிருந்து வருகிறாய் " என பிரியந்த கேட்டான். பல முனைகளில் தாக்குதல் நடைபெறுகின்றனவாம். எங்கள் வீரர்கள் செல்வீச்சுக்கும் தாக்குதல் களுக்கும் முகம் கொடுக்க முடியாமல் ஓடுகிறார்களாம். தகவல்கள் வந்திருக்கின்றன. பிரியந்த மேலும் சொன்னான். இது உண்மையாகத் தான் இருக்க வேண்டும். சிறில் இலேசில் உணர்ச்சி வசப்படாதவன். அத்துடன் களநிலையும் அவனும் வரைபடக்காரன் என்பதால் அவனுக்கு நன்கு தெரியும். காட்டுக்குள் அகலக்கால் வைத்திருக்கிறார் கள் என்பதை புத்திஜீவியான அவன் நன்கு உணர்ந்திருந்தான். அங்கு அவன் அன்று சந்தித்த எல்லா இராணுவத்தினரும் எங்கே தம்மை வடக்கிற்கு மாற்றிவிடுவார்களோ என்ற பயத்துடனிருந்தது தெரிந்தது. " நீ வவுனியாவுக்கு எப்போது போகிறாய் " என அவனை எதிர்பாரா மல் சந்தித்த பிரிகேடியரும் கேட்கவில்லை. இப்போதைய நிலையில் படம் வரைபவனை அங்கு யாரும் தேடமாட்டார்கள். சுவர்ணா பற்றி அந்த பிரிகேடியர் கேட்டார். அவரும் ஒரு தல்வத்தை.

இப்படி நடக்கலாம் என்பதை சென்ற வருடம் நடந்த சம்பவம் ஒன்று கட்டியம் காட்டி இருந்தது. ஒட்டிசுட்டானை படையினர் கைப் பற்றிய நாட்களில் தளபதி அந்தப்பகுதியைப் பார்க்கச் சென்றிருந்தான். அப்போது தளபதி நின்ற இடத்துக்கு ஆட்லறி செல்கள் கணக்கிட்டது போல் வந்து வீழ்ந்தன. மயிரிழையில் உயிர்தப்பி வவுனியாவுக்கு வந்து சேர்ந்தான் தளபதி. அப்போதே இப்படி ஒரு பெரிய தாக்குதலை புலிகள் நடத்துவார்கள் என சிறில் அனுமானித்திருந்தான். இது தெரி யாமல் பல திட்டங்களைத் தளபதி போடுகிறான் என அன்றே சிறில் நினைத்தான்.

நேற்று முன்தினம் கண்டிப் பொதுசன நூல்நிலையத்துக்கு சிறில் போனான். கடந்த பல வருடங்களில் அதன் அமைப்பு பெரிதும் மாறிவிட்டது. இராமனாதனும் அவனும் அங்கு வந்து உயர் வகுப்பு களுக்கான ' ரிபரன்ஸ் ' வேலைகள் செய்யும் காலத்திலிருந்த நூலக உதவியாளர்களில் ஒருத்தி மட்டுமே வயதாகி அங்கு இருந்தாள். மற்ற எல்லோரும் புதியவர்கள். அங்கு வைத்துத்தான் அவனுக்குத் தெரியாத கணக்குகளை எல்லாம் இராமனாதன் செய்து காண்பிப்பான். அவர்களுக்கு பிரயோக கணிதம் படிப்பித்த மிஸ்ரர் டானியல் சிம்பிள் கார்மோனிக்மோசன் கணக்குகளில் பிசகுவார். வகுப்பை சுற்றிப் பார்ப்பது போல் வந்து, இராமனாதனின் இருக்கை அடியில் நின்று, மெதுவாக அவனது கொப்பியைப் பார்ப்பார். பின் மற்றவர்களின் கொப்பிகளையும் பார்த்து விட்டு கணக்கை கரும்பலகையில் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு அழகாக விளக்கமளிப்பார் . இராமனாதன் கரும் பலகையை பார்த்து எழுத வேண்டிய தேவை இருக்காது. கம்பசிலும் என்ன வாழ்ந்ததாம். இராமனாதன் இல்லாதிருந்தால் முதலாம் வருடச் சோதனையில்கூட பாஸ் பண்ணியிருக்க மாட்டான். டிகிரி இல்லாமலி ருந்திருந்தால் வரைபடப்பகுதிக்கு வந்திருக்க முடியாது. முன்னணி நிலைகளுக்கு அனுப்பியிருப்பார்கள். சுவர்ணாவால்கூட அவனைக் காப்பாற்ற முடியாமல் போயிருக்கும்.

அந்த நூல் நிலையத்திலிருந்து தயமுனா என்ற சிங்களப் பத்திரிகையில் யாரோ ஒரு தமிழ்க்கவிஞன் எழுதிய கவிதை சிங்களத் தில் மொழி பெயர்க்கப்பட்டு போடப்பட்டிருந்தது. புலிகளின் கண்கள் மின்னுதாகவும் கெமுணுவை பயமுறுத்துவதாகவும், அந்த நிலம் கோடி வருடங்களாக தங்களுடையவை எனவும், புலியைச் சீண்டாமல் குதிரைகளைக்கொண்டு போய் விடும்படியும் அழகான வரிகளைக் கொண்டதாக கவிதை இருந்தது, மூலம் இன்னும் நன்றாக இருக்கும் என நினைத்துக் கொண்டான். எது எப்படியோ கவிஞன் தீர்க்க தரிசன மாகத்தான் கூறி இருக்கிறான்.

கண்டி இராணுவத்தலைமையகத்திலிருந்து நேராக கிங்ஸ் பாருக்குச் சென்று பியர் அருந்தி விட்டு மதியம் இரண்டு மணிக்கு வீட்டுக்கு வந்தான். வவுனியாவுக்குச் சென்ற பின்பு இப்படித்தான் நாளின் பெரும்பாலான வேளைகளில், போதையிலேயே இருக்கிறான். முன்பெல்லாம் இப்படி இல்லை. படங்களுக்குப் போனால் இன்ர வலின் போது அருந்துவான். அல்லது ஏதாவது விருந்துகளின் போது குடிப்பான். வவுனியாவில் இருக்கும் ரன்சனில் அது இல்லாமல் இருக்க முடியாது. விட்டுவிடவேண்டும். இதனால் கிட்னி ரபிளும் வேறு இருக்கிறது. சுவர்ணா கத்தி கத்தி ஓய்ந்தும் விட்டாள்.

அவன் வேலையை விட்டு விட்டு வந்துவிடவும் முடியும். ஓய்வில் விடுபடுவதாயின் மெடிக்கல் கொண்டம் ஆகவேண்டும். சற்றுக் கடினம்தான். நேற்று தங்கைக்காக ஆறாயிரம் ரூபா செலவு செய்தது போல். .. பின்பு செய்ய முடியாது. தங்கையின் பிள்ளைகளின் படிப்பு வேறு இருக்கிறது. யாருக்கும் உதவ முடியாமல் போய்விடும். இருபதாயிரம் வரும் வருமானத்தை உதறித்தள்ளவும் முடியாது. இவற்றை எல்லாம் பார்க்காமல் வேலையை ராஜினாமா கூடச் செய்யலாம். அவனை யாரும் கைது செய்யப்போவதும் இல்லை. தங்கைக்கு கொடுக்கக் காசு கேட்டால் சுவர்ணா தராமல் விடமாட் டாள். தங்கையின் குழந்தைகளில் இரண்டு பேரை இங்கு வைத்திருக்க லாம் என நேற்றுச் சொன்னாள். அவன்தான் மறுத்துவிட்டான்.

சுவர்ணா சாப்பிட அழைத்தாள். எல்லாம் ஒழுங்கற்று நடக்கின்றன என்றாள். மூன்று மணிக்கு மதியச் சாப்பாடு. நன்றாக இருக்கிறது நீங்கள் வந்ததும் நல்லதாகப் போய்விட்டது. யோசெப் காம்பிற்கு மேலாகவும் செல்கள் போகின்றனவாம். சிறிவர்த்தனாதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனில் அகப்பட்டான். கஸ்டப்பட்டே லைன் கிடைத்தது. நாளை காலையில் பெரியாஸ்பத்திரிக்குப் போவோம். மெடிக்கலுக்கு பதிந்து விட்டால் பிரச்சினை இல்லை. தளபதியும் வவுனியாவில்தான் நிற்கிறாராம். ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

தளபதியை அவன் நினைத்தான். யோசெப் காம்பின் உள்மண்ட பத்தில் மேசையில் கிடையாக வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தேசப்படத்தில் ( வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள எல்லாச் சிற்றூர்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்) மாதிரி உருவத்தின் முன் தளபதி படைத் தளபதிகள் சூழ நின்றிருப்பான். அவன் கைகளில் இடங்களைச் சுட்டிக் காட்ட உதவும் கோல் இருக்கும். புலிகளின் நிலைகளை வகைகுறிக்கும் பொம்மை சிறில் வவுனியாவிலிருந்து வருவதற்கு முன்பிருந்த நிலை களிலிருந்து வெகுதூரம் தெற்காக நகர்த்தப்பட்டிருக்கும்.

*இதழ். 66*
*சித்திரை - வைகாசி, 2000*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாள் கணேசன்

## மண்புழு

மீண்டும் அவன் அதைப்பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான்.

குப்பைமேட்டில் கவிண்டு கிடந்தது. பஞ்செல்லாம் கிளம்பி, சாம்பல் நிறமாகி, மேனியெங்கும் தோல் உரிந்து கிடந்தது. அவன் எதற்கோ யாசிப்பவனாக - தனது இளமையைக் காட்டிக் கொண்டிருந் தது சிவப்புப் ' பெயின்ற் ' மட்டும்.

அவன் என்னைப் பார்க்கிறான். கருவண்டு விழிகள். புருவவில் உயர்த்தி இரண்டு சொண்டும் ஒன்றுடன் ஒன்று விலகி, வாய் மலர விலா எலும்பு நாலு துருத்தித் தெரிய ஒருக்கணித்து என்னைப் பார்த்த படி...

கோவிப்பதா, சினப்பதா, வெறுப்பதா, சிரிப்பதா எனக்குள் உணர்ச்சிகள் திமிறன. போனகிழமை அவனை சூசை வீட்டுக்கு கூட்டிப்போய் இருந்தேன். இங்குள்ள இரண்டொரு நண்பர்கள் வேரூன்றியுள்ளவர்கள். சூசை வீட்டில் அதை இவன் கண்டு விட்டான். விடை பெற்று வரமறுத்து அடம் பிடித்தான்.

" அப்பா...புறூம்...புறூம்...ம்ம் "

மழலை அதிர்ந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை.

" ம் ஐயா பிள்ளைக்கு வாங்கித் தாறன். "

நண்பன் சூசையின் மனைவி பரிதாபமாக என்னைப் பார்த்தா. இழுத்தான், தள்ளினான், உயர்த்த எத்தனித்தான் எல்லாவற்றையும் அவ சகிச்சுக் கொண்டா...

" தம்பி, ஓடுங்கோ...தள்ளுங்கோம்... இழுங்கோ இப்பிடி ஆ ஆ ஆ இப்பிடி வாங்கோ "அவ கையைப் பிடித்து இழுத்தார்.

" ஆங் ஆங்ங் பிரண்டு போவியள் அந்தக் காலால அமத்துங்கோ சரி... ஆங் சரி குட் ."

நான் ஊரை விட்டு வந்தது ஒன்றும் ஜொலிபண்ணவல்ல. "அட விடியிற நேரமாவது பிரயோசனமுள்ளவனாக இருக்க வேண்டாமே ?

வெளிச்சம் வர, வேலை செய்யிறதுக்கு ஆயத்தமாய் இருக்க வேண்டாமே?

ஒரு கண்ணாடியும் இரண்டு மூன்று காகிதங்களும், ஒரு பேனையும் குறைந்தது இருக்க ஒரு மண்வெட்டியும் ஒரு கூடையும் ஒரு பழைய செருப்பும் தேடி வைக்க வேணும் குறைஞ்சது.

இப்ப இருட்டு. வெளிச்சம் கசிந்தவுடன் வேலை அதிகம் இருக்குமே என்பது எனக்கு விளங்கித்தான் வெளிக்கிட்டனான். பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுள்ளவனாக என்னை தயார்ப்படுத்தாட்டி மற்றவையின்ர கேலிக்கு ஆளாகுவேன். மனம் ஆதங்கப்பட்டது , அதற்குத்தான்.

ஓடோடி வந்தேன். பிள்ளையை, மனைவியை விட்டு விட்டு வந்திருக்கலாம். பிள்ளை முகத்தை மறந்து போவான். மாமா எண்டு ஒரு நாள் கூப்பிட்டு விடுவான் என்னை. அவ்வளவு தூரமாகிவிட்டது தொடர்பு. மனைவியின் தனிமையை என்னால் கற்பனை கூட பண்ண முடியவில்லை.

பிள்ளையின் அன்றாட வளர்ச்சியை எப்படி அனுபவிப்பது? அவனது மழலையை இரவல்தான் வேண்டிப்பருகவேணும். அவனது காலத்தை செப்பனிட எனக்கு நாள் போதாததாகி விடும். குடும்பத்தி னதும், சுயத்தினதும் வாழ்வு பின் புதினமாகி விடும். அதனால்தான் பலத்த சிரமத்தினுள் நுழைந்து இங்கு வந்தேன் குடும்பத்தோடு.

இங்கு வந்தபின்தான் நான் ஒரு அந்நிய தேசத்தில் இருப்பதாய் உணர்ந்தேன். போரின் நிழல் எவரது முகத்திலோ அகத்திலோ இல்லை. முகங்கள் அந்நியமானதேசம். கொம்பு முளைத்த மனிதர்கள் ஆங்காங்கே அநேகர். காய்ந்தமண், பச்சை மண்ணின் பிணைப்பை உணர்ந்தேன். ஓடும் புளியம் பழம் என்ற நிலை.

ஒன்று விளங்கியது. இங்குள்ளவர்க்கு போர் முகம் காட்டப் படவேண்டும் ; உணர்த்தப்படவேண்டும். யார் யாரை வெறுக்கி றேனோ அவர்களுக்கெல்லாம் முகமன் செய்து நடக்கும் பரிதாப நிலை எனக்கு . எதைச் சகிக்க முடியாதோ அதைச் சகிக்க வேண்டிய அநியாயம்.

கண்ணை மூடி விலகவேண்டியவற்றுக்கெல்லாம் கண் கூச, கூசப் பார்க்கும் நிர்ப்பந்தம், அபத்தம். இங்கு போலியான பகட்டான கலாச்சாரம் தனது நிறத்தைக் காட்டி நின்றது. அந்தரப்பட்டு ஓடி வருபவனுக்கு இவர்கள் செய்யும் தவிச்ச முயலடிப்பு எல்லை யற்றது . ம்! இவர்களைக் குறைகூறிப் பயனென்ன ? சூழ்நிலை செய்யும் மாறுதல்கள்தான்.

வீடு எடுப்பதென்றால் பெரும்பாடு. கொள்ளை முற்பணம். வாடகை வேறு. மிகத்திண்டாடிப் போனேன்.

இதுக்குள் எனக்குக் கிடைத்த இடம் மிக நல்லது. பவ்விய மானது. கண்ணியமான குடும்பத்துடன் இணைப்பு. “ அனெக்ஸ் ” தண்ணீர் வெட்டு மின்வெட்டு என்று வரையறுக்காத அப்பாவிகள்.

“ சூரியக்கதிர் ” இடப்பெயர்வுக்கு , கிளிநொச்சி இடப்பெயர் வுக்கு எங்கட வீட்டில நாம் இடம் கொடுத்து ஆதரித்தவர்களை எண்ணுகிறேன்.

எங்கட வீட்டில் தங்கச்சி, மச்சான், அம்மா, ஆட்களென்று பெடியனைப் பார்க்கிற மாதிரி அமைஞ்ச நல்ல குடும்பத்தோட இங்கு... “ இப்படியும் சனம் இருக்கோ ” என்று நினைக்க அவர்கள் நடந்து கொண்டார்கள்.

இங்கு பாடசாலைப் பிள்ளைகள் ஒரே சினிமா மோகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கி இருக்கிறார்கள். ஒரே சன் ரி.விப் பைத்தியங்கள். கடின உழைப்பு, எவரிடமும் எதிலையுமில்லை. எல்லாப் பெற்றோரையும் நினைக்க பாவமாய் இருக்கின்றது.

துப்பாக்கி சூடிய வாகனங்களின் பயில்வான் பாணி அட்டகா சங்கள். ஒரு வெறுமையில் முடிவாக ஒன்றுமே தெரியாத இந்த இடத்து மக்களுக்கு அவர்கள் காட்டிய " பாச்சா " வை நினைக்க சிரிப்புத்தான் வருகிறது. இங்குள்ள கிராமங்களுக்கிடையில் குமு விசாரங்கள், வெப்பியார வெடிப்புக்கள், ஒவ்வொரு சாலை, சந்திகள் விடியும் போதும் கொலையையும் அழிவையும் பிரசவிக்கும், நம்பிக்கையாக.

உயிர்களை இரவுகேட்ட பேரோசை கவர்ந்திருக்கும்; எடுத்திருக்கும். விடிந்ததும் ஒருவருக்கொருவர் அபிநயங்களூடு செய்தி சொல்லிக் கொள்ளுவர், இதுபற்றி.

இங்கு அழகழகான வாகனங்கள், காதோடு காது வைத்த மாதிரி கைத் தொலைபேசிகள்.

இங்கு குளிர்ச்சி, குளிர்சாதனப் பெட்டிக்குள்தான்.

இங்கு உயர்வானவை, மனங்களல்ல கட்டடங்கள்.

இங்கு செழிப்பாக இருப்பவை. தெருக்கள்; வளவுகளல்ல.

இங்குள்ள ஆசிரியர்களுக்கு அடிக்கடி நவீன சாதனங்கள் கொண்டு பயிற்சி வழங்கப்படுகிறது. பிள்ளைகட்கு படிப்பித்தல்?

எல்லாப்பிள்ளைகளும் அடையாள அட்டை வைத்திருக்கிறார் கள்; வித்தியாசமான நிறங்களில். ஆசிரியர்களை நிறங்கள் அச்சுறுத்திக் கொண்டிருக்க பணி தொடர்கிறது. நவீன உலகத்தைப் படைத்தவர் களாக இளசுகள். சுதந்திரப் பூங்காவில் அன்று மலர்ந்த மலர்களாக பண்பாட்டுச் சிந்தனையாளர்களும் அறிவாளிகளும், பிரசங்கிகளும் ஒன்றுமே தெரியாத மாதிரி கண்ணை மறைத்துத்திரியும் சுயநல மிகளாய்.

மழைமூட்டம் கவியத் தொடங்கியது. மழைவரும் போலிருந் தது. ஒரே வெப்பியாரம். கானல் வெக்கை தகிக்கின்ற சூழல். வவுனியா வில் மரங்கள் செழிப்பாக இல்லாத ஒரு வரண்ட நிலம் இந்த நகர்ப்புறம்.

அங்கிருந்து இங்கு வந்தது உடலால்தான். உள்ளம், எனது கிராமம். ஊர் என்று பறந்து போகின்றது. உற்றாரும், சுற்றத்தாரும் காய்ச்சலுக்கும், தலைவலிக்கும், ஆறுதல் கூறும் முகங்கள், எத்தனை நண்பர்கள், மாணவர்கள், சொந்தம், பந்தம், கிராமத்தவர் என ஏராளம்.

அந்த வரட்சிக்குள்ளும், கவியரங்கு, பட்டிமன்றம், நாடகம், சொற்பொழிவு, ஊர்வலம், உண்ணாவிரதம் என்பன மனிதமனங்களை ஒருவகை சுதாகரிப்பில் வைத்திருந்ததை என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது.

அந்தப்பிரகாசமான பிழம்பிலிருந்து வந்த கீற்றுக்களிடம்கூட இருக்கின்ற வெப்பம்! அந்த மண்ணில் இந்தச் சிலநாள் இல்லையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இழப்பு! என்னவென்று இந்த வெளிநாட்டுக்குப் போனவர்களே இந்தத் தென்றலை அனுபவிக்காது இனிதாய் இருப்பார்?

மனமுறுத்துகிறது. இனியும் இங்கு இருக்க எனக்கு ஏலுமா? வந்தபுதிதில் இரவு பத்து மணிவரை உலவிய நான் இப்ப பின்னேரம் நாலுமணிக்கே வீட்டில் முடங்கி விடுகின்றேன்; உயிர் மீதான அன்பில். கூட்டிச் செல்வதும் கொலை செய்வதும் நாளாந்தம் அதிகரிக்கிறது.

காலை நான் வெளிக்கிட்டு பாடசாலை சென்றபின் மனைவி தனியப்படும் நரகவேதனை, இயந்திர இயக்கம், கவலை அவள் முகத்திலும் உடலிலும் தோய்ந்திருந்தது; கவலையைத் தந்தது. வந்த அலுவல் முடியவில்லையே என்கிற துயரம் ஒருபுறம். இங்கிருப்பதில் ஏற்பட்ட அதிருப்தி மறுபுறம் அலைக்களித்தது என்னை.

பாடசாலையில் பல நாள் லீவு எடுத்தாகி விட்டது. வதிவிட அனுமதிப்பத்திரம் எடுக்க பல அரைநாள் லீவுகள். எங்கட மண்ணில் நாங்கள் வசிக்க அனுமதிப்பத்திரம் என்று எத்தனை நாள் சினந்திருக்கிறேன்.

இலஞ்சம் வாங்கிக் கொண்டு அனுமதிப்பத்திரம் வழங்கும் அந்த மொட்டை "பொலிஸ் இன்ஸ்பெக்ரர்" அவனது இனத்துவேசம் கலந்து உமிழும் வார்த்தைகள் 'உம்... துவக்கிருந்தால் சுட்டே விடுவேன்' என்று சொல்லும் கையாலாகாத கோழை மனதை எண்ணி வருந்திக் கழித்த பொழுதுகள்.

'நீ துலைவாய், பாவி உனக்கு எத்தனை திமிர், செருக்கு?, எவ்வளவு பேரின துன்பத்தில் உனக்கு நிம்மதி, மகிழ்ச்சி, என்று மனம் ஓலமிடும். கைக்கூலிகளாக இருக்கும் சில தமிழ்ப் புல்லுருவிகள் இவர்களுக்கு உதவி, மக்களை வருத்துவர்.

பாடசாலையில் அரை நாள் லீவு போட்ட நாட்களில் ஒன்றுமே எனது அலுவல் நிறைவேறாததனை எனது ஆசிரியசகாக்களிடம் கூறி வேதனைப்பட்டேன். என்னை எதிர்பார்த்து ஏங்கி இருக்கும் மாணவர் களை ஏமாற்றி வந்த ஒரு நாளும் எனது சுய அலுவல்கள் நிறைவேறாது ஏமாந்த நாட்களாயின.

"அப்பா பா" அவன் மீண்டும் சினந்தான். அதனை ஒரு கையால் இழுக்கிறான் என்னிடம் உதவிக்காக ஏங்கியவாறு.

போனகிழமைதான் வீட்டுக்காரருக்கு வாடகை கொடுக்க வைத்திருந்த காசில் எடுத்து புதுசா இவனுக்கு ஒரு பேபி சைக்கிள் வேண்டினான். 'அதை விட்டுட்டு இவன்...?' மனம் குழம்பியது...?

"ஐயா இங்கவாரும் தம்பியின்ர புதுச்சைக்கிளை தாறன் இது தரு அக்கான்ர பழசு, கக்கா. வேண்டாம்."

"பாண்டாம். அக்காட புறம் தாங்கப்பா" அவன் விட்ட பாடில்லை. நாங்கள் இருக்கும் வீட்டுக்காரரின் கடைசி மகள் தர்சினியின் விளையாடிக் கழித்த பழைய சைக்கிளை எடுப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியாக இருந்தான். தூக்குகிறான். மண்ணுள் புதையுண்டு இருக்கும் அதன் பாகங்கள் வர மறுக்க இவன் சினக்கிறான்.

அன்று நண்பன் சூசையின் வீட்டில் இவன் அதைக் காட்டிப் பறித்த நேரமும் அதன் பின்பொழுதெல்லாமும் என் கையாலாகாத நிலைமையை எண்ணி கண்கலங்கினேன். மூச்சிறுகி முகம் சிவந்து தொண்டைக்குள் ஏதோ அடைத்துவிட்ட நிலை.

அது பிள்ளைக்கு அவனது மாமன் வேண்டிக் கொடுத்தது. இவன் யாரிடம் வேண்டுவான் ? நான் தானே வேண்டிக்கொடுக்க வேணும். மாமன் இருந்தும் அவர்கள் கரிசனை எத்தகையது? என் பிறந்த வீட்டிலும் தனிமை, மணந்த வீட்டிலும் தனித்தவில்தான். அன்றும் இன்றும் என் வாழ்வில் நெடிதாய்க் கிடக்கும் பாதையாக இத்தனிமை தொடர்கிறது. வரப்போகும் காலங்களும் அப்படித்தானே இருக்கும். என் சின்ன மகன் வளர்ந்து தோள் கொடுக்கும் காலமெப் போது? மனம் ஓவென்று கதறியழுதது.

எவ்வளவு பிழை விட்டிட்டன். இவனை ஊரிலேயே விட்டு விட்டு வந்திருக்கலாம். அங்கிருக்கும் நண்பனின் மகன் மகிழ் மாதிரி. கயல்விழி மாதிரி சைக்கிளே தெரியாமல், தெரிந்தும் அதில் அக்கறை யில்லாமல் இயற்கையே விளையாட்டுப் பொருளாக இருந்திருக்கும். இங்கு இவன் கண்டது கடியதெல்லாம் கேட்கிறானே ?

இவனின் ஆசைக்கெல்லாம் தீனிபோட என் சராசரி வருவாயும் வாடகை வீட்டு வாழ்வும் இடங்கொடுக்குமா ? இங்குள்ள பிள்ளைகள் ஆட்டோவில்தான் பள்ளிக்கூடம் போகிறார்கள். இனி பள்ளிக்கூடம், அதுக்கு முதல் ' நேசறி ' போகிற காலத்தில் ?

ஒரு கிலோ மீன் நூற்றி எண்பது ரூபாவுக்கு வாங்கி இவனின் போசாக்குக்கு ஈடு கொடுக்குமா ? பவுண் நிறுக்கிற மாதிரி மீன் நிறுக்கிறாங்கள். சீ இதுவும் ஒரு வாழ்வா ?

நான் கட்டிய கோட்டை அரிப்புக்குள்ளாகிக் கொண்டிருந்தது.

எங்களுக்கு இலங்கை அரசு செய்த பொருளாதாரத் தடை, மனிதன் சுயங்காணவும் புதிய சிந்தனைக்கும் இயல்பான வாழ்வுக்கும் எளிமைக்கும் பக்குவப்படுத்தி இருப்பதை எதிரி புரிவதற்கில்லை தான்.

ஆனால் இங்கு வசதி வாய்ப்புகள் மனிதரை சுயமிழக்க வைத்திருக்கிறது. வாழ்க்கை இங்கு அடிமையாகப்பழகி விட்டதே.

மகன் தன் முயற்சியில், நான் அவசரமாக வகுப்புக்கு புறப் பட்டுக்கொண்டிருக்கிறேன். நேரம் போய்விட்டது என்ற அவதியில் நான்.

எங்கட ஊரில பிள்ளைகளும் " ட்றெயின் " தெரியாமல் போயிட்டுது. ஆட்டோ பயணம் அவைக்குத் தெரியாது. நல்ல பஸ்சில பயணித்து அறியார்கள்.

ஆனால் ஒரு செப்பனிடப்பட்ட புதிய வாழ்வும், நாகரீக மிடுக்கும் புதிய தேசத்தின் நிலப்படுகையும் தெரிகிறது அவைக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரும், ஊனும் சிந்தி பெரியோர் அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் அந்த நாட்டிற்கு இங்குள்ள இவர்களும் சொந்தம் கொண்டாடப் போகிறார்களே என்பது மட்டும் என் நெஞ்சை எரிக்கிறது.

எனது ஊரில் மக்களிடம் புதைந்து போயுள்ள திறன்கள் கிளம்பி வருகின்றன. சுபீட்சமான, கண்ணியமான எதிர்காலத்தை நோக்கி அந்த இளசுகள் நடக்கிறார்கள்.

நாங்கள் வீட்டில் இருந்த அந்த நாட்கள் கண்ணுக்குள் எழுந்து வந்தன. அந்த மாமரம், எனது அம்மா இவனுக்கு சோறு தீத்திய காட்சி தோன்றியது. எனது தங்கை தன் ஆசை மருமகனை தழுவிக் கொஞ்சித் திரிந்தது. மச்சான் சிறிது கண்டிப்புடன் பாலூட்டி ஓராட்டியது. கண்கள் பனித்தன. எனது கோட்டையின் சுவர் ஒன்று திடும் என விழுந்தது.

' அப்பா அப்பா ' அவன் சற்று அதட்டலாகக் கத்துகிறான்.

" எத்துத்தாங்க புறும். "

" கறளல்லா இது குத்தும் தம்பி... "அவன் அழ ஆரம்பிக் கிறான்.

" அங்கிள் இந்தாங்கோ கடிதம் " வீட்டுக்காரரின் மூத்த மகள் தர்மினி கடிதத்தை நீட்டுகிறாள்.

மீண்டும் எங்கள் வீட்டு மாமரம், எனது வீட்டுக்கு முன் சலசலத்தோடும் அழகான வாய்க்காலில் குளிக்கின்ற மக்கள் கூட்டம்.

நானும், இசையும், கருணாவும், லிகிகனும், தயாவும், லவனும் கதைத்தது ; ஆய்வு செய்தது ; விவாதித்தது ; வானொலியைக் கையில் வைத்து பரபரப்பான சண்டைச் செய்திகளைக் கேட்டது. கிளிநொச்சி நகரத்தை ஆமி பிடிக்கிறான்.

வீட்டு முற்றத்திலிருந்து நாங்கள் பார்த்த காட்சி . பாயும் பெட்டியும், திருவலையும் வளர்த்த நாயும், ஆட்டுக்குட்டியும், பூனையும்...

சைக்கிள்களும், வண்டில் மாடும், கோழிக்கூடும் ஒரு கர்ப் பிணிப்பெண்ணும் அவளது மூன்று குழந்தைகளும் கணவனும் சட்டி பானையை மூட்டை கட்டி நடக்கும் காட்சிகள்...

சிறிது நேரத்தில் ஷெல் விழுந்து வெடித்த ஓசை கேட்கும் சத்ஜெய காலத்தின் நடந்த காட்சிகள்.

வீடு வாசலை விட்டு ஓடி தறிகெட்டு வந்தவர்கள் எமது பெருங்குளக்கரையில் குடியேறினர். அவர்களது வசிப்பிடம் அடர்ந்த பற்றை. சின்னக்குழந்தைகள் சகிதம் பாலூட்டும் தாய். வயது முதிர்ந்த கிழவங்கள். இரவு பகலாய் பற்றைக்குள் இருந்தனர். பழைய சீலைத் துணிகள், ஏன் வீரசேகரி பேப்பரைக்கொண்டு மறைத்து இருப்பிடம் அமைத்தனர்.

சாதாரண சந்துகளில் அன்று அவர்கள் தம்மை அடைத்துக் கொண்டார்கள். மழை பெய்யவில்லை என்பது இயற்கை அவர்கட்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த உதவியே.

பிள்ளையார் கோயில் ஆலமரம் அவ்வையார் சொன்ன அதே ஆலமரமாய்க் காட்சியளித்தது. ஆயிரம் பேர் இருக்கக்கூடியதாய் இருந்தது. அதனடியே ஓடும் வாய்க்கால் நீரும் அயலில் இருக்கும் தென்னைகளும். ஆம் இந்த சனங்களில் சிலர் கடதாசியால் குடில் வேய்ந்து இருந்தார்கள்.

கடதாசி வீடுகள் முதன் முதலில் பார்த்த மாத்திரத்தில் மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தன. மலேரியா தன் கை வரிசையைக் காட்டியது. நாளாந்தம் சாவுகள், ஒரே அவலம். விடுதலைப் போர்க் காலத்தே விலையாய் கொடுக்கும் உயிர்கள்தான் எத்தனை!

எங்கள் ஊர் வைத்தியசாலை நீண்டும் அகன்றும் அசிங்க மாகியது. லட்சம் சனம் தொலைந்தது. சனம் சனம் என்று பெருக் கெடுத்த இடப் பெயர்வு கொடுத்த புதிய மக்கள்.

நோயாளிகளை அரவணைக்க முன்பிருந்த கட்டடம் போத வில்லை. நேர்சீர் கெட்டும் சுத்தமின்றியும் போகும் வைத்திய சாலையை எண்ண மனம் கவலைப்பட்டது.

யாழ் மக்கள் கிளிநொச்சிக்கும் அங்கிருந்து அக்கராயனுக்கும் வந்ததால் இந்த நெருக்கடி. ஆனாலும் வேறு வழியில்லை.

“ நானிப்ப பதின்மூன்றாவது வீட்டில் இருக்கிறேன், ” என்றார் ஒருவர், எல்லோரும் பத்திடத்தைக் கண்டவர்கள் எனலாம்.

ஒரு நாளும் ஷெல் வராத ஊர். அன்று இரவு நான்கு ஷெல்கள் ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாய் வந்து வெடித்தன. காதுகளை அடையும் ங்நய் சத்தத்தோடு எங்கள் வீட்டையும் கடந்தது ஷெல்.

ஒரே பரபரப்பு. அன்றுதான் ஷெல்லின் மரணபயம் எனக்குத் தெரிந்தது. வெடித்த ஷெல் என்ன விளைவுகளைத் தந்ததோ? யாரின் உயிரைக் குடித்ததோ என்று மனங்கலங்கிப் போனோம்.

விடிய... நெஞ்சே வெடிப்பதான செய்தி. அனைவரும் கவலை யோடு பேசி உலாவினர்.

ஆஸ்பத்திரித் தொழிலாளியான கணபதி குடும்பம் சிதறிப் பலியானது. குடும்பத்தில் எவரும் காயமின்றித் தப்பவேயில்லை. ஒரு பையனும் ஒரு பெண் பிள்ளையும் உயிர் தப்பினர். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வைத்தியசாலையில் குவிந்தனர், அனர்த் தத்தைக் காண. கணபதியின் “ குவாட்டசில் ”இருந்து இருபது பாகத்தில்தான் பிரதான “ வாட் ” இருந்தது. அதில் நூற்றுக்கணக்கான நோயாளிகள். சற்றுத்தள்ளி விழுந்திருந்தால் பல உயிர்கள் மாண்டிருக்கும்.

மிக அழகாக இந்த முறை விளையாட்டுப் போட்டியில் கொக்கு நடனமாடிய எமது மாணவி கணபதியின் மூத்த மகள். எனது வகுப்பு மாணவி கால் இழந்து தவித்தாள்.

“ நான் ஒரு நாள்கூட ஒரு “ ஸ்ரெப் ” கூட திருத்தாத அற்புத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான நடன மாணவி " என ஆதங்கப்பட்டுக் கண் கலங்கினாள் ஆசிரியை கமலா. தம்பி ஞாபகங்களை முறித்து.

" அப்பா தங்கச்சி " தொட்டுக் காட்டி " புறூம்... தாங்க " அவன் தனது தங்கை கைக்குழந்தையை ஏசுகிறான். தன் மழலையால்.

சாடையான காற்று வீச இதுவரை கருமை படர்ந்திருந்த வானம் வெள்ளை விரித்தது. மழை கருவழிந்தது.

அவன் பழைய சைக்கிளை கை விட்டபாடாய்க்காணோம். புதிய சைக்கிளில் அவன் மகிழ்விழந்தே இருந்தான். முகஞ் சிவந்திருந் தது. விழியோரம் கசிவு. அவனது கண்கள் ஏக்கத்தோடு என்னைப் பார்க்கின்றன.

தலையை என்னை நோக்கி அசைத்து உதட்டைப் பிதுக்குகிறான். அழப்போகிறான்.

விரைந்து சென்று அந்தக் கறள் சைக்கிளை ஒத்துகிறேன். புதையுண்ட பாகங்கள் வெளியே வருகின்றன.

என் பிள்ளையின் முகம் சிரிக்கிறது. நாங்கள் பெட்டிகளோடு கிராமத்தில் கால் மிதிக்க எங்களை வரவேற்றும் எம் ஊரவரின் சிரிப்பு கண்களில் மின்னுகிறது.

நான் தீர்க்கமான முடிவுடன் உடைகளை மாற்றுகிறேன்.

இதழ் . 68
புரட்டாசி - ஐப்பசி , 2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை ரவி

# காலமுகம்

மாடுகள் ரண்டையும் நுகங்களில பூட்டிப் போட்டு வண்டிலில் ஏறினன். எனக்குச் சுமை றங்கினமாதிரி இருந்தது. தில்லையம்பலப் பிள்ளையாருக்கு நேத்தி வைச்சு ரண்டு மாதம். இண்டுதான் நேத்தியை றக்கினான்.

ரண்டு மாதங்களுக்கு முந்தி பட்டியில இருந்து நரையன் கிழவி துலைஞ்சது. கிழவியெண்டாலும் மடிகொள்ளாப் பால். கண்டு பசியில பட்டியைச் சுத்திச் சுத்திக் கத்திக்கொண்டு நிண்டது நேத்தி வைச்சு ரண்டு ரூபாக் குத்தியை கண்டின்ர கழுத்தில் சட்டித் தூக்கினாப் பிறகுதான் , நரையன் கிழவி பட்டிக்கு வந்திது.

எங்கட ஊரில மாடுகள் துலைஞ்சால் தில்லையம்பலப் பிள்ளையாருக்குத்தான் நேத்தியள் வைக்கிறது. பட்டிகளில் குறியள் சுடுவிலும் தில்லையம்பலப் பிள்ளையாருக்குப் பொங்கிப் படைச்சுப் போட்டுத்தான் சுடுவம். தைப் பூசத்தண்டுதான் எங்கட ஊரில குறியள் சுடுறது.

எங்கட ஊரில இருந்து எட்டு ஒன்பது கட்டையள் இருக்கும் கொயில். வண்டில்களில் கூடாரமடிச்சுப் போட்டு விடியப்புறம் வெளிக்கிட்டம் எண்டால் பத்துமணிக்கு முந்தி கொயிலுக்கு வந்திடுவம். சவாரி மாடுகளைத்தான் பூட்டிக்கொண்டு வருவம். வரேக்கை ரண்டு மூண்டு கூட்டுச் சேத்துக் கொண்டு வருவம். வல்லை வெளியில வண்டில்கள் வரிசைக்க வரேக்கை சோக்கா இருக்கும்.

வருசாவருசம் கொயிலுக்கு வந்து கும்பிட்டு மடை வைச்சாப் பிறகுதான் நான் புதிர் எடுக்கிறனான். உப்பட்டியள் அள்ளிப் போர் வைக்கேக்கை உப்பட்டியளுக்கை நாகம் அல்லாட்டிப் புடையன் கருவளையெண்டு இருந்தால் களம் பொலியும். அந்தச் சந்தோசத்தில் களத்துக்கு வர்ற குடியாக்களுக்கு பொலியை குல்லம் குல்லமா அள்ளிக் குடுப்பன்.

கனகாலத்துக்குப் பிறகு இண்டைக்குத்தான் கொயிலுக்கு வந்தனான். முந்திய மாதிரி கொயிலில்லை. கொயிலைச் சுத்திப் பத்தையள் சடைச்சு நிக்குது. முத்தம் மட்டும்தான் பால்போல இருக்கு. மற்ற இடங்கள் எல்லாம் நெருஞ்சி முள்ளுகளும் காரைப் பத்தையளு மாக கிடக்கு. முந்தி ஆழ்வார்ப் பிள்ளைதான் கொயிலைக் கூட்டுறவர். அவருக்கு நெஞ்சுக்கை வருத்தம். பெரியாஸ்பத்திரியில படுத்தும் வருத்தம் மாறேல்லையாம். கொயில்லை நேத்தி வைச்சாப் பிறகு தானாம் வருத்தம் மாறினதாம். அதுக்குப் பிறகுதான் ஒவ்வொரு நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கொயிலைக் கூட்டுறவராம்.

அவற்றை இடம் வரணி. வயல் வெளியளால விழுந்து வருவில் கொயில் கிட்டு. கல்லுவத்து ஞானவைரவல் கொயிலில் இருந்துதான் சண்முகய்யர் பூசைவைக்க வாறவர். அவர் வாறதுக்கு முதல் ஆழ்வார்ப்பிள்ளை வந்திடுவர்.

தெருக்களில் சனங்கள் ஒண்டையும் காணேலை. கானுகளில செடியள் முளைச்சு தெருவை மூடி வைச்சிருக்கு. புழுதிகளில பழையள் கிண்டியிருந்த குருவியள் மாடுகளின்ர மணிச்சத்தங்களுக்குப் பயந்து எழும்பி ஓடுதுகள். கூட்டமா எழும்பேக்கை எல்லாக்குருவியளின்ர செட்டைச் சத்தங்களும் “ ஊ ” எண்டு கேட்டது. நான் நல்லாப் பயந்து போனேன். மிருசுவிலில் வெட்டித்தாட்டது நெஞ்சுக்கை வந்திது. முந்தியெண்டா நான் ஒருதருக்கும் பயப்பிடமாட்டன். அப்ப மணல்க் காட்டு மணலுக்கை கமலத்தை வறுகித்தாட்டாப் பிறகுதான் சோனப்பு வெளியில மனிசியோட வர சாதுவாகப் பயந்தனான்.

வண்டில் மண்தெருவைக் கடந்து கல்லு றோட்டில் ஏறுது. பத்துப் பதினைஞ்சு வரியங்களுக்கு முந்தி ஊத்தின தார் பொருக்கா அங்கையுமிஞ்சையுமெண்டு பட்டையள் உரிஞ்சு கிடக்குது. கிடங்குகளுக்கை சில்லுகள் விழுந்து எற வயித்துக்கை நோகுது.

அந்த றோட்டாலதான் கப்பூதுக்குப் போறது. கப்பூகால சாவகச் சேரிக்கு போறது கிட்டு. அந்த றோட்டால பெரிசா சனங்கள் போறேல. சாவகச்சேரிச் சந்தைக்கு யாவாரியள் சைக்கிள்களில போவினம். முந்தி ஒரு வசு மட்டும்தான் பருத்தித்துறையில இருந்து கம்பூதுக்கு ஓடுறது. காலைமை ஏழு மணிக்கு பள்ளிக்குடப் பெடியள வந்து ஏத்திக் கொண்டு போனால் நாலு மணிக்குத்தான் றக்கவரும். மற்றும்படி சைக்கிளும் வண்டில்களும்தான் திரியும்.

ஆனி உத்தரம் எண்டால் இந்த றோட்டாலதான் கப்பூதுக் கந்தனிட்ட காவடியள் போறது. மண்டானில இருந்தும் கரண் வாயில இருந்தும்தான் காவடியளோட சனங்கள்வாறது. காவடியளோட வாறவையள், சனங்கள் இல்லையெண்டு இந்த றோட்டில ஆட மாட்டார்கள். செடில் பிடிக்கிறவர்கள் செடில முடிஞ்சு தூங்கவிட்ட டிட்டு வெத்திலையள் சப்பிக் கொண்டு போவினம். காவடியளுக்குப் பின்னால தாமோதரம்பிள்ளை வீட்டு பவுசர் தண்ணியோட வரும். இப்ப கப்பூதுக் கந்தனில காவடியள் குறைஞ்சு சருகுகள் றம்பி இருக்கும்.

பொழுது சரியமுதல் வீட்டுக்குப் போகவேணும். றோட்டுச் சரியில்லை. மாடுகள் பஞ்சிப் படுகுதுகள். கல்லுகள் அண்ட அண்ட லாடன் காலுகள் நோகுது போலை. மாடுகளுக்கு அடிக்க மனம் வராதாம். அதுகளுக்கு வன்னி வைக்கலும் இப்ப இல்லை.

யாக்கருச் சந்தி வருகுது. சந்தியள் எல்லாம் அவங்கள் நிக்கிறாங்கள். துவக்குக் கட்டையளை வைச்சிருக்கிறாங்கள். அவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பாக்க பயமா இருக்குது. வயல் வரம்புகள் மாதிரி கிழக்குப் பக்கமாக பெரிசாக் கட்டியிருக்கிறாங்கள். வல்லிபுரக்கொயில் பக்கமாக ரி.வி. அன்ரனா மாதிரி நீட்டுக்கு அஞ்சாறு தெரியுது. முந்தி இந்தியனும் அதிலதான் இருந்தவன். அவங்கள் பெரிய குடைச்சீலையள் மாதிரி வட்டமா ரண்டு மூண்டு பனையளவு உசரங்களில் பூட்டியிருந்தவங்கள்.

சந்தியில அவங்க பேசாமல் நிண்டாங்கள். தொண்டமனாறு றோட்டுக்கு மாடுகளைத் திருப்பினன். அந்த றோட்டும் நீட்டுக்கு வெறிச் சோடிப் போய்க் கிடந்தது. அந்த றோட்டால எப்பவும் சனங்கள் திரியுங்கள். சாவகச்சேரிச் சந்தைக்கும், கொடிகாமச் சந்தைக்கும் சைக்கிள்கள் போகும். எரு வண்டில்களும், குழைவண்டில்களும் நீட்டுக்கு மண்டான் பக்கம் போய்க் கொண்டிருக்கும். வீச்சு வலைகாரர் உப்புக்கழியுக்கும், சந்நதி ஆத்துக்கும் சைக்கிள்களில் போய் கொண்டிருப்பார்கள்.

சந்நதி, வல்லிபுரக்கொயில் திருவிழாக் காலங்களில் தான் வசுக்களும் தட்டிவான்களும் மாறி மாறி ஓடுங்கள். குடிமனையள் இல்லாத வெளியெண்டு பெரிய சத்தமா வசுக்களில் பாடிக்கொண்டு போவார்கள். சைக்கிள்களில் போற பெடியள் மண்டான் தண்ணீர் பந்தலில் சக்கரைத் தண்ணியைக் குடிச்சிட்டு தூசணங்களால பாடிக் கொண்டு போவாங்கள்.

மாடுகளுக்கு வாய்களால நுரையள் தள்ளுது. றோட்டுக் கரையோட ஒரு கிணறு கிடக்கு. அதில வண்டில நிப்பாட்டினன். கிணத்தடியில வாளியில்லை. வடக்குப் பக்கமா ஒரு வண்டில் பாதை வளைஞ்சு கொண்டு போகுது. அந்த முடக்கால ஒரு ஆச்சி வந்தா. தலைக்கு மேல் சும்மாடு வைச்சு அதுக்கு மேல ஒரு குடமிருக்கு. ஒரு கையில வாளியும் மற்றக் கையால வாயில இருந்த சுருட்டைப் பிடிச்சுக் கொண்டு வந்தா. சீலையை குறுக்கை கட்டியிருந்தா. அது கொய்யகக் கட்டு. மேல சட்டை யோண்டும் போடேல. முதுகு கறுப்பாக கிடந்தது. பின்னுக்கு பனையில இருந்து ஒரு காவோலை விழுந்தது. வாயிலிருந்த சுருட்டை எறிஞ்சு போட்டு காவோலையை அந்தக் கையால இழுத்துக் கொண்டு வந்தா.

கிணத்துக்குப் பக்கத்தில் சின்னக்குளமிருக்கு. தண்ணி பச்சைக் கூழா இருந்தது. அதுக்கிள ஒரு அப்பு குளிச்சுக்கொண்டிருந்தார். ஊரில கிணறுகளில்லை. இருக்கிற கிணறுகளில் உப்புத்தண்ணி. அதில ஒரு தரும் குளிக்கிறேல. முன்னையெண்டா அந்தக் குளத்தில் நிறையப் பேர் குளிச்சுக் கொண்டிருப்பார்கள். பொம்பிளையள் ஆம்பிளையள் எண்டு எல்லாரும் ஒண்டாத்தான் குளிக்குங்கள். பொம்பிளையள தலையள மட்டும் வெளியில வைச்சுக் கொண்டு ஊத்தை உறுட்டுங்கள். ஆம்பிளையள் சான் சீலையளோட நிண்டு உருட்டுவார்கள். வயது போன கிழடுகள் போகேக்கை சாண் சீலையளை தோளுகளில் போட்டுக் கொண்டு போகுங்கள். சின்னப் பெடியள் சுழியோடேக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்பிளையளின்ர காலுகளில் முட்டுப்பட்டால் திடுக்கிட்டு எழும்புங்கள். குறுக்கை கட்டியிருந்த சீலையள் வழிஞ்சு விழும். கெடுதிப்பட்டுக் கொண்டு தண்ணிக்கை தாண்டுங்கள். பக்கத்தில் நிக்கிற தலையளைக் கவிட்டுக் கொண்டு சிரிக்கும்கள்.

ஆச்சிகிட்ட வந்தா, அந்தக் கிணறுதான் அந்த ஊரில நல்ல தண்ணிக்கிணறு . முந்தி கிணத்தைச் சுத்திக் கனக்கச்சனங்கள் நிற்கும். எல்லோரும் கிணத்தில தண்ணியள்ளுறேலை. வலதுகள் அந்தக் கிணத்தில் தண்ணியள்ளுறது குற்றமா இருந்தது. குற்றமில்லாததுகளைக் காத்துக்கொண்டு குடங்களோடு நிக்குங்கள்.

ஒரு நாள் குற்றமுள்ளதுகள் காத்துக்கொண்டு நிக்காமல் தாங்களாகவே தண்ணியை அள்ளிச்சுதுகள். அதுக்குப் பிறகு ரண்டு பகுதிக்கும் சண்டையள் மூண்டது. அங்கால சொல்லவே வேணும்... குற்றமில்லாததுகள் கக்கூசையள்ளிக் கிணத்துக்கை போட்டிட்டுப் போட்டுதுகள். அப்ப ஊருப்பட்ட பேர் வந்தவை. பிரச்சனை தீர்க்க கடைசியாக கரவெட்டி கந்தப்பற்றை கடக்குட்டிதான் தலையிட்டு ரண்டு பகுதியையும் தண்ணியள்ளும்படி தீர்ப்பு வழங்கினவன். அந்தத் தீர்ப்புக்குப் பிறகு குற்றமற்றதுகள் அந்தக் கிணத்தில் தண்ணியள்ளு றேலை. கிணறு கடந்துபோய் ஒரு வயல் அடைப்புக்கை தான் அள்ளு றதுகள். பாவம் உடையாற்ரை கடக்குட்டி ஆனையிறவுச் சணடேலை செத்துப் போச்சுதாம்.

ஆச்சியிட்ட வாளியை வாங்கினன். மாட்டுக்குத் தண்ணியை வைச்சிட்டு வண்டிலில ஏறினன். நல்ல றோட்டு. ஒரு பள்ளம் திட்டிய ளுமில்லை. பலகையடிச்ச வயல்மாதிரி அழுத்தமா இருக்குது. முந்தி இந்தியன் தார் வறுத்துப்போட்ட றோட்டு. ஒரு சத்தங்களுமில்லாமல் வண்டில் போய்க் கொண்டிருக்குது.

வலப்பக்கமா இருக்கும் சுடலையில ஒரு சவம் எரிஞ்சு கொண்டிருக்கு. சவத்தைச் சுத்தி ஒருத்தருமில்லை. முந்தி யெண்டா ஆக்கள் நிண்டு சவத்தை தடியளால இடிச்சிடிச்சு எரிச்சுக்கொண்டு நிற்பினம். பக்கத்தில சடைச்சு நிக்கிற பூவரசுக்குக்கீழை கனக்கப் பேர் நிப்பார்கள். முன்னால கள்ளுமுட்டியளும் பிளாக்களுமிருக்கும். காத்தான் கூத்துப்பாடிக்கொண்டிருப்பார்கள். சிலபேர் பிணம் மாதிரிக் கிடப்பார்கள். காலுகள் எறிஞ்சிருக்கும். ஊத்தை நாலுமுழ வேட்டியள் சிரய்ஞ்சுபோய் கோமணங்கள் தெரியும். கள்ளு நனைஞ்ச கடவாய் களில எறும்புகள் மொய்ச்சுக் கொண்டிருக்கும். சிலபேர் றோட்டில அடிபட்டு உருளுவார்கள். வாகனங்கள் வந்தாலும் எழும்ப மாட்டார் கள். அவிண்டு விழுந்த வேட்டியளை மாடுகள் சப்பிக் கொண்டிருக்கும்.

கூப்பிடு தூரமிருக்கும். வேறையொரு சுடலை இருக்குது. அதை சோனப்புச் சுடலை எண்டு சொல்லுறது. சுத்தவர மதிலுகள். மதிலுக்கு மஞ்சள் காவியடிச்சிருக்கு. சுவர்களில கரியளால தூசணங்கள் படமடு வங்களில எழுதிறமாதிரி வடிவா எழுதியிருக்கு. அந்தச் சுடலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவங்கள் வரேக்கை தண்டிகை பறையளோட வரும். சவங்களோட வாறாக்கள் கூடுதலா வேட்டியும் வெள்ளைச் சேட்டும்தான் போட்டிருப்பார்கள்.

அந்தச் சுடலைக்குப் பின்னுக்குத்தான் மாட்டுச்சவாரி நடக்கிற திடல் இருக்கு. வருசா வருசம் கலாதியா நடக்கும். போட்டியளுக்கு நான் வரேக்கை பொன்னனைத்தான் கூட்டிக் கொண்டு வறானான். நான் மாட்டை விட பொன்னன் வண்டிலில குப்பிறக் கிடந்து கொண்டு பட்டை தைக்கிற பெரிய ஊசியளால குண்டிப் பக்கத்துச் சதையளில குத்துறவன். அப்பிடிக் குத்தினால்தான் மாடுகள் வீச்சா ஓடும். போகேக்கை மாடுகளுக்குப் பருக்கின மிச்சச் சீல் சாராயங்களை ரண்டு பேரும் குடிச்சுக்கொண்டு போறனாங்கள்.

வெல்லன் பிள்ளையார் மணி " டாண் டாண் " எண்டு அஞ்சு மணியைக் காட்டிச்சுது. கோயிலின் முன்கதவுகள் எப்பவும் பூட்டிய படியே இருக்கும். பூசை நேரங்களில் மட்டும்தான் கதவுகளைத் திறந்து விடுவார்கள்.

கோயிலின் பின்தெரு எப்பவும் வெள்ளையா இருக்கும். ஊரிப்பாதை - மக்கிறோட்டு எண்டும் சொல்லுறது. சைக்கிளுகள் வீச்சா வரேக்கை " ஊ " எண்டு சத்தம் கேக்கும்.

பக்கத்தில கொஞ்ச வீடுகள் இடிஞ்சு அத்திவாரங்கள் மட்டும் அடையாளங்களுக்குக் கிடக்குது. அதை பத்து வீட்டுத் திட்டம் எண்டு சொல்லுறது. அதில முன்னம் மத்தொனிச்சனங்கள் தான் இருந்ததுகள். இப்ப எருக்கலையன் மூடியிருக்கு. அதுகளுக்கு மறைவில இருந்துதான் முந்தி இந்தியன் ஆமி எங்கட கப்டன் மோசன் மாஸ்ரரை வெள்ளை றோட்டில வைச்சுச் சுட்டவங்கள். நெல்லியடிப்பெற்றோல் சயிற்றுக்குப் பக்கத்தில கொஞ்ச ஆமியள் நிண்டவங்கள். அவங்களைச் சுட்டுப்போட்டு வரேக்கேதான் மோகன் மாஸ்ரரை சுட்டவங்கள்.

என்னோட மோகன் மாஸ்டர் நல்ல பழக்கம். தில்லையம் பலப் பிள்ளையாருக்கு வந்தால் மோதகங்கள் குடுக்கிறனான். சில நேரங்களில வண்டிலில ஏத்திக்கொண்டுபோய் வெற்றி காட்டு வெளியில றக்கிறனான். அவங்கள் நிண்டால திருநீறை நெத்தியில அப்பக் குடுக்கிறனான். புக்கைப் பானேக்கை சொப்பிங் பையாலை குண்டைச்சுத்திப்போட்டு தாக்கிறவர். இப்பவும் அந்த முகம் கண்ணுக்கை ஆடுது. என்னால தாங்கேலாமல் கிடக்குது.

உப்பு மாலடியில வண்டில் போகுது. முன்னை உப்புகளை அள்ளி அதிலதான் மாலுகள் போடுறவர்கள். வல்லபுரக் கோயில தீத்தக்கரை மாதிரி சனங்கள் நிண்டு உப்பு அள்ளுவார்கள். எல்லாச் சாதியையும் கடலுக்கை காணலாம். அப்ப காவல் கடலுக்கு. ஒரு தரும் வீடுகளுக்கு உப்புகளைக்கொண்டு போகேலாது. பிடிச்சால் குற்றம். கோட்டுக்கும் போகவேண்டி வரும்.

மால்வாச்சர் கதிரவேலு என்னோட நல்ல பழக்கம் . நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டில மறிச்சு கொஞ்ச மோதகங்களும், புக்கையும் குடுத்தன் எண்டால் கொஞ்ச உப்பு பையுக்கை போட்டுத் தருவான். கற்கண்டு மாதிரி நல்ல வெள்ளையுப்பு. ஆனையிறவு உப்பும் தோத்திடும். கங் காணி கண்டும் காணததுமாய் இருப்பார். அவருக்கு எண்ணேல அவிச்ச மோதகங்களை ஒரு பையுக்கை போட்டு கதிரவேலு விட்டைக் குடுப்பன்.

மாலுக்கு முன்னால வெற்றி காட்டுப் பிள்ளையார் கொயில். அதுக்கு முன்னால பெரிய ஆலமரங்கள். அதுக்கு கீழை இருந்துதான் முந்தி சிலோன் ஆமிக்கு கண்ணிவெடி வைச்சவையள். கங்காணியின்ர கட்டிடமும் உடைஞ்சது. மாலுக்கு முன்னால கிணறு மாதிரிக்கிடங்கு, தண்ணியும் வந்தது. அந்தக்கிடங்கு மட்டும்தான் இந்தியன் ஆமி றோட்டுப் போட்டவன்.

இனிக் கிடங்கும் திட்டியும், வண்டில வீச்சா ஓட்டேலாது. பெரிய சத்தங்களோட வண்டில் போகுது. ஒரு பெடியளையும் தரவையில காணேல.

முந்தியெண்டா றோட்டுக்கு இரு கரையளிலயும் மாடுகள் மேஞ்சு கொண்டிருக்கும். பெடியள் பந்து விளையாடிக்கொண்டிருப் பாங்கள். பட்டங்கள் ஏத்திக்கொண்டிருப்பாங்கள். கரணவாய்ச் சந்தியில வரேக்கை விண் காதையடைக்கும். றோட்டை முட்டிக் கொண்டிருக்கும். கடலில வலை வீசிக்கொண்டிருப்பார்கள். பட்டாந் தோட்டை மதகிலை மாம்பழத்தார் தூண்டில் போட்டுக்கொண்டிருப் பார். பக்கத்துக் கள்ளுக்குதத்தில கச்சேரி வைச்சுக் கொண்டிருப்பார் கள். எல்லாரும் வண்டில மொச்சுக் கொண்டு வருவார்கள். எல்லாருக் கும் ரண்டு ரண்டு மோதகங்களாக கொடுத்துக் கொண்டிருப்பன். மேற் பகுதி சண்முகத்தின்ர செம்மறி ஆடுகள் கூடார வண்டில பாத்துப் பாத்து வெருண்டோடுங்கள். பெடியளைப் பேசிப் பேசி ஆடுகளை ஒண்டாக்குவார் சண்முகத்தார்.

மண்டான் சந்தி வருகுது. அவங்கள் திரள் திரளா நிக்கிறாங்கள். அவங்களைப் பார்க்க எனக்குப் பயமா இருக்கு. சந்திக்கு இடப்பக்கமா சிறாப்பற்றை காணி - அதுக்குப் பக்கத்தில் குட்டியற்ரை பெரிய கல் வீடு. அதைச் சுத்தி நிறையத் தென்னையள். தென்னையளில குரும்பை யள் ஒண்டையும் காணேல - சோடை பிடிச்சு நிக்குதுகள். வீட்டில கூரையள் ஒண்டையும் காணேல. வேலியள் ஒண்டுமில்லாமல் ஒரே வெளியாக்கிடக்குது. சந்தியடியில நிண்டு பாக்க கடக்கரை கிளியறாத் தெரியுது. வலது பக்கத்தில கதிரிப்பிள்ளேன்ர பளங்காணி. பாக்க வயிறு பத்தியெரியுது. என்ன மாதிரி நீட்டி நிமிர்ந்த சறுத்தப்பனையள். பின்னேரவெயில். சரிபேக் பனங்கூடலப் பார்க்க வேணும். ச்சாய், என்ன வடிவு ? தேவலோகக் காட்சி அது. ஊர்மனையளுக்கை இரையிற வாகனங்களின்ர சத்தங்களை கேக்க எனக்கு குலப்பன் அடிக்குது.

வீட்டுச் சங்கடங்களுக்குச் சங்கடங்கள் மோதகங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கிறதுகளின்ர இடங்களில் புல்லுகள் முளைச்சிருக்கு. கறுப்பையா வீட்டுத்தண்ணித் தொட்டி கறுத்துப் போய்க்கிடக்குது. கூடுதலா மோதகங்கள் குடுக்கிற இடங்கள் இதுகள்தான். குடுக்கிறதுக் கொண்டே கூடுதலா அவிச்சுக்கொண்டு வாறனான்.

அப்ப சிறிமாவின்ர காலம். ஒரு றாத்தல் செத்தல் அம்போருவா வித்தது. தோட்டக்காறர் உயந்தது அவளின்ர காலத்தில தான் - செத்தல் வித்துத்தான் கல்வீடும் கக்கூசும் கட்டினான். பேந்து பாண் குதிரை விலை வித்து பசி, பட்டினியள் கூடியதும் அந்தச் சீமாட்டியின்ர காலத்திலதான்.

நெசவுசாலை வருகுது, அதுக்குப் பக்கத்தில ரத்தினம் கடை, பக்கத்தில தங்கம்மா கடை. கொடிகாமத்து மாம்பழங்கள், பிலாப்பழங் கள் எல்லாம் தங்கம்மா கடையில குவிஞ்சு இருக்கும். அப்ப ரண்டு கடையளும்தான். வண்டில றப்பாட்டிப் போட்டு அதிலதான் மண்டான் சுருட்டு வாங்கிறனாள், அப்ப மண்டான் சுருட்டைவிட வேறை சுருட்டுகள் ஒண்டும் கடையளில அழியாது. கொழும்புக்கடை யளிலயும் மண்டான் சுருட்டெண்டுதானாம் கேட்டு வாங்கிறதுகள்.

இஞ்சாலை கொஞ்சக் கொஞ்சச் சனங்கள் இருக்குதுகள். வண்டில கண்டிட்டு ஒருதரும் மோதகங்களுக்கு ஓடிவரேலை. நெசவு சாலைக் காணியிக்கை கொஞ்சப் பெடியள பந்து விளையாடிக் கொண்டிருக்குதுகள்.

முந்தி அவடம் ஒரே பத்தையளா இருந்தது. அது அரசாங்கக் காணி ஒரு வருசமூட்டம் காணியள் இல்லாததுகள் கொங்சப்பேர் சேந்து அதுக்குள்ள கொட்டில்கள்போட்டதுகள். சிலர் அந்தக் காணியள் தங்கட எண்டு சண்டையிட்டார்கள். கொட்டில்கள் போட்டதுகள் எழும்பேல. சண்டைக்கு வந்தவையகள் கொஞ்சக் குழுக்களைக் கூட்டிக் கொண்டு வந்தார்கள். கூட்டி வரப்பட்டவர்கள் கொட்டில் போட்டது களுக்கு அடிச்சுப் போட்டுப் பிடிச்சுக்கொண்டு போனாங்கள். கொட்டில் போட்டதுகள் எல்லாம் சேந்து பிடிச்சதுகளை விடுவிக்க ஊர்வலமா போனதுகள். ஊர்வலங்களை மூத்தனார் கொயிலடியில குழப்பி போட்டு விடிச்சதுகளை அடிச்சு முறிச்சப் போட்டு கொண்டு வந்து விட்டாங்கள்.

இப்ப அந்தக் காணியிக்கை ரண்டு மூண்டு வீடுகள்தான் இருக்குது.

மண்டான் ஏத்தத்தைத் தாண்டிப் போனன். அங்கால குடிமனையள் ஒண்டுமில்லை. வல்லை வெளி - பத்தையளும், செடி யளும், சருகுகளுமா றோட்டு - சூரியன் விழுந்து போச்சுது. மம்பல் பொழுது.

முந்தியான் சந்தோசங்களையும், ஆட்டங்கள் பாட்டுக்களை யும், பழகிய முகங்களின்ர பரிச்சயங்களையும் நினைச்சு வந்ததில நேரம் போனதே தெரியேலை. இனி அங்கால போகேலாது - அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவங்கட இடங்கள். அவங்கட நேரங்கள். வீட்டை பிள்ளையள் தேடப் போகுதுகள். சோத்துக்கை தண்ணிவிடாமல் விளக்கு நூக்காமல் இருக்கப் போகுதுகள்.

வல்லைச் சுடலையடியில ஒரு வெளிச்சம் தெரியுது. அவங்கள் வந்து கொண்டிருக்கிறாங்கள். லைற்று வெளிச்சத்துக்கு வண்டில் தெரிஞ்சால் வெடிவைப் பாங்கள். எனக்கு அறிவு கெட்டுப் போட்டுது. எங்கை போறகெண்டே தெரியேலை. அவதிப்பட்டு ஒரு தென்னங்காணி யிக்கை வண்டிலத் திருப்பினன்.

அது கல்லுவத்துச் சிவராசாவின்ர தென்னங்காணி. சிவராசா வீட்டை நான் வெங்காயம் கட்டவாறனான். நான் தங்கினால் சிவராசா பேசமாட்டான். வாகனம் கிட்ட வந்து கொண்டிருக்குது. கனவாகனங் கள் போல. நிலம் அதிருது ; அவிட்ட மாடுகளை அப்பிடியே விட்டிட்டு சரிஞ்சு விழுந்த துலாவை நிமித்திக் குத்துக்கட்டேல விட்டிட்டு கொட்டிலுக்கை ஓடினன்.

சின்னக்கொட்டில் மேல ஓடு போட்டிருந்தது. ஒரு மூலேலை பழைய இரும்புகள் அடுக்கி இருந்தது. அதுக்குப் பக்கத்துக் குந்தில் இருந்து கையளை ஊண்டினன். கை ஓடிச்சுது. அந்தக் குந்துகளில தான் கந்தாளந் திட்டிக்குப் போட்ட உரங்களை வைக்கிறவர் சிவராசா.

வாகனங்கள் போய்க் கொண்டிருக்குது. சாவச்சேரிப்பக்கம் பிரச்சனையள். அங்கதான் போகவேணும். வெளிச்சங்கள் கொட்டி லுக்கை விழ எனக்குப் பயமா இருந்தது. நான் இருக்கிற முன்னாலு மூலேக்கை ரண்டு இளந்தாரியள் துவக்குகளை தெருப்பக்கமா நீட்டிக் கொண்டிருந்தாங்கள். அவங்களைக் கண்டவுடனை நெஞ்சு விறைச்சுக் கொண்டு வந்தது. ஒருதன் என்னைப் பார்த்துச் சிரிச்சான். நல்ல வடிவான முகம். மீசை முளைக்காத வழுவல். வேர்வை நாத்தம் மூக்கில் அடிச்சது. பயத்தில மணம் ஒண்டும் பெரிசாத் தெரியேல. கடைசி வாகனம் வண்டில் தட்டியை கடந்து போகுது. இருந்தவனில ஒருதன் எழும்பினான்.

“ ஐயா மோதகமிருக்கே ? ” எழும்பினவன்தான் கேட்டான். நான் திகைச்சப் போனன். என்ர வண்டிலுக்குப் பின்னால உரிஞ்சான் குண்டியோட அல்லாட்டி பட்டங்களோட மோதகங்களுக்கு கையளை நீட்டினவனாத்தான் இருக்கோணும். எனக்கு மனம் ஆறிச்சுது.

இதழ். 70
தை - மாசி , 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைக்கோணேஸ்

## தீப்பிடித்த நினைவோரம் பாயும் ஆறு

சிலாவத்தை சண்முகம் மாமா செத்துப் போய்விட்டாராம். மாலை பாடசாலையால் வந்தபோதுதான் அம்மா சொன்னா. அப்போதே சைக்கிளில் புறப்பட்டால் என்ன என்றுதான் ரங்கநாதன் நினைத்தான். ஆனாலும் நாலு கிலோ மீற்றர் சைக்கிளோடி புதுக்குடியிருப்பு வரைக்கும் புளுதி குடித்துக்கொண்டு வந்த அவஸ்தையும் வெக்கையின் அந்தகாரமும் பஞ்சியாக இருந்தது. காலையில்தான் போகவேண்டும். சண்முகம் மாமா இரத்த உறவில்லையே தவிர அவனுக்கு வாஞ்சையான மாமாவாகத்தானிருந்தார். ஊரில பக்கத்து வீடு. எப்படியாவது போயே ஆகவேண்டும். கணேசிடம் லீவுக் கடிதத்தக் குடுத்தனுப்ப வேண்டும். இல்ல எண்டால் பிறின்சிபல் சத்தம் போடுவார். உலகவிளப்பம் தெரியாததுகள், ஆனா...ம் மன்னா ... மாவன்னா... அம்மா எண்டு சொல்லவும் ரெண்டும் ரெண்டும் நாலெண்டு சொல்லவும் மட்டும் தெரிஞ்சால் போதும் எண்ட நினைப் போடு சீவிக்கிற கேசுகளில் அதுவும் ஒண்டு.

காலையில் ஏழு மணிக்கே புறப்பட்டான். காலை வெயில் மரங்களை ஊடுருவி தெருவில் இறங்கியது. பனியும் ஒளியுமாகச் சேர்ந்து ஒரு சோபித உலகம் விரிந்தது தெருவெங்கும். காலை வேளை சைக்கிளை மிதிப்பது உடலுக்கும் மனசுக்கும் இதமாக இருந்தது. மாமாவின் நினைப்பு எழுகிறபோதெல்லாம் அது மறைந்து துக்கம் தான் மூட்டியது. இன்னும் நாலைந்து கிலோ மீற்றர் ஓடவேண்டும் ஊர்போய்ச் சேருவதற்கு. சைக்கிளில் வேகம் கூட்டினான்.

முல்லைத்தீவு நகரைத் தாண்டும்போது மனது அதிர்ந்தது. ஒரு பெரும் நகரம் வெறும் கற்குவியாலாய் கிடந்தது. வண்ணாங்குளம் முடக்கில் திரும்பியபோது வெயில் ஓரளவு கூடி எறித்தது. முன் கூடையில் இருந்த தொப்பியை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டான். முகத்தில் அனலடித்தது.

அந்த ஊரில் இருந்து பத்து வருடத்திற்கு முன்னர் அவன் இடம் பெயர்ந்து போனான். வங்கக்கடல் வழியே பெரும் கரையிறக்கல் மூலமாகவும் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஊரின் நாலா திசைகளின் வழியேயும் நகர்ந்த இராணுவம் அகப்படும் சனங்களை சுட்டவாறு வருகிறதாம் என்ற செய்தி கேட்டுப் பதகழித்துத்தான் போனான். வீட்டை விட்டு வெளிக்கிடுவதற்கு அவனின் அம்மா மறுத்து அழுது புலம்பியவாறு வந்தா. அவன் சைக்கிளில் பெட்டிகளையும் வீட்டுப் பொருட்கள் சிலவற்றையும் சுமந்தவாறு நடந்தான். ஊரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டு நந்திக்கடல் கடந்தும் வட்டுவாகல் பாலம் தாண்டியும் இருப்புத் தேடிப் போனது. ஒரு சில நாட்களிலோ அல்லது ஒரு சில மாதங்களிலோ ஊருக்குத் திரும்பிவிடலாம் என்றே ரங்கநாதன் நினைத்தான். ஆனாலும் ஆறு வருடங்களின் பின்னரே அவனது ஊருக்குத் திரும்ப முடிந்தது.

ஊரில் இப்போது ஏராளமான சனங்கள் குடியேறி விட்டார்கள். அவனது பெற்றோர்கள் புதுக்குடியிருப்பிலேயே காணிவாங்கி வீடும் ஒன்று போட்டிருந்ததால் அங்கு இன்னமும் செல்லவில்லை.

ஆஸ்பத்திரி முடக்கில் திரும்பியபோது, அலரியும் வேறு காட்டுச் செடிகளும் முளைத்திருந்தன. கீழே புல் மண்டி கண்ணி வெடி, மிதி வெடி ஏதும் இருக்குமோ என அச்சப்படும் படியாக இருந்தது. அந்த இடம் அவனுக்கு நன்றாக ஞாபகமிருந்தது. அந்தப் பகுதியில் இருந்த வீடுகளில் கொஞ்சம் அழகான பெண்கள் இருந்தார்கள். வாசலில் இருந்து வீடுவரை குறோட்டன் செடி இருக்கும். இப்போது அந்த இடத்தில் பெரிய கிடங்கும் பள்ளமுமாய் தெரிந்தது. கிபிரோ மிக்கோ அங்கும் பதம்பார்த்திருக்க வேண்டும்.

ரங்கநாதன் வீட்டிலிருந்து ரவுணுக்குப் போகிற சமயங்களில் அந்த வீட்டுப் பெண்கள் படலை திறந்தபடியிருக்க கதைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்திருக்கிறான். வேறு சில சமயங்களில் ஜீன்ஸ் போட்ட அந்தப்பகுதி ஆண்கள் யாராவது சைக்களோடு நிற்பார்கள். அந்தப் பெண்கள் அவனைச் சுற்றி நின்று கதைப்பார்கள். அதில் கொஞ்சம் ஒல்லியான நிறமான பெண் எடுப்பாக இருப்பாள். கூந்தலை நல்ல ஸ்ரைலாக வாரியிருப்பாள். எந்த நிறக்கவுணிலும் அவள் அழகாய்த் தானிருப்பாள். ஒரு சின்னப் பெண் வயது ஏழோ எட்டோ இருக்கலாம். ஒன்றுமேயறியாதவளாய் அவர்கள் கதைப்பதை வாய்பார்த்தபடியே நிற்பாள். அவர்களிருவருக்கும் இடைப்பட்டவள் பொது நிறம். தலையை பொப் " கட் " வெட்டியிருந்தாள். அநேகமான நாட்களில் அவள் ரீ சேட்டும் ஸ்கேட்டும்தான். பச்சை ரீ சேட் கறுப்பு ஸ்கேட், மஞ்சல் ரீ சேட் கறுப்பு ஸ்கேட், சிவப்பு ரீ சேட் கறுப்பு ஸ்கேட் என கறுப்புக்கு மச் பண்ணுற மாதிரி கலர் கலராய் கலக்கினாள். அவர் களுக்கு அண்ணன்களும் கண்டிப்புக் குறைந்த அப்பாவும் இல்லா மலிருக்கும் போல என அப்போது ரங்கநாதன் நினைத்ததுண்டு. அவர்கள் தொண்ணூறாம் ஆண்டு இராணுவம் நகரை ஆக்கிரமித்த தோட இடம்பெயர்ந்து குடும்பத்தோடு இந்தியாவுக்குப் போனார்கள். அவர்கள் போன பிறகும் நீண்டகாலமாக அந்த ஒல்லியான பெண்ணின் முகம் அவனது ஞாபகத்திலிருந்தது.

அவன் ஆஸ்பத்திரி வளவு தாண்டிப்போனான். வெயில் சற்று ஏறியிருந்தது. வெக்கை தெருவில் அலைந்து கொண்டிருந்தது.

அவன் சண்முகம் மாமாவைப் பற்றி நினைத்தான். சண்முகம் மாமாவிற்கு ரெண்டு பெண் பிள்ளைகளிருந்தார்கள். ஒருத்தி பத்தாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு படிப்பை நிறுத்தியிருந்தாள். அவளுக்கு மெசின் ஓடுகிற குமுழமுனைத் தவத்தானைக் கட்டி வைத்தார்கள். கட்டிய கொஞ்சக் காலத்திலேயே மாமா போட்ட நகையெல்லாம் அவன் விற்றுத் தீர்த் திருந்தான். மாமாவுக்கு நீண்ட நாட்களின் பின்னர்தான் தெரிந்தது அவன் குடிகாரன் என்று. மாமாவுக்குத் தெரிந்த பின்னர் அவன் பப்பிளிக்காகக் கள்ளடிக்கத் தொடங்கினான். பாட்டுப் பாடிக்கொண்டு அவன் மெசின் ஓடிக்கொண்டு போவதை சனங்கள் எல்லாம் வேடிக்கை பார்த்தார்கள். மாமாவுக்கும் பிள்ளைகளுக்கும் வெட்கமாக இருந்தது. மாமா ஏதாவது சாடைமாடையாகச் சொன்னால் அவருக்கு முன்னாலேயே மனைவிக்கு உதைதான். கொஞ்ச நாட்களிற்குப் பிறகு சீதனமாகக் கொடுத்த தண்ணி முறிப்பு வயற்காணியையும் குமுழமுனையில் யாருக்கோ விற்றிருந் தான். இரண்டாமவள் படித்துக் கொண்டிருந்தாள்.

மூத்த பிள்ளையின் வாழ்வு கண்டு உடைந்து போனார். மாமா சில காலங்கள் தாடி வழிக்காமல் ஆண்டிகள் மாதிரித் திரிவதைக் காண முடிந்தது. இரண்டாவது பிள்ளையின் படிப்பிலும் வேறு விடயங்களிலும் சரி அக்கறையற்றுத் திரிந்தார். " என்ர பிள்ளைய நாசமாய்ப் போனவனுக்குக் கட்டிக் குடுத்து அதுன்ர வாழ்க்கையைப் பாழடிச்சுப் போட்டனே " என அழுது புலம்பினார். மாமாவை அந்தக் கோலத்தில் காண சகிக்க முடியாமலிருந்தது. மாமி எதுவும் பேச இயலாதவளாய் மௌனம் காத்துக் கிடந்தாள். சில நாட்களின் பிறகு தவத்தான் மனைவியையும் அழைத்துக்கொண்டு குமுழ முனைக்கே இருப்புக்குப் போனான். போகும்போது எஞ்சியிருந்த ஒரு சில பொருட்களையும் மெசினில் ஏற்றிக்கொண்டு போனான். அப் போது அவள் கர்ப்பமாகியிருந்தாள். அவளுக்கு குழந்தை பிறந்ததுக்குப் பிறகு கூட்டிப்போகும்படி மாமாவும் மாமியும் எவ்வளவு வற்புறுத்தி னார்கள். தவத்தான் ஏதும் கேளாதவனாய் மெசினை ஓட்டிப் போனான். அதற்குப் பிறகு மாமாவைப் பழைய நிலையில் ஒருபோதும் பார்க்க முடிந்ததில்லை. முன்னரென்றால் வெள்ளைச் சாரமும் அரைக்கைச் சேட்டுடனும் நெற்றியில் சந்தனம் பளிச்சிட வருவார். மாமாவுக்கு ஐம்பது வயதைக் கடந்தும் தலையில் நரை கண்டதில்லை. நல்லெண்ணை வைத்து மயிரை நன்றாக அமர்ந்து கிடக்கும்படியாகச் சீவியிருப்பார். நல்ல ஆன்மீக சிந்தனை வயப்பட்ட பக்குவ உணர் வோடு பேசுவார். யாருடனும் மரியாதை தப்பி எப்போதும் பேசியது கிடையாது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காயாமோட்டைப் பிள்ளை யார் கோயிலுக்கு மாமியோடு சைக்கிளில் போவார். மாமி புதிய பெண்ணென்று நினைக்கும்படியாக நன்றாக உடுத்திப் பூ வைத்து முன்னால் அமர்ந்திருப்பாள். பிள்ளையார் கதை தொடங்கினால் இருபத்தியொரு நாளும் மாமா பிள்ளையார் கதை படித்துப் பயனும் சொல்வார். கண்ணகை அம்மன் கோயிலில் கோவலன் கூத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கும் நாட்களில் மாமாவைப் பார்க்க வேணும். எல்லோரும் அவரைக்கண்டு அதிசயிப்பர். பாண்டியனுக்கு ஆடுவதில் மாமாவைப் போல இனி ஒருத்தன் பிறந்து வரவேணும். கரப்புடுப்புப்போட்டு பெரிய நீண்டு பருத்த முடியும் அணிந்து கையில் வாளுடன் மாமா ஆடும் கொட்டகைக்கு வரும்போது பெடியள் பக்கமிருந்து விசிலடி வானைப் பிளக்கும். வட்டமாகத் தடியை நட்டு கயிறு கட்டியிருப்பார் கள். ஒவ்வொரு தடியிலும் ரியூப் லைற் பிரகாசிக்கும். மேலே வெள்ளை கட்டிச் சோடனை செய்திருப்பார்கள். உடுப்புப்போட்டு வெளிக்கிடும் இடம் கொஞ்சத் தூரம் தள்ளி இருக்கும். அங்கிருந்து வந்து வட்டக் கொட்டகைக்கு முன்பாக நின்று " தெய்ய தீங்கு தலாங்கு தரிகிட தச்சச்சும் " என்று சுழன்று ஒருமுறை துள்ளி உள்ளே போகும் ஒய்யாரத்தைக் காணக்கோடி கண்கள் வேண்டும். ஆனால் மாமா அப்பிடிச் சுழன்று ஆடுவதை தண்ணி போட்டு விட்டுத்தான் ஆடுவதாக கைலையும் சின்ராயனும் ஒருமுறை சீண்டினார்கள். அந்தக் கூத்தில் ரங்கநாதனுக்கு அவர்களோடு நடந்த வாக்கு வாதத்தோடு சரி ; பின்னர் அவன் சைக்கிளில் போகின்ற இந்த நிமிடம் வரை பேசியதில்லை. பேசுவதற்கு பின்பு அவர்களுமில்லை. இப்போது உயிருடன் இருக்கிறார்களோ இல்லையோ என்பது வேறு விசயம்.

அப்போது கைலைக்கு இயக்கத்தில் சேரவேணுமென்று எண்ணமிருந்தது. அவனது போக்குகளும் பேச்சுகளும் கொஞ்ச நாட்களாக மாறியிருந்தன. திடீரென்று ஒருநாள் நாலைந்து பேரோடு சைக்கிளில் கைகாட்டிப் போனான். அடுத்த நாள் ஊரெங்கும் கைலையைப் பற்றிய பேச்சே நிறைந்திருந்தது. கைலை போய் விட்டான். கள்ளப்பாட்டில் இருந்து வள்ளம் புறப்பட்டதாகவும், பத்துப் பன்னிரண்டு பேரோடு கைலையும் மண்ணை மீட்கப் போராடு வதற்காகப் பயிற்சிக்குக் கடல் தாண்டிப் போனான் என்றும் பேச்சு நிலவியது. அவன் பேரில் அப்போது ஊரில் எல்லோருக்குமே ஒரு மதிப்புண்டாகியது. அவன் தனது தந்தையையும் அன்பான தாயையும் பிற சகோதரர்களையும் விட்டுத் தனியே போனான் என்கிற உயர்ந்த படிமம் அவன் மீது விழுந்தது. அவன் போனதற்குப் பிறகு அவனது தகப்பனை தெருவில் காண்கிற போதெல்லாம் அவரை முகங்கொள்ள முடியாமல் தவித்தான். அப்போதெல்லாம் அவரது முகம் துயரம் அப்பிக்கிடந்தது. அதைக் காணும்போது ரங்கநாதனுக்கு அழுகை பொத்துக் கொண்டு வரும். அவரால் எப்படித் தாங்க முடிகிறது, இந்த மாபெரும் பிரிவை என அப்போ அவன் நினைத்ததுண்டு.

கைலை போனதன் பிறகு சின்ராயன், தறுமன், சிவம் என ஒவ்வொருத்தராகத் திக்கொன்றாய்த் திசையொன்றாய்ப் போனார்கள். விடிந்தால் ஊரில் யாரோ வீட்டை விட்டுப் போன செய்தி காத்திருந்தது. எல்லாம் பெரிய மாற்றமாகவும் எழுச்சியாகவும் எல்லோர் மனதிலும் விழுந்தது. விடுதலையைப் பெற்றுத்தரப் போகிற வீரர்களைப் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமமும் பிரமிப்பும் விரிந்து கொண்டே போனது. அவர்களின் வரவுக் கான காத்திருப்பு நீண்ட காலங்களாகக் கழிந்தது.

அப்போது இந்திய இராணுவத்தினர் வீதிகளில் உலா வந்தனர். அவர்கள் முறுக்காவும் தேங்காய்ச் சொட்டும் விரும்பிக் கேட்டார்கள். இந்த நேரத்தில் தான் எண்ண முடியாத அற்புதங்கள் எல்லாம் நிகழ்ந்தன. வருடக்கணக்காய்க் காணாமலிருந்த கைலை நகர்த்தெருக்களில் இராணுவப் பாதுகாப்போடு வலம் வந்தான். மாலை நேரங்களில் டெனிம் ஜீன்சுடனும் சோகோ சேட்டுடனும் மெய்க்காப்பாளர்கள் சகிதம் கடைகளுக்குப் போனான். இடுப்பில் பிஸ்டல் இருந்தது. றிம் பண்ணின தாடி அவனுக்கு எடுப்பாகத்தான் இருந்தது. சனங்கள் திகைத் தார்கள். அவனைப்பற்றியிருந்த படிமம் உடைந்து சிதறியது.

அது ஒரு மழைக்காலம் என ஞாபகம். நகர்க் கடைகள் அநேக மானவை சாத்துப்பட்டிருந்தன . ஓரிரண்டு தேநீர்க்கடைகளும் சாராய பாரும் திறந்திருந்தன. சந்தியடி ஆலமரத்தில் காகங்கள் சிறகடித்தன. பைத்தியம் ஒன்று ஆடி ஆடி நனைந்து கொண்டே போனது. அப்போது தான் அது நிகழ்ந்தது. இராணுவ ஜீப்பொன்றில் சுந்தரி சுடப்பட்ட நிலையில் கட்டி இழக்கப்பட்டான். ஆலடிச்சந்தையில் திரும்பும்போது கைலை அநாயாசமாக ஜீப்பை ஓட்டிப் போனான். சுந்தரியின் கால்கள் ரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஜீப்பில் கட்டியிருந்தார்கள். கைகள் பின்னால் இழுபட்டன . முகம் வானைப் பார்த்தபடியிருந்தது . ஜீப்பின் வேகத்துக்கும் தெருவின் சீருக்கேற்பவும் தலை எழும்பி விழுந்து போனது. இழுபட்ட இடமெங்கும் இரத்தமும் சதையுமாகக் கிடப் பதைச் சனங்கள் கூடி நின்று பார்த்தனர். மழை தூறிக்கொண்டுதானி ருந்தது. மற்றொரு நாள் விஸ்வநாதனை நகரில் வைத்து இராணுவம் கைது செய்து கொண்டு போனது. அப்போதும் கைலை கூடவே இருந்தான்.

இந்தக் காலம் என்றுதான் நினைவிருக்கிறது. சின்ராயன் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது நேவியோட நடந்த ஒரு கடல் சண்டையில் குப்பி கடித்து செத்துப் போனான். தறுமன் ஒதியமலையில் ரக்ரர் ஒன்றில் போகும்போது சிங்கள இராணுவம் வழிமறித்துத் தாக்கியதில் உடனிருந்த ஆறு போராளிகளோடு வீரச் சாவடைந்தான் என்கிற செய்தி அறிந்ததும் இந்தக் காலப்பகுதி என்று தான் ஞாபகம்.

வெயில் நன்றாக ஏறிவிட்டது. ஊரை நெருங்கியபோது பனங் கூடல்களும் வெளியுமாய் இருந்தது. வயல்கள் வெறுமை தட்டிக் கிடந்தன. பனங்கூடல்களுக்கிடையில் எங்காவது ஒரு வீடு தென் பட்டது. ஊரின் எல்லைக்குள் போனபோது ஆள் நடமாட்டமிருந்தது. தெரிந்த முகங்களெதுவுமில்லை. வேறு ஊர்களில் இருந்து இடம் பெயர்ந்த புதிய சனங்களாகவே அநேகமிருந்தனர். சந்தியில் ஒரு தேநீர்க்கடையும் சலூனும் இருந்தன. கிடுகால் வேயப்பட்ட இன்னு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொரு கடை, அது சைக்கிள் திருத்துகிற கடையாக இருக்கலாம். பூட்டியேயிருந்தது. பழைய வாசிகசாலையில் இப்போது சங்கக்கடை. இப்போதும் சனங்கள் முண்டியடித்தார்கள். முன்னால் நின்ற இத்தியின் கீழ் சிறுவர்கள் போளை அடித்துக்கொண்டு நின்றார்கள். வாசிக சாலையை அடுத்து வரப்போவது கீதா வீடு. வாழ்வின் இறுதிக் கணம் வரை எதை எதை மறந்தாலும் கீதாவை அவனால் எப்படி மறக்க முடியும்?

" ரங்கண்ண ! தலையணை உறையொன்றுக்குப் பெற்றன் போடப் போறன் . வடிவான படம் ஒன்டு கீறித்தருவீங்களோ ? " என்று தொடங்கின பழக்கத்தில் இருந்து அவளது அன்பும் பேச்சும் எத்தகைய மகத்தானதாக இருந்தது அவனுக்கு. அவளது வீட்டுக்கு அவன் முதன் முதலாகப் போனபோது உள்ளூரப் பயந்து கொண்டே போனான். மனசுக்குள் நடுங்கியது. பேச்சு வரவில்லை. அவளைப் பார்த்துப் பேசவே சங்கடப் பட்டான். பேசும்போது வேறெங்கோ பார்த்தவாறு பேசினான். அவளது குரலும் தணிந்துதான் இருந்தது. அவளும் உள்ளுக்குள் தடுமாறுகிறாள் போல.

அன்று தொடங்கிய அவளது வீட்டுக்கான பயணம் அவளோடு அவளது குடும்பத்தையும் சேர்த்து ஐரோப்பிய நாடொன்றுக்கு வழி அனுப்பும் வரை எத்தனை மாலை நேரத் தேநீர்களை அற்புதமானதாக வும் ஆனந்தமானதாகவும் ஆக்கியிருந்தது.

" ரங்கன் கீதான்ர அப்பாவுக்கு சிற்றிசென் கிடைச்சிட்டுதாம். இனி எங்கள எடுக்குறது ஈசியாம். கீதாவையும் என்னையும் உடன கொழும்புக்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறார் " என்று சோமளா அன்ரி சொல்லும் வரையிலும் எத்தனை அதிஉன்னதமான கனவுகளில் அவன் மிதந்திருந்தான். தலைக்குள் ஆயிரம் சிதறல்கள் . கீதா போய்விடப் போகிறாள். இனி அவளைப் பார்க்க முடியாது. கீதாவை முகம் பார்க்க முதன்முதலில் எவ்வளவு கஸ்ரப்பட்டானோ அத்தனை அவஸ்தையுடன் அவளைப் பார்த்தான். அவளும் தனக்குள் துக்கித்துக்கொள்கிறாள் போல முகம் சுண்டித்தான் போயிருந்தது. இந்தப் பிரிவை அவள் எப்படி எடுத்துக்கொள்கிறாள். நல்ல அண்ணன் ஒருவனைப் பிரிகின்ற துக்கமா? அல்லது சாதாரண நட்பைப் போல எண்ணினாளா? அல்லது அவனைப் போலத்தான் அவளும் உடைந்துதான் போனாளா?

எல்லாமே ரங்கநாதனுக்கு நினைவிலோடியது. அவள் போன சில வருடங்களின் பின்னர் அவளது சித்தியை ஒரு முறை சந்தித்தபோது கீதாவுக்கு இரண்டு குழந்தைகளென்றும் கடைசியாகப் பிறந்தது பெண் குழந்தையென்றும் போட்டோவைக் காட்டினாள். குழந்தை கீதாவைப் போலத்தான் இருந்தது. குண்டு குண்டான சொக்கோடு வசீகரமான கண்களால் சிரித்தது. " கீதாவின் போட்டோ இல்லையோ " எனக் கேட்க வேண்டும் போல இருந்தது. சித்தி என்ன நினைப்பாளோ என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி விட்டு விட்டான்.

கீதா வீடென்பதை உறுதிப்படுத்த அந்த இலந்தை மரம் ஒன்றுதான் எஞ்சியிருந்தது. அவன் அவளது வீட்டைக்கடந்து போகும் சமயங்களிலெல்லாம் உள்ளூர ஒரு பயமும் மகிழ்வும் பெருமிதமும் கலந்த ஒரு உணர்வுக் கலவையில் மிதந்தவாறே போவான். அப்போது அந்த இலந்தை மர நிழலின் கீழ் கீதா புத்தகம் வாசித்தபடியோ அல்லது தையல் வேலை செய்தபடியோ இருப்பாள். இப்போது அது தனித்துப் போயிருந்தது. இன்னுங் கொஞ்சம் தள்ளி சித்திரை மாதக்காற்றில் இலையுதிர்த்து துளிர்ப்புக்குத் தவமியற்றிக் கிடந்தன வேறும் சில மரங்கள். கள்ளச் சோளகம் தெருவெங்கும் சருகுகளை வாரி இறைத் திருந்தது. பனை ஒன்றிலிருந்து குக்குறுப்பாச்சான் விடாமல் கத்தியது. எரிந்த சாம்பல் மேட்டிலிருந்து தோன்றிய காளான்களைப் போல குடிசை வீடுகள் அந்த ஊரெங்கும் முளைத்திருந்தன. வீட்டின் ஒதுக்குப் புறங்களில் சீமெந்துக்கல்லினதும் ஓடுகளினதும் சிதறல்கள் தெரிந்தன. சில வீடுகளின் கிணற்றடிகளில் வாழை செழித்துக் கிடந்தது. இலை களில் ஒளிபட்டுக் குளிர் வர்ணமடித்தது. புதிய கமுகங் கன்றுகள் தென்னங்கன்றுகள் காணிகளெங்கும் குருத்துத் தள்ளியிருந்தன. ஊர் புத்துயிர் பெற்று எழுந்தது போல கோலம் கொண்டிருந்தது. இனிப்பய மில்லை. இந்த ஊரும் சனங்களும் இனி முன்னரைப் போலவோ அல்லது முன்னரை விடவோ எழுந்து விடக்கூடும். முன்னர் இந்த சனங்கள் எப்படி வாழ்ந்திருந்தார்கள். வயலும் தோட்டமுமென எவ்வளவு செழிப்போடிருந்தது நிலம். சோளகம் வீசி ஓய்கிற காலத்தில் ஊரின் சோபிதம் எத்தகையது. ஊரில் இருந்து லொறி லொறியாய் மீன்களேற்றிக் கொழும்பு போவார்கள். வத்துக்கள்ளுத்தேடி வாடிகளி லிருந்து வருபவர்கள் மாலை நேரங்களில் ஊரூராய் அலைந்து திரிவார்கள்.

மேகங்களற்ற நிர்மலமான வானத்தில் பட்டங்களேற்றிக் குழந்தைகள் குதூகலிப்பர்.

இப்போதும்கூட ஒன்றும் குறைந்துபோய் விடவில்லைத்தான். முன்பிருந்த கட்டிடங்களைக் காண முடியவில்லையே தவிர நிலம் இன்றும் எங்கள் நிலமாகவே... ‘ எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய ’ அதே நிலமாகவே... தம்பியாக்களுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து உழத்தி விளையாடிய எங்கட அருமை நிலமாகவே...

ரங்கநாதனுக்குக் கண்களில் நீர்த்திவலைகள். தூரத்தில் பறையதிர்ந்தது.

இதழ் : 71
பங்குனி - சித்திரை , 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதீபகுமரன்

## மனவெளி ஓவியம்

வாகனம் புழுதியைக் கிளறியபடி போய்க்கொண்டிருந்தது. மேலெழுந்த புழுதிக்கூடாக கண்ணனும் இன்னும் சிலரும் கையசைப்பது தெரிந்தது.

எல்லோருக்குமாக கைகளை உயர்த்தி அசைத்தேன். புகை போல் அடர்ந்து எழுந்த புழுதியில் வாகனம் கலந்து மறைந்தது.

துகள்களாக தெறித்த மண்ணுக்காக ஒருமுறை கண்களை அழுத்தித் துடைத்தேன். மனதினுள் ஏதோ ஒன்று தவித்தபடி அலைந்தது. நிலைகொள்ளாத துயரின் தவிப்பு அது.

எண்ண சிரிப்பும் வந்தது. இதென்ன புதுசா ?

சண்டைக்குப் போறாங்கள், அவ்வளவு தான்.

நானும் அந்த வாகனத்துள் ஒருவனாக நின்றிருந்தால் இந்தத் தவிப்பு இல்லை.

அணிகள் பிரிபடும்போது நான் தொடர்ந்தும் இங்கேயே நிற்க வேண்டி வந்துவிட்டது.

கையசைந்து வழியனுப்புவது மனதைத் தின்றுவிடும் வேதனை. பொழுது சரிந்து கொண்டிருந்தது. மங்கலான அந்த அந்தி நேரத்தில் வாகனம் போன பின்னும் அந்த இடத்தில் தனியே நிற்பது ஆறுதலாகவும் அதேநேரம் அர்த்தமற்றதாகவும் தோன்றியது.

பொழுது மங்குகின்ற அனேகமான மாலை நேரங்களில் எங்கள் இடத்திலிருந்து இந்தச் சந்தி வரை நானும் கண்ணனும் வந்து திரும்புவோம்.

இருவருக்குமான மாலைநேரப் பொழுதுபோக்கு அது, இன்று நான் மட்டும் தனியாக அந்த மணற்பாதையினூடாக நடக்கத் தொடங்கினேன்.

இரண்டு மைல் தூரம் நடக்கவேண்டும். அதன்பின்தான் எங்கள் நிலைகள் வரும்.

கால் புதையும் மணலில் நடப்பது சிரமம்.

ஆனால் கண்ணனுடன் நடந்தால் தூரம் மறைவது தெரியாது. எவ்வளவு தொலையும் அவனுடன் நடக்கலாம். சலிப்போ, ஓய்வோ இல்லாத உடலும் மனமும் அவனுக்கு. சின்ன விடயத்தையும் ஆயிரம் இழைகளால் பின்னி அழகான கதையாக்குவான்.

அவன் சொல்லும் கதையைவிட, அவனது பேச்சின் வியூகங்களும் , ஏற்ற இறக்கங்களும், கண்ணசைவும்தான் ரசிக்க வைக்கும். எப்போதுமே நான் பேசும் நேரங்கள் குறைவு. வார்த்தைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள்ளேயே கோர்த்துக் கோர்த்து அழித்துக்கொண்டிருக்க மூச்சு விடாது எனக்காகவும் பேசி முடிப்பான்.

அடிக்கொரு தரம் " மாறன் அண்ணா டேய் " என்பான். அந்த அழைப்பின் வேகத்திலும், உச்சரிப்பிலும் அவனுக்கு என்மீதுள்ள அன்பின் மிகுதிதான் தெரியும்.

தன்னைவிட இளைய போராளிகள் மீது மிகுந்த அன்புள்ளவன். அநேகமான நேரங்களில் அவர்களோடு சேர்ந்து கும்மாளமடித்தபடி இருப்பான். அப்ப சொல்லுவான் ' எனக்கு எத்தினை தம்பியவை பாத்தியா மாறன் அண்ணா ' என்று பொறுப்பும், பாசமுமுள்ள ஒரு மூத்த சகோதரன் போலத்தான் அவர்களோடு பழகுவான்.

எங்கள் அணியில் எல்லோருக்குமே கண்ணனை மிக நன்றாகப் பிடிக்கும்.

இந்தப்பகுதிக்கு வந்த இந்த மாதங்களில் நாங்கள் இருவரும் சேர்ந்தேதான் இருந்தோம்.

இது கடற்கரைப் பிரதேசம். ஒதுங்க நிழலில்லாத வெட்டைகளும், வளர்த்தியில்லாத சோடைத் தென்னைகளும் கொண்ட மணல் நிலம். அனலாகக் கொதிக்கின்ற பகல் எப்போது முடியும் என்றிருக்கும். பகற்பொழுது ஒவ்வொன்றும் நீண்ட... சுமையாக அழுத்தும், உப்புக் காற்றின் வெம்மையில் உடல் எரியும்.

அலைகளின் இரைச்சலை விட எந்தச் சந்தடியும் இருக்காது. அலைகள் ஓங்கி அடித்து நீர் தெறிப்பது எங்கள் நிலைகளிலிருந்து பார்க்கத்தெரியும்.

சிதறுகின்ற நீர்த்துளிகளின் குளிர்மை எங்கள் மீதும் பரவுவது போலிருக்கும்.

எங்கள் நிலைகளின் முன்பாக கடலோடு வட்டமான பாறை ஒன்று இருக்கிறது. கண்ணனுக்கு மிகப்பிடித்தமான இடம். ' இதில் நின்று நான் ஒரு போட்டோ எடுக்க வேணும் ' என்பான். பாறையின் பின்புறமாக அலைகள் பரவி எழுந்து விழுவது மிக அழகு. பூ விரிவது போல பாறையின் பின்னிருந்து அலைகள் உயர்ந்தெழுந்து சிதறும்.

கண்ணன் மிகுந்த ரசனையோடு அதைப்பார்த்துக் கொண்டிருப்பான். ஓயாத அலைகள் சண்டையில் கையிலும், தலையிலும் காயப்பட்டான். தலைக்காயம் இன்னும் முழுதாக மாறவில்லை. பகல் நேரங்களில் வெயில் ஏற ஏற தலைவலிக்கத் தொடங்கும். அப்போதும் ஏதாவது கதை கூறி சிரித்துக் கொண்டிருப்பான். வலிதாங்க முடியாத போது முகம் வேதனையில் நெளியும்.

என்னடா என்றால் -

ஒருமுறை அமைதியாக என்னைப் பார்ப்பான். வலிக்குது என்று சொல்வானோ என எண்ண... மத்தியானம் மீன் சமைப்பமோ என்பான், மிகச்சாதாரணமாக . அவன் புரிந்துகொள்ள முடியாதவன் இல்லை. அவனை, அவன் மனதை மிக நன்றாகத் தெரியும் எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த வேதனையும், வலியும் தன்னுடனேயே முடியவேண்டும் என்பதில் உறுதியானவன்.

தென்மராட்சி சண்டையின்போது அவனறியாத்துயர் எதிர் பாராமற் சூழ்ந்த பின்னும், அதே சூழலில், அந்தக் களமுனையில் எந்தத் தளர்வுமின்றி தீவிரமாக செயற்பட்டவன். சிரிப்பற்று இறுகிய முகம்தான் அங்கிருந்த பொழுதுகளில் அவனது துயரைச் சொல்லும்.

அதுதவிர வேறெப்படியும் தன்னை வெளிக்காட்டாதவன். இந்த உறுதி ஒவ்வொரு போராளியிடமும் இயல்பாகவே வந்து விடுகிறதோ ?

அப்படியான உறுதிகொண்டவர்கள்தான் போராளிகளாகிறார் களோ என்னவோ ?

ஆனால் அந்த அசையாத உறுதியின் ஆழத்தில் மென்மையான மனம் ஒன்ற துடித்துக்கொண்டிருக்கும்.

இந்த தேசத்தை நேசிக்கச் செய்த மென்மை, அவர்களைப் போராளிகளாக்கிய மென்மை அது.

யார் கண்ணிலும் தெரியாத அந்த மென்மையினுள் ஓராயிரம் நினைவுகள் புதைந்திருக்கும்.

கண்ணனின் மனம்கூட அப்படித்தான்.

தன் உறவுகள் பற்றி ஏதும் பேச்சுவந்தால் அவன் விழிகளின் ஆழத்தில் எழில் சுரந்த பரவசம் மின்னலாகப் பரவிச் செல்லும். முடிவில் உயிரைப் பிழிகின்ற துயரின் வலியையும் அந்தக் கண்கள் சொல்லும். அவன் அவர்கள் மீது கொண்டிருந்த நேசத்தின் உச்சத்தை காண்கின்ற நேரமது.

இந்தச்சண்டைக்கு தயாராகி என்னிடம் விடைபெறும் போது ‘ அண்ணா என்ர தம்பியை சந்திக்கேக்க என்னைப் பற்றி சொல்லுங்கோ, அவனுக்கு என்னை நினைவிருக்குமோ தெரியேல்ல. ஆனால் அவன்ர நினைவோடதான் கடைசிவரைக்கும் நான் இருந்ததை சொல்லுங்கோ ’ என்றான். குரல் அடைத்து பேச்சு தடுமாறியது. ‘ நீயும் நானும் சேர்ந்துதான் தம்பியை சந்திப்பம் ’ என்றேன், அவனை அணைத்து முத்தமிட்டபடி. அவர்களின் குடும்பத்தில் உயிரோடு தப்பியது அந்த தம்பி ஒருவன்தான். அவனும் இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதியினுள் அவர்களின் உறவினர்களோடு இருக்கிறான்.

புன்னகைக்குள் தன்னை புதைத்துக்கொள்கின்ற அவன் மனதுள் எரிவது துயரின் தீ.

ஓயாத அலைகளில் தென்மராட்சி மீண்டிருந்த நேரம். எமது படையணிகளின் கட்டுப்பாட்டில் மீண்டும் அந்த மண். அந்த நேர மகிழ்வை அவனால் எப்போதுமே வார்த்தைகளில் சொல்ல முடியாது.

அவன் வாழ்வின் உச்சமான சந்தோசமாக அது இருந்ததோ? உண்மையில் அவ்வாறுதான் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் நிறைந்த மகிழ்வின் பரபரப்பில் தவித்தான்.

தன் நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் சொல்லிக்கொண்டிருந் தான்.

" எங்கட ஊரைப் பிடிச்சாச்சுது. நான் வீட்டுக்காரரைப் பார்க்கப் போறன் " மனம் கொள்ளாத உற்சாகம் பேச்சாய் செயலாய் அவனிலிருந்து வழிந்தது.

" நிச்சயமா அம்மா என்னை அடையாளம் காணமாட்டா. இது ஆர் என்றுதான் கேட்பா.

தம்பியாக்கள் வளந்திருப்பாங்கள்.

சின்னவனுக்கு என்னை நினைவிருக்குமோ தெரியேல்ல.

நான் இயக்கத்துக்கு வரேக்க அவனுக்கு நாலு வயது.

அம்மா கண்டால் கட்டிப்பிடிச்சு ஒப்பாரி தான்.

அப்பா ' அப்பன் ' எண்டிட்டு மெல்லமாகச் சிரிப்பார். அப்ப எனக்கு மீசைகூட வளரேல்ல. இப்ப அப்பாவை விடவும் உயரமா வளந்திட்டன். தாத்தா கையைப் பிடிச்சுக் கொஞ்சிப் போட்டுக் கும்பிடுவார் " மனம் இவைகளையே நினைத்துக் கொண்டிருந்தது.

இயக்கத்துக்கு வந்த இந்த ஏழு வருடங்களில் வீட்டுக்காரரைக் காணவில்லை .

அவர்களை காணவேண்டும் என்கின்ற தீராத அவா அவனுள் எழுந்தபடி இருக்கும்.

தன் வாழ்வின் எல்லாவற்றையும்விட தன் குடும்பத்தின் மீது மிகுந்த நேசம் கொண்டவன்.

ஆனால் எல்லா துயரங்களிற்குமான தீர்வாக, அச்சமற்ற வாழ்வுக்காக, போராளியாக மாறுவதே முடிவெனத் தோன்றியது. அதனால் உறவுகளிடமிருந்து வேதனையோடு பிரிந்தவன்.

ஒவ்வொரு இரவிலும் பணிகள் முடித்து கண்மூடும் போது அம்மாவின் முகமும் கண்ணீரும் நினைவில் வரும். எப்போதேனும் காண்பேனா ? விடை தெரியாத கேள்விதான் அவனுள் எழும்.

ஒவ்வொரு முறை சண்டைக்கு தயாராகும் போதும் மனதினுள் தன் உறவுகள் ஒவ்வொருவரிடமும் விடைபெறுவான். தான் வீரச் சாவடைந்தால் கொடுக்கவென வீட்டாருக்கு எழுதிய கடிதமொன்று எப்போதும் அவன் பெட்டியில் இருக்கும். அவனுடைய எண்ணங்கள் எல்லாவற்றையும் கடந்து வந்துள்ள இந்தக் காலம் கைக்கெட்டிய கனவு போலவே இருந்தது.

சில நாளில் அவனது அணி தென்மராட்சி களமுனைக்கு அனுப்பட்டது. அவன் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்தது அதைத்தான். அங்கு போய்ச் சேரும் வரை இயல்பாக இருக்க நினைத்தாலும் கட்டுப் படுத்த முடியாத பரபரப்புணர்வு தடுமாற வைத்தது. மீளக்காண முடியாதென நினைத்த அவனது ஊர். அவனது உறவுகள். மூச்சுவிட அவகாசமில்லாத ஷெல்லடி. அதனுள் நகர்ந்து முன்பு நின்ற அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் அவனது அணியும் இணைந்து கொண்டது.

ஊர் சிதைந்து கிடந்தது.

வீடுகளில் அநேகமாக ஆட்களில்லை.

ஆமியின் ' மல்ரிபெரல் ' அடியில் தப்பி வன்னிக்கும் இராணுவப் பகுதிக்கும் போனவர்களைவிட ஓரிருவர்தான் வீடுகளிலிருந்தனர்.

அவன் நினைவில் சுமந்திருந்த ஊர் எந்த அடையாளங்களுமே இல்லாது அழிந்து கிடந்தது. உடைந்த வீடுகள், மரங்கள் முறிந்து மூடிய வீதிகள். எல்லா நினைவுகளையும் மணலுள் புதைத்து விட்டு உருவ மற்று சிதைந்து கிடந்த மணல் ஒழுங்கைகள். முன்பெல்லாம் மனம் சோர்கின்ற நேரங்களில் ஊரின் நினைவுகளைத்தான் தன்னில் மெல்லப் படரவிடுவான். உறவுகள், வீடு, சின்னவயதின் சம்பவங்கள் என எல்லாம் படமாக விரியும். ஊரின் ஒவ்வொரு ஒழுங்கைகளாலும் மனதால் நடந்து வருவான்.

அந்த நினைவுகளிலேயே எல்லாச் சுமைகளையும் தாங்குகின்ற ஆற்றல் அவனுள் பெருகும்.

இன்று எல்லாமே கனவின் நிழலாகி உருக்குலைந்து கிடந்தது. நெஞ்சுள் வெறுமையாகி விழுந்தது.

வீட்டுக்காரர் பற்றி எதுவும் அறிய முடியவில்லை. அவர்கள் நின்ற இடத்திலிருந்து அவனது வீடு மூன்று மைல் தூரத்திலிருந்தது. அந்தப்பகுதி வீடுகளில் ஆட்கள் யாரும் இல்லை என முன்னர் அங்கு போய் வந்திருந்த போராளிகள் கூறினர். இந்தப் பகுதியில் அவனை அடையாளம் காணக்கூடியவர்களாக எவருமில்லை.

அப்பாவின் பெயர் சொல்லி விசாரித்தபோது இயக்கம் அறிவித்த போதே வெளியேறி இராணுவப்பகுதிக்குள் போய் விட்டதாக சிலர் சொல்லினர். நல்ல ஷெல்லடிக்குள் கோயிலில் இருந்ததாக வேறொருவர் சொன்னார்.

எதையும் உறுதிசெய்ய முடியவில்லை. முன்பே அந்தப் பகுதிக்கு வந்திருந்த மற்றொரு போராளியோடு தங்கள் வீடிருந்த இடத்திற்கு நடந்து வந்தான். வழியிலுள்ள ஒவ்வொரு வீட்டையும் காட்டி இதுவா ? இதுவா ? என்று கேட்டபடி வந்தான் அந்தப்போராளி. ஷெல்லடியில் வீடுகளுக்குள்ளேயே இறந்து கிடந்தவர்களை தாங்கள் தான் எடுத்துப் புதைத்ததாகச் சொன்னான். அவனது கதைக்கு தலையசைத்தபடி வந்த கண்ணனுக்கு ஏனோ உடல் பதறியது.

பழகிய பாதைகளில் பாதம் படப்பட தனது சின்ன வயதின் காலத்துள் புகுந்து விட்டதாகவே தோன்றியது. யாரும் இருக்கப் போவதில்லை என்பது தெரிந்தாலும் அறிமுகமான வீடுகள் ஒவ்வொன்றையும் கண்கள் தடவியபடி வந்தன. அவன் நினைத்தபடியே அவர்களின் வீடும் உடைந்திருந்தது. வீட்டினுள் நுழைந்தபோது " இஞ்சை தம்பி வாறான்" என்ற தாத்தாவின் குரல் அவனுள் ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் முன்பகுதியோடு இணைந்திருந்த கடதாசிப்பூமரப் பந்தல் சரிந்து மரம் கீழே கிடந்தது.

முன்னே நின்ற வேப்பமரம் முறிந்து வீட்டினுள் உதிர்ந்த இலைகளோடு கிளைகள் கிடந்தன.

தாத்தாவின் ஈசிச்சேர் முறிந்து ஓரமாகக் கிடந்தது. வீட்டின் முன் கதவுகள் திறந்து கிடந்தன.

உள்ளே நுழையும் போது சமையலறைக்குள்ளிருந்து அம்மா வரக்கூடும் என்று தோன்றியது.

சாமம் கடந்த பின்னும் ' காட்ஸ் , கரம் ' என நாங்களிருந்து விளையாடும் கூடம் வெளித்துக் கிடந்தது.

எந்தெந்த இடங்களில் இருந்து விளையாடுவோம் என்பது இப்போதும் ஞாபகம் இருந்தது.

வீட்டைச் சுற்றி நடந்து வர, உள்ளங்கால்களைக் குளிரச் செய்கின்ற அந்த வெண்மணல் முற்றத்தில் அமர்ந்திருக்க மனம் ஏங்கியது.

ஆனால் அவனை கட்டியணைத்து வரவேற்கவும், கண்ணீர் சிந்தவும் அங்கு யாரும் இல்லை.

அந்த வீட்டுடன் அவனுக்கு எந்தத் தொடர்புமில்லை என்பதாக தோன்றியது.

வீட்டினர் எங்கேனும் உயிரோடு இருப்பார்கள் என்ற நம்பிக் கையின் இழையைப் பற்றியபடி பரபரப்பான அந்த களமுனையில் தன் பணிகளில் சோராது உழைத்தான். சில நாட்களின் பின் அவன் குடும்பத்தவர்களைத் தெரிந்த போராளி ஒருவன் மூலம் அந்தச் செய்தி கிடைத்தது. நம்பிக்கையின் இழை அறுந்தது.

எல்லாத் துன்பங்களையும் யாரின் நினைவுகளுடன் சுமந் தானோ ? எல்லாமே பொய்யென்று ஆகின.

இளவயதையும், உறவுகளையும் அழிவின் பேய் தின்று விட்டாதா ?

எல்லாமே காலத்தோடு அள்ளுண்டு போய்விட்ட நினைவுகள் போலிருந்தது.

கோயிலில் விழுந்த ஷெல்லில் கடைசித் தம்பியைத் தவிர அவன் குடும்பத்தில் யாரும் மிஞ்சவில்லை.

தம்பியை வேறுவழியின்றி நெருக்கடியான நிலையில் இராணுவப் பகுதிக்குள் சென்ற உறவினர்கள் அழைத்து சென்றுவிட் டனர்.

ஏன் இப்படி நடந்தது ? எத்தனை நம்பிக்கையோடும், உற்சாகத் தோடும் வந்தான்.

மிகப் பரிதாபமானவனாக தன்னை உணர்ந்தான். கண்ணீரால், வெறும் வார்த்தைகளால் அழித்துவிடமுடியாத துயரம் நெஞ்சுள் தீயாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரால் கரையாது இறுகிய அவனது மனதின் துயரம் என்னுள்ளும் புகுந்து கொண்டதாகத் தோன்றியது.

எங்கள் மனிதர்கள் எல்லோரும் அனுபவிக்கும் துயரங்களுக் கான பதிலை, நாங்கள் இழந்தவைகள் எல்லாவற்றுக்குமான பதிலை எப்படிச் சொல்லப்போகிறோம் ? எல்லாவற்றையும் சமன் செய்யக் கூடியதாக எல்லாவற்றையும் அர்த்தப்படுத்தக்கூடியதாக எல்லாவற்றை யும் புதிதாக்கக்கூடியதாக பொருள் நிறைந்த பதிலொன்றுக்காகவே நாங்கள் காத்திருப்பதாக தோன்றியது.

அலைகள் அந்தப் பாறையின் மேலாக ததும்பித் தெறித்துக் கொண்டிருந்தன.

நிலவினொளியில் அவற்றின் வெண்ணிறச் சிதறல் கண்ணனின் புன்னகை போல பளிச்சென மின்னியது. எங்கள் துயரங்கள் தீர்ந்த பொழுதொன்றில் மீண்டும் ஒருநாள் இந்த மணற் பரப்பிலிருந்து என்னோடு கதைக்க அவன் வருவான்.

இதழ் : 72
வைகாசி - ஆனி, 2001.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளநாடன்

# கோடை வழி

வெடிச்சத்தங்கள் பலமாகக் கேட்டபோதும் அவன் ஒத்தி கையை நிறுத்தவில்லை. அவன் அதைப் பெரிது படுத்தவுமில்லை. ஒத்திகையில் நின்ற மாணவர்களுக்கும் எந்தப் பதற்றமுமிருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் இப்படி வெடிச்சத்தங்கள் கேட்பது வழமையாகி விட்டது. பருத்தியடைப்புப் பக்கமே கூடுதலாகக் கேட்கும். அந்தப் பக்கந்தான் பெரிய இராணுவமுகாம் இருந்தது. அவன் நாடகம் பழக்கிக் கொண்டிருந்தான். ஒத்திகையிலேயே கவனமாக இருந்தான். ஒத்திகை யின் போது பிறக்கும் கலகலப்பு எல்லோரிலும் படர்ந்திருந்தது.

இராணுவம் பருத்தியடைப்புப் பக்கம் கரையை அண்டுவதும் அதை மறித்து போராளிகள் அடித்துக் கலைப்பதும் ஊருக்கு பழகிப் போய்விட்டது. கொஞ்ச நேரம் வெடியோசை காற்றைப் பிளந்து வரும் ஹெலிகப்டர் சுழன்று சுழன்று வெறியன் யானைபோல உறுமித் திரியும். பிறகு கொஞ்ச நேரத்தால் எல்லாம் மெல்ல மெல்ல அடங்கி ஓய்ந்துவிடும்.

கடலோரக் கிராமமாகையால் அநேகமாக நேவிக்காரனின் 'கண்போட் ' அடியும் இருக்கும். அடி கூடுதலான நாட்களில் பருத்தி யடைப்பு, கரைச்சி, மேற்குதெரு, கிழக்குத்தெரு, கேம்றோட், நடுத்தெரு, மாதாகோயிலடி, கல்லொழுங்கைச் சனங்களெல்லாம் செபஸ்தியார் கோயிலடி றோட்டால் சுருவில் பக்கமும் பாலக்காட்டுச் சந்தியால் செருக்கன் சந்தி சம்பேதுருவானவர் கோயிலுக்கும் ஓடிப் போவார்கள். ஊர் திரண்டு தெருவில் அல்லாடும். ஹெலி உயர்ந்தால் பதற்றமும் ஓலக்குரல்களின் ஒலிப்பும் பெருகியிருக்கும்.

குழந்தைகளும், பெண்களும் அழத் தொடங்கிவிடுவார்கள். நிழல் சிறுத்த பரட்டை மரங்களின் கீழே முதியவர்கள் களைப்பாலும் கவலையாலும் சேர்ந்துபோய் குந்தி விடுவார்கள். எல்லாம் தணிந்த பிறகு, தங்கள் வீட்டிற்கு திரும்புவார்கள். முதலில் ஆண்கள் சைக்கிளில் போவார்கள். பிறகு மெல்ல மெல்ல பெண்கள், குழந்தைகள், முதியோர்களென ஊர் திரும்பி நிரம்பி விடும்.

அன்றும் அவன் அப்படித்தான் நினைத்தான். பெரிய அளவில் சத்தம் வரவில்லை. அவன் மாணவர்களுடன் ஒத்திகையிலேயே தீவிர மாக இருந்தான்.

வெடிச்சத்தங்கள் அடங்கவில்லை. தொடர்ந்து பெருத்துக் கொண்டு வந்தது. திடீரென சனங்கள் குழறிக்கொண்டு ஓடும் சத்தம் மதிலுக்கு மேலால் கேட்டது. சட்டென எவரையும் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உயர்ந்த மதில். அவர்கள் மண்டபத்துள்ளே இருந்தார்கள். எழுந்து நின்று பார்த்தால்தான் வெளியே தெரியும். வெளியே ஒலிக்கும் சத்தத்தைக் கேட்டவுடன் மாணவர்கள் ஓட முற்பட்டார்கள். தங்களுடைய பெற்றோர் எப்படியோ தம்மைத் தேடுவார்களோ என்ற குழப்பம் அவர்களை ஆட்டியது. அவன் அவர்களை ஆறுதல்படுத்தினான். எல்லோரையும் ஒரு மாதிரி பாடசாலையில் நிறுத்திவிட்டு தான் மாதா கோவிலின் பின் பக்கத்துக்கு ஓடினான். மாதா கோவிலின் பின் கதவு பிரதான வீதியுடன் இருக்கிறது. அங்கிருந்து எல்லாவற்றையும் பார்க்கலாம். என்ன, ஏது என்றறியவே அவன் ஓடினான்.

சனங்கள் கீயோ மாயோவென்று ஓடிக்கொண்டிருந்தார்கள். எல்லோருடைய முகங்களிலும் பீதி. எல்லாவற்றிலும் துயரமும், களைப்பும். ஒரு முடிவற்ற பயணத்தில் தத்தளிக்கும் தவிப்பு அவர்களில். அவன் பாடசாலை வளவிற்குள் சென்று விபரத்தைக்கூறி எல்லோரையும் அனுப்பி விட்டு திரும்பவும் கோவிலின் பின் வீதிக்கு ஓடினான்.

" பருத்தியடைப்பு கதிரேசன் கோவிலடிக்கு ஆமி வந்திட்டான் " என்று கூறியபடி ஒருவன் ஓடிப்போனான். அப்போது அந்தப் பக்கமாக பெரும் குண்டொன்று வெடித்த சத்தம் கேட்டது. எல்லோரும் சடாரெனப்படுத்து விட்டார்கள். அவன் மாதா கோவில் சுவருடன் பாதுகாப்பு நிலையெடுத்துப்படுத்தான்.

துப்பாக்கிச் சன்னங்கள் சுருவில் மெயின்றோட்டுப் பக்கமாகச் சிதறி வீழ்ந்தன. கேம் றோட்டில் விழுந்து படுத்தவர் ஒருவர் எழுந்தவுடன் " அவகளோட முந்தி இஞ்சை இருந்த ஈப்பிக்காறரும் சேர்ந்து வாறாக. ஒருத்தனை நான் கண்டனான் " என்று கூறியவாறு சுருவில் வீதியால் ஓடினார்.

சிலர் திரும்பி கேம் றோட்டாலும் ஓடினர். அவன் அவர்களை மறித்தான். வந்தவர்களோ தங்கள் உடமைகள் சிலதை விட்டு விட்டு வந்துவிட்டோம் என்றபடி ஓடினார்கள். போனவர்களில் ஒரு சிலர் மட்டும் சற்று நேரத்தில் திரும்பி வந்தனர்.

" எங்கட வீட்டில ஆமி நிற்கிறான். சிலர் பிடிபட்டினம். நாங்கள் எப்படியோ தப்பிவந்திட்டம். கடவுளுக்கு நன்றி " என்றனர்.

எங்கும் ஒரே அந்தரமும் பதற்றமும் சூழ்ந்திருந்தது.

அவன் தன்னுடைய வீட்டாரைத் தேடி அன்ரனிஸ் ஒழுங்கையால் ஓடினான். கல்லொழுங்கையில் கால்கள் இடறுப்பட்டன. பலமான அடி எங்கேயோ விழுந்தது. எதையும் பொருட்படுத்துவதற்கில்லை. ஒழுங்கையின் திருப்பத்தில் மிதந்தபோது அவனுடைய வீட்டு வாசலில் மனைவியும் மாமியும் நின்றனர். அவனைக் கண்டதும் "ஆமி பருத்தியடைப்பாலையும் மாட்டுக் காலையடிக்குள்ளாலையும் இறங்கியிட்டானாம். நீங்கள் எங்கை நிண்டிட்டு வாறியள் இவ்வளவு நேரமும்" என்று கோபத்துடன் பேசினாள் மனைவி. மாமியும் கோபத்துடன் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றாள்.

அவனுக்கு வியர்த்தது. நடந்ததை அவசரமாகக் கூறினான். “அவக வரக்குமுதல் செருக்கன் சந்திக்குப் போவம் வாருங்கோ ” என்றாள் மனைவி.

தூக்கக்கூடிய பொருட்களுடன் எல்லோரும் செருக்கன் சந்திக்குப் புறப்பட்டார்கள்.

மாமாவின் சைக்கிளில் காணி உறுதி, அடையாள அட்டைகள், கூப்பன் காட், நகைப்பெட்டி, காசு எல்லாம் அடங்கிய பை கொழு வப்பட்டிருந்தது. அவனும் மனைவியும் ஒரு சைக்கிளில் ஏறினார்கள். மகன் தன்னுடைய சிறிய சைக்கிளில் படிக்கும் புத்தகங்களுடன் வந்தான்.

வீட்டைவிட்டு வர மாமி மறுத்துவிட்டாள். “ நீங்கள் போங்கோ. வேணுமெண்டால் நான் பார்த்துவாறன். ஆமி இவ்வளவு தூரம் வர எங்கட பெடியள் விடமாட்டினம் ” என்றாள்.

அவர்கள் புறப்பட்டபோது கிழக்குத் தெருவால் ஒருவர் களைக்கக் களைக்க ஓடி வந்தார். ஓடி வந்து கொண்டே கூறினார். “ஜெற்றியடியில ஹெலியால ஆமியை இறக்கி அவக கடற்கரையால அந்தோனியார் கோயிலடிக்கு வாறாக எட்டி ஓடுங்கோ. ”

ஜெற்றியடியில இருந்து கடற்கரைப்பக்கமாகப் பார்த்தால் இவர்களின் வீடு அறுநூறு மீற்றர் தூரம்தான் இருக்கும். என்ன செய்வ தென்று தெரியாத அவசரமும் அந்தரமும்.

வீட்டில் நிற்கும் மாமியை எப்படி அழைப்பது ? அந்தோணி யார் கோவிலடியில் போராளிகள் மறித்துச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவனுடன் மாமாவும் மகனும் சைக்கிளில் வேகமாக ஓடத் தொடங்கினர்.

அன்ரனிஸ் கல்லூரிச் சுவரால் ஆமி பாய்ந்ததை அவன் கண்டான்.

அவர்கள் ஒழுவில் வீதியால் பாலக்காட்டுச் சந்தியை அடைந் ததும் சனங்கள் அதிகமாகச் சென்றதால் செருக்கன் சந்திக்கு நடந்தே போக வேண்டியிருந்தது. மெலிஞ்சி முனைச் சனங்கள் சுருவில் தேவாலயத்துக்குப் போனார்கள்.

கரம்பொன், பருத்தியடைப்பு, கேம்றோட், மேற்குத் தெரு, கிழக்குத்தெரு, நடுத்தெரு, கல்லொழுங்கை இடத்துச் சனங்கள் செருக்கன் சந்தி சம்பேதுருவானவர் கோவிலில் தஞ்சமடைந்தனர்.

ஹெலி தாழப்பதிந்து சுட்டது. ஹெலியிலிருக்கும் காலனுக்குத் தெரியாமல் மறைவதற்கு மரங்களுக்குக் கீழும் கோவிலின் உள்ளுக் குள்ளுமாய் நிரம்பியது சனம்.

கைக்கோவில் குருசுக்கோவில் பீடம் எல்லாமே விலத்த முடியாத அளவு சனங்கள். பெரும்பாலும் எல்லோரும் கத்தோலிக்கர் கள் என்பதால் மாதாவும், யேசுவும், சூசையப்பரும் அந்தோனியாரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபஸ்தியாரும், சாட்டிமாதா சம்பேதுருவானவர் இவர்கள் சனங்களின் வாய்களில் அல்லாடினார்கள். செபமாலை தொடராகச் சொல்லிக் கொண்டிருந்தனர். தங்களுக்கு ஏதும் கேடு வரக்கூடாது என்பது அவர்களின் நம்பிக்கை. சிலர் ஒவ்வொரு மூலையாக ஓடியோடிக் குந்தினர். அதற்கிடையில் வானில் பறக்கும் ஹெலியையும் அதனுள் இருப்பவர்களையும், தங்கள் இருப்பிடத்திற்கு வந்த அந்தக் கொடு மனிதர்களையும் திட்டித் தீர்த்தனர்.

" அருள் நிறைந்த மரியாயே வாழ்க
கர்த்தர் உம்முடனே "

ஹெலியிலிருந்து சூட்டுச்சத்தம்.

" அழிவாங்கள் கொல்லுறாங்கள் இவர்களை கேட்பாகளில்லையா "

" பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய
யேசுவும் ஆசீர்வதிக்கப் பட்டவரே "

" ஐயோ கோவில் வாசலுக்கை குண்டு போட்டுட்டாங்கள் போல யேசுவே, பிதாவே நீர்தாமே காத்தருளும். "

இப்படிக் கத்தி தொடர் செபமாலை நடந்து கொண்டிருந்தது. அவன் கோவில் வளவுக்கு வெளியே ஓடினான். பங்குக் குருவானவர் அவனைக் கண்டதும் " மாஸ்ரர் வாருங்கோ. செபஸ்தியார் கோவிலடி வரை போய்வருவம் " என்றார். அவனும் மோட்டார் சைக்கிளின் பின் ஏறிவிட்டான். பங்குக்குரு சொன்னார். " நான் பின்னுக்கு இருந்தனான். அறை வீட்டுக்கு முன்பக்கம் செல் விழுந்தது. அதன் பின்தான் வெளிக்கிட்டனான். "

' ஏன் போறம் சுவாமி ' என்று கேட்டான் அவன். " எல்லாச் சனத்தையும் சம்பேதுருவார் கோவிலுக்கு வரும்படி சொல்லுவம். வழிக்கு குந்தியிருக்குதுகள். அதிலை இருந்தால் கெலிக்காறன் சுட்டுப் போடுவான். " குருவானவர் சொல்லி முடிய காளி கோவிலடி வரவும் சரியாக இருந்தது. அவனின் மாமியார் மூச்செறிய நடையில் வந்துகொண்டிருந்தாள். மாமியாரைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை நிறுத்தினார் குருவானவர். " ஆமிக்காறர் எங்கட வளவெல்லாம் வந்திட்டாக. என்னை அம்மே எண்டு கூப்பிட்டாக. நான் சாயாவை இடுப்பிலை செருகிக்கொண்டு பின் கதவாலை வெளிக்கிட்டுட்டன். சுட்டாச் சுடட்டும் எண்டு நினைச்சுக்கொண்டு கையுக்கை செப மாலையை வைச்சு சொல்லிக் கொண்டு வாறன். சுவாமி ஏன் போறீகள்? அவகள் கொள்ளையா வந்திருக்கிறாகள். ஆஸ்பத்திரிப் பக்கமாகவும் குளத்தடியாலையும் கொள்ளையா போறாகள். என்னைக் கூப்பிடேக்கை கொஞ்சப்பேரைப்பிடிச்சு வைச்சிருந்தவகள். வடக்கு றோட்டலைதான் கூடின ஆமிபோறாகள் " மூச்சு விடாமல் ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மாமியாரிடம் “ கோவிலடிக்குப் போங்கோ வாசல் மரத்திற்குக் கீழே இருக்கினம், ” என்று விட்டுபோனான். மாமியாரின் நடையில் தளர்வு தெரிந்தது. குருவானவரும் அவனும் இன்னும் கொஞ்சத்தூரம் போய்ப்பார்ப்பம் என்று எண்ணியவாறு போனார்கள். செபஸ்தியார் கோவிலடி சென்றதும் அங்கால் செல்வது சாத்தியம் இல்லையென்பது புரிந்ததும் இருவரும் திரும்பினர். “ சனங்கள் பசியிலை இருக்கும். சாப்பாடு கொடுக்கவேணும். சமையலுக்குரிய பாத்திரங்கள், கிடாரங்கள் எடுக்கவேணும். நாரந்தனை அல்லது சரவணைக்குப் போய் நீங்கள்தான் எடுத்துக்கொண்டு வாங்கோ.”

அவனுடன் உதவிக்குச் சிலரை குருவானவர் அனுப்பினார். குருவானவர் அடிக்கடி இப்படியான நிகழ்வுகளை சந்தித்தனால் செருக்கன் பங்கில் அரிசி, பருப்பு, பால்மா போன்றவற்றை களஞ்சியப் படுத்தியிருந்தார்.

அவன் சரவணைப் பக்கம் சென்று சிலரை கிடாரம் தரும்படி கேட்டான். சிலர் மறுத்தனர். சிலர் கொடுத்தனர். அவர்களுக்கு அடுத்ததாக தாங்கள்தான் இடம் பெயரப் போகிறோம் என்பது தெரியாது. கிடாரத்துடன் கோவிலடிக்கு வந்து சேர்ந்தான் . சமையல் ஆரம்பம் சிலர் மட்டும் ஒதுங்கிப் போயினர். சமையல் நடந்து கொண்டிருந்த வேளை குருவானவர் அவனை வரும்படி அழைத்தார். திரும்பவும் காளிகோயிலடிப்பக்கம் சென்று ஆஸ்பத்திரி றோட்டிற்குத் திரும்பினார்கள். “ இன்னும் பொன்னாச்சி கடைச்சந்தியை ஆமிதாண்ட யில்லை. எங்கட பொடியள் மறிச்சு வைச்சிருக்கிறாங்கள் போல சண்டை கடுமையா நடக்குது. ”

இதற்கிடையில் ‘ எல்வ் ’றக் ஒன்று விலத்திச் சென்றது. அதற் குள் கனரக ஆயுதங்களுடன் பலர் நின்றனர். அதற்குள்ளிருந்து ஒரு குரல் “ மாஸ்ரர் சுவாமியைக் கூட்டிக்கொண்டு திரும்பிப் போங்கோ. பொன்னாச்சி கடைச் சந்தி, ஆஸ்பத்திரி ,சவக்காலை உங்கட வீட்டடி எல்லாம் நிக்கிறாகள். ” குருவானவரின் ஏக்கம் ‘ வயது போனதுகள் சிலரை விட்டுட்டு வந்திட்டுதுகள். நான் எப்பிடியும் அதுகளைக் கூட்டிக் கொண்டு போகவேணும் ’ என்பதே. என்ன செய்வது ? திரும்பிப் போவதைத் தவிர வேறுவழியில்லை.

சமையலும் மூன்று மணிக்கு முடிந்தது. எல்லோரையும் நிரையாக விட்டு சமைச்ச உணவைக் கொடுக்கத் தொடங்கினர். குருவானவர் பக்கத்தில் நின்றார். சிலர் மட்டும் வந்து வாங்க வில்லை. நிரையில் நின்றவர்களில் ஒருவர் சொன்னார் “ பெரியவக வரமாட்டார் கள் ” என்று. சாதிபாக்கிறார்கள் என்பது பளிச்சென்று எல்லோருக்கும் விளங்கியது.

சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்த வேளை ஒருவர் “ இதுக் குவளை புதுமாப்பிளை பொம்பிளைக்கும் போடுங்கோ ” என்றார். அப்போதுதான் குருவானவருக்கு ஞாபகம் வந்தது. அன்று காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா கோவிலில் திருமணத்திருப்பலி ஒன்று நடை பெறவிருந்த விடயம். குருவானவரிடம் அவரே மீண்டும் சொல்லத் தொடங்கினார்.

“ இப்பதான் பொம்பிளையை மீட்டு வந்தன். பொம்பிளை வங்கருக்கை கலியாண உடுப்போட நிண்டவகளாம். மாப்பிள்ளை இஞ்சை வந்த பிறகு தான் அவகள் வரயில்லையெண்டிட்டு திரும்பி சண்முகநாதன் பள்ளிக்கூடத்தடியாலை கேம்புறோட்டு பக்கத்துக்குப் போய் வங்கருக்கை இருந்த பொம்பிளையைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறாக. சூசையப்பர் மரியாளை எகித்திற்கு கூட்டுப்போன மாதிரி இவளை கூட்டி வந்திருக்கிறாக . ”

“ ஒரு குடும்பத்தை வங்கருக்கை வைச்சு வெட்டிப்போட்டா களாம். சந்தேக்கை கறிவிக்கிற மனிசியையும் வெட்டிப் போட்டாங் களாம். யேசுநாதர் பிறந்தவுடன் மனுக்குலத்திற்கு விடிவு கிடைச்ச மாதிரி எங்கடபிள்ளையளும் எங்களுக்கு விடிவு காட்டுவார்கள். ”

குருவானவர் அவனைத் திரும்பிப் பார்த்து “ உங்களை மாதிரிக்கொதிக்கிறார் ” என்றார்.

“ இப்பிடி எல்லாரும் கொதிக்க வேணும் ” என்று அவன் சொன்னான்.

இராணுவத்தினர் வடக்கு வீதியால் மண்டை தீவு சென்று விட்டார்கள் என்ற விகளம் கிடைத்ததும் எல்லோரும் திரும்பி ஊருக்குச் சென்றனர். அவன் குடும்பத்தாருடன் தன் வீடு சென்றான். பொருட்கள் ஏதும் இல்லாதமையைக் கண்ட அவனது மாமியாரும், மனைவியும் தலையில் அடித்து அழுதனர். அவன் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த் திருந்த அருமையான புத்தகங்களெல்லாம் அப்படியே எரிக்கப்பட்டி ருந்தன. அவர்களின் இரட்டைத் திருக்கல் வண்டில் ஜெற்றியடியில் நிற்பதாக அவனுக்கு ஒருவர் வந்து கூறினார்... எருதுகள் எங்கே என்று தெரியாது தேடினான்.

பிறகு, கோட்டைக்குள் இராணுவத்தினர் போய் விட்டனர் என அறிந்தான். கோட்டையில் சண்டை தொடர்ந்து நடக்கிறது என்பதை விமானக்குண்டு வெடிக்கும் அதிர்வும் ஷெல் விழுந்து வெடிக்கும் அதிர்வும் வெடிக்கும் ஒலியின் உணர்வும் புரிந்து கொள்ள வைத்தது. கோட்டை மீதான போராளிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கோட்டையில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி மண்டை தீவிற்குள் வந்து விட்டார்கள்.

மண்டை தீவை சுடுகாடாக்கி விட்டு வடக்கு வீதியால் ஊர் காவற்துறையை நோக்கி புறப்பட்டனர் இராணுவத்தினர். இதை அறிந்த சனங்கள் திரும்பவும் சுருவில், செருக்கன், வேலணை என்று ஓடத்தொடங்கினர். ஊர்காவற்துறையை நோக்கி திரும்பியவர்கள் பொன்னாச்சி கடைச்சந்தியுடன் தங்கள் எல்லையைப் போட்டு காப்பரண் அமைத்தனர். மக்கள் அனைவரும் சுருவிலையும், வேலணையையும் மையப்படுத்தி இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். அவன் தனது குடும்பத்தாரு டன் அராலித்துறையால் யாழ்ப்பாணம் செல்வது என முடிவெடுத்து அராலித்துறை நோக்கி நடக்கலானான் . அப்போது அவன் மகன் கேட்டான். "எப்ப திரும்பவும் வீட்டை வாறது. " அவனின் மனைவி கூறினாள், "நீ , அப்பா, நான் ஏன் இஞ்சை இருந்து போறவகள் எல்லோருமே எங்கட பொடியளோட சேர்ந்து இவங்களை அடிச்சுக் கலைச்ச அண்டைக்குத்தான் திரும்பவும் வரலாம். நிம்மதியாயிருக் கலாம். " அவள் கூறிமுடிக்க அவனின் கண்களில் நீர் நிறைந்திருந்தது. அது கவலையால் அல்ல. விடுதலைக்காய் இன்னல்கள் எது ஏற்பட்டா லும் அதை ஏற்கும் மனநிலை இவளுக்கு வந்ததை நினைத்து.

" போட் " புறப்பட்டது யாழ்ப்பாணம் நோக்கி.

*இதழ் : 72*
*வைகாசி - ஆனி, 2001.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படைப்பாளிகள் பற்றிய குறிப்புகள்

கோளாவிலூர் கிங்ஸ்லி, வெளிச்சத்திலேயே எழுத ஆரம்பித்தார். இவர் அம்பாறை மட்டக்களப்புப் பிரதேசங்களை களமாகக் கொண்ட படைப்புக்களை தன் எழுத்தால் அலங்கரித்து வருகின்றார். போராளியாக வாழும் வாய்ப்புச் சித்தித்ததினால் போர்க்கள அனுபவங்களை வெளிக்கொண்டு வருவதில் வெற்றி பெற்று விடுகின்றார். எழுத்துடன் வீடியோவில் குறும்படம், விவரணமென்று இவரின் ஆக்கத் தளம் விரிந்தது.

சாந்தன், ஈழத்தின் பிரபலமான சிறுகதைப் படைப்பாளி. *ஒட்டுமா, கிருஷ்ணன் தூது, ஆரைகள், இன்னொரு வெண்ணிலவு, பார்வை, முளைகள், ஒரு பிடி மண்* என இவருடைய பல கதைத்தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. இவருடைய கதைகள் பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்திலும் The Spark என்ற ஒரு கதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார். இவர், யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்தவர்.

விவேக், கிளிநொச்சியைச் சேர்ந்தவர். கவிஞர். *தடயங்கள், இலையுதிர் வசந்தம்* என இரண்டு கவிதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. பத்திரிகைத் துறையிலும் அனுபவம் உடையவர். சாளரம் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். ஓவியம், ஒளிப்படம், விமர்சனம் என்பனவற்றிலும் ஈடுபாட்டுடன் இயங்கி வருகிறார்.

ந. சந்தியபாலன், யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டைச் சேர்ந்தவர். ஆங்கில ஆசிரியர். கவிதைகளுடன் சிறுகதைகளும் எழுதி வருகிறார். மென்னுணர்வுகளையும் குடும்ப உறவுகளையும் கலைத்துவமாகப் படைப்பாக்குவதில் ஆற்றல் மிக்கவரான இவரது படைப்புகள் ஈழத்தின் பலபத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளி வந்திருக்கின்றன.

உமாதேவனின் இயற்பெயர் அமரதாஸ். கிளி நொச்சி ஸ்கந்த புரத்தைச் சேர்ந்தவர். கவிதை, ஓவியம், ஒளிப்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கலைத் துறையின் பல தளங்களிலும் ஆற்றலுடன் இயங்குபவர். அண்மையில் வெளி வந்த இவருடைய *'இயல்பினை அவாவுதல்'* என்ற கவிதைத் தொகுதி பலரது கவனத்தையும் பெற்றது. இதழியல் அனுபவமும் இவருக்குண்டு. இவரின் போர்க்கள அனுபவமுடைய கூடுதலான படைப்புகள் வெளிச்சத்தில் வெளிவந்திருக்கின்றன.

வசந்தன், இணுவிலைச் சேர்ந்தவர். தொண்ணூறுகளில் முகிழ்த்த படைப்பாளிகளில் போராட்டக் கள அனுபவங்களைப் படைப்பாக்குவதில் கவனம் பெற்றவராக தன் எழுத்தை விரித்தவர். *'ஈழநாதம்'* பத்திரிகையின் ஆசிரியபீடத்தில் பணியாற்றிய இவர், தற்போது வெளிநாடொன்றில் வாழ்கின்றார். வெளிச்சத்தில் இவருடைய பல கதைகள் வெளிவந்திருக்கின்றன.

நா. யோகேந்திரநாதன், தபாலதிபராக பணியாற்றுகிறார். இவர் கிளி நொச்சியைச் சேர்ந்தவர். நாடகம், வீடியோப்படம், வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் இலக்கியத்தில் சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் எனப்பல துறைகளிலும் தன் ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றார். பத்திரிக்கைத்துறை அனுபவமும் உடையவர்.

சத்துருக்கன், அளவெட்டியைச் சேர்ந்தவர். இவர் ஒரு கலைப்பட்டதாரி. சிறுகதை, கவிதை, நாடகம் ஆகிய துறைகளில் புத்தாக்க முயற்சியுடன் செயற்பட்டு வருகிறார். வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றவர். தொண்ணூறுகளில் முகிழ்ந்த படைப்பாளிகளில் இவர் குறிப்பிடத்தக்கவர். இவரின் இயற்பெயர் வசந்தகுமார்.

ஞானரதன், நன்கறியப்பட்ட ஈழத்துப் புனைகதைப் படைப்பாளி. இதுவரையில் இரண்டு நாவல்கள் வெளி வந்திருக்கின்றன. வீடியோப் படங்கள், வீடியோ விவரணங்களின் தயாரிப்பிலும் நெறிப்படுத்தலிலும் தன் ஆளுமையை வெளிப் படுத்தி பலரது கவனிப்பையும் பெற்றவர். ஓவியம், சிறுகதை என்பனவற்றிலும் ஈடுபாட்டுடன் இயங்கி வருகிறார்.

பிரகலாத ஹேமந்த், இயக்கச்சியைச் சேர்ந்தவர் இவரின் இயற் பெயர் கருணாகரன். கவிஞர். ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல் என்ற கவிதைத் தொகுதி அண்மையில் வந்திருக்கிறது. வெளிச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையின் ஆசிரியர். கட்டுரைகளுடன் சிறுகதைகளும் எழுதி வருகிறார்.

த. ம. சேந்தன் , இளைய சிறுகதைப் படைப்பாளிகளில் குறிப்பிடத் தகுந்தவராக தன்னை அடையாளப்படுத்தி வரும் த.ம. சேந்தன் வெளிச்சத்திலேயே கூடுதலான கதைகளை எழுதியிருக் கிறார். போர்க்கள அனுபவங்களை படைப்பாக்குவதில் கூடுதல் கவனம் செலுத்தி வரும் இவரின் எழுத்துக்கள் போராளிகளின் மென்னுணர்வுகளைப் பேசுகின்றன.

தாமரைச்செல்வி, ஈழத்துப் பெண் படைப்பாளிகளில் தொடர்ச்சியாக எழுதி வருபவர். இவர் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்தவர். *தாகம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, சுமைகள், ஒரு மழைக்கால இரவு* எனப்பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. சமூக அக்கறையுடன் எழுதிவரும் இவரின் படைப்புகள் பெரும்பாலும் வன்னியின் விவசாயப் புலத்தைக் களமாகக் கொண்டவை.

மலைமகள் ஒரு போராளி . இவர் ஒரு பெண் படைப் பாளியும்கூட. இசைப்பாடல், வீடியோத்துறை என்பற்றிலும் ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவர். போர்க்கள அனுபவங்களைச் சித்தரிப்பதில் தேர்ந்த படைப்பாளியான இவர் கட்டுரைகள், கவிதைகளையும் கலைத்துவத்துடன் எழுதி வருகிறார்.

சு. மகேந்திரன் , மன்னார் - பாப்பாமோட்டையைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் மயன் / 2 என்ற பெயரில் கவிதைகள் எழுதுகிறார். தொண்ணூறுகளில் எழுதத் தொடங்கிய ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். ஆங்கிலம் வழியாக பல சிறுகதைகளையும், கவிதைகளையும் மொழிபெயர்த்திருக்கிறார். வெளிச்சத்திலேயே தனது கதைகள் அனைத்தையும் எழுதி வரும் இவர் அண்மையில் '*காலவெளி* ' என்ற பெயரில் தொகுதியொன்றையும் வெளியிட்டிருக்கிறார்.

பெருமாள் கணேசன் , ஆங்கில ஆசிரிய ஆலோசகர். இவர் கிளி நொச்சி அக்கராயன் குளத்தைச் சேர்ந்தவர். சிறுகதைகள் கட்டுரை கள் என எழுதி வருகிறார். சமூக அக்கறையுடன் இயங்கி வரும் இவர் நாடகம், மற்றும் இசைப்பாடல் என்பவற்றிலும் ஈடுபட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை ரவி, வடமராட்சி - கரணவாயைச் சேர்ந்தவர். கவிதை, சிறுகதை, நாடகம் எனக் கலைத்துறையின் பல தளங்களிலும் செயற்பட்டு வருகின்றார். தொண்ணூறுகளில் எழுதத் தொடங்கிய படைப்பாளிகளில் இவர் பலரது கவனத்தை யும் தன் படைப்பாற்றலால் ஈர்த்தவர்.

முல்லைக்கோணேஸ், முல்லைத்தீவு - சிலாவத்தையில் பிறந்தவர். ஆசிரியராக பணியாற்றுகிறார். ஓவியர். *நாளை உன்தேசம், இரண்டாவது காலம்* என இரண்டு சிறுகதைத் தொகுதிகள் இதுவரையில் வெளி வந்திருக்கின்றன. புதுக்குடி யிருப்பு கலை, இலக்கிய நண்பர் வட்டத்தின் தலைவர். வீடியோத் துறையிலும் ஈடுபாடுள்ளவர். இவருடைய அதிகமான கதைகள் வெளிச்சத்திலேயே பிரசுரமாகியிருக்கின்றன.

பிரதீபகுமரன், ஈழத்துப் பெண்படைப்பாளிகளில் குறிப் பிடத்தக்க புதுவரவாக தொண்ணூறுகளில் முகிழ்ந்தவர். இவரின் சொந்த ஊர் யாழ்ப்பாணம் - அராலி. போர்க்களச் சித்தரிப்புக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார். இவருடைய அதிகமான கதைகள் வெளிச்சத்தில் பிரசுரமாகியிருக்கின்றன. அண்மையில் இவரின் *ஆரண்யக்கனவு* என்ற சிறுகதைத் தொகுப்பு வெளிவந்து பலரது கவனத்தையும் ஈர்த்தது.

வளநாடன் ஒரு போராளி. இவர் அரங்காற்றுகை பற்றிய அறிவும் ஆற்றலும் உள்ளவர். இலக்கியத்தில் கவிதை, சிறுகதை என எழுதி வருகிறார். அண்மையில் '*சமவெளி நோக்கி*' என்ற இவரது நூல் வெளியாகியிருக்கிறது. சமூக விடுதலையின் பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். வெளிச்சம் இதழில் எழுதத் தொடங்கிய இவர் வெளிச்சத்தின் பணிகளிலும் பங்காற்றி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளாவிலூர் கிங்ஸ்லி / சாந்தன் / விவேக்
ந. சத்தியபாலன் / உமாதேவன் / வசந்தன்
நா. யோகேந்திரநாதன் / சத்துருக்கன்
த. ம. சேந்தன் / தாமரைச் செல்வி
ஞானரதன் / பிரகலாத ஹேமந்த்
மலைமகள் / சு. மகேந்திரன்
முல்லைக் கோணேஸ்
பெருமாள் கணேசன்
பிரதீபகுமரன்
கருணை ரவி
வளநாடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org